# யா/ நவாலி மகா வித்தியாலயம்

# நூற்றாண்டு விழா

## சிறப்பு மலர்

## 1910 - 2010




# J/ NAVALY MAHA VIDYALAYAM

## CENTENARY CELEBRATION MAGAZINE

## 09.10.2010

நூற்றாண்டு விழா

நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
விழா

நூற்றாண்டு விழா

நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா

நூற்றாண்டு விழா


நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா

ஓம்

# வரலாற்றுச் சிறப்புமிக்க நவாலியூர்
# களையோடை கண்ணகை அம்மன் ஆலயம்



களையோடை அம்மனே கலக்கமெல்லாம் தீர்ப்பவளே!
கிளையோடு வாழக் கிருபைசெய்து அலையாமலுலையாமல்
தரணியொடு வானாள அன்னே! அன்னலட்சுமி!
சத்தியலட்சுமி! வீரலட்சுமி! தேவலட்சுமி! மகாலட்சுமி!
மதுரை சக்தி அம்மனே!
ஓம் பத்தினி கண்ணகா! உன்கழல் போற்றி! போற்றி!



ஸ்தாபகர்
உயர்திரு பண்டிதர் தம்பையா

# யா/நவாலி மகாவித்தியாலயம் மானிப்பாய்

## பாடசாலை விபரம்

| | | |
|---|---|---|
| 1. | பாடசாலையின் பெயர் | : யா/ நவாலி மகா வித்தியாலயம், மானிப்பாய். |
| 2. | பாடசாலை அலகு | : I C (01 - 13) |
| 3. | கல்வி மாகாணம் | : வடமாகாணம் |
| | மாவட்டம் | : யாழ்ப்பாணம் |
| | வலயம் | : வலிகாமம் |
| | கோட்டம் | : சண்டிலிப்பாய் |
| 4. | பாடசாலை இலக்கம் | : 1012023 |
| | தொகை மதிப்பு இலக்கம் | : 09175 |
| | பரீட்சை இலக்கம் | : 11235 |
| | இலவச பாடநூல் இலக்கம் | : 21/ 2/ 3 |
| 5. | பிரதேச செயலகம் | : சண்டிலிப்பாய் |
| | கிராம சேவையாளர் பிரிவு | : J/ 136, நவாலி தெற்கு |
| | தேர்தல் தொகுதி | : மானிப்பாய் |
| 6. | பாடசாலை அதிபர் பெயர் | : திரு. இரா. வசந்தகுமார் |
| | பாடசாலை தொலைபேசி இல | : 021 321 9979 |

# மலர் வெளியீட்டுக் குழு

| | | |
|---|---|---|
| மலர் | : | யா/ நவாலி மகா வித்தியாலயம்<br>100வது ஆண்டு நூற்றாண்டு விழா மலர் - 2010 |
| விழாக் குழு | : | திரு. இரா. வசந்தகுமார் (அதிபர்)<br>திருமதி. ஜெ. குமரேசமூர்த்தி (உபஅதிபர்)<br>திரு. ச. ஜெயானந்தன்<br>திருமதி. ஆ. பிலிப் லியோனாட்<br>திருமதி. க. இரவீந்திரன்<br>திரு. த. பாலகுமார்<br>திருமதி. நி. புஸ்பராசா<br>திருமதி. கௌ. திருவரங்கன் |
| மலர்க்குழு | : | திரு. இரா. வசந்தகுமார் (அதிபர்)<br>திருமதி. ஜெ. குமரேசமூர்த்தி (உபஅதிபர்)<br>திருமதி. அ. பாலகிருஷ்ணராஜா (இதழாசிரியர்)<br>திரு. செ. சுஜிதரன் (பொருளாளர், ப.மா.ச.)<br>திருமதி. வி. கோகுலானந்தன்<br>திருமதி. செ. மணிசேகரன்<br>திருமதி. வ. குகேந்திரன்<br>திருமதி. லோ. பார்த்திபன்<br>திரு. இ. வாசுதேவன்<br>திரு. சு. மோகனமுரளி (தலைவர், ப.மா.ச.) |
| பதிப்பு | : | 10.10.2010 |
| பக்க அளவு | : | 176 x 250 mm |
| பக்கம் | : | 150 |
| எண்ணிக்கை | : | 400 |
| கடதாசி | : | B5 |
| அச்சுப்பதிப்பு | : | றூபன் பிறிண்டேர்ஸ்<br>ஆனைக்கோட்டைச் சந்தி,<br>ஆனைக்கோட்டை.<br>T. P - 077 6624386 |



# பாடசாலையின் மகுடவாசகம்

"கற்றாங்கொழுகுக"

## தூரநோக்கு

பாடசாலை நிறுவனத்தால் பெறக்கூடிய மனித வள அபிவிருத்தியைப் பூரணமாகவும், சிக்கனமாகவும், உச்சப்பயனுடனும் பயன்படுத்தி, அறிவு, தகவல், தொழினுட்ப நூற்றாண்டுடன் இணைவோம்.

## இலக்கு

அறிவு, திறன், மனப்பாங்கு ஊழியர்களை உள்ளடக்கும் மனிதவள அபிவிருத்தி ஊடாக பொருளாதாரப் பரிமாணம் கொண்ட விஞ்ஞான தொழினுட்பத் துறைகளில் பயனுடைய மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் பாடசாலைப் பற்று, தேசப்பற்றுள்ள மனிதவளத்தை உருவாக்கல்.

# பாடசாலைக் கீதம்

எங்கள் நவாலி மகா வித்தியாலயம்
என்றென்றும் வாழிய வாழியவே
பொங்கும் கலை கல்வி புத்தமதூற்றில்
பூதலம் ஏற்றிட வாழியவே (எங்கள் நவாலி)

எத்தனை கல்விகள் எவ்வெத் தொழில்வகை
எத்தனை ஞானமிப் பாரிலுண்டோ
அத்தனை கல்விகள் அத்தனை நற்றொழில்
ஆர்த்திடும் ஞானந் தந் தோங்குகவே! (எங்கள் நவாலி)

உத்தம நற்குரு ஆசிரியர் பணி
ஊக்க மிகுந்திடும் மாணவர்கள்
நித்தம் வளர்ந்திட நித்தம் பகர்ந்திட
நின்று நிலைத்தென்றும் வாழியவே! (எங்கள் நவாலி)

நல்ல நவாலி மகான்கள் முதன்முதல்
நாட்டிய பள்ளியில் நாம் பயில்வோம்
நல்ல புரிந்திட நல்ல உரைத்திட
நல்ல நிலைத்திட வாழியவே! (எங்கள் நவாலி)

ஒற்றுமையாய் அதிபர் குருமாருடன்
உத்தம மாணவர் பெற்றவராய்
மற்றைய ஊர்களும் தேசங்களும் மெத்த
வானிமிர்ந் தோங்குக வாழியவே! (எங்கள் நவாலி)

# OUR PRINCIPAL




Mr. R. Vasanthakumar SLTS.I, B.Com (Spe) Dip. in. Edu.



# அதிபரின் உள்ளத்திலிருந்து......

இரா. வசந்தகுமார்,
அதிபர்,
யா/ நவாலி மகாவித்தியாலயம்.

நூற்றாண்டு காலக் கல்விப்பணியில் கால் பதிக்கும் எமது வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துக் கூறுவதற்கு வாய்ப்புத் தந்து தோன்றத் துணையாக நின்று எம்மை வழிப்படுத்திக் கொண்டிருக்கும் இறைவனுக்கு முதற்கண் நன்றிகளைக் கூறுகின்றேன்.

புகழ்பெற்ற சோமசுந்தரப் புலவர், பண்டிதர் தம்பையா போன்ற கல்விமான்கள் வாழ்ந்த இந்நவாலியூரின்கண் உள்ள பாடசாலையில் தற்பொழுது அதிபராகக் கடமையாற்றும் பேறு கிடைத்தமையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு சமூகத்தை வளர்த்தெடுப்பதில் கல்விக்கூடங்கள் அளப்பரிய சேவை புரிகின்றன. இவ்வகையில் 1910ம் ஆண்டில் உயர்திரு. பண்டிதர் தம்பையா அவர்களின் நல்ல சிந்தனையில் உருவாகிய இப்பாடசாலை இன்று ஆலமரம் போல் விரிந்து கல்விமணம் பரப்பித் தனது நூறாவது அகவையில் கால் பதித்துள்ளமை மிகவும் மகிழ்விற்குரியதே. இந்த வகையில் இப்பாடசாலை உன்னத நிலையையடைய முன்னின்று உழைத்த முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்களை நாமும் நன்றியுணர்வுடன் போற்றுவோம்.

இவ்வித்தியாலயத்தின் நூறு ஆண்டுகாலப் பகுதியினை நாம் மீட்டுப் பார்க்கும்போது இவ்வித்தியாலயமானது பல்வேறுபட்ட வளர்ச்சிகள், தளர்ச்சிகள், தடைகள், இன்னல்கள் நிறைந்திட்ட போதிலும் தன்னம்பிக்கையில் தளராது நின்று இன்று புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றமை யாவருக்கும் பேருவகை தருகின்றது.

இப்பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் பரந்துபட்ட பிரதேசங்களில் பல்வேறு உயர்பதவிகளில் சிறந்து விளங்குகின்றமையானது இவ்வித்தியாலய அன்னையின் புகழினைப் பறைசாற்றி நிற்கின்றது.

இந்நூற்றாண்டு மலரானது பழைய மாணவர் சங்கத்தின் முன்னோடிச் செயற்பாடுகளினாலும், அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்புடனும் சிறப்புடன் வெளிவருவது பாராட்டுக்குரியதொன்றாகும்.

இவ்வித்தியாலய மாணவர்கள் பொதுப்பரீட்சை, இணைப் பாடவிதான செயற்பாடுகள், விளையாட்டுத்துறை என்பனவற்றில் முன்னேற்றம் கண்டுள்ளனர். எனினும் இவை மென்மேலும் வளர்ச்சி பெற்று ஓர் உயரிய இடத்தினைப் பெறுவதற்கும் இன்றைய நவீனயுகத்திற்கமைய விஞ்ஞான, தகவல் தொழினுட்பத்தில் முன்னேற்றம் கண்டு இவ்வித்தியாலயமானது மென்மேலும் வளர்ச்சி பெற இறைவன் அருள் புரிவாராக.



# இதழாசிரியர் இதயத்திலிருந்து.......

திருமதி. அ. பாலகிருஸ்ணராஜா,
இதழாசிரியர்.

யா/ நவாலி மகாவித்தியாலய அன்னையானவள் நூறாவது ஆண்டில் கால் பதித்துத் தனது பெருமையினைப் பெருவிழாவாகக் கொண்டாடுகின்ற இவ்வேளையில், இந்நூற்றாண்டு மலர் எம் கரங்களில் தவழ்ந்து அறிவொளி பரப்பி உலாவருவதற்கு உறுதுணை புரிந்த இறைவனுக்கு முதற்கண் நன்றிகளைக் கூறுகின்றேன்.

நூறு அகவைகள் கல்விப்பணி புரிந்த இவ்வித்தியாலயத்தின் அடிச் சுவடுகளை மீள ஒருமுறை பார்ப்பதற்கும் ஒரு வரலாற்று ஆவணப்பதிவேடா –கவும் பல்வேறு சோதனைகளையும் சாதனைகளாக்கிய ஒரு வெற்றியின் சின்னமாகவும் இம்மலர் அமைந்துள்ளதையிட்டு நாம் மகிழ்வடைகின்றோம்.

இம்மலரானது எமது மகாவித்தியாலயத்தின் வரலாறு, வளர்ச்சிப் படிநிலைகளையும், கல்வியலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்களின் படைப்புக்களையும், மாணவர்களின் சாதனைப் பதிவுகளையும் தாங்கி வருகின்றது.

இந்நூற்றாண்டு விழா மலர் வெளியீட்டுக்கான ஆசிகள், வாழ்த்துக்கள், வாழ்த்துப்பா என்பனவற்றை வழங்கிய பெரியோர்களுக்கும், ஆக்கங்கள் வழங்கிச் சிறப்பித்த கல்வியல்லாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும் மற்றும் விளம்பரங்களை தந்து உதவியோருக்கும் மிக்க நன்றிகளைக் கூறுகின்றேன்.

இம்மலர் வெளிவர முன்னின்று பல்வேறு வகைகளிலும் துடிப்புடன் செயற்பட்ட பழைய மாணவர் சங்கத்தினருக்கும், ஒத்துழைப்பு நல்கிய அபிவிருத்திச் சங்கத்தினருக்கும், உரிய காலத்தில் அழகுடன் மிளிர அச்சிட்டுத்தந்த றூபன் அச்சகத்தினருக்கும், மேலும் என்னுடன் ஒத்துழைத்து உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் மலர்க்குழு சார்பாகவும் எமது வித்தியாலயம் சார்பாகவும் எனது இதயபூர்வமான நன்றிகளைக் கூறி மனம் மகிழ்வடைகின்றேன்.






**பாடசாலையின் தோற்றங்கள்**

# பொருளடக்கம்

1. பாடசாலை விபரம்
   i. மலர் வெளியீட்டுக் குழு
   ii. பாடசாலையின் மகுடவாசகம்
   iii. பாடசாலைக் கீதம்

2. அதிபரின் உள்ளத்திலிருந்து......

3. இதழாசிரியர் இதயத்திலிருந்து.......

4. ஆசிகளும் வாழ்த்துக்களும்
   i. ஆசியுரை i
   ii. செஞ்சொற்செல்வரின் ஆசியுரை ii
   iii. ஆசியுரை iii
   iv. வாழ்த்துச் செய்தி iv
   v. கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து..... v
   vi. ஆசியுரை vi
   vii. ஆசியுரை vii
   viii. வாழ்த்துச்செய்தி viii
   ix. வாழ்த்துச் செய்தி ix
   x. பசுமை நிறைந்த நினைவுகளுடன்....... x
   xi. ஆசிச்செய்தி xii
   xii. வாழ்த்துச் செய்தி xiii
   xiii. வாழ்த்துச் செய்தி xiv
   xiv. நவாலி மகாவித்தியாலயம் பலநூறாண்டுகள் வளமுடன் வாழ்க xvi
   xv. நூற்றாண்டு வாழ்த்துரை xviii
   xvi. எங்கள் நவாலி மகாவித்தியாலயம் xix
   xvii. வாழ்த்துச்செய்தி xxii
   xviii. வாழ்த்துச் செய்தி xxiv
   xix. சாதனையாளர்களை உருவாக்கிய வித்தியாலயம் xxv
   xx. ஆலிக்கும் எழில்தரு ஆலயம் வாழ்க xxvi

5. பாடசாலை வரலாறு
   i. பாடசாலை வரலாறு 1
   ii. யா/ நவாலி மகாவித்தியாலய அதிபர்கள் 5

6. என் உள்ளத்திலிருந்து...... 6

7. நிறுவுனர் நினைவுக்குறிப்புகள் 8

8. கல்வியியலாளர்களின் ஆக்கங்கள்
   i. 50 ஆண்டுகளுக்கு முன் நவாலி மகா வித்தியாலயம் - பற்றிய ஒரு கண்ணோட்டம். 12
   ii. இலங்கையில் இலவச உயர் கல்வியும் பொருளாதார வளர்ச்சியும் 14
   iii. யாழ்ப்பாண மன்னர்கால வரலாறு சார் படைப்புக்கள் - ஓர் ஆய்வு 21
   iv. சிற்பக்கலைப் படைப்பின் ஒரு கண்ணோட்டம் 33

9. நன்றிக்குரிய தேவசுலோசனா புலமைப்பரிசில் நிதியத்தினர் 36

10. ஆசிரியர் ஆக்கங்கள்
- i. ஆரம்பக்கல்வியில் அழகியல்கல்வி 37
- ii. சின்னஞ்சிறிய பிஞ்சு உள்ளங்களிலிருந்து வழிந்தோடிய கனதியான துளிகள் 39
- iii. Conscience 42
- iv. நூலகத்தின் வகிபங்கு 43
- v. Candle Light 46
- vi. விசேட தேவையுடையோரும் சமுதாயத்தின் அங்கத்தினரே 47
- vii. தேடல் 50
- viii. இடைநிலைக்கல்வியில் கேத்திர கணிதம் 51

11. பழைய மாணவரின் ஆக்கங்கள்
- i. கோளவெப்ப அதிகரிப்பு (Global Warming) 55
- ii. திரவ படிக திரை LCD (Liquid Crystal Display) 59
- iii. என் நினைவில் நிலைத்தவர்கள் 61
- iv. நவரஸங்கள் 65
- v. முன்னேற்றப்பாதையில் முயற்சியாண்மை 69
- vi. நனோ தொழிநுட்பம் (Nano Technology) 71
- vii. நெற்பயிர்ச் செய்கையின் உற்பத்தி அதிகரிக்க..... 75

12. மாணவரின் ஆக்கங்கள்
- i. Our School 78
- ii. My pet 78
- iii. My Class Teacher 78
- iv. வருட நிறைவில் கொண்டாடப்படும் விழாக்கள் 79
- v. மூன்று எழுத்து 80
- vi. காலைக்காட்சி 80
- vii. இசையும் வாழ்வும் 81
- viii. நல்லதோர் குடும்பம் 82
- ix. Positive Thinking – 10 C's to Success 83
- x. இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள் 84
- xi. Value of Discipline 87
- xii. Our Principal 87
- xiii. தமிழ்மொழியின் சிறப்பு 88
- xiv. வாழ்வில் சைவம் 91
- xv. உலகத் திருச்சபையின் கட்டமைப்பு 93
- xvi. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் 95
- xvii. பள்ளிப்பருவத்து நட்பு 99
- xviii. புதிய உலகில் இறை அரசைத் தேடி 100
- xix. என் தமிழே! 101
- xx. சர்வதேச நிதி நெருக்கடி 102
- xxi. சைவத் தமிழ்க் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் 104

13. Academic Staff 109




# ஆசியுரை

சிவஸ்ரீ. ந. சுப்பிரமணியக்குருக்கள்,
வேலைக்கைப் பிள்ளையார் கோவில் வீதி,
நவாலி.

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் – மாமலரால்
நோக்குண்டாம் மேனி நுடங்காது
பூக்கொண்டு துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு"

யாழ்ப்பாண மாவட்டத்தின் வடபால் நவாலி எனும் கிராமத்திலே பேரும் புகழும் பூத்துநிற்கின்ற இந்த நவாலி மகாவித்தியாலயம், நூற்றாண்டு விழாக் கொண்டாடுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஓர் ஊரின் சிறப்பு அந்த ஊரிலே வாழ்ந்த, வாழ்கின்ற பெருமகான்களுடைய சிறப்பினால்தான் பெருமையடைகின்றது. அந்த வகையிலே எமது நவாலியூரிலே தங்கத்தாத்தா என அழைக்கப்படும் சோமசுந்தரப்புலவர், இன்னும் பல்வேறு பெருந்தகைகள் வாழ்ந்திருக்கிறார்கள். இந்தப் பாடசாலையிலே கல்வி பயின்ற எத்தனையோ மாணவர்கள் இப்போது பட்டதாரிகளாகவும், பெரும் தனவந்தர்களாகவும் எமது நாட்டில் மட்டுமன்றி அந்நிய தேசத்திலும் வாழ்கின்றார்கள். எனக்கு இப்போது வயது அறுபத்தியிரண்டு ஏறக்குறைய கடந்த 1961, 62ம் ஆண்டு காலங்களில் இப்பாடசாலையிலே நான் கல்வி பயின்றேன். அப்போது இப்பாடசாலையின் அதிபராக காலஞ்சென்ற திருவாளர் நவரட்ணராஜா அவர்கள் கடமையாற்றினார். அவர் எமது வேலைக்கைப்பிள்ளையார் ஆலய மகோற்சவகாலத்தில் ஒன்பதாம் திருவிழா உபயகாரராகவும் இருந்தார். தொன்றுதொட்டே இப்பாடசாலைக்கும் எமது வேலைக்கைப் பிள்ளையார் ஆலயத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. அதே போன்று இப்போது எமது ஆலயத்தை வழிநடத்துகின்ற தம்பி திரு. இரா. வசந்தகுமார் அவர்கள் இப்பாடசாலையின் அதிபராக இருக்கின்றார். அவர் மிகவும் பெருமைக்குரியவர், விடாமுயற்சியுடையவர். இவரது முயற்சியின் பயனாக தற்போது க.பொ.த உயர்தர வகுப்புகளும் இங்கு மீள ஆரம்பிக்கப்பட்டது. காலத்தின் தேவை கருதிய அவரது தூரநோக்கான எண்ணத்தை வெளிப்படுத்துகின்றது. தம்பி அவர்களின் வழிநடத்தலின் கீழ் இந்தப்பாடசாலை மென்மேலும் பல்லாண்டுகள் விழாக்கான எல்லாம் வல்ல "சிந்தாமணி விநாயகரையும், வேற்கை முருகனையும்" வேண்டி ஆசிகூறுகின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"



# செஞ்சொற்செல்வரின் ஆசியுரை

திரு. ஆறு. திருமுருகன்,
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தலைவர், சிவபூமி அறக்கட்டளை

நற்றமிழ் அறிஞர்கள் வாழ்ந்த புண்ணியபூமி நவாலி. கல்வியாலும் கலை, பண்பாட்டினாலும் புகழ்பெற்ற திருவூர். ஒப்பற்ற கல்வீட்டுக் கலாசாரம் முதன்மை பெற்ற ஊர்களில் நவாலி முதன்மையானது. பண்டிதர்கள் பாவலர்கள் பாடிப்பரவிய பழந்தமிழ் மாநிலம். சைவத்தமிழ் காத்திடப் பண்டிதர் ஸ்ரீமான் தம்பையா வள்ளலின் அர்ப்பணிப்பால் நூறு ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட பாடசாலையே நவாலி மகா வித்தியாலயம். இப்பாடசாலையின் பெருமை அறியாதவர்களில்லை. இன்று க.பொ.த. உயர்தரம் வரை சிறப்புடன் இயங்கும் இக்கல்விச்சாலையின் நூற்றாண்டுவிழாக் குறித்து மலர் வெளியிடுவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

இன்று இப்பாடசாலையின் அதிபராக விளங்கும் திரு. இராசேந்திரம் வசந்தகுமார் உயர்ந்த நோக்கமும் அர்ப்பணிப்பும் மிக்கவர். சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் மரபில் உதித்தவர். கல்விக்கும் சமயத்துக்கும் பெருந்தொண்டாற்றிய குடும்ப உறுப்பினர். இவரது சேவைக்காலத்தில் நூற்றாண்டு விழாக் காண்பது சிறப்புக்கும் பெருமைக்குமுரிய வாய்ப்பாகும்.

இப்பாடசாலையின் வளர்ச்சியில் பெரிதும் உழைத்த முகாமையாளர்கள், முன்னைய அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள். இப்பாடசாலையால் உன்னத நிலை பெற்றவர்களில் முன்னாள் கல்விப்பணிப்பாளர் திருமதி. றெஜினா இருதயநாதன் போன்றவர்கள் உதாரணமானவர்கள்.

இப்பாடசாலையில் இரு பெருந்தகைகளின் உருவச்சிலைகளை திறந்துவைக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அதிபர் திரு. பு. ஸ்ரீவிக்னேஸ்வரன் அவர்களது சேவைக்காலத்தில் பண்டிதர் ஸ்ரீமான் தம்பையா அவர்கட்கும், சோமசுந்தரப் புலவருக்கும் உருவச்சிலை அமைத்தமை நினைவில் கொள்ளவேண்டியவை. கல்வியாலும் பண்பாட்டுப் பாரம்பரியத்தாலும் தனித்துவம் பெற்ற இப்பாடசாலை சூரியன் சந்திரன் நிரந்தரமாய் ஒளிதருவது போல் என்றும் நிலை வென்றும் சிறக்கப் பிரார்த்தித்து வாழ்த்தி நல்லாசிகூறி அமைகிறேன்.

"யாவர்க்குமாம் இன்னுரைதானே"



# ஆசியுரை

அருட்பணி. யோ.ப.ஜோதிநாதன்,
பங்குத்தந்தை,
ஆனைக்கோட்டை / நவாலி

நூற்றாண்டு விழாவைக் காணும் எமது நவாலி மகாவித்தியாலயத்தை வாழ்த்துவதில் பேருவகை கொள்கின்றேன். "கற்றாங்கு ஒழுகு" என்ற விருதுவாக்கிற்கேற்ப கற்ற கல்வியில் இருக்கும் அறநெறி கோட்பாடுகளுக்கு அமைய எமது மாணவச் செல்வங்களை ஒழுக வைத்து அறத்திலும் தர்மத்திலும் எமது சமயப் பாரம்பரியங்களுக்கேற்ப பாகுபாடு இன்றி பரந்த மனப்பான்மையோடு செயற்படுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

சோமசுந்தரப்புலவர் கற்றுக்கொடுத்த பாடசாலையில் எமது பிள்ளைகள் பிள்ளைத் தமிழின் பக்தி மார்க்கத்தையும், மெய்யியலையும், உளவியலையும் கற்று தமிழ் மணம் கமழ "உருவாகு உருவாக்கு" எனும் கோட்பாட்டிற்கேற்ப பாடசாலை சமூகம் வளர்ச்சியடைந்து க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு கல்வியில் முன்னேற்றம் கண்டுள்ளது. இந்த வளர்ச்சியானது ஆலமரவிழுதுகள் போல பல துறைகளிலும் முன்னேறி சிறந்ததொரு எதிர்கால சந்ததியை உருவாக்க ஆசிக்கின்றேன்.

பண்டிதர் தம்பையா கண்ட கனவு நனவாக போரின் வடுக்கள் ஆறி அனைத்தும் நாம் கற்ற பாடத்தால் உலகுசார் அரசியல் நிலைமையோடும், தொழில்நுட்ப தொடர்பாடல் கணனி வளர்ச்சியோடும் மீண்டும் கட்டியெழுப்பும் முகமாக தமிழினம் மீண்டும் எழுந்துநிற்க பிரார்த்திக்கின்றேன்.



# வாழ்த்துச் செய்தி

திருமதி.ஜோய் மகிழ் மகாதேவன்,
நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியும்.
(பருத்தித்துறை)

ஏழேழு பிறவியிலும் தொடரும் சொத்தை அள்ளி வழங்கி வருகின்ற யாழ் நவாலி மகாவித்தியாலயம் நூற்றாண்டு விழாவைக் காணுகையில் நவாலி மண்ணின் கல்விக்கூடத்தை வாழ்த்துக் கூறுகையில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

பழமையோடு புதுமையும் கலந்து நல்லொழுக்கத்துடன் ஆத்மீக வழிகளில் கணனி அறிவையும் வளர்த்து வருகின்ற இவ்வித்தியாலயம் தனக்கென ஒரு முத்திரை ஏற்படுத்தியுள்ளது.

அண்மைக்காலத்தில் க.பொ.த உயர்தர வகுப்பை ஆரம்பித்துள்ள இவ்வித்தியாலயம் சகல வளங்களும் பெற்று இச்சூழலுக்கு மட்டுமன்றி அயற்கிராமங்களில் இருக்கும் மாணவர்களை ஈர்த்தெடுக்கும் காந்தம் போல திகழ, இந்நூற்றாண்டு விழாவில் வாழ்த்துகிறேன்.

வாழ்க! கல்விக் கூடம்,
வளர்க!! மாணவர் அறிவு,
ஓங்குக!!! புகழ்.



## கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து.....

திரு. இ. இளங்கோவன்,
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்.

யா/ நவாலி மகா வித்தியாலயமானது தனது நூற்றாண்டு அகவையைப் பூர்த்தி செய்தமை பாராட்டிற்குரியதொன்றாகும். அப் பாடசாலையில் சைவப் பாடசாலையின் தேவையை உணர்ந்து பண்டிதர் தம்பையா அவர்கள் "பார்வதி வித்தியாலயம்" என்ற பெயருடன் ஆரம்பித்து வைத்தார். நவாலியூர் சோமசுந்தரப் புலவர், இராமலிங்க உபாத்தியாயர், திரு. சி. சுப்பையா அவர்களது அயராத முயற்சியினால் 1919ல் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து நவாலி மகா வித்தியாலயம் என தரமுயர்த்தப்பட்டு கல்விப் பணியைச் சிறப்பாகச் செய்தமை பெரும் வரவேற்பிற்குரிய விடயமாகும்.

1961ஆம் ஆண்டு உயர்தர வகுப்புக்களைக் கொண்ட இப்பாடசாலை பின்னர் சோர்வடைந்து மீண்டும் உயிர்த்தெழுந்து உயர்தரத்திலே கலைப்பிரிவைக் கொண்டு இயங்கி வருகின்றது.

பல அதிபர்களின் அயராத பணியின் மூலம் வகுப்பறைக் கட்டிடங்கள் ஆய்வுகூட வசதிகள் விளையாட்டு மைதானம் போன்ற வசதிகளைப் பெற்று முழுநிறைவான பாடசாலையாக முன்னேறி வருவது அவதானிக்கக் கூடியதொன்றாக இருக்கின்றது. எனவே தற்போதைய அதிபர், ஆசிரியர் குழாத்தின் முன்னெடுப்புடன் கல்விச் சமூகத்தின் பங்களிப்புடன் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடவிருப்பது சிறப்பான அம்சமாகும்.

இவ் வித்தியாலயத்தின் கல்விச் சமூகத்திற்கு இதனை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு உண்டு என நினைவூட்டுவதோடு இவ் வித்தியாலய மாணவர்கள் வேலை உலகிற்கும் சக வாழ்விற்கும் உரியவர்களாக ஆக்க வேண்டும் எனவும் கூறி எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



## ஆசியுரை

திரு. ப. விக்னேஸ்வரன்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்.

வலிகாமம் வலயத்தில் நீண்ட ஆயுள் கொண்ட புகழ்பூத்த பாடசாலைகளுள், நவாலி மகா வித்தியாலயமும் ஒன்று. நவாலியூர் என்றால், தமிழ் பேசும் மக்கள் அனைவரதும் உள்ளத்திலும் தோன்றுபவர் "தங்கத் தாத்தா" என அன்புடன் அழைக்கப்படும் சோமசுந்தரப்புலவராவர். அத்தகைய சான்றோன் தோன்றிய கிராமத்தில் வாழும் மக்கள், தூரநோக்கு சிந்தனையுடன் இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே பாடசாலை அமைத்து தம் மக்களை நெறிப்படுத்தியமை பாராட்டற்குரிய ஒன்றாகும். தமிழ்ப் புலமைமிக்க சான்றோர்களின் இயல்புக்கத்தினால் ஆக்கப்பட்ட இப்பாடசாலை காலத்திற்குக் காலம் ஏற்பட்ட பல்வேறு பயங்கர யுத்த சூழலுக்கும் இடையில் தன்னிலை குன்றாமல் நிமிர்ந்து நிற்கின்றது என்றால் அதனை ஆரம்பித்தவரின் உளவலிமையையே துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது.

இப்பாடசாலையில் கற்றுத் தெளிந்த அறிஞர்களும் பாடசாலை நிர்வாகத்தினரும் ஒன்றிணைந்து வெளியிடும் நூற்றாண்டு விழா மலருக்கு ஆசி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். எல்லாம் வல்ல இறைவன் மேலும் மேலும் இப் பாடசாலை சிறந்து வளர்ந்தோங்க நல்லருள் புரிவாராக.

வாழ்க பல்லாண்டு.



## ஆசியுரை

திரு. சு. சுந்தரசிவம்,
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாம வலயம்.

1910ஆம் ஆண்டில் நவாலியில் வாழ்ந்து வந்த சமூகநல முன்னோடி பண்டிதர். தம்பையா அவர்களின் பரோபகாரச் சிந்தனையின் செயல்வடிவமாக யா/ நவாலி மகாவித்தியாலயம் தோற்றம் பெற்றுத் தனது சமூகத்தின் நூற்றாண்டு கால வளர்ச்சிக்கோலங்களில் ஆழமாகத்தடம் பதித்து உயர்வுபெற்று விளங்குகின்றது. இப்பாடசாலையின் நூற்றாண்டு ஞாபகார்த்த மலருக்கு எனது நல்லாசிகளை நல்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

சைவமும் தமிழும் தழைத்தோங்குவதற்கும் உலகின் தனித்துவச் சிறப்புப் பண்புக்கோலங்களைக் கட்டிக் காப்பதிலும் அவ்வப்பொழுது பல அறிஞர்கள், கனவான்கள் தமது காத்திரமான பங்களிப்புக்களை இப்பாடசாலையின் வளர்ச்சிக் கட்டங்களில் வழங்கி வந்துள்ளனர். அவர்களில் முதன்மையானவர் தமிழ் மக்களின் ஜனரஞ்சகமான புலவரான நவாலியூர் சோமசுந்தரப்புலவராவார். இவரது புலமைப்பண்புகள் யாவும் ஆசிரிய சேவையினூடாக இப்பாடசாலையில் சங்கமித்துப் புலமைசார் மாணவர்பரம்பரை செம்மையுற்றுச் சமூகத்தின் விடிவெள்ளிகளாகத் திகழச்செய்தது.

இந்நூற்றாண்டு விழாவானது வித்தியாலயத்தின் கடந்தகால வரலாறுகளைச் சீர்தூக்கிப் பார்த்து இரண்டாவது நூற்றாண்டில் தடம்பதிக்கும் இவ்வேளையில் எதிர்கால நிகழ்வுகளின் பசுமையான எண்ணங்களைச் செயல்வடிவம் பெறச்செய்வதற்கு உந்துசக்தியாக இருக்கவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.




# வாழ்த்துச்செய்தி

திரு. சி. கந்தசாமி,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
சண்டிலிப்பாய்.

"தங்கத்தாத்தா" என அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் உதித்த நவாலியூருக்கு நூற்றாண்டு காலக் கல்வியினைக் கொடுத்துக் கொண்டிருக்கும் யா/ நவாலி மகாவித்தியாலயம் இன்று தனது நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவது யாவருக்கும் ஒரு மகிழ்ச்சியான விடயமாகும். பண்டிதர் தம்பையா அவர்களால் "பார்வதி வித்தியாலயம்" என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம் இன்று ஒரு பெருவிருட்சமாக வளர்ந்து யா/ நவாலி மகாவித்தியாலயம் என்ற பெயருடன் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் அதன் வரலாற்றினைத் தாங்கிவரும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கக்கிடைத்த சந்தர்ப்பத்தினையிட்டு மிக மனமகிழ்ச்சி அடைகிறேன்.

நவாலியூர் மக்களுக்குக் கல்வி அறிவினைக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல சிந்தனையுடன் பண்டிதர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையில் கல்வி கற்றவர்கள் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்ற வரலாறு இப்பாடசாலைக்கு உண்டு. அத்தோடு இங்கு கல்வி கற்றபலர் அரசாங்கத்தில் உயர்பதவிகளில் அலங்கரித்துக் கொண்டிருக் கின்றனர். ஆரம்பப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டுப் படிப்படியாக தரம் உயர்த்தப்பட்டு 1C பாடசாலையாக விளங்குகிறது. இடையில் சில தடங்கல் ஏற்பட்ட போதும் தற்போதைய அதிபர். திரு. இரா. வசந்தகுமார் பொறுப்பேற்றவுடன் அவரது அயரா முயற்சியினால் மீண்டும் க.பொ.த (உயர்தர) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு இன்று புதுப்பொலிவுடன் விளங்குகின்றது.

பல சிறந்த அதிபர்கள், ஆசிரியர்களது வழிநடத்தலினால் இப்பாடசாலை கல்விச் செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறந்து விளங்குகின்றது. நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் இப்பாடசாலையானது மென்மேலும் வளர்ச்சி கண்ட பாடசாலையாக விளங்க வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.



# வாழ்த்துச் செய்தி

பேராசிரியர். க. தேவராஜா,
பீடாதிபதி,
முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.

நூற்றாண்டு விழாவினைக் காண்கின்ற நவாலி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். சமூகத்தின் முன்னேற்றத்துக்கு ஆணிவேராகத் திகழ்கின்ற இப்பாடசாலை பல தலைசிறந்த கல்விமான்களை உருவாக்கியிருப்பது கண்டு பெருமை கொள்ளாமல் இருக்க முடியாது. நவாலியூர் சோமசுந்தரப் புலவர் என்று கூறினால் குழந்தைகள் முதல் முதியோர் வரை நன்கறிந்த மேதை. அத்தகையவர் வாழ்ந்த கிராமத்துக்குரிய நவாலி மகாவித்தியாலயம் தலைசிறந்த அதிபர்களையும் ஆசிரியர்களையும் காலத்துக்குக் காலம் பெற்றுக்கொண்ட காரணத்தினால் தனது வளர்ச்சியில் உறுதிகொண்டிருந்தமையைக் கண்டு மகிழ்கின்றோம்.

இப்பொழுது புதிய அதிபரின் கீழ் பாடசாலை வேகமாக மறுமலர்ச்சி கண்டு வருவதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. தற்பொழுது க.பொ.த. உயர்தர வகுப்புக்களையும் கொண்டிருப்பதனால் இப்பகுதி மாணவர்கள் ஆரம்பக்கல்வியையும் இரண்டாந்தரக் கல்வியையும் இப்பாடசாலையிலேயே நிறைவுசெய்து பல்கலைக்கழகம் பிரவேசிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ் வளர்ச்சிப்பாதையில் வேகமாக முன்னேறி எதிர்காலத்தில் பெருமைமிக்க பாடசாலையாகத் திகழ வாழ்த்துவதுடன் பல சிரமங்களுக்கு மத்தியில் நூற்றாண்டு மலரினை வெளியிடும் பாடசாலைச் சமூகத்துக்கு என் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



# பசுமை நிறைந்த நினைவுகளுடன்.......

திருமதி. றெஜினா இருதயநாதன்,
பழைய மாணவி (யா/ நவாலி ம.வி)
ஓய்வு நிலைக்கல்விப் பணிப்பாளர்,
வலிகாம வலயம்.

மருதமும் நெய்தலும் ஒருங்கே எழில்தர புலமையும் கலைகளும் இணைந்தே சிறப்புறத்திகழும் நாவலி மிக்க நவாலியம் பதியில் கற்றவர் சபையில் என்னை உயர்த்திய என் அன்னையாம் நவாலி மகா வித்தியாலயத்தின் அகவை நூறில் இனிய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமை அடைகின்றேன்.

1910ல் "பார்வதி வித்தியாலயம்" என்ற பெயருடன் உயர்திரு பண்டிதர் தம்பையா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையானது திரு.இராமலிங்க உபாத்தியாயர் பெருமை சேர் திரு. க. சோமசுந்தரப்புலவர், திரு.சி.சுப்பையா அவர்களின் முயற்சியினால் 1919ல் அரசாங்கப் பாடசாலையாகியது. அறிவார்வம் மிக்க மக்கள் செறிந்து வாழ்ந்ததால் அவர்களின் ஆர்வம் இப்பாடசாலையை 1951ல் கனிஷ்ட வித்தியாலயமாகவும் 1961ல் தரமுயர்த்தப்பட்டு நவாலி மகா வித்தியாலயமாகவும் உயர வழிவகுத்தது.

இவ்வித்தியாலயத்தின் பொற்காலமாக மானியூர் திரு. க. நவரட்ணராஜா (1ம் தர அதிபர்) அவர்களின் காலத்தைக் குறிப்பிடலாம். இவரது காலத்தில்தான் இவ்வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டது. அம் மைதானத்தில் நடந்த முதலாவது விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக வருகை தந்தவர் அப்போதைய கல்வி அமைச்சர் கௌரவ I.M.R.I. ஈரியகொல்ல அவர்கள். ஏனைய இடங்களில் உயர்தரப் பாடசாலைகள் இருந்தபோதும் 5 மாணவர்களுடன் உயர்தர வகுப்பை ஆரம்பித்து 5 மாணவர்களையும் சித்திபெறவைத்து அவர்களில் இரு மாணவரை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய பெருமை அவரைச் சார்ந்ததாகும். அந்த இருவர் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய உபஅதிபராக இருந்து ஓய்வுபெற்ற திருமதி. திரேசா பெனற்றி அவர்களும், நானும் எனச் சொல்லிக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். திருமதி. A. சண்முகரட்ணம் (B.A), திரு. A. தம்பிராஜா (B.A) ஆகிய இருவரும் உயர்தர வகுப்பின் சாதனைகளுக்குப் பொறுப்பான ஆசான்களாவார். அதன்பின் பாடசாலையைச் சிறந்த நல் அதிபர்களான திருமதி. எ.தங்கராஜா, திரு. செ. கதிர்காமத்தம்பி போன்றோர் சிறப்புற நடாத்தியபோதிலும் உயர்தர வகுப்பு கைவிடப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டது.

அதன்பின் திருமதி. சி. விஸ்வலிங்கம் அவர்களின் காலத்தில் பாடசாலை மீண்டும் புத்துணர்ச்சி பெற்றுப் பல சாதனைகளை ஈட்டியது. பின்னர் திரு. அ. அலெக்சாண்டர் காலத்தில் புதிய அதிபர் அலுவலகம், பாடசாலையின் முகப்பு, தரம் 1, 2 செயற்பாட்டறைகள், வகுப்பறைக் கட்டட வசதிகளை இவ்வித்தியாலயம் பெற்றுக் கொண்டதுடன்


இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் குறிப்பிடத்தக்கவளவு சாதனைகள் பெறப்பட்டன.

இவரைத் தொடர்ந்து வந்த அதிபர் பு. ஸ்ரீவிக்னேஸ்வரன் காலத்தில் லண்டன் பழைய மாணவர் நிதிமூலம் வித்தியாலய வீதி எல்லை மதில், பழைய மாணவன் நவாலியூர் சந்திரன் அவர்களால் நவாலியூர்ச் சோமசுந்தரப்புலவர் அவர்களின் சிலை, வித்தியாலய வாயில், வகுப்பறைகள், பழைய மாணவனும் முகாமையாளர் (கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்) பெருமைமிகு ச. ரவீந்திரா அவர்களின் உதவியுடன் வித்தியாலய ஸ்தாபகர் பண்டிதர் தம்பையா அவர்களின் உருவச்சிலை அமைப்பு ஆகிய சிறப்புச் செயற்பாடுகளும் குறிப்பிடத்தக்க கல்விச் செயற்பாடுகளும் இடம்பெற்றதால் வித்தியாலயம் கல்விச் சமூகத்தில் உயர்வுபெறத் தொடங்கியது.

மீண்டும் ஓர் மானியூர் அதிபராக திரு. இரா. வசந்தகுமார் அவர்கள் 2007இல் இவ்வித்தியாலயத்தைப் பொறுப்பேற்றுக் கண்ணெனப் போற்றி வழிநடத்தி வருகின்றார். திரு. அ. அலெக்சாண்டர், திரு. பு. ஸ்ரீவிக்னேஸ்வரன் ஆகிய அதிபர்களின் காலத்தில் மீண்டும் உயர்தர வகுப்புக்கள் மீள ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்பட்டபோதும் திரு. இரா. வசந்தகுமார் அவர்களின் விடாமுயற்சியினால் அம்முயற்சி வெற்றியாகியது. மாகாணக் கல்விப்பணிப்பாளர் உயர்திரு. வீ. இராசையா அவர்களிடம் பல தடவைகள் அதிபர் அவர்கள் வேண்டுகோள் விடுத்து வெற்றி பெற்றார். 2008ல் ஆரம்பிக்கப்பட்ட உயர்தர வகுப்பில் 13 மாணவர்கள் 2010ல் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். அவர்கள் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

மேலும் பல கட்டட வசதிகளை அதிபர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். விஞ்ஞான ஆய்வுகூடம், சமையலறைக் கூடம், கணனி அறை அவற்றுள் சிலவாகும். பழைய மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு விழா போன்றன மிகவுயர்ந்த மட்டத்தில் நடத்தப்பட்டுள்ளன.

சமூக மட்டத்தில் அதிபர் உயர்ந்து நிற்பதால் பல கல்விமான்கள் பெரியோரின் உதவிகளை மிக இலகுவாகப் பாடசாலைக்காகப் பெறமுடிந்துள்ளது. என் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய கொமர்ஷல் வங்கி முகாமையாளர் திரு. ச. ரவீந்திரா மூலம் கணனிகள் பெறப்பட்டுள்ளது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ. திரு. ந. ஸ்ரீகாந்தா அவர்களின் மூலம் போட்டோபிரதி இயந்திரம் பெற்றமை, நிக்கொட் நிறுவனத்தால் 1 ½ இலட்சம் பெறுமதியான நூல்கள் பெறப்பட்டமை, எங்கள் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் நூற்றாண்டு விழாவிற்காக ரூபா 2 இலட்சம் நிதி பெறப்பட்டமை. இவையாவும் அதிபரின் ஆற்றலையும் அவர் சமூகத்துடன் கொண்டுள்ள நல்லுறவையும் பறைசாற்றி நிற்கின்றன. தனது சொந்த நிதியையே பாடசாலைக்காகச் செலவுசெய்து முழுநேரமாகப் பாடசாலையில் செயற்படும் அதிபர் திரு. இரா. வசந்தகுமார் அவர்களையும் முழுமையாகத் தங்களை அர்ப்பணித்து நிற்கும் உபஅதிபர். திருமதி. ஜெ. குமரேசமூர்த்தி அவர்களையும், பணி சிறக்க வைக்கும் நல்ஆசிரியர்களையும் என்றும் கரம் கொடுக்கும் பழைய மாணவர், அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களையும் இவ்வித்தியாலயத்தின் அகவை நூறுதனில் பசுமை நிறைந்த நினைவுகளுடன் வாழ்த்துகின்றேன்.



# ஆசிச்செய்தி


திரு. க. தனபாலசிங்கம்,
இளைப்பாறிய கோட்டக்கல்விப்
பணிப்பாளர், சண்டிலிப்பாய்.

மனிதனை மனிதநேயத்தோடு வாழவைக்கும் கல்வியின் கருவூலங்களாக விளங்கும் பாடசாலைகள் ஒரு பிரதேசத்தின் விலைமதிக்க முடியாத சொத்துக்களாகும். ஒரு பாடசாலையும் அதன் சமூகமும் கொண்டுள்ள இடைவினைத் தொடர்பானது சமூகத்தின் அபிவிருத்திக்கும் அப்பாடசாலையின் நிலைபேற்றுக்கும் அத்திவாரமாக அமைகின்றது. ஒரு பாடசாலையானது நூற்றாண்டு காலம் நிலைத்து நின்று ஒரு சமூகத்துக்கு சேவைபுரிகின்றமையானது அதன் பலத்தையும் பயன்படுதன்மையினையும் பறைசாற்றி நிற்கின்றது.

இவ்வகையில் யா/ நவாலி மகா வித்தியாலயமானது நூறு ஆண்டு காலம் சேவையாற்றி அப்பிரதேச மக்களின் கல்வி, பொருளாதார முன்னேற்றத்தில் காத்திரமான பங்களிப்பைச் செய்திருக்கின்றது என்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை. கோட்டக்கல்விப் பணிப்பாளராக எட்டுவருடம் கடமையாற்றிய காலத்தில் இப்பாடசாலையின் வளர்ச்சியும் அதற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச்சமூகம் ஆகியோரின் பங்களிப்பும் என்னால் நன்று அவதானிக்க முடிந்தது. கல்வித்துறை, விளையாட்டுத்துறை, ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் யாவற்றிலும் தொடர்ச்சியான முன்னேற்றங்களை அவதானிக்க முடிந்தது.

சில தசாப்தங்களுக்கு முன்னர் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுப்பிய இப்பாடசாலை மீண்டும் அப்பணியைத் தொடர க.பொ.த உயர்தர வகுப்புக்களை ஆரம்பித்திருப்பது பாராட்டத்தக்கது. இப்பணியைத் தொடக்கி வைத்த தற்போதைய அதிபர் திரு. ஆர். வசந்தகுமார் அவர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்காக அனைத்து வளங்களையும் தேடிப்பெற்று பாடசாலையைப் பல்துறைகளிலும் அபிவிருத்தி செய்து வருவதை அவதானிக்கமுடிகிறது.

நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக மலர் ஒன்றை வெளியிடும் பாடசாலைச் சமூகத்துக்கும் மலர் வெளியீட்டுக் குழுவுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்து, இப்பாடசாலையில் சாதனைகளையும் முன்னேற்றங்களையும் ஆவணப்படுத்தவும், மாணவர் படைப்பாற்றல்களை வெளிப்படுத்தவும் நூல் வடிவில் மலர் ஒன்று வெளியிட பாடசாலைச் சமூகம் முன்வந்தமையை பாராட்டுவதுடன் இப்பாடசாலை எதிர்காலத்தில் சகலதுறைகளிலும் மேலும் வளர்ச்சி பெற்று புகழ்பெற்ற கல்லூரியாக எழுச்சிபெற இதயபூர்வமாக வாழ்த்துவதில் மனநிறைவடைகிறேன்.



# வாழ்த்துச் செய்தி

திரு.எஸ்.கதிர்காமத்தம்பி (B.A, J.P),
ஓய்வுபெற்ற அதிபர், யா/நவாலி ம.வி
தலைவர், வட இலங்கை
பத்திரிகையாளர் சங்கம்.

பத்து தசாப்தங்கள் நிறைந்து நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் நவாலி மகாவித்தியாலயத்திற்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நவாலி மகாவித்தியாலயம் பார்வதி வித்தியாலயமாக 1910இல் ஆரம்பித்து தம்பையாப் பண்டிதரின் ஆலோசனை வழிகாட்டலினால் இன்று பல்லாயிரக்கணக்கான கல்வியாளர்களை சமூகத்துக்கு உருவாக்கி தனது மகத்தான கல்விப்பணியைத் தொடர்கின்றது.

நவாலி மகாவித்தியாலயம் யாழ். குடாநாட்டில் மட்டுமல்லாது வடபகுதியில் பிரசித்தி பெற்ற சைவத்தமிழ் புலவர் வரிசையில் புடம் போட்டுக் கொண்டுள்ளது.

அந்த வரிசையில் திரு. க. இராமலிங்க உபாத்தியாயர், திரு. க. சோமசுந்தரப்புலவர், பாடசாலை ஆசிரியராக இருந்து திரு. சி. சுப்பையா ஆகியோரது பயனால் இப்பாடசாலை 1919இல் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நவாலி மக்களின் ஒத்துழைப்புடன் கல்விப்பணி சீரிய இலக்கினை அடைந்து மாணவர் மையக்கல்வி ஆசிரியர் மையக்கல்வி ஊடாக மாணவர்கள் சிறந்த அடைவு மட்டங்களைப் பெற்றதனால் இப்பாடசாலை 1961இல் நவாலி மகாவித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது.

பின்னர் சிறிது காலம் கல்விப்பணியில் ஏற்பட்ட தாக்கமும் நிர்வாக மறுசீரமைப்பற்ற தன்மையால் பாடசாலை மீண்டும் வீழ்ச்சியுற்றது. ஜீ.சி.ஈ. சாதாரணம் வரை செயற்பட்டது.

பின்னர் நவாலி மகாவித்தியாலய அதிபராகப் பொறுப்பேற்றவரும், புகழ்பூத்த கல்விமானுமாகிய முதல்வர். இரா. வசந்தகுமார் மேற்கொண்ட அரும் முயற்சி நவாலி மகாவித்தியாலயத்தில் கல்விப் பணியில் பாரிய மாற்றம் ஏற்பட்டு உயர்தர வகுப்பு (கலை) ஆரம்பிக்கப்பட்டது.

இம்மாற்றம் ஊடாக இன்று நூற்றாண்டு விழாவிற்கான அடிநாதம் இட்டு வளரும் இப்பாடசாலையை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைவதோடு அண்மைக்காலமாக கல்விப்பணிக்கு விளக்கேற்றிய அதிபர் வரிசையில் திருமதி. சி. விஸ்வலிங்கம், திரு. அ. அலெக்ஸாண்டர், திரு. பு. ஸ்ரீவிக்னேஸ்வரன் ஆகியோரையும் இந்நூற்றாண்டு விழாவில் வாழ்த்தி அமைகின்றேன்.



# வாழ்த்துச் செய்தி

திரு. ஐ. மனோகரன்,
முன்னாள் கொத்தணி அதிபர்
யா/ நவாலி ம. வி.

"பாலைவனம் சோலைவனம் ஆக வேண்டும். அங்கிருந்து
பசுங்கிளிகள் பாடவேண்டும்"

என்ற தேசிகவிநாயகம்பிள்ளை பாடலின் ஒரு சிறிய அடி எமது கிராமமாகிய நவாலியூரை நினைக்கும்போது எம் மனதில் ஞாபகத்திற்கு தோன்றுகிறது. எமது நவாலியூர்க் கிராமம் ஒரு புறம் களையோடை அம்மனும், மறுபுறம் அட்டகிரி முருகனாலும், மறுபக்கம் சிந்தாமணிப் பிள்ளையாராலும், ஏனைய புறங்கள் கிறிஸ்தவ, கத்தோலிக்க ஆலயங்களாலும் பாதுகாக்கப்பட்டு, அலங்கரிக்கப்பட்டு, நம் எல்லோரையும் தெய்வீக வழிபாடுடையவர்களாகவும், ஆன்மீக நம்பிக்கையுடைய மாணவர்களாகவும் ஆசிரியர்களாகவும் மேலும் மேலும் சமய நம்பிக்கையும் பக்தியுமுடையவர்களாக எமது பாடசாலைச் சமூகம் திகழ்கின்றது. பசுமை நிறைந்த இந்தக் கிராமத்தில்தான் தங்கத்தாத்தா அவதரித்த புண்ணிய பூமி. இயற்கை எழில் நிறைந்த அழகான கிராமம் எனது நவாலியூர்க் கிராமம்.

இச்சிறிய கிராமத்தில் 1910ம் ஆண்டில் அவதரித்த உயர்திரு. பண்டிதர் தம்பையா அவர்களால் உருவாக்கப்பட்ட இப்பாடசாலை 1915ல் கனிஷ்ட வித்தியாலயமாகி 1961ல் மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டு பல அதிபர்களின் விடாமுயற்சியாலும் ஆசிரியர்களின் கடின உழைப்பாலும் பெற்றோர்களது உதவிகளாலும் பாடசாலை துரித முன்னேற்றம் அடைந்துள்ளது. பாடசாலை வரலாற்றில் முதன்முதலாக சர்வ கலாசாலைக்குச் சென்ற திருமதி. றெ. இருதயநாதன் (முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர்), திருமதி. திரேசா ஹென்றி (ஓய்வுபெற்ற உபஅதிபர், உடுவில் மான்ஸ் வித்தியாலயம்) இவர்களை நாம் மனத்துள் மறவாதிருத்தல் வேண்டும்.

மாணவர்களிடையே போதிய அறிவையும் ஆற்றலையும் பண்பையும் வளர்த்தெடுக்கும் அரும்பணியில் நூறாவது ஆண்டில் கால்பதிக்கும்

இப்பாடசாலை இக்கிராமத்தில் ஒரு சோதியாக என்றும் விளங்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

நானும் 1991 – 1992 காலப்பகுதியில் கொத்தணி அதிபராகக் கடமையேற்று இப்பாடசாலையை ஒரு முதன்மைப் பாடசாலையாக்கி அயற்கிராமத்தில் உள்ள பாடசாலைகளின் வளங்களை அதிகரிக்கச்செய்து அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு என்னால் இயன்றவரை வித்திட்டேன்.

நவாலி மகா வித்தியாலயம் இன்று பல கட்டடங்களால் மட்டுமல்ல மாணவர் தொகையாலும் அதிபர் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பாலும், பெற்றோர், நலன்விரும்பிகளின் ஊக்கத்தினாலும் பழையமாணவர்களது விடாமுயற்சியாலும் மிகவுயர்ந்த நிலையில் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் வளர்ச்சியடைந்து வீறுநடை போடுகின்றது. தற்போதைய அதிபர் மிகவும் ஆளுமை மிக்கவராகவும், அவருக்கு உதவியாக உபஅதிபரும் ஊன்றுகோலாக இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இவ்விழா தொடர்பாக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். நூறாவது ஆண்டில் காலடி வைத்திருக்கும் இம்மகாவித்தியாலயம் மேலும் சிறக்க வாழ்த்தி வணங்குகின்றேன். பாடசாலை முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் இந்நாளில் மனதார வாழ்த்தி பாடசாலைக்கல்வி மென்மேலும் வளரட்டும் என்று ஆசிகூறி அமைகின்றேன்.



# நவாலி மகாவித்தியாலயம் பலநூறாண்டுகள் வளமுடன் வாழ்க

திருமதி. சி. விஸ்வலிங்கம்,
முன்னாள் அதிபர்,
யா/ நவாலி ம. வி.
(B.A. Dip in Ed. S.L.P.S I)

நவாலி மகா வித்தியாலயம் தனது கல்விப் பாரம்பரிய வளர்ச்சிப் பணியில் நூறாண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்து பெருமிதம் கொள்கின்றது. இவ்வேளையில் இவ் வித்தியாலயம் மேலும் மேலும் பல துறைகளிலும் சாதனைகள் புரிந்து பல நூறாண்டுகள் கல்விப் பணியாற்ற வேண்டும் என இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் முன்னாள் அதிபராகிய நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"தங்கத்தாத்தா" என பார்போற்றும் தமிழறிஞர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பிறந்து வாழ்ந்த அழகிய கிராமமே நவாலியாகும். அமைதியும் எளிமையும் இயற்கை வனப்பும் நிறைந்த நவாலியூரின் மையப்பகுதியில் வட்டுக்கோட்டை நவாலி வீதியில் மகாவித்தியாலயம் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

நவாலியூருக்கும் மட்டுமன்றி அயலூர்களிலும் வாழ்கின்ற பல ஆயிரக்கணக்கான மாணவர்களின் உள்ளங்களில் அறிவொளி ஏற்றிய இந்நிறுவனம் பலதுறைகளிலும் விற்பன்னர்களாக சர்வதேசங்களிலும் பரந்து வாழும் தனது புதல்வர்களால் பெருமையடைகின்றது.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் நலிவுற்றிருந்த எமது சைவசமயத்தையும் தமிழ்மொழியையும் தமிழர் தம் பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப்பாதுகாக்க வேண்டிய தேவை உணரப்பட்ட ஒரு காலகட்டத்தில் நவாலியூர்ச் சான்றோர்களின் அனுசரணையுடன் பண்டிதர் தம்மையா உபாத்தியாயர் அவர்கள் "பார்வதி வித்தியாசாலை" என்ற பெயரில் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். இப் பாடசாலை படிப்படியாக வளர்ச்சியடைந்து 1961ம் ஆண்டு மகா வித்தியாலயமாகத் தரம் உயர்ந்து உயர்தர வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டன.

1965ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு இரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடக்கூடிய அம்சமாகும். 1989ம் ஆண்டு நவாலிக் கொத்தணியின் மூலாதாரப் பாடசாலையாக மகா வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டமையும் கல்வி வரலாற்றில் முக்கிய நிகழ்வாகும்.

1993ம் ஆண்டு நவாலிக் கொத்தணி அதிபராகவும், மகா வித்தியாலயத்தின் அதிபராகவும் பணியாற்றும் பேறு எனக்குக் கிடைத்தது. இவ் வித்தியாலயத்தை முன்னேற்றுவதற்காக நானும் எனது ஆசிரியர் குழாமும், பெற்றோரும், பழைய மாணவரும் பல திட்டங்களை வகுத்துச்

செயற்பட்டோம். அதன் பேறாக, தளபாடப் பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை, வகுப்பறைகள் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளின் மத்தியிலும் கல்வித் தரத்தில் உயர்பெறுபேறுகளை எம்மால் பெறமுடிந்தது. ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைகள், க.பொ.த (சா/த) பரீட்சைகள் என்பனவற்றில் உயர் பெறுபெறுபேறுகளைப் பல ஆண்டுகள் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள முடிந்தது.

தமிழ்த் தினப்போட்டிகள் பண்ணிசைப் போட்டிகளிலும் மாணவர்கள் பங்குபற்றி கோட்டவலய மட்டங்களில் சாதனைகளை நிலைநாட்டினர். மாணவர்களை உற்சாகப்படுத்துமுகமாக ஆண்டுதோறும் பரிசளிப்பு விழாவினைச் சிறப்பாக நடாத்திப் பரிசில்களையும் வழங்கி வந்தோம்.

ஆண்டுதோறும் ஆடிப்பிறப்பு தினங்களில் சோமசுந்தரப்புலவர் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடி வந்தோம். பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, பட்டிமன்றம் என்பனவும் விசேட நிகழ்வுகளாக நடைபெற்று வந்தமை சிறப்பம்சங்களாகும்.

விளையாட்டுத்துறையைப் பொறுத்தமட்டில் இல்லங்களைப் புனரமைத்து ஆண்டுதோறும் இல்லமெய்வல்லுனர் போட்டிகளை நடாத்தினோம். பெரு விளையாட்டுக்களான வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் என்பனவற்றை மாணவர்களிடையே உருவாக்கி பல போட்டிகளில் பங்குபற்றிச் சாதனைகள் புரிந்து வந்தனர்.

பௌதிக வளத்துறையிலும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய மலசலகூடங்கள் அமைக்கப்பட்டன. நுழைவாயிலில் புதிய "கேற்" அமைக்கப்பட்டது. புதிய தளபாடங்களைக் கொள்வனது செய்து மாணவர்களுக்கு இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தோம். மாணவர்களுக்கு குடிநீர் வசதியைப் பூர்த்தி செய்வதற்காக குழாய் நீர் வசதிசெய்து கொடுக்கப்பட்டது.

தொடர்ந்து வந்த அதிபர்களும் சுற்றுமதில் கட்டியும், புலவரதும் பண்டிதரதும் சிலைகளை நிறுவியும், புதிய கட்டிடங்களை அமைத்தும் பல அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். தற்போதைய அதிபர் திரு. இ. வசந்தகுமார் அவர்கள் மேலும் பல அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். கைவிடப்பட்டிருந்த உயர்தர வகுப்புக்களை மீள ஆரம்பித்துள்ளமை இந்நூற்றாண்டின் நிறைவில் பெற்றுள்ள உன்னத சாதனை எனலாம்.

தற்போது மாறிவரும் உலகின் சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் எமது எதிர்காலச் சந்ததியினரை உன்னத பிரசைகளாக்கும் ஒப்பற்ற பணியில் மேலும் பல நூறாண்டுகள் ஈடுபட எல்லாம் வல்ல இறைவனின் ஆசி கிட்டுவதாக.

"வாழ்க நவாலி மகா வித்தியாலயம்
ஓங்குக அதன் புகழ் வையகமெல்லாம்."



# நூற்றாண்டு வாழ்த்துரை

திரு. அ. அலெக்சாண்டர்,
முன்னாள் அதிபர்,
யா/ நவாலி ம.வி.

புலமைக்கொரு தங்கத்தாத்தாவும், கலைக்கொரு கலையரசும் வாழ்ந்த நலமிக்க நவாலியூரில் கல்விக்கொடையாளி பண்டிதரால் உருவாக்கி வளர்த்தெடுக்கப்பட்ட கல்விக்கூடம் நூற்றாண்டைக் காணும் இவ் வேளையில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் அதிபர், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள், கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு இதுவரை இக்கல்விக்கூடத்தைப் போற்றி, காப்பாற்றி வளர்த்தெடுக்க உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள், சிற்றூழியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவரையும் நினைகூறுவது பொருத்தமானதாகும்.

நூற்றாண்டைக் காணும் இக்கல்விக்கூடத்தில் எனது சேவைக் காலத்தின் இறுதிக் காலத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்றதைப் பெருமையாக நினைக்கின்றேன்.

இக்கல்விக் கூடம் தொடர்ந்து பெயரும், புகழும் பெற்று அவனியில் சிறந்து விளங்க வேண்டும் என இறைவனை வேண்டுவதோடு மனதார வாழ்த்துகின்றேன்.

நன்றி.



# எங்கள் நவாலி மகாவித்தியாலயம் (25.07.2003 - 30.03.2007)

திரு.பு.ஸ்ரீவிக்னேஸ்வரன்,
முன்னாள் அதிபர்,
யா/நவாலி ம. வி.

நூற்றாண்டு விழாக் காணும் பெருமை மிக்க நவாலி மகா வித்திலாயத்தை வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகின்றேன். இக் கல்விச்சாலையில் 2003 – 2007 காலப்பகுதியில் அதிபராகப் பணியாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

இறையருளினாலும் பெரியோர்கள், கல்வித் திணைக்களம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், யுனிசெப், பழைய மாணவர் ஆகியோரின் நிதி உதவியினாலும் ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஒத்துழைப்பினாலும் இக்காலத்தில் வித்தியாலயம் வளம் பல பெற்றது. மாணவர்கள் கல்வியிலும் இணைப்பாடச் செயற்பாட்டிலும் மேன்மை பெற்றனர்.

இவ்வித்தியாலய மாணவர்கள் மதவேறுபாடின்றி ஒற்றுமையாக காலப் பிரார்த்தனையில் சங்கமிக்கும் உயரிய பண்பைக் கொண்ட கலாசாரத்தைப் பெரிதும் மதிக்கின்றேன், மனநிறைவடைகின்றேன்.

இவ் வித்தியாலயத்தில் எனக்கு முன்பதாக இருந்த அதிபர் திரு. அ. அலெக்ஸ்சாண்டர் அவர்கள் எனது மதிப்பார்ந்த குரு ஆவார். 1985 முதல் 1990 வரை பளை மகா வித்தியாலயத்தில் இவரின் நிர்வாகத்தின் கீழ் பணியாற்றி பல திறன்களையும், பயன்களையும் பெற்றுக்கொண்டேன். 2003, 2004, 2005இல் இவர் அமெரிக்காவில் வசித்தாலும் எம் வித்தியாலய வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து நல்வழிகாட்டல்களையும் வழங்கினார். 2006ல் இலங்கை திரும்பிய இவர் இவ் வருடத்தில் எம்மோடு இணைந்து சேவையாற்றினார். இக்காலப்பகுதியில் வித்தியாலயம் பல அபிவிருத்திகளைப் பெற்றுக் கொண்டது. இவற்றில் குறிப்பிடத்தக்கவை

- ✧ ஆரம்ப பிரிவு வகுப்பறைகள் மகிழ்ச்சியான கற்றலுக்கேற்ப சீரமைத்தல்.
- ✧ முன் வாயில் 50 அடி தார் பாதை அமைத்தல்.
- ✧ மாணவர் தளபாடங்கள் திருத்தப்படல்.
- ✧ மாணவர் நீள மேசை 20 புதிதாக செய்தல்.
- ✧ எல்லைச் சுற்றுமதில் (275 அடி) அமைத்தல்.

தொடர்ந்தும் இன்று வரை வித்தியாலயத்திற்கு உதவிவரும் திரு. அ. அலெக்ஸ்சாண்டர் அவர்கள் போற்றுதற்குரியவர்.

**நிறைவேற்றப்பட்ட அபிவிருத்திப் பணிகள்**

*2003*

- ✧ 30' x 20' மண்டபம் வலிகாமக் கல்வி வலயத்தினால் கட்புல செவிப்புல சாதன அறையாக (ஓடியோ வீடியோ) புனரமைக்கப்படல்.

✧ தரஉள்ளீடு நிதி மூலம் ஒலிபெருக்கிச் சாதனங்கள் கொள்வனவு செய்யப்படல். இச் சாதனங்களை சலுகைக் கட்டணத்தில் யாழ் V.K.R மின்பொருள் விற்பனை நிலைய உரிமையாளர் திரு. ஸ்ரீவிமலேஸ்வரன் அவர்கள் வழங்கி உதவினார்.
✧ பெரிய மைக் ஸ்ராண்ட் ஒன்றினை நவாலி திருமதி. ஞானரட்ணம் அவர்கள் அன்பளிப்புச் செய்தார்.
✧ தற்காலிக துவிச்சக்கரவண்டி தரிப்புக் கொட்டகை அமைக்கப்படல்.

*2004*

✧ வித்தியாலய வாயில் வீதியோர எல்லை மதில் (77') லண்டன் பழைய மாணவர் நிதி மூலம் அமைக்கப்படல். இவ் வேலையை திரு. தேவராஜா அவர்கள் சிறப்பாக அமைத்துத் தந்தார்.
✧ வித்தியாலய சுவரில் இலங்கைப் படமும் உலகப்படமும் யாழ் தேசிய கல்வியல் கல்லூரி உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களால் (2ம் வருடம் 2004) வரையப்படல்.
✧ பழைய மாணவன் சிற்பக்கலை மணி நவாலியூர் திரு. தி. சந்திரகுமார் (சந்திரன்) அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட தங்கத் தாத்தா உருவச் சிலை திரை நீக்கம் செய்யப்படல். இச்சிலையின் பீடம் அமைப்பதற்கான நிதி நவாலி திரு. சுரேஸ் அவர்கள் வழங்கினார். இத் தங்கத்தாத்தாவிற்கான நிழற்குடையினை திரு. இ. இராசநாதன் (கனடா) அவர்கள் வழங்கினார்.
✧ மின்விசிறி ஒன்று முன்னாள் வலிகாமக் கல்விப்பணிப்பாளர் திருமதி. றெஜினா இருதயநாதன் அவர்கள் வழங்கினார்.
✧ ஆனைக்கோட்டை சந்திரன் பான்சி கவுஸ் உரிமையாளர் திரு. து. இராமச்சந்திரன் அவர்களாலும் எமது ஆசிரியர்களாலும் பிளாஸ்ரிக் கதிரைகள் அன்பளிப்பாக வழங்கப்படல்.
✧ தரம் 1 (2004) மாணவரின் பெற்றோரின் உதவியுடன் விளையாட்டு முற்றம் அமைத்தல்.
✧ பழைய மாணவன் திரு. இ. தனசீலன் (இலண்டன்) அவர்களின் நிதி உதவியுடன் மைதான அரங்கு அமைத்தல்.
✧ நீர் விநியோகம் குழாய்க்கிணற்றிலிருந்து கிணற்றிற்கு மாற்றப்பட்டு குழாய் நீர் விநியோகம், விளையாட்டு முற்றம், மலசலகூடத்திற்கு விஸ்தரிக்கப்படல். கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை 2ம் வருட உள்ளக பயிற்சி ஆசிரியர்களால் வித்தியாசாலை வாயில் வரை நீர் விநியோகம் விஸ்தரிக்கப்படல்.

*2005*

✧ பழைய மாணவன் திரு. வி. ஜேம்ஸ் (சுவீடன்) அவர்களால் ஒரு கணனித் தொகுதி வழங்கப்பெறல்.
✧ முன்னால் உப அதிபர் திரு. ஸ்ரீயோகேஸ்வரன் (இலண்டன்) அவர்களால் ஒரு பிறின்ரர் (Printer) அன்பளிப்பாக வழங்கப்பெறல்.
✧ திரு. சுரேஸ் அவர்களால் ஒரு தொகுதி (புத்தகங்கள் 450) இந்திய நூல்கள் அன்பளிப்பாக வழங்கப் பெறல்.

✧ கல்வியற்கல்லூரி உள்ளகப் பயிற்சி மாணவனால் ஒரு நடராசர் சுவரோவியம் வரையப்பெற்றது.

*2006*

✧ சிறுவர் பாதுகாப்பு நிதியம் வித்தியாலயத்திற்கு 2 கணனித் தொகுதிகள், 2 கணனி மேசைகள், 2 கணனி மேசைக் கதிரைகள், 2 கண்ணாடி உருக்கு அலுமாரிகளையும், மேற்கத்திய வாத்தியக் கருவிகளையும் வழங்கப்பெறல்.

✧ சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதியுதவி மூலம் 275' நீளமான சுற்றுமதில் கட்டட ஒப்பந்தகாரர் திரு. பவுலின் அவர்களால் அமைக்கப்படல்.

✧ வித்தியாலய வாயில் கேற் முன்புற 50' நீளமான மதில் திரு. திருஞானசம்பந்தர் அவர்களது தலைமையில் நலன்விரும்பிகள் நிதியுதவியால் அமைக்கப்படல்.

✧ விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கான அத்திவாரக்கட்டு வேலைகள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டு பழைய கட்டடத்தின் ஓர் பகுதியும் அகற்றப்படல்.

✧ யுனிசெப் இன் நிதியுதவி மூலம் 80' x 16' வகுப்பறைத் தொகுதி கட்டட ஒப்பந்தக்காரர் நவாலி திரு. பவுலின் அவர்கள் மூலம் அமைக்கப்படல்.

✧ சமூகசேவைகள் அமைச்சின் நிதி மூலம் ஆசிரியர் மேசைகள் 05, ஆசிரியர் கதிரைகள் 20 கிடைக்கப்படல்.

*2007*

✧ வித்தியாலய அயலவர் திருமதி. நாகேசு அவர்களால் வித்தியாலயத்திற்கு பயன்தரும் வகையில் வித்தியாலய எல்லை வேலி சீர் செய்யப்படல்.

✧ பழைய மாணவன் திரு. ச. இரவீந்திரா (முகாமையாளர், கொமர்ஷல் வங்கி, யாழ்) அவர்கள் தனது பீட்டனாகிய வித்தியாலய தாபகர் பண்டிதர் தம்பையா அவர்களின் உருவச்சிலையினை தம் செலவில் சிற்பி நவாலியூர் சந்திரன் மூலம் ஆக்கி அமைத்தார். அச்சிலையினை செஞ்சொற்செல்வர் திரு. ஆறு திருமுருகன் அவர்கள் திரை நீக்கம் செய்தார்.

எனது காலத்தில் நிர்வாக அபிவிருத்திப் பணிகளில் பெருந்துணை செய்த உப அதிபர் திருமதி. ஜெ. குமரேசமூர்த்தி அவர்களிற்கும், சகல விதங்களிலும் ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியர், குறிப்பாக மின் இணைப்பு, புத்தகம் கட்டுதல் போன்ற வேலைகளில் பெரும் பங்காற்றிய திரு. ம. யோகநாதன் அவர்கள், பெற்றோர், மாணவர், குறிப்பாக மாணவர் ஜெயாளன், டிக்சன், டெவின்சன், இ. பகீரதன், சி. தேவராசா, செல்லையா ஆகியோருக்கும், சுலோசனா நிதியத்தினர், ஹேமலதா நிறுவனத்தினர், அமரர். சந்திரன் ஆகியோரையும் தொடர்ந்து வித்தியாலயத்தைச் சிறப்பாக வழிநடத்தும் அதிபர் மதிப்பார்ந்த திரு. இரா. வசந்தகுமார் அவர்களையும் நன்றியுடன் வாழ்த்துகின்றேன். இவ்வித்தியாலயம் மென்மேலும் சிறப்புடன் உயர்வு பெற களையோடை அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.



# வாழ்த்துச்செய்தி

திரு. செ. ரமேஷ்,
உள்ளூராட்சி உதவியாளர்,
உள்ளூராட்சித் திணைக்களம்,
சுழிபுரம்.

அகவை நூறில் நூற்றாண்டு விழாக் காணுகின்றது எங்கள் நவாலி மகாவித்தியாலயம். ஆல்போல் விழுதூன்றி அறுகுபோல் வேரூன்றி இலங்கையின் முன்னணி தமிழ்ப் பாடசாலைகளில் முதற்தரமாக நவாலி மகா வித்தியாலயம் ஒளிர்கிறது.

கல்வியற் சிந்தனையாளன் அமரர் தம்பையா பண்டிதரின் உயர்ந்த அறிவாற்றலின் வெளிப்பாடாக ஆரம்பத்தில் பார்வதி வித்தியாலயம் ஆகி (1910) பின்னர்,

1951இல் கல்வி வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரித்த மாற்றம் காரணமாக கனிஷ்ட பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 10 ஆண்டுகளில் மீண்டும் நவாலி மகாவித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டு ஜீ.சி.ஈ. சாதாரணம், ஜீ.சி.ஈ. உயர்தரம் (கலை) வரை கல்விப்பணி இடம்பெற்றது.

அக் காலப்பகுதியில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கை என்பது ஒரு சிலவாக இருந்த காலத்தில்,

நவாலியூரைச் சேர்ந்த திருமதி. றெஜினா இருதயநாதன் (D.E – Valikamam Zone) அவர்களும், திருமதி. திரேசா ஹென்றி (ஓய்வுபெற்ற உபஅதிபர், மான்ஸ் பாடசாலை, உடுவில்) அவர்களும் பல்கலைக்கழகம் தெரிவாகி நவாலி மகாவித்தியாலயத்திற்கு பெருமை சேர்த்த பெருந்தகைகள் ஆவர்.

அவ்வாறான பொற்காலப்பகுதி (Golden Age) பின்னர் சிறிது காலத்திற்குப் பின்னரான காலவேறுபாடுகளும், நிர்வாக பின்னடைவுகளுமாக நவாலி மகாவித்தியாலயம் மந்த காலப்பகுதியை அடைந்தது மிக மனவருத்தத்தை அடைந்த காலமாக நவாலி மகாவித்தியாலயம் செயற்பட்டது.

பின்னர் நவாலி மகாவித்தியாலயத்திற்கு கல்விப்பணியை அலங்கரித்த கல்விமான்களான முதல்வர் திருமதி. சி. விஸ்வலிங்கம், அதிபர் திரு. அ. அலெக்ஸாண்டர் அவர்களின் காலத்தில் மீண்டும் புத்துயிர் பெற்று கல்வியில் – கலைகளில் வெளியீட்டு மட்டம் உயர் பதிவாகியது.

இதனைத் தொடர்ந்து 25.07.2003இல் காலடி எடுத்து வைத்த எமது அதிபர் திரு. பு. ஸ்ரீவிக்கினேஸ்வரனின் ஆற்றல், அறிவு, செயற்திறன், வினைத்திறன் செயற்பாடுகள் வழியே யாழ். குடாநாட்டில் நவாலி மகாவித்தியாலயம் மீண்டும் தனித்துவமான (Stand Alone) பாடசாலையாக மிளிர்ந்தது என்றால் அது மிகையாகாது.

அதிபர் புண்ணியமூர்த்தி ஸ்ரீவிக்கினேஸ்வரன் தனது பெயருக்கு ஏற்றால் போல் மக்களை அணைப்பதிலும் – பாடசாலையை வளர்ப்பதிலும் அவர் செயற்பட்ட விதத்தினை இந்த நவாலி மக்களும் – வலி. தென்மேற்கு பிரதேசமும் அறியும்.

அவரது காலப்பகுதியில் உட்கட்டுமான அபிவிருத்தியும் – கலை – கலாசார – விளையாட்டு நிகழ்வுகள் கோட்ட – மாவட்ட – மாகாண மட்டங்களில் பதிவு செய்து தமது வரலாற்றை மீள்பதிவு செய்தன. பெருமையையும் சேர்த்தன.

அத்துடன் எமது உலகப்புகழ்பெற்ற சைவச்சிந்தையாளர்களான தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவருக்கும், வித்தியாலய ஸ்தாபகர் அமரர். தம்பையா பண்டிதர் ஆகியவர்களுக்கும் உருவச்சிலை அமைத்து "தமிழுக்கு" பெருமை சேர்த்தவர். முன்னாள் அதிபர் திரு. பு. ஸ்ரீவிக்னேஸ்வரன் என்றால் மிகையாகாது.

இவ்வாறாக அபிவிருத்தி வளர்ச்சி அடைந்து வருகின்ற இக்காலப்பகுதியில் 30.04.2007இல் நவாலி மகாவித்தியாலயத்திற்கு முதல்வராக திரு. இரா. வசந்தகுமார் பொறுப்பேற்றார்.

அன்று முதற் கொண்டு நவாலி மகா வித்தியாலய கல்வி, சமய, கலை, கலாசாரம், விளையாட்டு மற்றும் உட்கட்டுமான அபிவிருத்திகளில் திடீர் வளர்ச்சி அபிவிருத்தி ஏற்பட்டது.

இவ் அபிவிருத்தியானது உண்மையில் கல்வியில் பெருமாற்றத்தையும் – பெரு சிந்தனையையும் அதி உந்தலாக (Big Push) ஏற்படுத்தியது.

அம் மாற்றம் தான் மீண்டும் 30.04.2008இல் நவாலி மகாவித்தியாலயம் ஜீ.சி.ஈ. உயர்தர (I C) கலை பாடசாலையாக உயர்த்தப்பட்டு 2010இல் 13 மாணவர்கள் உயர்தர பரீட்சை எடுத்த "மாற்றம்" (Change) என்பதாகும்.


அதனைத் தொடர்ந்து விஞ்ஞான ஆய்வுகூடம், சமையலறைக்கூடம், உளவளத்துணைச் செயற்பாடு, கணனிக்கூடம், நூலக அபிவிருத்தி, உட்கட்டுமான அபிவிருத்தி என பல அபிவிருத்திகளை குறுங்காலத்தில் முன்கொண்டு சென்றதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதனை விட வருடாந்தம் இடம்பெறும் பரிசளிப்பு விழாக்களும், கருத்தமர்களும் இப்பாடசாலையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் வெளிக்கொணர்ந்த வண்ணம் உள்ளது.

இப்பாடசாலை இவ்வாறாக வளர்ந்து, அபிவிருத்திப் பாதையில் செல்வதற்கும், நூற்றாண்டு விழாவினைக் காணுவதற்கும் இறைவன் துணை புரிந்துள்ளான். நவாலி மகா வித்தியாலயமானது இறந்தகாலம் பார்க்கிறது, நிகழ்காலத்தைக் கணிக்கிறது, எதிர்காலத்தை நோக்கி தமிழர்களை ஆற்றுப்படுத்த முன்துணை நிற்கின்றது.

தமிழ் மாணவர்களின் அறிவுத் தாகத்தைத் தீர்த்துவைக்கும் அமுதசுரபியாக திகழும் நவாலி மகாவித்தி ஆலயம் நூற்றாண்டு விழாக் காண வாழ்த்துகின்றேன்.

தமிழர்களின் ஆதரவு என்றும் வித்தியாலயத்திற்கு வேண்டும் என்று விரும்புகின்றேன்.



# வாழ்த்துச் செய்தி

திரு. சு. மோகனமுரளி,
தலைவர்,
பழைய மாணவர் சங்கம்.

1910ல் உயர்திரு. பண்டிதர் தம்பையா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட எமது கல்விக் கூடத்தின் நூற்றாண்டு விழாவிற்கு வாழ்த்துக் கூறுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். எமது ஸ்தாபகர் அவர்களின் அன்றைய இலட்சியத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் எமது வித்தியாலயமானது கல்வியிலும், பௌதீக வளத்திலும் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வந்துள்ளது என்றால் அது மிகையாகாது. எனவே இவ்வித்தியாலயம் இன்று தனது நூறாவது ஆண்டு விழாவினை மிகவும் மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடுகின்ற இவ்வேளை, இதன் ஞாபகச்சின்னமாக நூற்றாண்டு விழா மலரையும் வெளியிட்டு பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கிறது. தொடர்ந்தும் இவ் வித்தியாலயமானது மென்மேலும் பல நூறு ஆண்டுகளுக்குச் சேவையாற்றி எதிர்கால சந்ததியினருக்கு நல்லறிவூட்டி, நற்பிரஜைகளாக வாழ வழிகாட்டவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.



# சாதனையாளர்களை உருவாக்கிய வித்தியாலயம்

திரு. இ. பகீரதன்,
செயலாளர்,
பாடசாலை அ.சங்கம்.

யா/ நவாலி மகா வித்தியாலயம் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில், பாடசாலை அபிவிருத்திச் சங்க சபைச் செயலாளராக இருப்பதையிட்டு மனமகிழ்ச்சியடைகிறேன். எமது பாடசாலையில் காலத்திற்குக் காலம் பல அதிபர்கள் சேவையாற்றிப் பல துறைகளிலும் முன்னேற்றங்களைக் காட்டி மாணவர்களைச் சாதனையாளர்களாக உருவாக்கினார்கள். அந்த வகையில் எமது பாடசாலையில் தற்பொழுது நான்காவது வருடமாக சேவையாற்றிவரும் எமது அதிபர் திரு.இரா.வசந்தகுமார் அவர்கள் கல்வி, இணைப் பாடவிதானச் செயற்பாடுகள், விளையாட்டுத்துறை என்பவற்றில் மாணவர்களைச் சாதனைபெற வைத்துள்ளமையிட்டு மகிழ்ச்சியடைவதுடன், இந்நூற்றாண்டு விழாவின்போது அதிபருக்கும் பாடசாலைச் சமூகத்திற்கும் எனது வாழ்த்துக்களைக் கூறி எமது பாடசாலை மேலும் பல சாதனைகள் புரிந்து சிறப்புற்று விளங்க என் உள்ளம் கனிந்த நல்வாழ்த்துக்களைக் கூறுகின்றேன்.

# ஆலிக்கும் எழில்தரு ஆலயம் வாழ்க

*ஆலிக்கும் எழில்தரு ஆலயம் உயர்-ந*
*வாலி மகா வித்தி யாலயமே – தமிழ்*
*பாலிக்கும் வித்தகர் பண்டிதர் தம்பையா*
*போற்றிய பார்வதி வித்தியாலயம்*

*இராம லிங்க, சோம சுந்தரப் புலவர்*
*இங்கித சுப்பையா, தில்லைநாயகம்*
*பராமரிப்புடன் மேம்பட்ட ஆலயம் உயர்ந்து*
*பாக்கியம் பெற்ற மகா வித்தியாலயம்*

*நவரட்ண, விஸ்வ லிங்க சந்திரராஜ*
*நாத அலெக்ஸாண்டர், விக்னேஸ்வரன்,*
*நவயுக சிற்பி – வசந்தகுமார் இன்று*
*நூறாண்டு வென்றிட வாழ்வு தந்தார்*

*ஆயகலைகள் ஓங்கிட வேண்டும்*
*ஆசிரியர் மாணவர் வென்றிட வேண்டும்*
*ஏயவுணர்விக்கும் இந்த ஆலயம்*
*"A" தரத்துடன் யாவும் சித்திக்க வேண்டும்.*

*பெற்றோர், மாணவர், நலன்விரும்பிகள்,*
*பேறுடன் கோட்ட, வலயமும் சேர*
*உற்றதாம் மாகாண, தேசிய மட்டங்கள்*
*உன்னதமாம் கல்வி சாதனை செய்வீர்!*

*வாழிய வாழிய நவாலி வாழ்க!*
*வாலிதமாம் இந்த ஆலயம் வாழ்க!*
*ஏழிசை, ஆன்மீகம், விஞ்ஞானம், கணிதம்*
*எல்லா மொழிகளும் இலங்கிட வாழ்க.!*

*ஆக்கம் :*
*திரு. கே. எஸ். சிவஞானராஜா,*
*ஆசிரியர்.*

# யா/ நவாலி மகாவித்தியாலயம் – பாடசாலை வரலாறு

இயற்கை எழில் நிறைந்த இனியதொரு கிராமம் நவாலி என்னும் நற்பதி. ஆதியிலிருந்தே அறிவிலும் கலையிலும் சிறப்புற்று விளங்கிய இக்கிராமத்தில் 1910ஆம் ஆண்டு உயர்திரு. பண்டிதர் தம்பையா அவர்களால் சைவப்பாடசாலையாகப் "பார்வதி வித்தியாலயம்" என்ற பெயருடன் எமது பாடசாலையானது ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து திரு. இராமலிங்க உபாத்தியாயர், திரு.க. சோமசுந்தரப்புலவர், பாடசாலை ஆசிரியராகவிருந்த திரு. சி. சுப்பையா ஆகியோர் மேற்கொண்ட அயராத முயற்சியால் இப்பாடசாலையானது 1919ம் ஆண்டு உடுவில் வட்டார வித்தியாதரிசி திரு. க. தில்லைநாயகம் அவர்களின் உதவியுடன் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து இப்பாடசாலையானது வளர்ச்சி பெற்று 1951இல் கனிஷ்ட வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது. பின் 1961இல் மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டு "நவாலி மகா வித்தியாலயம்" என்று பெயர்பெற்றது. பின் உயர்தர வகுப்பும் நடாத்தப்பட்டு பாடசாலையானது முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருந்தது.

திரு. க. நவரட்ணராஜா அவர்கள் அதிபராகக் கடமையாற்றியபோது பாடசாலையானது உன்னத வளர்ச்சி பெற்று பல்கலைக்கழகத்துக்கும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். இவ்வாறு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிய மாணவர்களில் ஒய்வுபெற்ற வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளராகவிருந்த திருமதி. றெஜினா இருதயநாதன் அவர்களும், திருமதி. திரேசா ஹென்றி (ஓய்வுபெற்ற உபஅதிபர், உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்) அவர்களும் குறிப்பிடத்தக்கவர்களாவர் எனக் கூறிக்கொள்வதில் இப்பாடசாலையானது பெருமை பெறுகின்றது. இவ்வாறு வளர்ச்சியடைந்து கொண்டிருந்த இவ்வித்தியாலயம் பின் பல்வேறுபட்ட சூழ்நிலைகளால் வீழ்ச்சியுற்று க.பொ.த வகுப்பும் நடைபெறாது இருந்தது. எனினும் இவ் வகுப்பானது பல வருடங்களின் பின் மீண்டும் அதிபர் திரு. இரா. வசந்தகுமார் தலைமையில் வடமாகாணக்கல்வி அமைச்சின் அனுசரணையுடன் 30.04.2008ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2010ஆம் ஆண்டு கலைப்பிரிவில் 13 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு 21 இற்கு மேற்பட்ட அதிபர்கள் கடமையாற்றி உள்ளனர். 1921ஆம் ஆண்டிற்கு முன்னர் கடமையாற்றிய அதிபர் பற்றிய தகவல் கிடைக்காத போதும் 1921ல் அதிபர் திரு. ஆறுமுகம் அவர்களும், அவரைத் தொடர்ந்து 1922ல். அதிபர் திரு.எஸ்.சோமசுந்தரம் அவர்களும், அவரைத் தொடர்ந்து 1931ல் திரு.எஸ்.ஏ.செல்லையா, திரு. வி. சின்னையா, திரு. பி.ஈ.டி.ஜயாத்துரை, திரு. எஸ். சிவகுருநாதன், திரு. கே. நாராயணபிள்ளை அவர்களும், அவரைத் தொடர்ந்து திரு.கே. நவரட்ணராஜா 1961ல் கடமையேற்று நடாத்திய காலப்பகுதியிலேயே நவாலி மகாவித்தியாலயமாகத் தரம்உயர்த்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து திருமதி.ஏ. டபிள்யூ. தங்கராஜா, திருமதி.எஸ். ஆறுமுகராஜா, திரு. பி.சிவசுப்பிரமணியம், திரு.பொ.தி.சம்பந்தப்பிள்ளை,

திரு.த.மார்க்கண்டு, திரு.பொ.தி.சம்பந்தப்பிள்ளை அவர்களும் அதிபராகக் கடமையாற்றி அதனைத் தொடர்ந்து 1984ல் திரு.செ.கதிர்காமத்தம்பி அவர்கள் கடமையேற்று பணி செய்த காலப்பகுதியில் கல்விச் செயற்பாடுகளிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் நவாலி மகா வித்தியாலயம் சிறந்து விளங்கியது குறிப்பிடத்தக்கது. இவரைத் தொடர்ந்து திரு.கே.எம் மாணிக்கம் அவர்களும், இவரைத் தொடர்ந்து 1989ல் திரு.ஐ.மனோகரன் அவர்கள் கடமையைப் பொறுப்பேற்று நடாத்திய காலத்திலும், கல்வி நடவடிக்கைகள் சிறப்புடன் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து 1993ல் திருமதி. வி. விஸ்வலிங்கம் அவர்கள் கடமையைப் பொறுப்பேற்று இவ் வித்தியாலயத்தை முன்னேற்றுவதற்காக ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களுடன் சேர்ந்து பல கட்டங்களாக வகுத்துச் செயற்பட்டு வித்தியாலயத்தை உயர்வடையச் செய்தார். இவ் அதிபரைத் தொடர்ந்து திரு.அ.அலெக்ஸாண்டர் அதிபர் 05.03.1999 அன்று பொறுப்பேற்று முன்னைய அதிபர் விட்டுச் சென்ற பணிகளை நிறைவு செய்ததுடன் வித்தியாலய பௌதீகவள அபிவிருத்தியில் பெரும்பங்காற்றி முக்கிய இடத்தை வகித்தார். திரு. பு. ஸ்ரீவிக்னேஸ்வரன் அதிபர் அவர்கள் முன்னைய அதிபரைத் தொடர்ந்து பாடசாலையின் அபிவிருத்திக்கு பக்தியினூடாக சேவைபுரிந்து பல பெரியார்களின் உதவியுடன் வித்தியாலயத்தை அழகுற வளர்ச்சி பெறச்செய்தார்.

இவ் அதிபரைத் தொடர்ந்து இன்று அதிபர் இரா.வசந்தகுமார் அவர்கள் 30.04.2007 அன்று இவ்வித்தியாலயத்தைப் பொறுப்பேற்று பல பெரியோர்களின் துணையுடன், பல்வேறு செயற்பாடுகளின் ஊடாக வித்தியாலயத்தை உயர்வு பெறச்செய்து இன்று, இவ்வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவும் சிறப்பாக நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் அண்மைக்காலங்களில் அதிபர்களாகக் கடமையாற்றியவர்கள் பற்றி நோக்குவோமாயின் அதிபர் திருமதி. சி. விஸ்வலிங்கம் அவர்கள் 18.06.1993 – 18.02.1999 வரை கடமையாற்றி பாடஇணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களைத் துலங்கச்செய்து பல பரிசில்களையும் பெற வைத்தார். புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த) பரீட்சை என்பவற்றில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றார்கள். கலைவிழா ஒன்றினை நடத்தி பாடசாலையின் அபிவிருத்திக்கு முன்னின்று உதவினார். மேலும் மாணவர்களின் குடிநீர்ப்பிரச்சினையை நீக்குவதற்கு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தபோது யா/ கல்வியங்காடு செங்குந்தா உயர்தரக்கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்றார்.

பின் உபஅதிபர் திரு. சி. சந்திரராஜா அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்றுப் பணியாற்றினார். பின் 05.03.1999 அன்று அதிபர் திரு. அ. அலெக்ஸாண்டர் அவர்கள் பாடசாலையினைப் பொறுப்பேற்று முன்னைய அதிபரால் ஆரம்பிக்கப்பட்ட பணிகளை முழுநிறைவடையச்செய்ததுடன் பல்வேறு திட்டங்களை முன்வைத்து திறமையாக நிர்வாகத்தைச் செயற்படுத்தினார். புதிய அலுவலகம்

அமைக்கப்பட்டமை, பாடசாலையின் முகப்புப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டமை, தரம் 1,2 ஆகியவற்றுக்கான செயற்பாட்டறைகள் அமைக்கப்பட்டமை, பொதுக்கல்விச் செயற்றிட்டத்துக்கான நான்கு வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடம் அமைக்கப்பட்டமை, நூலகம், தொடர் மலசலகூடம் அமைக்கப்பட்டமை போன்றன செயற்படுத்தப்பட்டன. மாணவர்கள் கவிதை, கட்டுரை, தரம்5 புலமைப்பரிசில், க.பொ.த (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றனர்.

திரு. அ. அலெக்ஸாண்டர் அதிபரைத் தொடர்ந்து 25.07.2003இல் அதிபர் திரு. பு. ஸ்ரீவிக்னேஸ்வரன் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்று கவர்ச்சிகரமானதொரு சூழலாக மாற்றியமைத்து பாடசாலையில் நல்லதொரு நிருவாகத்தை மேற்கொண்டிருந்தார். இவரது காலப்பகுதியில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- வித்தியாலய வீதியோர எல்லை மதில் (77') லண்டன் பழைய மாணவர் நிதிமூலம் அமைக்கப்பட்டமை.
- பழைய மாணவன் சிற்பக்கலைமாணி நவாலியூர் சந்திரன் அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட தங்கத்தாத்தா (நவாலியூர் சோமசுந்தரப்புலவர்) உருவச்சிலை திரைநீக்கம் செய்யப்பட்டது. புலவரின் பீடம் அமைத்தலுக்கு அமரர். தே. சுரேஷ்குமார் 10,000/- வழங்கியிருந்தார்.
- சிறுவர் பாதுகாப்பு நிதியம் வித்தியாலயத்திற்கு 2 கணனித்தொகுதிகள், 2 கணனி மேசைகள், 2 கண்ணாடி உருக்கு அலுமாரிகளையும் பெறமுடிந்தமை.
- வித்தியாலய வாயில் கேற், முன்புற 50' நீளமான மதில் நலன்விரும்பிகளின் நிதியுதவிகளால் அமைக்கப்பெறல்
- யுனிசெப் இன் நிதியுதவி மூலம் 80' x 16' வகுப்பறைத்தொகுதி அமைக்கப்பட்டமை.
- பழைய மாணவன் திரு.ச. ரவீந்திரா (முகாமையாளர், கொமேர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்) தனது பீட்டனாகிய வித்தியாலய தாபகர் பண்டிதர் தம்பையா அவர்களின் உருவச்சிலையினை தம் செலவில் சிற்பி நவாலியூர்ச் சந்திரன் மூலம் ஆக்கியமைத்தார்.

மேற்படி செயற்பாடுகள் 2003 – 2007 காலப்பகுதிவரை அதிபர் திரு. பு. ஸ்ரீவிக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றன. இக்காலப்பகுதியில் மாணவர்களது கல்விச் செயற்பாடுகளும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் மேன்மை பெற்று விளங்கின என்பது குறிப்பிடத்தக்கவையாகும்.

தொடர்ந்து இவ்வதிபர் இடமாற்றம் பெற்றுச் சென்றதையிட்டு தற்போதைய அதிபர் திரு. இரா. வசந்தகுமார் அவர்கள் 30.04.2007ஆம் திகதியிலிருந்து பாடசாலையினைப் பொறுப்பேற்று சிறப்பாக நடாத்தி வருகின்றார்.

மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளிலும், உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டிகளிலும், ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னணி வகிக்கின்றனர். இவ்வதிபரது காலப்பகுதியில் (இன்றுவரை) மேற்கொண்ட செயற்பாடுகளாவன,

- விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்பெற்றமை. (கல்வித்திணைக்களத்தின அனுசரணையுடன்)
- வடமாகாணக்கல்வி அமைச்சின் அனுசரணையுடன் 30.04.2008 மீண்டும் க.பொ.த (உ/த) (கலை) ஆரம்பிக்கப்பட்டமை. இப்பாடசாலையில் இதற்கு முன் க.பொ.த (உ/த) வகுப்பு (1960 – 1965) காலப்பகுதியில் நடைபெற்றது.
- சமூகத்திற்கும் பாடசாலைக்கும் இடையிலான இணைத்தொடர்பை விருத்தி செய்யும் வகையில் பழைய மாணவர்சங்கம் ஒன்று அமைக்கப்பட்டு இற்றைவரை சிறப்பான செயற்பாடுகளை வழங்குகின்றது.
- 5 கணனிகள் பெறப்பட்டமை. திரு. ச. ரவீந்திரா (யாழ். கொமர்ஷல் வங்கி) அவர்களால் வழங்கப்பட்டது.
- தொலைத்தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டமை.
- சமையலறைக்கூடம் அமைக்கப்பட்டமை. (உலக உணவுத் திட்டத்தால்)
- கணனி அறை அமைக்கப்பெற்றமை.
- விளையாட்டுப்போட்டிகள், பரிசளிப்பு விழா போன்றன விமரிசையாக நிகழ்த்தப்பெறல்.
- மெய்வல்லுநர்ப் போட்டிகளில் ஒவ்வொருவருடமும் 2, 3 மாணவர்கள் மாவட்ட, மாகாணமட்டப் போட்டியில் சாதனைபடைப்பது குறிப்பிடத்தக்கது.
- போட்டோபிரதி இயந்திரம் பெற்றுக்கொண்டமை. (கௌரவ திரு. ந. ஸ்ரீகாந்தா (M.P), கலாநிதி. சந்திரசேகரம் யாழ். பல்கலைக்கழகம் அவர்களின் உதவியுடன்)
- நிக்கொட் நிறுவனத்தால் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் நூலகத்திற்கு பெறப்பட்டமை.
- கௌரவ அமைச்சர். டக்ளஸ் தேவானந்தா அவர்களிடமிருந்து 2 இலட்சம் ரூபா நிதி பெற்றுக்கொள்ளப்பட்டமை. (நூற்றாண்டு விழாவிற்காக, பாடசாலை புனரமைப்பு)

மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளினால் தற்பொழுது யா/ நவாலி மகா வித்தியாலயமானது புதுப்பொலிவு பெற்று நூற்றாண்டு விழாவினை 09.10.2010 அன்று சிறப்பாகக் கொண்டாடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வித்தியாலயம் மென்மேலும் வளர்ச்சி பெற்று தொடர்தும் கல்விமணம் பரப்பிக் கொண்டிருக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

> உயர்ந்தோர் வரலாற்றைத் தோற்றுவிக்கின்றனர்.
> வரலாறு உயர்ந்தோரைத் தோற்றுவிக்கிறது
> – டாக்டர். எஸ். ராதாகிருஷ்ணன் –

# OUR VICE PRINCIPAL



Mrs. J. Kumareshamoorthy SLTS.I, SP. Trd. (Science)

# ஆசிரியர் குழாம்



இருப்பவர்கள் : திரு. த. பாலகுமார், திருமதி. கௌ. திருவரங்கன், செல்வி. த. அறுமுகராஜா, திருமதி. அ. ஆ. பிலிப் லியோனாட், திருமதி. க. இரவீந்திரன், திரு. ச. ஜெயானந்தன், திரு. இரா. வசந்தகுமார் (அதிபர்), திரு. ஜெ. குமரேசமூர்த்தி, திருமதி. ஸ்ரீ. ஆனந்தகுமார், திருமதி. அ. பாலகிருஷ்ணராஜா, திருமதி. வி. கோகுலானந்தன், திரு. இ. வாசுதேவசர்மா.

நிற்பவர்கள் : திரு. சி. சிவகுமார், செல்வி. நி. ஞானானந்தன், திருமதி. லோ. பார்த்தீபன், திருமதி. அ. கலேந்திரன், செல்வி. ஜெ. ஒலிவர் குணராஜ், திருமதி. வ. குகேந்திரன், திருமதி. நி. புஸ்பராசா, திருமதி. ஜெ. செந்தூரன், திருமதி. க. உதயகுமார், திருமதி. வி. பேரின்பம், திருமதி. ம. பாஸ்கரன், திருமதி. ஜெ. சிவபாலதேவன், திருமதி. செ. மணிசேகரன், திருமதி. ந. தனரஞ்சன், செல்வி. எவ். யூலியட், திரு. சி. அல்றின் குரூஸ்

# யா/ நவாலி மகாவித்தியாலய அதிபர்கள்

| இல | பெயர் | காலம் | |
|---|---|---|---|
| 01 | திரு. ஆறுமுகம் | 1921 | |
| 02 | திரு. S. சோமசுந்தரம் | 1922 | |
| 03 | திரு. G. S. வல்லிபுரம் | 1931 | |
| 04 | திரு. S. A. செல்லையா | 1935 | |
| 05 | திரு. V. சின்னையா | 1941 | |
| 06 | திரு. P. E. D. ஜயாத்துரை | 01.01.1950 | 31.12.1958 |
| 07 | திரு. S. சிவகுருநாதன் | 01.01.1965 | 02.05.1960 |
| 08 | திரு. K. நாராயணபிள்ளை | 03.05.1960 | 31.01.1961 |
| 09 | திரு. K. நவரட்ணராஜா | 01.02.1961 | 14.06.1966 |
| 10 | திருமதி. A. W. தங்கராஜா | 15.06.1966 | 31.12.1971 |
| 11 | திருமதி. S. ஆறுமுகராஜா | 01.01.1972 | 18.05.1978 |
| 12 | திரு. P. சிவசுப்பிரமணியம் | 10.07.1978 | 31.12.1980 |
| 13 | திரு. பொ. தி. சம்பந்தபிள்ளை | 01.01.1981 | 31.03.1981 |
| 14 | திரு. த. மார்க்கண்டு | 01.04.1981 | 11.05.1983 |
| 15 | திரு. பொ. தி. சம்பந்தபிள்ளை | 12.05.1983 | 31.09.1984 |
| 16 | திரு. செ. கதிர்காமத்தம்பி | 01.10.1984 | 14.04.1988 |
| 17 | திரு. K. M. மாணிக்கம் | 15.04.1988 | 23.05.1989 |
| 18 | திரு. ஐ. மனோகரன் | 24.05.1989 | 22.06.1993 |
| 19 | திருமதி. வி. விஸ்வலிங்கம் | 23.06.1993 | 18.02.1999 |
| 20 | திரு. அ. அலெக்சாண்டர் | 05.03.1999 | 12.04.2003 |
| 21 | திரு. பு. ஸ்ரீவிக்னேஸ்வரன் | 25.07.2003 | 30.03.2007 |
| 22 | திரு. அ. அலெக்சாண்டர் | 01.05.2005 | 01.01.2006 |
| 23 | திரு. இ. வசந்தகுமார் | 30.04.2007 | ............... |



# என் உள்ளத்திலிருந்து......

திருமதி. ஜெ. குமரேசமூர்த்தி,
உபஅதிபர்,
யா/ நவாலி மகாவித்தியாலயம்.

சுபீட்சமான நூற்றாண்டு காலத்தின் கல்விப்பணியில் பாதம் பதிக்கும் எமது பாடசாலைத் தாயின் நூற்றாண்டுச் சிறப்பு மலருக்கு வாழ்த்து வழங்குவதற்கு அருள்பாலித்த எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, இப் பொன்னான காலப்பகுதியில் இப் பாடசாலையின் உப அதிபராகவும், பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவராகவும் பங்குவகிக்கும் நான் என் சில உள்ளக் கிடக்கைகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்

"ஆயிரம் அன்ன சத்திரம் அமைப்பதிலும் பார்க்க
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் சிறந்தது"

என்ற பாரதியாரின் கூற்றுக்கிணங்க எமது நவாலிக் கிராமத்தில் எமது அயலில் வாழ்ந்தவர் பண்டிதர் தம்பையா அவர்கள், எமது கிராமத்துப் பிள்ளைகள் அனைவரும் கல்விச் செல்வத்தைப் பெறவேண்டும், அதற்குப் பாடசாலையொன்றை அண்மையில் அமைக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடன் 1910இல் தனது வசதிக்கேற்ப ஒரு சிறிய காணியில் ஒரு சாலையை ஆரம்பித்து வைத்தார். அவர்களின் உயரிய நோக்கு இன்று பரந்து வளர்ந்து விருட்சமாகக் காணப்படுகிறது.

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன்"

எனும் கூற்றுக்கிணங்க சிறந்த அதிபர்களின் வழிநடத்தலில் தொடர் வளர்ச்சி கண்டு, எத்தனையோ அறிஞர்களை உருவாக்கி சிறப்புற வாழ வைத்துள்ளது. அவர்களில் பலர் உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் சிறப்புற வாழ்ந்து வருகின்றார்கள்.

1997ம் ஆண்டில் இடமாற்றம் கிடைத்து விஞ்ஞான ஆசிரியராக இப்பாடசாலைக்கு வந்த போது எமது ஊரில் நான் கல்வி கற்ற பாடசாலையை சிறப்பிக்க வேண்டும் என்ற மகிழ்வுடன் காலடி எடுத்து வைத்தேன். இக்காலப்பகுதியிலேயே பல புதிய ஆசிரியர்கள் இப்பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்ததுடன் ஆசிரியவளம் நிறைவாகக் காணப்பட்டது. எமது பாடசாலையைப் பொறுத்தவரை மிகச்சிறந்த ஓர் ஆசிரியகுழாம் அமையப் பெற்றுள்ளது என்றால் அது மிகையாகாது. 1997 இலிருந்து நோக்கினால் அர்ப்பணிப்பும் ஆளுமையும் மிக்க பல அதிபர்களாக,

திருமதி. சி. விஸ்வலிங்கம் அவர்கள்,

திரு. அ. அலெக்சாண்டர் அவர்கள்,

திரு. பு. ஸ்ரீவிக்னேஸ்வரன் அவர்கள்,


திரு. இரா. வசந்தகுமார் அவர்கள்

ஆகியோர் தொடர்ந்து நிர்வகித்துவரும் பாதையை நோக்கின், இவ் அதிபர்கள் வெவ்வேறுபட்ட சிறந்த முறைகளில் பாடசாலையை நிர்வகித்து வந்துள்ளனர். இது எமது பாடசாலைக்கு உரிய சிறப்பான அம்சமாகும்.

பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் ஓரளவு இயங்கி வருகின்றது. 90களில் பழைய மாணவர் சங்கம் இயங்கிய போதிலும் சில இடையூறுகளின் காரணமாக தொய்வுநிலை ஏற்பட்டது.

பின்னர் எமது தற்போதைய அதிபரின் விடாமுயற்சியால் 2008இல் சில அங்கத்தவருடன் பழைய மாணவர் சங்கத்தை ஆரம்பித்தோம். ஏகமனதாக நான் தலைவராக தெரிவு செய்யப்பட்டேன். அங்கத்தவர் எண்ணிக்கை மந்தப்போக்கில் காணப்பட்டாலும் எமது பழைய மாணவர்களாக யாழ். கொமர்ஷல் வங்கி முகாமையாளர் திரு.க.இரவீந்திரா அவர்களின் வழிப்படுத்தலுடன் 2009இலிருந்து திரு.சு.மோகனமுரளி என்பவர் பழைய மாணவர் சங்கத்தலைவராக இருந்து மெல்ல மெல்லப் பலமடைந்து உள்நாட்டு, வெளிநாட்டு பழைய மாணவர்களின் ஒத்தாசையுடன் இன்று விழாவை முன்னின்று பொறுப்பேற்று நடாத்துமளவிற்கு எமது பழைய மாணவர் சங்கம் வளர்ந்து நிமிர்ந்து எமக்கு மனநிறைவூட்டி நிற்கிறது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இரு கண்களாகச் செயற்பட்டு இப் பாடசாலை சகல வழிகளிலும் வளம் பெறவும், மாணவர்கள் கல்வி, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் உயர்வு பெறவும் இந் நூற்றாண்டு விழா நன்னாளில் இறைவனை வேண்டி நிற்கின்றேன்.



# நிறுவுனர் நினைவுக்குறிப்புகள்

திரு. ச. இரவீந்திரா
(பணிப்பாளர், மக்நெட் அக்கடமி)
சிரேஸ்ட முகாமையாளர் (இளைப்பாறிய)
கொமர்ஷல் வங்கி.

## பாடசாலைத் தோற்றத்திற்கான புறச்சூழல்

20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பியரின் ஆட்சியில் எமது ஈழத்திருநாட்டில் சைவத்தினதும் தமிழினதும வளர்ச்சி குன்றி ஆங்கிலக் கல்வி ஆதிக்கம் பெற்றிருந்தது யாவரும் அறிந்ததே. இக்காலத்தில் இந்து மகாசபை (Hindu Board) இராஜரத்தினம் போன்ற பெரியார்கள் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரை அடியொற்றி சைவத்தையும் தமிழையும் பேணி வளர்க்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் இந்துக் கல்லூரிகளை நிறுவி எமது சமய கலை கலாசார விழுமியங்களைப் பாதுகாத்தனர். இந்த வகையில் உருவான கல்லூரிகளான யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி போன்றவை நூறு ஆண்டுகளை நிறைவுசெய்து இன்றும் புகழ்பூத்த கல்லூரிகளாக கல்விச்சேவையைத் திறம்பட தொடர்ந்து முன்னெடுத்து வருவது அக்கல்லூரிகளை நிறுவிய பெரியார்களின் தூரநோக்கிலான நற்சிந்தனையை நிறைவேற்றுவதாக அமைகின்றது.

## பார்வதி வித்தியாலயம் - உருவாகுதல்

இப் பெரியார்கள் வரிசையில் கிராமங்கள் தோறும் பெரியார்கள் எழுச்சிபெற்று கல்விக்கூடங்களை தத்தம் கிராமங்களில் நிறுவி கிராமமக்கள் உயர்ச்சி பெற வழிவகுத்தனர். அந்த வரிசையில் நவாலியூர் மக்களின் கல்வி முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு தாய்த்தமிழ் மொழிப்புலமையை மற்றோர்க்கும் ஊட்டிடும் நோக்கிலும் தேவாரபாராயணம், புராணபடனம், இதிகாசகந்தபுராண கதாகாலட்சேபம் வாயிலாக சமய கலாசார விழுமியங்களைப் பேணி வளர்க்கும் எண்ணத்துடனும் தற்போது நவாலி மகாவித்தியாலயம் அமைந்துள்ள காணியில் கொட்டில் அமைத்து கல்விப்பணி, தமிழ்ப்பணி, சமயப்பணி ஆற்ற பண்டிதர் தம்பையா உபாத்தியாயர் விளைந்தார். அக்காலத்தய பெரியார்கள் மத்தியில் பெயர்பெற்ற அறிவாளராக இவர் மதிக்கப்பெற்றதன் காரணத்தினாலும், பலன்கருதாத நன்நோக்கத்துடனும் கூடிய முன்முயற்சியின் விளைவாகவும் நவாலியூர் மக்கள் தம் பிள்ளைகளை பண்டிதர்

தம்பையா உபாத்தியாயர் கையில் ஒப்படைத்து அறிவூட்ட விளைந்தனர். நாளொரு வண்ணமும் பொழுதொரு வண்ணமுமாக மாணவர் தொகை அதிகரிக்க பண்டிதர் தம்பையா உபாத்தியாயர் அவர்களின் உறவினர்களும் நண்பர்களும் பாடசாலையின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் உதவி புரிந்துள்ளனர். அந்த வகையில் நவாலியூர் அமரர் வேலுப்பிள்ளை செல்லையா குடும்பத்தினர் இப் பாடசாலையின் விளையாட்டு மைதானம் அமைந்துள்ள காணியை வழங்கி ஒத்துழைத்தமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் மிகக்குறைந்த மாணவர்களுடன் பார்வதி வித்தியாலயம் என்ற பெயரில் 1910ம் ஆண்டு பண்டிதர் தம்பையா உபாத்தியாயர் அவர்கள் ஆரம்பித்த கல்விக்கூடமே இன்று நாம் நூற்றாண்டுவிழாவினைக் கொண்டாடும் நவாலி மகா வித்தியாலயமாகும்.

## நவாலியூரின் பெருமை

ஈழத்திருநாட்டின் மணிமகுடம் போல் திகழ்வது யாழ்ப்பாணம் என்னும் நன்னகர் ஆகும். இந்நகரின் வடமேல் பகுதியில் அமைந்துள்ளது நவாலி என்னும் நற்பதி. செந்நெற் கழனிகளாலும் கனிதருமரங்களாலும் தென்னந் தோப்புக்களாலும் சூழப்பட்ட நிலம் மிக்க நவாலியம்பதி, கல்வி கேள்விகளிற் சிறந்த கல்விமான்களையும் புலவர்களையும், பண்டிதர்களையும் கொண்ட மாண்புமிக்கது. கல்விச் செல்வர்களையும் தனவந்தர்களையும் மிகுதியாகப் பெற்ற இவ்வூரின் கண்ணே வாழ்ந்த மக்கள், அறநெறி தவறாத ஒழுக்கசீலர்களாகவும் விளங்கினர்.

## பண்டிதர் அவர்களின் தோற்றமும் சமயப்பணியும்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்னும் ஔவைப்பிராட்டியின் அமுத வாக்கைத் தலைமேற் கொண்ட இங்கு வாழ் மக்கள், தெய்வ நம்பிக்கையில் உயர்வு கொண்டவர்களாய் ஆலயம் பல அமைத்து சிவ வழிபாட்டிற் சிறப்புற்றோங்கினர். இவ்வண்ணம் பல வழிகளிலும் புகழ் பூத்த குடும்பத்திலுதித்த பண்டிதர் தம்பையா உபாத்தியாயர் அவர்கள் நவாலியூர் சிதம்பரநாதருக்கும் வள்ளியம்மைக்கும் மகனாகப் பிறந்தார். சைவப்பற்றும் ஆசாரமும் நிறைந்து விளங்கிய இவர் வேராத் திருப்பாடல்களைப் பண்ணோடு பாடுவதிலும் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதிலும் மற்றும் கந்தபுராணம், பெரியபுராணம் போன்ற புராணபடனம் நிகழ்த்துவதிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். இவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் வழிவந்தவர்களிடம் கல்வி கற்றதனால் சிறந்த அறிவாளியாகத் திகழ்ந்தார். இவர் ஓர் நடமாடும் அகராதியாக மிளிர்ந்தார் என இவரை அன்றைய அறிஞர்கள் மெச்சினர். இவர் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் சைவசமய ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். இக்காலத்தில் அக்கல்லூரியில் அதிபராக இருந்த பெரியார் மயில்வாகனம் என்பவரின்

தொடர்பு அவரின் சைவப்பணிக்கு உற்சாகமளித்தது. இப்பெரியார் மயில்வாகனம் என்பவரே பிற்காலத்தில் துறவு பூண்டு சுவாமி விபுலானந்தர் என அழைக்கப்பட்டார்.

பண்டிதர் அவர்களின் ஆழ்ந்த அறிவாற்றலையும் உரைசொல்வதிலும் பண்ணோடு பாடுவதிலும் கற்பித்தலிலும் அவருக்கிருந்த விசேட திறனையும் கேள்வியுள்ள பல ஆர்வலர்கள் தம் அறிவுப்பசியைப் போக்கவேண்டி தம்பையா உபாத்தியாரைத் தேடி நவாலியூரை நாடி ஓடிவந்தனர். இவ்வகையில் பொன்னாலையிலிருந்து பாடம் கேட்க வந்த க.கி.நடராஜன் என்பவரே பின்னாளில் பெரும் அறிஞராகி வித்துவான் *K. K.* நடராஜன் *(B.A., BOL)* என்ற பெயரில் சிவதொண்டன் நிலைய இதழாசிரியராக விளங்கியவராவார். இவரே பண்டிதர் தம்பையா அவர்களின் மகளொருவரை திருமணம் செய்து மருமகனாகி பின் மாமனாருடன் இணைந்து யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளின் சீடர்களாக சைவ சமயத் தொண்டாற்றினர். அக்காலத்து மக்களும் சமூகப் பெரியார்களும் தெய்வீக அநுபவங்கள் வேண்டியும் அருள்ஞான விளக்கம் வேண்டியும் தம் குறைகள் களையவும் யோகர் சுவாமிகளை சற்குருவாக ஏற்று அவரைநாடி வந்து அருளாசியும் அமைதியும் பெற்றனர். தம்மை நாடி வந்த கற்றறிந்த அடியவர்களிடம் மக்களை புராணபடனத்தில் ஈடுபடும் வகையில் செயல்படுமாறு ஊக்கமளித்து வந்தார். இதற்கமைய மாலைவேளைகளில் கொழும்புத்துறை ஆச்சிரமத்திலும், அரியாலை ஆச்சிரமத்திலும் புராண படனம் நிகழ்த்துவதிலும் பண்டிதர் அவர்களும் கொக்குவில் குமாரசுவாமிப்புலவர் போன்றோரும் ஈடுபட்டனர்.

## பண்டிதர் தம்பையா அவர்கள் கௌரவிக்கப்படுதல்

பண்டிதர் தம்பையா உபாத்தியாயர் அவர்கள் சைவ சமயத்திற்கு ஆற்றிய பணிகளைக் கௌரவிக்குமுகமாக ஓர் உபசார வைபவம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் 1957ம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் நடைபெற்றது. அவ் வைபவத்திற்கு முதலியார் மகேசன் உபசாரக்குழுத் தலைவராகவும், வைத்தீஸ்வரா வித்தியாலய அதிபர் திரு.மு.அம்பிகைபாகன், ஆனைக்கோட்டை உயரப்புலம் திரு.வி.பரமநாதன் அவர்களும் மற்றும் சில சைவப் பெரியார்களும் அங்கத்தவர்களாக இருந்தனர். இவ் வைபவத்திற்கு சிறப்பு விருந்தினராக மைசூர்ப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் *Dr.* உருத்திராபதி அவர்கள் வருகை தந்திருந்தார். அப்போது யாழ்ப்பாண அரச அதிபராகக் கடமையாற்றிய திரு.ம.ஸ்ரீகாந்தா அவர்கள் பண்டிதர் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி பொற்கிழியும் வழங்கி கௌரவித்தார்.

## பண்டிதர் ஞாபகார்த்தமும் மக்களின் நன்றியுணர்வும்

நவாலியூர் மக்களின் கல்வி விருத்தியில் இவரின் பங்களிப்பினை கௌரவிக்கும் முகமாகவும் இவரின் ஞாபகார்த்தமாகவும் நவாலி அரசடிச்சந்தியிலிருந்து நவாலி தெற்கு ஊடாக அராலி வரை செல்லும் வீதியினை "தம்பையா பண்டிதர் வீதி" என மானிப்பாய் - நவாலி கிராமசபையால் பெயர் சூட்டப்பட்டது. இப்பாடசாலையை நிறுவிய பண்டிதர் தம்பையா அவர்களை இப்பாடசாலையில் பயில்கின்ற மாணவர்களும் ஆசிரியர்களும் மற்றோரும் நன்றியுடன் நினைவுகூர்ந்து வணக்கம் செய்யவேண்டும் என்ற நற்சிந்தனைகொண்டு அதிபராக விளங்கிய திரு. பு. ஸ்ரீவிக்னேஸ்வரன் அவர்கள் எனை வேண்ட, இறையருள் துணைகொண்டு உறவினரான நவாலியூர் சிற்பி சந்திரன் பண்டிதரின் சிலையினை வடித்துத்தர, பாடசாலை முன்றலில் எனது ஆரம்பப் பாடசாலையின் கர்த்தாவும் பூட்டனாருமான உயர்திரு. பண்டிதர் தம்பையா அவர்களின் சிலையை அழகுற அமைப்பித்தோம். இன்று பாடசாலை முன்றலில் நவாலியூருக்குப் பெருமைசேர்த்த இரு பெரியார்களான பண்டிதர் தம்பையா அவர்களினதும் சோமசுந்தரப்புலவர் அவர்களினதும் சிலைகள் கம்பீரமாகக் காட்சியளிப்பது கல்விச்சமூகத்தவர்களின் நன்றியுணர்வுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இந்த வகையில் வஅவரின் பூட்டப்பிள்ளையான செல்வி. சஜீவி இராசையா அவர்கள் பண்ணிசை வளர்ச்சிக்கும் இப்பாடசாலையின் பண்ணிசை வளர்ச்சிக்கும் ஊக்குவிப்பினை வழங்கி வருகிறார். பண்டிதர் அவர்களின் சைவத்தமிழ்ப் பண்பும் பண்ணிசை ஞானமும் அவரது வழித்தோன்றல்களுக்கும் மென்மேலும் அமைய வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பண்டிதர் தம்பையா உபாத்தியாயர் அவர்களின் பூட்டன் என்ற வகையிலும் பழைய மாணவர் சங்க போஷகர் என்ற வகையிலும் - நானும் அவரது உறவினர்களும், நவாலியூர் மக்களும், இப்பாடசாலையில் கற்ற கற்கின்ற மாணவர்களும், கற்பித்த கற்பிக்கின்ற ஆசிரியர்களும், கடமையாற்றிய, கடமையாற்றுகின்ற அதிபர்களும் மற்றும் அபிமானிகளும் இந்நூற்றாண்டுவிழாவினைக் கொண்டாடும் இவ்வேளையில் நிறுவுனரின் தூரநோக்கிலான நற்சிந்தனையைத் தொடர்ந்தும் பேணுவோம் என உறுதிபூண்டு அதற்காக சகல ஒத்துழைப்பினையும் வழங்க எல்லாம் வல்ல இறைவன் பார்வதி பரமேஸ்வரன் அருள் புரிவாராக என வேண்டிடுவோம்.

> ஆராய்ந்தறிவதும் சிந்தனை செய்வதும் நம்முடைய உரிமை மட்டுமல்ல.
> உயர்ந்த கடமையும் கூட. அறிவாளியின் நோக்கம் இன்பத்தை அடைவது அன்று
> துன்பத்தைத் தவிர்ப்பதாகவே இருக்கும்.
>
> – அரிஸ்டோட்டில் –



# 50 ஆண்டுகளுக்கு முன் நவாலி மகா வித்தியாலயம் – பற்றிய ஒரு கண்ணோட்டம்.

*திருமதி. திரேசா ஹென்றி,*
*பழைய மாணவி (யா/ நவாலி ம.வி)*
*ஓய்வு பெற்ற உப அதிபர்,*
*உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்*

செழித்து ஓங்கும் மருத வளம் நிறைந்த நவாலியூரிலே தனது நூறாவது அகவையில் தலை நிமிர்ந்து நின்று கால் தடம் பதிக்கும் நவாலி மகா வித்தியாலயத்தைப் பெருமையுடன் பாராட்டுவதில் மகிழ்ச்சியடையும் இவ்வேளையிலே 50 ஆண்டுகளுக்கு முன் அதாவது 1960 - 1965க்கு இடைப்பட்ட காலத்திலே அங்கு க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி பயின்ற நாட்களை, பசுமையான நினைவுகளை நினைத்துப் பார்க்கும் போது அக்காலம் ஒரு பொற்காலமாகவே கருத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

தாரமும் குருவும் மனித வாழ்விலே முக்கிய இடத்தைப் பெறுகின்றனர் என்று கூறுவார்கள். இதற்கமைய எமக்கு கல்வியறிவூட்டிய ஆசான்களே எமது முன்னேற்றத்துக்கு வழி வகுத்தார்கள் என்று கூறுவது மிகையாகாது.

அதிபர் திரு. க. நவரத்தினராஜா அவர்கள் இப்பாடசாலைக்கு அதிபராக வந்த காலத்தில்தான் நான் இங்கு கல்வி பயின்றேன். அவர் நெடிதுயர்ந்த தோற்றமும், அஞ்சா நெஞ்சமும், துணிவுமுள்ளவர். செயல் வீரர், தான் நினைத்ததை சாதிப்பவர். அவர் தான் இப்பாடசாலையில் க.பொ.த உயர்தர வகுப்பை ஆரம்பித்து வைத்தவர். ஆரம்பத்தில் 5 மாணவருடன் தான் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. படிப்படியாக மாணவரின் தொகை அதிகரித்த போதும் இறுதியில் மாணவிகள் சிலர் பல்வேறு காரணங்களால் விலகிவிட்டனர். இறுதிப்பரீட்சைக்கு அதாவது 1965ல் ஐந்து மாணவிகள் தோற்றினார்கள். அதில் நானும் றெஜீனா இருதயநாதன் அவர்களும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றோம். 1966ல் எமக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. அதிபர் தமிழ் கற்பித்தார். மற்றைய பாடங்களைக் கற்பிப்பதற்கு ஆசிரியை திருமதி. A. சண்முகரட்ணம் அவர்களை நியமித்தார். இலங்கை வரலாறு, மேற்கத்தைய வரலாறு, அரசியல் ஆகிய பாடங்களை திருமதி. சண்முகரட்ணம் கற்பித்தார். அவர் தெல்லிப்பழை கொல்லங்கலட்டி என்னும் இடத்தைச் சேர்ந்தவர். மாணவர்களைத் தன் பிள்ளைகள் போலவே நினைத்து மாலை நேர வகுப்புக்கள் நடாத்தி எம்மை முன்னேற்ற அரும்பாடுபட்டார். அவரது கடமையுணர்ச்சியை எம்மால் மறக்க முடியாது. அக்கால கட்டத்தில் பாடசாலையில் கட்டிட வசதிகள் இல்லை. பழுதடைந்த கதிரை மேசைகள் போடப்பட்ட அறைக்குப் பக்கத்தில்தான் எமது வகுப்பறை இருந்தது. ஒரு சிறிய இடம்

இங்குதான் கற்பித்தல் நடைபெற்றது. எப்படியிருந்தாலும் ஆசிரியர்கள் மனங்கோணாது கற்பித்தார்கள்.

அதிபர் திரு. க. நவரத்தினராஜா அவர்கள் எமக்கு தமிழ் கற்பிக்கும் போது நன்னூல் காண்டிகையுரை நூலிலிருந்து சூத்திரங்களை விளக்கி இலக்கணம் கற்பித்தார். மிக இலகுவாகவும் விளங்கக்கூடிய வகையிலும் இலக்கணம் கற்பித்தார். அவருக்குப் பின் திருமதி. வேலன், திரு. தம்பிராஜா ஆசிரியர் தமிழ் கற்பித்தார்கள்.

1966க்குப் பின் அதிபர் ஓய்வு பெற்று வெளிநாடு சென்றுவிட்டார். திருமதி. சண்முகரட்ணம் அவர்களும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்றுவிட்டார். மற்றைய ஆசிரியர்களும் ஓய்வுபெற்றுச் சென்றுவிட்டார்கள். அதன்பின் உயர்தர வகுப்பு செயலிழந்து விட்டது. பின்பு வந்த அதிபர்களும் கவனம் எடுககவில்லை. மாணவர்களும் வேறு பாடசாலையில் கல்வி கற்கச் சென்றுவிட்டார்கள்.

கிட்டத்தட்ட 45 ஆண்டுகளுக்குப்பின் இப்பாடசாலையில் தற்போது உயர்தர வகுப்பை ஆரம்பித்த அதிபர் திரு. இரா. வசந்தகுமார் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அவருடைய காலத்தில் இப்பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று புத்தி ஜீவிகளாக சமூகத்திற்கு சேவை செய்பவர்களாக எதிர்காலத்தில் இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு உதவுபவர்களாக விளங்கவேண்டுமென எனது வாழ்த்துக்களைக் கூறுகின்றேன். மேலும் இவ்வித்தியாலயம் பல்துறைகளிலும் வளர்ச்சிபெற்று உயர்ந்த ஒரு நிலையினையடைய வேண்டும் என வாழ்த்தி மனமகிழ்வடைகின்றேன்.



# இலங்கையில் இலவச உயர் கல்வியும் பொருளாதார வளர்ச்சியும்

# (Free Higher Education and Economic Growth in Sri Lanka)



கலாநிதி. செ. சந்திரசேகரம்
முதுநிலை விரிவுரையாளர்,
பொருளியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம் :

இலங்கையின் உயர்கல்வி பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்குப் பங்காற்றுகின்றதா? இல்லையா? என்பது தொடர்பாக பல வாதப் பிரதிவாதங்கள் உள்ளன. இவைகளில் முக்கியமானது இலவசமாக வழங்கப்படுகின்ற உயர் கல்விக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையில் தொடர்பில்லை என்பதாகும். இது தொடர்பாக ஆய்வுக்கட்டுரை எழுதுதல் இவ்வெளியீட்டுக்குப் பொருத்தமற்றதாகும். ஆனால் இவ்விடயம் சார்பாக கல்வியாளர்களின் சிந்தனைக்கு சில முத்துக்களை வழங்குவதையே இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இக்கட்டுரையில் உயர்கல்வி என்பது இலங்கையில் பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக வளாகங்கள், தேசிய கல்வியற் கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்றவற்றில் கற்பிக்கப்படும் பட்டப்படிப்புக்கள் மற்றும் பட்டப்பின் படிப்புக்களை குறித்து நிற்கின்றது. பொருளாதார அபிவிருத்தி என்பது மக்கள் பெறுகின்ற மெய்வருமானத்தின் அளவு அதிகரித்துச் செல்வதோடு அவர்களின் வாழ்க்கைத்தரம் அதிகரித்துச் செல்வதைக் குறித்து நிற்கின்றது. வாழ்க்கைத்தரம் அதிகரிப்பதற்கு வருமானம் அவசியமானதாகும். எனவே பொருளாதார அபிவிருத்தி என்பது வருமான அதிகரிப்பினை பிரதானமான ஒரு கருவியாகக் கொண்டுள்ளது. நாட்டு மக்களின் அபிவிருத்திக்கு அத்திவாரமாகவும் பிரதானமானதாகவும் இருக்கின்ற வருமானத்தை அதிகரிப்பதில் இலங்கையின் இலவசமான உயர்கல்வி எவ்வளவிற்கு பங்காற்றுகின்றது என்பதில் சில விடயங்களை இக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

## கல்வியின் நோக்கம்

மக்களுக்கு வாய்ப்புக்களை வழங்கி அவர்களின் ஆற்றலை அதிகரிப்பதற்கான ஓர் அணுகுமுறையாக வலுவூட்டல் (*Empowerment*) என்பது முக்கியம் பெறுகின்றது. மக்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கும் வலுவூட்டுவதற்கும் கல்வி ஒரு பங்கினை வகித்து வந்தது. கல்வி மட்டும் ஒருவரின் ஆற்றலை அதிகரிக்கின்றது என்பதில் பல சந்தேகங்கள் உள்ளன. மக்களிற்கு குறிப்பாக வறியவர்களிற்கு கல்வி கற்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களை புத்திஜீவிகளாக உருவாக்கும் போது அவர்கள்

குறைந்த வருமானத்தில் இருந்து மீள முடியும் என்ற வாதம் பல குறைவிருத்தி நாடுகளின் அனுபவத்தில் ஒரு நேர்க்கணியமான விடையைக் கொடுக்கத் தவறிவிட்டது.

கல்வி எனும் போது நாம் பாடப்புத்தக அணுகுமுறையிலான கல்விக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றோம். ஆனால் பாடப்புத்தக அணுகுமுறையிலான கல்வி (Text book approaching education) ஓர் அவசியமான அணுகுமுறையாக இருந்தாலும் அது ஒரு முழுமையான கல்வி அல்ல என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பயிற்சி முறையிலான கல்வியை விட பாடப்புத்தக முழுமையான கல்வி அல்ல என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பயிற்சி முறையிலான கல்வியை விட பாடப்புத்தக முறையிலான கல்வி குறைந்த செலவினைக் கொண்டிருக்கின்றது. எனவே கல்வியின் தரமும் அக்கல்வியைப் பெறுபவர்களின் ஆற்றலைத் தீர்மானிக்கின்றது. கிராமப் பாடசாலை ஒன்றில் உயர்தரப் பாடங்கள் எல்லாவற்றிலும் திறமைச் சித்தியைப் பெற்று அதிக Z புள்ளியைப் பெற்ற ஒரு மாணவனோ அல்லது மாணவியோ பல்கலைக்கழகப் படிப்பினை முடித்து பின்னர் அவர்களின் வருமானத்தை நோக்கும் போது அவர்களின் பாடப்புத்தக அணுகுமுறையிலான திறமைக்குக் கிடைத்த வெகுமதி மிகக் குறைவாக இருக்கின்றது. ஆனால் ஆரம்பக் கல்வியை முடித்துக் கொண்டு ஒரு தொழிற்கல்வியில் இணைந்து தொழில் சார்ந்த சிறப்புத் தேர்ச்சியைப் பெற்று உயர்ந்து இருக்கின்ற ஒருவரின் வருமானம் ஒரு பட்டதாரியின் வருமானத்தை விடப் பலமடங்கு அதிகமாக இருப்பதை நாம் காண்கின்றோம். இவ்வகையில் இலவசமான உயர்கல்வி அக்கல்வியைப் பெறுபவரின் வருமானத்தை அதிகரிக்கவில்லை.

உயர்கல்வி பற்றி நோக்கும்போது கல்வியாளர்கள் பலர் உயர்கல்வி தனித்து வருமானம் உழைப்பதை நோக்கமாகக் கொண்டது அல்ல என்ற வாதத்தையும் முன்வைக்கின்றனர். இவ்வாதம் தொடர்பாக சில விடயங்கள் உள்ளன. முதலாவது, கல்வி பல நோக்கங்களைக் கொண்டிருந்தாலும் இன்றைய உலகில் கல்வியின் பிரதான நோக்கம் வருமானம் உழைத்தல் ஆகும். இரண்டாவது, கல்வியின் நோக்கம் நல்ல பிரஜைகளை உருவாக்குதல் ஆகும். ஆனால் இதில் பல ஐயப்பாடுகள் உள்ளன. உதாரணமாக இலங்கையில் 1947இல் இருந்து வழங்கப்பட்ட இலவசக் கல்வி இலங்கையர்களை நல்ல பிரஜைகளாக உருவாக்கியுள்ளதா? பௌத்த மதம் அடிப்படையில் எதைப் போதிக்கின்றதோ அது இலங்கையில் இருக்கின்றதா? இலங்கையில் வழங்கப்பட்ட இலவசக் கல்வியிலான சமயம் மற்றும் வரலாற்றுப் பாடங்கள் இலங்கையர்களை முரண்பாட்டுக்கும் யுத்தத்திற்கும் இட்டுச் சென்றது என்பதை இன்று பலர் ஏற்றுக் கொள்கின்றனர். மூன்றாவது, கல்வியின் விரிவாக்கம் மக்களின் உற்பத்தித்திறனை வளர்க்கத் தவறியுள்ளது. உதாரணமாக இலங்கையின் கல்வியறிவு வீதம் ஜப்பானை அண்மித்துவிட்டது. ஆனால் இலங்கையிலுள்ள ஒரு தொழிலாளியின் உற்பத்தித்திறன் ஒரு தொழிலாளியின் உற்பத்தித்திறனை அண்மிக்கவில்லை என்பதற்கு அப்பால் பாரிய வேறுபாடு காணப்படுகிறது. எனவே மக்களுக்கு வாய்ப்புக்களை, வலுவூட்டலை மற்றும் பாதுகாப்பை வழங்குவதில் இலங்கையில் இலவசக் கல்வி தோல்வியடைந்து விட்டது எனலாம்.

## வெண்ணிற ஆடைத் தொழிலுக்கான கல்வியும் பகட்டான வாழ்க்கையும்

பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் கல்வியின் பங்களிப்பு திசைமாறிச் செல்கிறது. அரசியல்வாதிகள் தங்களின் குறுங்கால அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கு இலவசக்கல்வியை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி வந்தனர், வருகின்றனர். வறியவர்களின் உண்மையான சுதந்திரம் இலங்கையில் இலவசக்கல்வி ஊடாக அதிகரிப்பதற்குப் பதிலாக அவர்களை என்றும் அரசியல்வாதிகளின் ஆதரவில் (பொதுத்துறையில் வேலைக்கு அமர்த்த) தங்கி இருக்கும் ஓர் ஏழ்மையான பட்டதாரிகளையே இலவசக் கல்வி உருவாக்கியுள்ளது. இலங்கையில் மட்டுமன்றி பல குறைவிருத்தி நாடுகளில் இந்தப் பண்பு காணப்படுகின்றது. ஒரு விவசாயப் பட்டதாரி பல்கலைக்கழகம் புகுவதற்கு முன்னர் தன்னுடைய நிலத்தில் பயிர் செய்து கணிசமான வருமானத்தைப் பெற்று இருப்பான். ஆனால் பட்டம் பெற்றவுடன் வேலையற்ற பட்டதாரியாகி பல வருடங்கள் வெள்ளை நிற ஆடைத் தொழிலுக்கு அலைந்து திரிகின்ற துர்ப்பாக்கிய நிலையினை நாம் எமது கண்ணால் காண்கின்றோம்.

வில்லியம் ஈஸ்ரொலி என்ற ஒரு பிரபல்யமான பொருளியலாளர் இது பற்றிக் குறிப்பிடுகையில் குறைவிருத்தி நாடுகள் வறுமையில் தொடர்ந்து இருப்பதற்கு பிரதான காரணம் இந்நாடுகளில் பொதுத் துறையால் வழங்கப்படும் அர்த்தமற்ற கல்வி *(Meaningless education)* என்கிறார். கல்விக்கும் வினைத்திறனுக்குமிடையில் எந்தவித தொடர்பும் இல்லை என்பதை ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டுகிறார். உலக வங்கியின் அபிவிருத்திக்குழுவுக்கு தலைமை தாங்கி பாகிஸ்தானில் உள்ள ஒரு பாடசாலைக்கு வில்லியம் சென்றிருந்தார். குழுவை வரவேற்பதற்கு பல ரூபா செலவு செய்து மாணவர்கள் புதிய அமைப்பிலான சீருடைகள் அணிந்து மலர்ச்செண்டுகளுடன் அவர்களை வரவேற்றார்கள். ஆனால் வகுப்பறைக்குச் சென்றபோது வகுப்பறையில் பென்சில், பேனைகள் மற்றும் அப்பியாசப் புத்தகங்கள் இன்றி நூற்றுக்கு எழுபத்தைந்து வீதமான மாணவர்கள் இருந்ததை எடுத்துக் காட்டி, அறிவற்ற ரீதியாக பகட்டுக்காக வாழ்கின்ற கல்வியையே மூன்றாம் உலக நாடுகளின் கல்வி வழங்குவதை எடுத்துக் காட்டுகின்றார். இவ்விடயத்தை இலங்கையில் கிராமப்புறப் பாடசாலைகளுடன் நாம் ஒப்புநோக்க முடியும். இலங்கையில் பல பல்கலைக்கழகங்களில் பட்டமளிப்பு விழாவின் போது பல குடும்பங்கள் பல்கலைக்கழகத்துக்கு படை எடுப்பதை அவதானிக்கின்றோம். தனது மகள் மூன்று பாடங்களில் A சித்தி பெற்று பல்கலைக்கழகம் புகுந்து படிப்பதற்கு தனது கிராமத்தில் இருந்து விவசாயத்தில் சேமிக்கின்ற சிறு சேமிப்பில் பெரிய பகுதியை ஏழை விவசாயி செலவு செய்கின்றான். பாகிஸ்தானில் மலர்செண்டு வாங்கியது போன்று பட்டமளிப்பு விழாவிற்கு அலங்காரம், பட்டுச்சேலை, கிராமத்தில் இருந்து உறவினர்கள் விழாவில் கலந்து கொள்வதற்கான வாகனச் செலவு என பல ஆயிரம் ரூபாக்களை பகட்டாகச் செலவு செய்கிறார்கள்.

கிராமப்புற பாடசாலை மாணவர்கள் தங்கள் தகுதிக்கு மீறி பகட்டான பாடசாலை விழாக்கள் கொண்டாடுவதை அவதானிக்க முடியும். ஆனால் இவ் ஏழைப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் பட்டதாரி ஆகியவுடன் அவர்கள் தங்கள்

பட்டத்தைத் தாங்கி அவதியடைகிறார்கள் என்பதை அறியமாட்டார்கள். பொதுத்துறை நிறுவனங்கள் இல்லையாயின் வேலைவாய்ப்பைப் பெற இப்பட்டதாரிகளின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## அதிசய உலக பல்கலைக்கழக புத்தஜீவிகள்

குறைவிருத்தி நாடுகளில் வறுமை தொடர்ந்து நிலைத்து இருப்பதற்கு அர்த்தமற்ற கல்வியை வழங்குகின்ற புத்திஜீவிகளும் ஓர் காரணமாக அமைகின்றார்கள். இவர்கள் தங்கள் நாடுகளில் அபிவிருத்திக்குத் தடையாக உள்ள காரணிகளை அகற்றுவதற்கு, உள்ளதை துணிந்து எடுத்துக் கூறுகின்ற பக்குவமற்று, அரசியல்நிலைமைகள், அரசியல்வாதிகளுக்கு பக்கவாத்தியம் பாடுகின்ற பச்சோந்திகளாக இருப்பதை அவதானிக்கலாம். இவ்விடயம் பற்றி வில்லியம் குறிப்பிடுகையில் இவர்களை அதிசய உலகத்தில் வாழ்கின்ற புத்திஜீவிகள் (Wonderland Academics) எனக் குறிப்பிடுகின்றார். ஆபிரிக்கா கண்டத்தின் அபிவிருத்தி தொடர்பாக புத்திஜீவிகள் 3400 பக்கங்கள் கொண்ட 4 ஆய்வுத் தொகுதிகள் வெளியிட்டிருந்தனர். இப்பாரிய ஆய்வில் ஒரு பக்கத்தில் கூட ஊழல் என்ற வார்த்தையை வில்லியம் கண்டு கொள்ள முடியாமல் இருந்ததை எடுத்துக் கூறுகின்றார். உலகத்தில் ஆபிரிக்கா ஊழல் நிறைந்த பொதுத்துறையைக் கொண்ட ஒரு கண்டமாகும். இவ் அபிவிருத்தி ஆய்வுகளைச் செய்த புத்திஜீவிகளுக்கு தங்கள் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு தடையாக ஊழல் இருக்கின்றது என்பது தெரியாதா? என்ற வினாவை எழுப்புகிறார். உண்மையில் புத்திஜீவிகளும் இவ் ஊழல் மூலந்தான் இவ் ஆய்வுக்கான நிதியைப் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். நன்றி மறப்பது நன்றன்று அல்லவா? தங்கள் அரசுகளைக் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை.

ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள அதிசய உலகத்தில் வாழ்கின்ற புத்திஜீவிகள் போன்று இலங்கையிலும் பலர் வாழ்கின்றனர். 1950களில் சிங்கப்பூர் பாராளுமன்றத்தில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மேற்கோள் காட்டி இலங்கை போன்று உறுதியான பொருளாதாரத்தை நாம் உருவாக்க வேண்டும் என பலர் பேசியுள்ளனர். ஆனால் இன்று சிங்கப்பூர் இலங்கையை விட பல மடங்கு அதிகமான வருமானத்தைப் பெறுகின்றது. இலங்கை கடந்த 60 வருடங்களுக்கு மேலாக அபிவிருத்தியில் பின்நோக்கிச் சென்றமைக்கு பிரதான காரணம் இலங்கையில் காணப்பட்ட இனமுரண்பாடும் யுத்தமும் ஆகும். இலங்கையில் பொருளியலாளர்கள் அமைப்பு இலங்கையின் 50 ஆண்டு சுதந்திர விழாவை முன்னிட்டு "அபிவிருத்தியின் பிரச்சினைகள்" என்ற தலைப்பில் 13 ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கி 566 பக்கத்தில் ஒரு நூலை வெளியிட்டு இருந்தது. இதில் குறைந்தது ஒரு கட்டுரையாவது அபிவிருத்திக்குத் தடையாக இருந்த இன முரண்பாடு, யுத்தம் தொடர்பாக எழுதப்படவில்லை. அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றி நாட்டை குட்டிச்சுவர் ஆக்குகிறார்கள் என்பதற்கு அப்பால் நாட்டின் உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்பிக்கும் புத்திஜீவிகள் கூட ஆபிரிக்க கண்டத்தைப் போன்று அதிசய உலகில் வாழ்கின்றனர். இலங்கையில்

பெரும்பான்மை மக்களால் தாம் பேதப்படுத்தப்படுகின்றோம் என மனத்தாங்கலுடன் வாழும் சிறுபான்மை மக்களில் எத்தனை பேர் சிறுபான்மை மக்களிடையிலேயே காணப்படுகின்ற பிரதேச, மத, ஜாதி அடிப்படையிலான பேதப்படுத்தல்களை எழுத்தில் வெளிக்கொண்டு வந்துள்ளனர். எனவே இவர்களும் அதிசய உலகில் வாழ்கின்றனர். இவற்றை நோக்கும்போது இலங்கையின் உயர்கல்வி பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யாவிட்டாலும் சமூக ஒருங்கிணைப்பை உருவாக்காது முரண்பாட்டை உருவாக்கியுள்ளது.

## பல்கலைக்கழக அனுமதியும் வறிய மாணவர்களும்

இலங்கையில் இலவசமான உயர்கல்வியானது வருமான மீள்பங்கீட்டுக்கான ஒரு உபாயம் எனக் கூறப்படுகின்றது. இலவசமான கல்வியை வழங்குவதனூடாக உயர் வருமான வர்க்கத்திடம் இருந்து குறைந்த வருமானப் பிரிவினருக்கு வருமானம் மீள்பங்கீடு செய்யப்படுகின்றது என்பது இவர்களுடைய வாதமாகும். இவ்விடயத்தை மிக ஆழமாக ஆராய்ந்து பார்க்குமிடத்து இலங்கையில் இலவச உயர்கல்வி வருமான மீள் பங்கீட்டுக்கு எதிராக வருமான சமமின்மையை அதிகரித்துள்ளது என வாதிட முடிகிறது. உதாரணமாக யாழ்மாவட்டத்தில் ஏறத்தாழ 40 மாணவர்கள் மருத்துவ பீடத்துக்கு வருடா வரும் தெரிவு செய்யப்படுகின்றார்கள். இவர்களில் எத்தனை பேர் தனியார் கல்வி வகுப்புகளுக்குச் செல்லாமல் இவ் அனுமதியைப் பெற்றுள்ளனர். நிச்சயமாக பாடசாலையில் பெறுகின்ற இலவசக் கல்விக்கு மேலாக அதிகமான பணத்தைச் செலவழித்து போட்டி அடிப்படையில் மாவட்டக் கோட்டாவை வறிய மாணவர்களிடம் இருந்து செல்வந்த மாணவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

யாழ் மாவட்டத்திலும் காலி மாவட்டத்திலும் செய்யப்பட்ட ஒரு ஆய்வில் மருத்துவ பீடத்துக்கு அனுமதி பெறுகின்றவர்களில் 72 சதவீதமான மாணவர்கள் உயர் வருமான குடும்பங்களின் பிள்ளைகள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொறியியல் பீடத்துக்கான அனுமதியிலும் இப்பண்பு காணப்படுகின்றது. எனவே அதிக வருமானத்தை உழைக்கக்கூடிய இரு துறைகளிலும் இலவசக்கல்வியின் அதிகளவான நன்மைகள் செல்வந்தர்களைச் சென்றடைகின்றது. கலை மற்றும் வர்த்தகத் துறைகளில் வருமானம் குறைந்த மாணவர்களுக்கு அனுமதி கிடைக்கப் பெற்றபோதும் இப்பாட நெறிகள் மூலம் இவர்கள் பெற்ற நன்மைகள் மிகக் குறைவானதாகும். எனவே இலவசக் கல்வி வருமான சமமின்மையைக் குறைப்பதற்குப் பதிலாக அதிகரித்துள்ளது. இதன் கருத்து வறியவர்கள் மென்மேலும் வறியவர்களானார்கள் என்பது அல்ல. மாறாக இலவசக் கல்வியின் காரணமாக வறியவர்கள் மற்றும் செல்வந்தர்கள் ஆகிய இருவரினது வருமானமும் அதிகரித்துள்ளது. ஆனால் செல்வந்தர்களின் வருமானம் வேகமாக அதிகரிக்க வறியவர்களின் வருமானம் மெதுவாக அதிகரித்துள்ளது. இலங்கையின் இலவச உயர்கல்வியை ஒழுங்குபடுத்தி கட்டணம் அறவிட்டு திறமையான வறிய மாணவர்களுக்கு மானியம் மற்றும் புலமைப்பரிசில்கள் வழங்குவதனூடாக வறியவர்களின் வருமானத்தை அதிகரிக்க முடியும். இவ்வாறான அணுகுமுறை மூலம்

இலவசக் கல்வி ஊடாக வருமான மீள்பங்கீட்டினை மேற்கொள்ள முடியும். அரசாங்கமும் வருமானம் உழைக்க முடியும். கல்வியின் தரமும் உயர வாய்ப்புள்ளது. இவ் அணுகுமுறையை சீனா மற்றும் மலேசியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் காணலாம்.

## தனியார் பல்கலைக்கழகமும் உயர் கல்வியும்

இலங்கையின் அரசினால் வழங்கப்படுகின்ற இலவச உயர்கல்வியானது தர ரீதியாகவும் அளவு ரீதியாகவும் கீழ் நிலையில் இருப்பதற்கு பல காரணிகள் பங்காற்றியபோதும், உயர் கல்விக்கு அனுமதி பெறும் மாணவர்களின் அளவு குறைவாகக் காணப்படுகின்றது. இலங்கையில் வருடாவருடம் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெறும் மாணவர்களில் 15 சதவீத மாணவர்களையே இலங்கையில் இயங்கும் 15 அரச பல்கலைக்கழகங்கள், இணைக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் உள்வாங்குகின்றன. இத்தொகை மொத்த உயர்தரப் பரீட்சையில் பங்கு கொள்கின்ற மாணவர்களில் 6 வீதமாகும். 2004 – 2006க்கு இடைப்பட்ட 3 ஆண்டில் வருடம் ஒன்றுக்கு சராசரியாக 185000 மாணவர்கள் க.பொ.த உயர்தர பரீட்சையில் பங்கு கொண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் ஏறத்தாழ 21000 மாணவர்கள் மட்டுந்தான் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளனர். மிகுதியாக இருக்கின்ற 164000 மாணவர்கள் பல்கலைக்கழக கல்விக்கான வாய்ப்பினை இழக்கின்றனர். ஏற்கனவே பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்கப்பட்ட மாணவர்களில் மருத்துவம், பொறியியல் தவிர ஏனைய துறை சார்ந்த மாணவர்கள் வேலையின்றி 5 – 7 ஆண்டுகள் வேலையில்லாப் பட்டதாரிகளாக தொழில் வாய்ப்புக்கு சிரமப்படுகின்ற போது அரச பல்கலைக்கழகங்களுக்கு பல்கலைக்கழக அனுமதியை அதிகரிப்பது பிரச்சினைக்கு தீர்வாக அமையாது. மாறாக, தனியார் பல்கலைக்கழகங்களை அனுமதிப்பது பற்றி அரசு கவனத்தில் எடுத்தது. இலங்கையில் அவ்வாறான தனியார் பல்கலைக்கழகங்கள் 1980களில் பகுதியாக தொழிற்பட ஆரம்பித்து விட்டன. இவைகளில் பல இன்று பட்டப்படிப்பு சான்றிதழ்களையும் வழங்குகின்றன.

தனியார் பல்கலைக்கழகங்கள் பின்வரும் நன்மைகளைக் கொண்டு இருக்கின்றன.

1. தொழில் கல்விக்கு பொருத்தமான பாடத்திட்டங்களைக் கொண்டிருக்கின்றன.
2. தொழில் சந்தைக்கு தேவையான கல்வியை வழங்குகின்றன.
3. போட்டி அடிப்படையில் பல்கலைக்கழகங்கள் தொழிற்படுவதனால் போட்டிச் சந்தைகள் மூலமான நன்மைகளைப் பெறலாம்.
4. அரசியல் தலையீடுகளைத் தவிர்க்கலாம்.
5. மாணவர்களின் திறமைக்கு ஏற்ற வெகுமதியைப் பெறலாம்.
6. பட்டதாரிகளின் வருமானம் அதிகரிக்கின்றது. இது நாட்டின் தேசிய வருமான அதிகரிப்புக்குப் பங்காற்றும்.

7. சர்வதேச தரத்துக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தலாம்.
8. மாணவ குழப்பங்களைத் தவிர்த்து குறித்த காலத்தில் கற்கைநெறியைப் பூர்த்தி செய்யலாம்.
9. வேலை செய்து கொண்டு கல்வி கற்கலாம்.

இவ்வாறான சில நன்மைகள் இருப்பினும் பல தீமைகளும் காணப்படுகின்றன. குறிப்பாக தனியார் பல்கலைக்கழகங்கள் பணத்தில் குறியாக இருந்து மக்களை சுரண்டலாம். ஏழை மக்கள் கல்வி கற்க முடியாத நிலை உருவாகலாம். இருப்பினும் அரசின் சிறந்த மேற்பார்வை மூலம் இப்பிரச்சினைகள் தீர்க்கப்படலாம். உலகில் பல நாடுகளில் தனியார் பல்கலைக்கழகங்கள் பொருளாதார அபிவிருத்திக்கு நேர்க்கணியமாகப் பங்காற்றியுள்ளது. அரச பல்கலைக்கழகங்கள் நாட்டின் கல்வித்தேவையைப் பூர்த்தி செய்யமுடியாத காரணத்தால் தனியார் பல்கலைக்கழகங்களை உயர் கல்வி வழங்களில் அனுமதிப்பது அதிக மாணவர்களுக்கு உயர் கல்வியை வழங்குவதோடு, அரச பல்கலைக்கழகங்களையும் சிறப்பாகத் தொழிற்படச் செய்யலாம்.

## தொகுப்புரை

இலங்கையில் அதிகரித்த சமூக நலச் செலவீடுகள், குறிப்பாக இலவசக் கல்வி மீதான செலவினத்தை 1960களில் இலங்கைக்கு வருகை தந்த பொருளியல் அறிஞர் றொபின்சன் அம்மையார் "இலங்கை, மரத்தை நாட்டுவதற்கு முன்னர் அதன் பழத்தை ருசி பார்த்துவிட்டது" என விமர்சனம் செய்துள்ளார். இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள் மிகக் குறைவான எண்ணிக்கையான மாணவர்களையே உள்வாங்குகின்றன. உள்வாங்கப்படுகின்ற மாணவர்களுக்கு பொதுத்துறையைத் தவிர வேறு துறைகளில் வேலைவாய்ப்பு அரிது. அரசு பல இலட்சம் ரூபாவை பட்டதாரியாக்குவதற்கு செலவு செய்து பட்டதாரியாக்கிய பின்னரும் அரசு வேலைவாய்ப்பு வழங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையானது, பட்டதாரிகள் மற்றும் அவர்கள் கல்வி கற்ற பல்கலைக்கழகங்களின் தரத்தை எடுத்துக் காட்டுகின்றன. எனவே உற்பத்தித் திறனை அதிகரிக்காத கல்வி பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யாது. பட்டதாரிகளின் உற்பத்தித் திறனை அதிகரித்து தொழில் சந்தைக்குத் தேவையான கல்வியை வழங்குவதற்கு இலங்கையில் இலவசமாக வழங்கப்படும் உயர்கல்வியில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். அவ்வாறான சீர்திருத்தங்களில் அரச பல்கலைக்கழகங்களுடன் தனியார் பல்கலைக்கழகங்களை அதிக அளவில் போட்டியிடச் செய்தல் மிக முக்கியமானதாகும்.

திறமைசாலிகள் தோற்பதில்லை. அவர்களைப் பிறர் தோற்கடிக்க முடிவதில்லை. அறிவு மௌனத்தையும், அன்பு பேசுவதையும், தோல்வி வெற்றியையும் கற்றுத்தருகின்றன.

– விக்டர் –



# யாழ்ப்பாண மன்னர்கால வரலாறு சார் படைப்புக்கள் – ஓர் ஆய்வு

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## 1. முன்னுரை:

ஈழத்துத் தமிழ் மக்களின் வரலாற்றுணர்வினை எடுத்துக் காட்டுவனவாகக் குறிப்பிடத்தக்க வரலாறு சார் படைப்புக்கள் அவர்கள் மத்தியிலே எழுந்துள்ளன. தமிழர்களுக்கெனத் தனியானதொரு அரசுருவாக்கம் நிகழ்ந்த காலம் முதற்கொண்டே இவ்வாறான படைப்புக்கள் தோன்றியிருத்தல் நோக்கத்தக்கதாகும். கைலாயமாலை, கோணேசர் கல்வெட்டு, வையாபாடல், பரராசசேகரன் உலா, இராசமுறை என்பன யாழ்ப்பாணத்தரசர் காலத்திலும் யாழ்ப்பாண வைபவமாலை, மட்டக்களப்பு மான்மியம் என்பன ஐரோப்பியர் ஆட்சிக்காலத்திலும் தோற்றம் பெற்ற வரலாறு சார் படைப்புக்களாகும். பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் உரைநடை வளர்ச்சி பெற்றதைத் தொடர்ந்து தமிழர் வரலாற்றை மட்டுமன்றி அவர்களின் சமயம், கலை, இலக்கியம், சமூகம் சார்ந்த வரலாறுகளையும் பதிவு செய்து வைக்கும் முயற்சிகள் பலமட்டங்களிலும் நிகழ்ந்துள்ளன. இவை யாவற்றையும் இச்சிறு ஆய்வுகட்டுரையில் அலசுவது பொருத்தமற்றதாகையால் யாழ்ப்பாண மன்னர் காலத்தில் முகிழ்வுற்ற வரலாற்றுணர்வு பற்றி மட்டுமே இங்கு ஆழ்ந்து நோக்கப்படுகின்றது.

## 2. இலக்கியத் தோற்றம்

பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கும் பதினேழாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியைப் பொதுவாக யாழ்ப்பாண மன்னர்கள் காலம் எனக் கூறிக்கொண்டாலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதையண்டிய தீவுப்பகுதியிலும் மன்னார், பூநகரி எனும் பிரதேசங்களிலும் மட்டுமே யாழ்ப்பாண மன்னர்களின் செல்வாக்கு இருந்து வந்தது. ஏனைய குடாநாட்டை அடுத்துள்ள வன்னிப் பெருநிலப்பரப்பிலும், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், கற்பிட்டி எனும் தமிழர் வாழ்பிரதேசங்களிலும் தனித்தனியான வன்னிச் சிற்றரசுகள் தோற்றம் பெற்றிருந்ததைக் காணமுடிகின்றது. இங்ஙனம் தமிழர்வாழ் பிரதேசங்களில் உருவாகிய உறுதியான அரசியற் பின்புலத்தில் அங்கு சிறந்த இலக்கியப் படைப்புக்கள் தோன்றத் தொடங்குகின்றன.

அக்காலப்பகுதியில் எழுந்ததாக அறியப்படும் இலக்கியங்களுள் மேலே சுட்டப்பட்ட நான்கு படைப்புக்களும் வரலாறு சார் படைப்புக்கள் என விதந்து கூறத்தக்க வகையில் அமைந்துள்ளன. இவற்றுள் பரராசசேகரன் உலா அல்லது இராசமுறைமை என்னும் நூல் இன்று கிடைக்கப்பெறவில்லை. ஏனைய மூன்று

நூல்களும் பலவிதமான இடைச் செருகல்கள், சேர்க்கைகள், பாடபேதங்கள் என்பவற்றுடன் இணைந்த நிலையில் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்நூல்களில் காணப்படும் இவ்வாறான இடையீடுகளே மேற்படி இலக்கியங்களின் தோற்றக் காலந்தொடர்பான பல முரண்பாடான கருத்துக்களுக்கு வழிகோலி இருப்பதைக் காணலாம்.

### 3. தோற்றப் பின்புலங்கள்:

வரலாறு சார்ந்த விடயங்களைப் பதிவு செய்து பேணவேண்டும் என்னும் விருப்புணர்வு தமிழ்மக்கள் மத்தியில் முளை கொள்ளுதற்குப் பல காரணங்கள் இருந்திருக்கலாம் போலத் தோன்றுகின்றது.

(i) வரலாறு சார்ந்த விடயங்களைத் தேடித் தொகுத்துப் பேணிக் கொள்ளுதற்கு வரலாற்றுப் பேணுகையில் அக்கறை கொண்ட நிறுவன ரீதியான அமைப்பொன்றின் பின்புலம் மிக அவசியமானதாகும். பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு வளர்ச்சி பெற்றிருந்த ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசு இத்தகைய பின்புலத்தை வழங்குவதாக அமைந்திருந்தது. மிகக் குறுகிய காலத்தில் தென்னிலங்கை அரசுக்கே அச்சுறுத்தலைத் தரும் வகையில் வளர்ச்சி பெற்ற இவ்வரசு காலத்தில் ஈழத்துப் புலமையாளர்களுக்குக் கிடைத்த ஆதரவும் ஊக்குவிப்பும் அவர்களை வரலாறு சார்ந்த விடயங்களிலே அக்கறை செலுத்தத் தூண்டியிருக்கலாம்.

(ii) ஆரியச்சக்கரவர்த்திகள் தமிழ் இலக்கியங்களையும் வைத்தியம், சோதிடம் எனும் அறிவியல் துறைசார் விடயங்களையும் தேடித் தொகுத்துப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டவர்களாக விளங்கினர். அந்தவகையில் வரலாறு சார்ந்த விடயங்களையும் புலமையாளர்களைக் கொண்டு இவர்கள் பாதுகாக்க முனைந்திருக்கலாம்.

(iii) பாண்டிய மன்னரின் படைத்தளபதிகளாக ஈழத்துக்கு வந்தவர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள். இவர்கள் ஏலவே வடபுலத்தை ஆட்சிசெய்து வந்த மன்னரை அல்லது மன்னர்களைப் புறங்கண்டே அப்பகுதியின் ஆட்சியாளர்களாக மாறியிருக்க வேண்டும். இந்நிலையில் தமக்கு வடபுல அரசின் மீதுள்ள உரிமையை எடுத்துக்காட்ட வேண்டி வரலாறு சார்ந்த விடயங்களைப் புலமையாளர்களைக் கொண்டு தொகுப்பிக்க முயன்றிருக்கலாம்.

"குறிப்பிட்ட ஒரு சமூகத்தினர் தமது சமூக நிலைப்பாடு பற்றியும் அதன் புவியியற் களம் பற்றியும் சிந்திக்கத் தொடங்கும் பொழுது வரலாற்றுணர்வு ஏற்படுகிறது. அதாவது தம்மை நிலையான குழுவினராகக் கொள்ளும்போதுதான் வரலாறு தோன்றும். இது ஆட்சியாளரின் வர்க்க நிலைப்பட்ட உணர்வாக முகிழ்க்கும் என்பர். இக்காலத்திலேயே யாழ்ப்பாண வரலாற்று மூலங்களென இன்று கொண்டாடப்பெறும் வையாபாடலும், கைலாயமாலையும் தோன்றின."

எனப் பேராசிரியர் கா. சிவத்தம்பி[1] குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும்.

(iv) பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரின் தொடர்ச்சியான அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வந்தது. கைலாயமாலை, வையாபாடல் ஆகிய நூல்கள் இதேகாலப்பகுதியில் அல்லது ஏறத்தாழ இதற்கு அண்மித்த நிலையில் தோற்றம் பெற்றதை நோக்கும்போது வரலாற்றுரிமையையும் மரபையும் எடுத்துக்காட்டி மக்கள் மத்தியிலும் அரசகுடும்பத்தவர் மத்தியிலும் அந்நியர் ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆத்ம பலத்தை ஏற்படுத்தும் நோக்கம் இவற்றுக்கு இருந்திருக்கலாம் போலத் தோன்றுகின்றது.

"ஆளும் வர்க்கத்தினரின் செல்வாக்கு உயர்நிலையில் இருக்கும் காலத்தில் மாத்திரமன்றி அது சரியும் அபாயம் தோன்றுமிடத்தும் அரசசார்பான, அரசர்களின் குலங்குடி இருப்பை நியாயப்படுத்தும் வகையிலான வரலாற்று சார்பான நூல்கள் தோன்றுவது இயல்பாகும்"

எனப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா[2] குறிப்பிடுவது இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

(v) தமிழில் வரலாறு சார்ந்த நூல்கள் தோற்றம் பெறும்முன்னரே பாளி மொழியிலும், சிங்கள மொழியிலும் ஈழத்தையாண்ட மன்னர்களதும் பௌத்த சங்கத்தினதும் வரலாறுகள் தொடர்ச்சியாக எழுதிப் பாதுகாக்கப்பட்டு வந்தன. மகாவிகாரை முதலான சமய நிறுவனங்கள் ஆரம்பகாலம் முதற்கொண்டே இத்தகைய வரலாற்று எழுது முயற்சிகளுக்கு ஆதரவும் ஊக்கமும் தந்து வந்தன. இதன் பின்னணியில் தீபவம்சம், மகாவம்சம் ராஜாவலிய, பூஜாவலிய முதலான வரலாற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றன. பாளிமொழியிலும் சிங்கள மொழியிலும் எழுதப்பட்ட இவ்வரலாற்று நூல்கள் ஈழத்துத் தமிழ்ப் புலவர்களுக்கு வரலாற்றிலக்கியங்களை எழுதவேண்டும் என்ற உத்வேகத்தையும் ஆவலையும் ஏறபடுத்தியிருக்கலாம். அல்லாமலும் இவர்களுக்கு அந்நூல்கள் முன்மாதிரியாகவும் விளங்கியிருத்தல் கூடும்.

(vi) பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை[3] ஈழத்தமிழர்கள் மத்தியில் வரலாறு சார்ந்த நூல்கள் தோற்றம் பெற்றமைக்கு வேறொரு காரணம் ஒன்றையுங் குறிப்பிடுகின்றார்.

"தகராறு இருந்து உரிமை நிறுவப்படும் போது உறுதி எழுதி வைக்கும் எண்ணம் ஏற்படுகின்றது. இலங்கையில் வரலாற்றுத் தொடக்க காலத்திலே தகராறு இருந்து உரிமை பெற்ற சிங்களவரிடையே தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் என்பன தோன்றின. இடைக்காலத்திலே தகராறு இருந்து உரிமை பெற்ற தமிழரிடையே கைலாயமாலை, வையபாடல், கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு மான்மியம், யாழ்ப்பாண வைபவமாலை முதலியன தோன்றின".

என்பது அவரது வாதம்.

(vii) திருக்கோணேஸ்வர ஆலயம் சமகாலத்தில் பெற்றிருந்த பெருமையும் புகழும் பொருளாதார ரீதியாகப் பெற்றிருந்த வளமும் அத்தலத்தின் பின்னணியில்

கோணேசர் கல்வெட்டுத் தோற்றம் பெற வழிவகுத்திருக்கலாம். அங்கு நிலவிய சுதந்திரமான வன்னியராட்சிச் சூழலும் இதற்கு உறுதுணையாக இருந்திருக்கக் கூடும் பதினாறாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இருந்து திருகோணமலை வன்னிமையின் மீது கண்டிமன்னரின் மேலாதிக்கம் ஏற்பட்டது. பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்த்துக்கேயர் திருகோணமலையைக் கைப்பற்றி அங்கு தம் கோட்டையைக் கட்டினர். இங்ஙனம் 16ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலிருந்து தொடர்ச்சியாக ஏற்பட்ட ஆக்கிரமிப்புச் சூழலில் கோணேசராலயம் தொடர்பான ஒழுங்குமுறைகளைப் பதிவு செய்து வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கக் கூடும். இதன் பின்புலத்தில் கோணேசர் கல்வெட்டு எழுதப்பட்டிருக்கலாம் போலத் தெரிகின்றது

எவ்வாறாயினும் கலாநிதி துரை.மனோகரன்[4] குறிப்பிடுவது போல, தமிழ்நாட்டுடன் ஒப்பிடும்போது இலங்கையிலே தமிழரசு ஒன்று நிறுவப்பட்ட வேகத்திலேயே இந்நாட்டுத் தமிழரின் வரலாற்றைப் பேணும் முயற்சிகள் ஆரம்பிக்கத் தொடங்கி விட்டமை ஒரு சிறப்பம்சமாகும்.

## 4. யாழ்ப்பாண மன்னர்கால வரலாறுசார் படைப்புகள்:

ஈழத்தமிழர் மத்தியில் மேற்கிளம்பிய வரலாற்றுணர்வு யாழ்ப்பாண மன்னர் காலப் படைப்புக்களான கைலாயமாலை, வையாபாடல், கோணேசர் கல்வெட்டு என்பனவற்றில் எவ்வளவு தூரம் பதிவாகியுள்ளது என்பதைத் தனித்தனியே நுனித்து நோக்குவது இவ்விடத்தில் அவசியமானதாகும்.

### 4.1. கைலாயமாலை:

கைலாயமாலை முத்துராஜ கவிராயர் என்பவரால் செய்யப்பட்டதாக அந்நூலின் ஈற்றிலே அமைந்துள்ள வெண்பா குறிப்பிடுகின்றது. கி.பி 1604க்கும் கி.பி 1619க்கும் இடைப்பட்ட காலத்தில் அல்லது அதற்குச் சற்றுப் பின்னதாக இந்நூல் தோன்றியிருக்கலாம் என முதலியார் செ.இராசநாயகம்[5] கருதுவது ஏற்புடையது போல் தோன்றுகின்றது. இந்நூல் இரண்டு முக்கியமான நோக்கங்களைக் கொண்டது.

1. முதலாம் சிங்கையாரியனின் முடிசூட்டு விழா பற்றியும் அவன் யாழ்ப்பாண அரசின் நிர்வாக ஒழுங்கமைப்பைக் கட்டமைத்தமை பற்றியும் விபரித்தல்
2. சிங்கையாரியன் நல்லூரில் கட்டுவித்த கைலாசநாதர் ஆலயம் பற்றியும் அங்கு நடைபெற்ற குடமுழுக்கு விழா பற்றியும் வர்ணித்தல்.

என்பனவே அந் நோக்கங்களாகும். இவற்றுள் சிங்கையாரியனின் பெருமை பேசும் முதற்பகுதி 'மெய்க்கீர்த்தி' உலா எனும் பிரபந்த அமைப்புக்கள் ஒன்று கலந்தவகையில் பாடப்பட்டுள்ளது. இப்பகுதியிலேயே யாழ்ப்பாணத்தரசர் காலத்தைச் சேர்ந்ததும் அதற்குச் சில காலங்களுக்கு முற்பட்டதுமான வரலாறு சார்ந்த தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முதலாம் சிங்கையாரியனுக்கு முன்னதாகவே யாழ்ப்பாணத்தில்

காணப்பட்ட அரசுருவாக்கம் தொடர்பான தகவல்கள், சிங்கையாரியன் யாழ்ப்பாண இராச்சியத்துக்கு மன்னனாகியதன் பின்னணி, அவனது படாடோபமான பட்டாபிஷேகம், உலாச்சிறப்பு என்பன மிக விலாவாரியாக இங்கு பாடப்பட்டுள்ளன.

சிங்கையாரியனுக்கு முற்பட்ட யாழ்ப்பாண அரசுருவாக்கம் பற்றிய தகவல்கள் என்ற வகையில் மாருதப்புரவீகவல்லி, யாழ்பாடி என்போருடன் தொடர்புபட்ட கதைகளை கைலாயமாலை எடுத்துக்காட்டுகின்றது[6]. யாழ்ப்பாணத்து அரசுருவாக்கந் தொடர்பாகத் தன் காலத்துக்கு முன்னர் நிலவிவந்த சில கர்ணபரம்பரைக் கதைகள் அல்லது ஐதீகங்களை மையப்படுத்தியே மேற்படி விடயங்களை முத்துராசர் பாடியுள்ளார். ஏறத்தாழ இதே விடயங்களே வையாபாடலின் தொடக்கத்தில் காணப்படுவதை நோக்கும்போது மேற்படி ஐதீகங்கள் மக்கள் மத்தியிலும் அக்காலப் புலவர்கள் மத்தியிலும் பெற்றிருந்த செல்வாக்கைக் காணலாம். வரலாற்றுத் தொடர்ச்சியைக் கட்டமைத்துக் கொள்ளுகின்ற நோக்கிலும் யாழ்ப்பாணத்தரசின் பழமையை வலியுறுத்தும் வகையிலும் மேற்படி கதைகளை வையாபுரி ஐயரும் முத்துராஜ கவிராயரும் சேர்த்திருக்க வாய்ப்புள்ளது. இக் கதைகளுக்கூடாக யாழ்ப்பாண அரசின் தொடக்க வரலாற்றைத் தேடமுடியாவிட்டாலும் ஆரியச் சக்கரவர்த்திகளின் வருகைக்கு முன்னிருந்த அரசுருவாக்கந் தொடர்பான செய்திகளை அறியக் கூடியதாக இருப்பது பெரியதொரு வரப்பிரசாதமேயாகும்.

சிங்கையாரியன் யாழ்ப்பாணத்துக்கு வந்ததன் பின்னணி பற்றியும் விசேடமான சில தகவல்களை கைலாயமாலை தருகின்றது. யாழ்பாடி அல்லது கவிராசன் காலத்துக்குப் பின்னதாக யாழ்ப்பாண அரசினை ஆள்வதற்கென்று எவரும் இல்லாத பின்னணியில் அதனை ஆளவும் நிர்வகிக்கவும் எனப் பாண்டிமழவன் என்பவனால் சிங்கையாரியன் அழைத்துவரப்பட்டதாகக் கைலாயமாலை கூறுகின்றது[7]. யாழ்பாடிக்குப் பின்னர் உருவான அரசியல் வெற்றிடம் பற்றி முத்துராஜகவிராயர் இலக்கியச் சுவை தோன்றப் பின்வருமாறு பாடியுள்ளார்.

“ கவிராசன் காலங் கழிய — அவிர் கிரண
சந்திரனில் லாதவெழிற் றாரகைபோல் வானரசாள்
இந்திரனில் லாத விமையவர்போல் - விந்தை
கரைசேரிம் மாநகர்க்கோர் காவலரண் செய்யுந்
தரையரச னின்றித் தளம்ப..... ”[8]

யாழ்ப்பாணத்தரசையாள அரசர் இல்லாததினாலேயே சிங்கையாரியன் வரவழைக்கப்பட்டான் எனக் கைலாயமாலை தரும் தகவல்கள் நம்பிக்கைக்குரியனவல்ல. அன்றியும் அவை இரண்டாம் பேரரசுப்பாண்டியர் காலச் சாசனங்களுடன் முரண்படுகின்றன. சிங்கையாரியன் வருகைக்கு ஒரு காரணத்தைக் கற்பிக்க வேண்டி முத்துராஜ கவிராயர் இக்குறிப்பைத் தன் நூலில் சேர்த்திருக்க வேண்டும். அன்றியும் தமிழ் நாட்டிலிருந்து வந்த சிங்கையாரியனுக்கு யாழ்ப்பாண

அரசில் உரிமையும் 'ஆள் தகுதியும்' வழங்கும் ஒரு முயற்சியாகவும் இதனைக் கருதலாம். இதனால் இலங்கையின் வடபகுதியில் பன்னிரெண்டாம் பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் காணப்பட்ட பாண்டிய மேலாதிக்கப்படர்ச்சிகள், படையெடுப்புக்கள், ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆதிக்கச் செல்வாக்குகள் முதலான தகவல்கள் மறைக்கப்பட்டு ஒரு 'அமைதியான அரச மாற்றம்' பற்றி முத்துராஜர் இங்கு பேச விழைகின்றார். தொடர்ந்து வரும் பகுதிகளில் சிங்கையாரியனின் குலகுடிப் பெருமைகள். அழகு, சௌந்தர்யம், வீரம், வெற்றி, கொடை, ஆட்சிச்சிறப்பு, என்பவற்றை அவர் அடுக்கிக் கொண்டு செல்வதையும் அவன் நல்லூரில் கட்டுவித்த அரண்மனையின் எழிலார்ந்த தோற்றம் படாடோபமான முடிசூட்டு விழா என்பவற்றை வர்ணித்துச் செல்வதையும் நோக்கும் போது முத்துராஜர் சமகால ஆளும் வர்க்க நலனில் கொண்டிருந்த அக்கறை எமக்குப் புலனாகின்றது. அன்றியும் 'அரசவை இலக்கியமோ' என வியக்கத்தக்க வகையில் ஆளும் வர்க்கத்த்துக்கு அனுசரனையான பிரசாரத்தை அவர் முன்னெடுத்திருப்பதைக் காணலாம். சிங்கையாரியன் தலைநகரில் கட்டுவித்த கைலாநாதர் ஆலயத்தின் பிரமாண்டமும் அங்கு நடைபெற்ற சிறப்புமிக்க கும்பாபிஷேகம் பற்றிய விபரணங்களும் மேலும் இக்கூற்றை அரண் செய்வதைக் காணமுடிகின்றது. இவற்றுக்கூடாக யாழ்ப்பாண இராச்சியத்தில் சிங்கையாரியனின் ஆட்சிக்குப் பலந்தேட முத்துராஜர் முனைகின்றார்.

சிங்கையாரியனின் முடிசூட்டு விழாவைத் தொடர்ந்து யாழ்ப்பாண இராச்சியத்தின் நிர்வாகத்தை அவன் ஒழுங்கமைத்த முறை பற்றி முத்துராஜர் தருந்தகவல்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏறத்தாழ உண்மையான தகவல்களை மையமாகக் கொண்டே மேற்படி விடயங்களை விபரித்திருப்பதைக் காணலாம்[9]. தமிழ்நாட்டிலிருந்து சிங்கையாரியனால் வரவழைக்கப்பட்டு யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் தமது அடிமை குடிமைகளுடன் குடியேற்றப்பட்ட வேளாளப் பிரபுக்கள் யாழ்ப்பாண இராச்சிய நிர்வாகத்தின் முதுகெலும்புகளாக விளங்கியமை பற்றி கைலாயமாலை விபரிக்கின்றது. பிரபுக்கள் குடியேறிய இடங்கள் அவர்களது குடி. குலமரபுகள் அவர்களுக்கு என வழங்கப்பட்ட சின்னங்கள், விருதுப் பெயர்கள், அதிகாரங்கள் என்பன பற்றியெல்லாம் முத்துராஜர் மிக விரிவாகப் பேசுகின்றார். நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்த யாழ்ப்பாண இராச்சியம் பாகுபடுத்தப்பட்டிருந்த முறை (வடபற்று, மேற்பற்று, கீழ்ப்பற்று) அதன் நிர்வாகப் பொறுப்புகள் கையளிக்கப்பட்டிருந்த வகை என்பன பற்றியும் கைலாய மாலையில் சுட்டப்படுகின்றன. ஒட்டு மொத்தத்தில் யாழ்ப்பாண மன்னர் காலம் பற்றிய தகவல்களை ஐதீகங்கள் இலக்கிய மாயைகள் என்பனவற்றுடன் கலந்த நிலையில் கைலாயமாலை கூறிச் சென்றாலும் யாழ்ப்பாண மன்னர் கால வரலாற்றினைக் கட்டமைத்துக் கொள்வதில் அதன் பங்களிப்பு தவிர்க்க முடியாததாகவேயுள்ளது.

## 4.2. வையாபாடல்:

'வையாபாடல்', 'வையா கல்வெட்டு', 'வையா' என்னும் பெயர்களால் வழங்கப்பட்டு வரும் நூலை இயற்றியவர் வையாபுரி ஐயர். இந்நூலின் அகச்சான்றுகள் கொண்டு நோக்குகின்ற போது இந்நூல் ஆரம்பத்தில் 'இலங்கை மண்டலக்காதை' என்றே வழங்கப்பட்டிருக்க வேண்டும் எனத்தெரிகின்றது[10]. பதினெட்டாம் நூற்றாண்டில் இந்நூலை வசனரூபமாகச் செய்த சிலர் அதன்பெயரினை 'யாழ்ப்பாண நாட்டு வளப்பம்' எனப் பதிவு செய்திருப்பதாகப் பேராசிரியர் பத்மநாதன்[11] அவர்கள் குறிப்பிடுவார்கள். யாழ்ப்பாண மன்னர் காலத்தின் பிற்பகுதியில் எழுந்ததாகக் கருதப்படக் கூடிய இந்நூலின் தோற்றக் காலத்தைச் சரிவரத் தீர்மானிப்பதற்குப் போதுமான ஆதாரங்களில்லை.

வையாபாடல் யாழ்ப்பாண அரசின் தோற்றம் பற்றிய தகவல்களை ஆரம்பத்தில் குறிப்பிட்டுச் சென்றாலும் அதன் முக்கிய நோக்கம் காலந்தோறும் அடங்காப்பற்றில் ஏற்பட்ட வன்னியர் குடியேற்றங்கள் பற்றி விபரிப்பதேயாகும். இந்நூலாசிரியர் வையாபுரி ஐயர், நூலின் தொடக்கத்திலே,

"இலங்கை மாநக ரரசியற் றிடுமர சன்றன்
குலங்க ளானதுங் குடிகள்வந் திடுமுறை தானுந்
தலங்கள் மீதினி லிராட்சதர் தமையடு திறனுந்
நலங்க ளாருநேர் நாடர சாகிவந் ததுவும்[12]

எனக் கூறுவது கவனிக்கத்தக்கதாகும். யாழ்ப்பாணத்தரசின் வரலாற்றைக் கைலாயமாலை மாருதப்புரவீகவல்லி – வாலசிங்கன் வரலாற்றுடன் தொடங்க, வையாபாடல் இதற்கு ஒருபடி மேலாகச் சென்று இராமாயண காலச் சம்பவங்களுடன் தொடங்குகின்றது. இராமன் இலங்கைக்கு வந்தது இராவணனை வென்றது. விபீடணனை ஈழத்தின் அரசனாக்கியது எனத் தொடங்கி முதலாம் சிங்கையாரின் யாழ்ப்பாணத்தின் அரசனாகிய காலம் வரையான வரலாறுகளைச் சுருக்கமாக ஐதீகங்கள், செவிவழிக்கதைகள் என்பவற்றின் மூலமாக வையாபுரி ஐயர் கட்டமைத்துச் செல்கிறார். தொடர்ந்து வன்னியர் குடியேற்றம் பற்றி ஆசிரியர் அதிக அக்கறை காட்டுகிறார். யாழ்ப்பாண வைபவமாலை வன்னியர் குடியேற்றங்கள் இரண்டு கட்டங்களாக நிகழ்ந்ததாகக் குறிப்பிடுகிறது[13]. இவற்றுள் முதலாவது குடியேற்றம் குளக்கோட்டன் காலத்தில் ஏற்பட்டதென்றும், இரண்டாவது குடியேற்றம் பாண்டிநாட்டால் வந்த ஐம்பத்தொன்பது வன்னியரின் வருகையோடு ஏற்பட்டதென்றும் சுட்டப்படுகின்றது. இவற்றுள் இரண்டாவதாக நடைபெற்ற வன்னியட குடியேற்றம் பற்றியே வையாபாடல் விபரிப்பதைக் காணலாம்.

இந்த இரண்டாவது குடியேற்றம் யாழ்ப்பாணத்தையாண்ட தமிழ்வேந்தவ காலத்தில் நடைபெற்றதாகக் கூறும் வையாபாடல் அது தொடர்பான சம்பவங்களையும் விரிவாகவே விபரிக்கின்றது. யாழ்ப்பாணத்தை ஆண்ட செயதுங்க வீரவரராஜசிங்கனின் மணவினையின் பொருட்டு, மதுரை மன்னன் தனது மகள் சமதாதியையும் அவளின்

பாதுகாப்புக்காக அறுபது வாட்படை வன்னியரையும் ஈழத்துக்கு அனுப்பி வைத்தான் என்றும், திருமணத்தின் பின்னர் வீரவரராஜசிங்கன் அறுபது வன்னியரையும் அடங்காப்பற்றில் சென்று வாழும்படி பணித்தான் என்றும் அறுபது வன்னியரும் மேலும் தம் இனத்தவர் பலரைத் தென்னிந்தியாவிலிருந்து வரவழைத்து அவர்களின் உதவியுடன் அடங்காப்பற்றில் ஏலவே வாழ்ந்தோரை அடக்கி ஆட்சிபுரிந்தனர் என்றும் வையாபாடல் கூறுகின்றது[14]. வீரவரராஜசிங்கன் காலத்தில் வந்த அறுபது வன்னியரும் அடங்காப்பற்றில் வாழ்ந்த பூர்வீக குடியினரை அடக்கினர் எனக் கூறப்படுவதால் அவர்களது வருகைக்கு முன்னரே அடங்காப்பற்றில் மக்கள் குடியேற்றங்கள் இருந்தமை புலனாகும். யாழ்ப்பாண மன்னர்களுக்கும் பாண்டி நாட்டுக்கும் இடையே இருந்து வந்த உறவின் பின்னணியில் ஏற்பட்ட இப்புதிய குடியேற்றமும் வன்னிமைகள் மீதான புதிய மேலாதிக்கப்படர்ச்சியும் கி.பி 13 ஆம் நூற்றாண்டளவில் நிகழ்ந்திருக்க வாய்ப்புண்டு.

யாழ்ப்பாண மன்னர் காலப்பகுதியில் அடங்காப்பற்றிலும் யாழ்க்குடாநாட்டின் பலபகுதிகளிலும் அவ்வப்போது குடியேறிய மக்கள் கூட்டத்தினர், அவர்களது சாதிகள், குலவரன்முறைகள், தொழில்கள், பற்றியெல்லாம் வையாபாடல் விரிவாக விபரிக்கின்றது. அன்றியும் அடங்காப்பற்றின் மேல் யாழ்ப்பாணமன்னர்களின் அதிகாரம் நிலைநாட்டப்பட்டமை பற்றியும் வையாபாடலில் தகவல்கள் உள்ளன. குறிப்பாகப் பரராசசேகரமன்னன் காலத்தில் (இவன் நல்லூரை ஆண்ட எட்டாம் பரராசசேகரனாக இருக்கலாம்) அடங்காப்பற்றின் மேல் யாழ்ப்பாண மன்னனின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டமை பற்றிய விரிவான தகவல்கள் வையாபாடலில் உள்ளன. யாழ்ப்பாண மன்னர்களின் மேலாதிக்கத்தை அடிக்கடி ஏற்றுக்கொள்ளாது கிளர்ந்தெழும் வன்னியர்கள் பரராசசேகர மன்னன் காலத்திலும் தமது எதிர்ப்பைக் காட்டினர் என்றும் அவர்களது கிளர்ச்சியை அடக்கிய பரராசசேகரன் தொடர்ந்தும் வன்னிப்பிரதேசத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக முள்ளியவளையில் ஓர் உப தலைநகரத்தை ஸ்தாபித்திருந்தான் எனவும் வையாபாடல் சுட்டுகின்றது[15]. முள்ளியவளையில் பரராசசேகரன் இருந்த காலங்களில் நல்லூர் இராசதானியை நிர்வகிக்கும் பொறுப்பு செகராசசேகர மன்னனிடம் ஒப்படைக்கப்பட்டது. அதேபோல வன்னியின் மற்றொரு பகுதியின் நிர்வாகப் பொறுப்பு (வாவெட்டி) சங்கிலியின் கையில் தரப்பட்டது[16]. பரராசசேகரன் முள்ளியவளையில் ஸ்தாபித்த மூத்த விநாயகர் ஆலயம் பற்றியும் அவ்வாலயத்திற்குரிய விக்கிரகங்களையும் பூசகர்களையும் தென்னிந்தியாவிலிருந்து அவன் தருவித்தமை பற்றியும் விரிவாகப் பேசும் வையாபாடல்[17] பரராச சேகர மன்னனின் இறப்புடன் தன் வரலாற்று விபரிப்பை முடித்துக்கொள்கின்றது. வையாபாடலின் பிற்பகுதியை நோக்குகின்ற போது அது பரராசசேகரமன்னனின் துதி பாடுவதாகவே கொள்ளக்கிடக்கிறது. பரராசசேகரனின், வீரம், நிர்வாகத்திறன், மதாபிமானம் என்பன குறித்த செய்திகளே அங்கு விலாவாரியாகத் தரப்பட்டுள்ளன. வையாபாடலின் இலக்கியப் பெறுமதியை இந்த

இறுதிப்பகுதியே பேணிநிற்கின்றது எனலாம். நூலின் இடையே வரும் பறங்கியர் பற்றிய குறிப்புகள் எல்லாம் வையாபாடலில் நுழைந்த இடைச் செருகல்களே[18].

## 4.3. கோணேசர் கல்வெட்டு:

கோணேசர் கல்வெட்டை எழுதியவர் கவிராஜவரோதயர். இன்றைய நிலையில் இந்நூல் மூன்று பகுதிகளாகக் கிடைக்கப் பெற்றுள்ளது. அவை முறையே விருத்தப்பாவாலும் அகவற்பாவாலும் உரைநடையாலும் ஆக்கப்பட்டுள்ளன. விருத்தப் பகுதி கோணேசரலாயத்துக்குக் குளக்கோட்ட மன்னன் செய்த திருப்பணிகளை விபரிக்கின்றது. அகவற்பகுதி கோணேசராலயத்துக்கு வருகை தந்த கஜபாகு மன்னன் அவ்வாலய நிர்வாக ஒழுங்கு முறைகளைச் சீர்படுத்தி வழங்கிய தானங்கள் பற்றிச் சுட்டுகின்றது. கோணேசராலயத்தின் நிர்வாகம், விழாக்கள் தொடர்பாகக் காலந்தோறும் ஏற்பட்டு வந்த மாற்றங்களையும் புதிய சேர்க்கைகளையும் உரைநடைப்பகுதி பதிவுசெய்துள்ளது. இவற்றுள் கவிராஜவரோதயரால் எழுதப்பட்டது விருத்தப்பாவால் அமைந்த பகுதியே எனலாம். இதுவே கோணேசர் கல்வெட்டின் மூலப்பகுதி எனக் கொள்ள இடமுண்டு. கவிராஜ வரோதயர் கோணேசர் கல்வெட்டின்சிறப்புப் பாயிரத்தில்

"சொல்லுற்ற சீர்க் குளக்கோட்டு மன்னன் சொற்படி சொல்லெனவே
கல்வெட்டுப் பாட்டென்னப் பாடினன்..."[19]

எனப் பாடுதலால் குளக்கோட்டு மன்னனின் திருப்பணிகள் பற்றிய தகவல்களை மட்டுமே அவர் பாடியுள்ளமை புலனாகின்றது. ஏனைய கஜபாகு மன்னனின் வருகை, கோணேசராலய நிர்வாகந் தொடர்பான பகுதிகள் பிற்காலத்தில் வேறு யாராலேயோ எழுதப்பட்டுச் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். கவிராஜவரோதயர் செப்பேட்டுப் பெரிய வளமைப் பத்ததியில் சொல்லப்பட்ட விடயங்களையே இலக்கியப் புனைவுகளுடன் கல்வெட்டாகப் பாடியுள்ளார் எனக் கூறப்படுகின்றது[20].

கவிராஜவரோதயர் எழுதிய விருத்தப்பாவாலான பகுதி இரண்டு நோக்கங்களையுடையது ஒன்று கோணேசராலயம் தொடர்பாகக் குளக்கோட்ட மன்னன் மேற்கொண்ட நிர்வாக ஒழுங்கமைப்பினை விபரிப்பது. இரண்டாவது குளக்கோட்டன் வெட்டுவித்த கந்தளாய்க் குளம் பற்றிய தகவல்களைத் தருவது. இவ்விரு பகுதிகளிலும் வரலாற்றுச் செய்திகள் பல உள்ளன. குளக்கோட்டன் ஈழத்திற்கு வந்தமை, கோணேசராலயத்தில் திருப்பணிகளைச் செய்தமை, ஆலயத் தொண்டிற்காகப் பல்வேறு சாதியினரையும் தென்னிந்தியாவிலிருந்து வரவழைத்துக் குடியேற்றியமை, அவரவர்க்குரிய கடமைகளை வகுத்துத்தந்தமை, கோணேசராலயப் பூசனைகளையும் விழாக்களையும் நிர்வாக ஒழுங்குமுறைகளையும் திட்டம் செய்தமை பற்றி முதற்பகுதியில் விரிவாக எடுத்துரைக்கப் பட்டுள்ளன. கந்தளாய்க் குளத்தை அமைப்பித்த வரலாறும் அதன் காவலுக்கென காவல் தெய்வங்களைப் பிரதிஷ்ட்டை செய்து அவற்றுக்குரிய பூசனைகளை ஒழுங்கு செய்தமை பற்றி இரண்டாவது பகுதியில்

விரிவாக நோக்கப்பட்டுள்ளன. இறுதியில் குளக்கோட்டன் சிவனுடன் ஐக்கியமாகிய சம்பவ விபரிப்புடன் கோணேசர் கல்வெட்டின் விருத்தப்பகுதி நிறைவுறுகின்றது. குளக்கோட்ட மன்னனின் மரபையும் புகழையும் கொடைச்சிறப்பையும் முதலிலும் இடையிலும், கடையிலும் பொதிந்து எழுதப்பட்ட இந்நூல் சமகாலத்தில் தமிழகத்திலும் சிங்கள மொழியிலும் எழுந்த தனிமனிதரின் (மன்னர், படைத்தலைவர் முதலானோரின்) ஆளுமைகளைச் சித்திரிக்கும் இலக்கியங்களுடன் ஒப்பிட்டு நோக்கத்தக்கதாகும். இலக்கியப் பெறுமானம் நிரம்பிய நிலையில் இந்நூல் பாடப்பட்டிருந்தாலும் சமகாலத் திருகோணமலைப் பிரதேசத்தின் அரசியல், சமூக, பொருளாதாரப் பண்பாட்டுக் கட்டுமானங்களை இன்று விளங்கிக் கொள்ளப் பேருதவி புரிகின்றது.

## 5. முடிவுரை

மேலே விரிவாக எடுத்துக் காட்டப்பட்ட மூன்று படைப்புக்களும் ஈழத்தமிழர் மத்தியில் காணப்பட்ட வரலாற்றுணர்வினை ஒரளவுக்கு இனங்காட்டியுள்ளன. எனினும் இவற்றை முழுமையான வரலாற்றுப்படைப்புக்களாகக் கொள்ள முடியாதுள்ளது. மாறாக இவற்றை 'வரலாறுசார் படைப்புக்களாகக்' கொள்வதே பொருத்தம் போல் தோன்றுகின்றது. பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா[21] இவற்றை 'வரலாற்று வரன்முறை கூறும் நூல்கள் எனச் சுட்டுவார். வரலாற்று வரன்முறை கூறுதலை இவை தமது உபநோக்கமாகவே கொண்டிருத்தலைக் காணலாம். கைலாயமாலையிலும் கோணேசர் கல்வெட்டிலும் இந்த உபநோக்கு மிகத் தெளிவாகப் பதிவாகியுள்ளது. சிங்கையாரியன், குளக்கோட்டன் என்போரின் பீடும், பெருக்கும், கொடையும், மதாபிமானமும் பற்றிப் பேசவிழைந்த இவ்விலக்கியங்கள் தம் நோக்கின் ஒரு பகுதியாக மேற்படி ஆட்சியாளர் காலப்பகுதியுடன் தொடர்புபட்ட வரலாற்றுத் தகவல்களைப் பதிவு செய்துள்ளன. வையாபாடலில் ஒப்பீட்டளவில் வரலாற்றுணர்ச்சி அதிகமானதாக இருந்தாலும் அதிலும் இலக்கியப் பண்புகள் ஊருடுவி நிற்பதை மறுப்பதற்கில்லை. மெய்க்கீர்த்தி, உலா, சாசனச் செய்யுள் மரபுகளைத் தழுவி எழுதப்பட்ட இப்படைப்புக்களில் இயல்பாகவே இலக்கியப் பண்புகள் ஊடுருவி நிற்பதைக் காண முடிகின்றது. இலக்கியத்திற்கேயுரிய அதிலும் குறிப்பாக அரசவை இலக்கியங்களில் காணப்படக்கூடிய 'தனிமனித வணக்கம்' அல்லது 'வீர வணக்கம்' இப் படைப்புக்களையும் தாராளமாகவே பாதித்துள்ளது. இலக்கியங்களில் மிதமிஞ்சி வரும் வர்ணணைகள், கற்பனைகள், வெற்றுப் புகழ்ச்சிகள், ஆலாவர்ணனைகள் என்பன இப்படைப்புக்களையும் நிறைத்துள்ளதைக் காணலாம். தாம் புகழ விரும்பிய கதாநாயகர்களை அமானுக்ஷ நிலைப்படுத்திக் காட்டும் போக்கையும் அவை பலகட்டங்களிலும் பின்பற்றியுள்ளதைக் காணமுடிகின்றது.

மேற்படி இலக்கியங்களில் பதிவாகியுள்ள வரலாற்றுத் தகவல்கள் யாவும் நம்பிக்கைக்குரியவை என ஏற்றுக் கொள்வதற்கில்லை. இந்நூல்களின் ஆசிரியர்கள் தாம்

அறிந்தவற்றையும் தாம் கேட்டறிந்தவற்றையும் வைத்துக்கொண்டே இவ்விலக்கியங்களைப் படைத்துள்ளமை தெரிகின்றது. வையாபாடலாசிரியர் தான் கண்டறிந்தவற்றையும் சுபதிட்டு முனிவர்பால் கேட்டறிந்தவற்றையும் வைத்துக் கொண்டே இலக்கியம் படைத்ததாகக் கூறுகின்றார். கோணேசர் கல்வெட்டாசிரியருக்கு அவருக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டிருந்த பெரியவளமைப் பத்ததி இலக்கியத்தைப் படைக்க உதவி செய்துள்ளது. கைலாயமாலை ஆசிரியர் தான் கண்டவற்றையும் அறிந்தவற்றையும் விட பலகாலமாக நிலவிவந்த ஐதீகங்களையும் செவிவழிக் கதைகளையும் தன் இலக்கிய ஆக்கத்திற்குப் பயன்படுத்தியுள்ளார். மேற்படி ஆசிரியர்கள் நேரடியாகக் கண்டறிந்து பதிவு செய்த விடயங்கள் நம்பிக்கைக்குரியவை என ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் பிறர் வாயிலாகக் கேட்டு அறிந்து எழுதிய விடயங்கள் யாவும் உண்மையானவை எனக் கொள்வதற்கில்லை. அவற்றில் கற்பனைகளும் புனைவுகளும் சேர்க்கைகளும் நிரம்பியிருக்கச் சாத்தியங்கள் உள. இன்னும் மேற்படி ஆசிரியர்கள் வரலாற்றுத் தகவல்களை இலக்கியப் புனைவுடன் கூறிச் செல்கின்றபோது பல இடங்களில் வரலாற்றுக் குழப்பங்களும் ஏற்படுகின்றன. தகவல்களைத் திரட்டிக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் மேற்படி ஆசிரியர்கள் இட்டு நிரப்பு முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர். இவை எல்லாவற்றையும் விடக் காலந்தோறும் ஏற்பட்ட இடைச் செருகல்களும் சேர்க்கைகளும் முற்றுமுழுதாகப் பல இடங்களில் இலக்கியத்தின் தனித்தன்மையைப் பாதித்திருப்பதைக் காணலாம்.

எனவே இவ்வாறான இலக்கியப் புனைவுகள், இட்டு நிரப்பல்கள், இடைச்செருகல்கள் சேர்க்கைகள் முதலான இன்னோரன்ன பல இடையூறுகளுக்கு மத்தியிலிருந்தே மேற்படி இலக்கியங்களிலிருந்து வரலாற்றுத் தகவல்களைத் திரட்டிக் கொள்ள வேண்டியுள்ளது. இதனால் இந்த இலக்கியங்களை மூலாதாரமாகக் கொள்ள முனைவோர் மிகுந்த எச்சரிக்கை உணர்வு உடையவர்களாக இருத்தல் அவசியமானது. வரலாற்றறிவு, இலக்கியப் புலமை, மூலபாடத்திறனாய்வு பற்றிய போதிய அறிவு, பயிற்சி முதலானவற்றுடன் இவ் இலக்கியங்களை அணுகுகின்றபோதே நம்பிக்கைக்குரிய வரலாற்றுத் தகவல்களை ஒருவர் திரட்டிக் கொள்ளமுடியும். இல்லாவிடின் புனைவுகள், சேர்க்கைகள், கர்ண பரம்பரைச் செய்திகள் என்பனவற்றை உண்மையென நம்பும் ஆபத்தும் ஏற்படச் சாத்தியமுண்டு.

எவ்வாறாயினும் மேற்படி இலக்கியங்களே இருள் சூழ்ந்த ஈழத்தமிழர் வரலாற்றை ஓரளவுக்குத் தானும் ஒளிமயமாக்கியுள்ளன என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. இதனாலே தான் பிற்காலத்தில் ஈழத்தமிழர் வரலாற்றை எழுதியவர்களும் எழுதுகின்றவர்களும் தவிர்க்க முடியாமல் இவ்விலக்கியங்களைப் பிரதான மூலங்களாக ஏற்றுக் கொண்டனர். அரசியல் வரலாறேயன்றி ஈழத்தமிழரின் சமய, சமூக, பொருளாதார பண்பாட்டு வரலாறுகள் சார்ந்த பல தகவல்களைத் தரும் புதையல்களாக இந்நூல்கள் உள்ளன. இவற்றை உரிய முறையிலுடன் நுணுகி நோக்கிச் செல்லும் போது ஈழத்தமிழரின் வரலாறு, பண்பாடு, சார்ந்த எத்தனையோ பல புதிய செய்திகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவர முடியும் என்பதில் ஐயமில்லை.

## அடிக்குறிப்புகள்:


1. சிவத்தம்பி, கா., ஈழத்தில் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1978, ப. 18.
2. சிவலிங்கராஜா, எஸ்., ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, தனலக்குமி புத்தகசாலை, யாழ்ப்பாணம், 2001, ப. 27
3. வேலுப்பிள்ளை, ஆ., தொடக்ககால ஈழத்து இலக்கியமும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும், தொடக்கப் பேருரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1986, ப. 13
4. மனோகரன், துரை., இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி, கலைவாணி புத்தக நிலையம், கண்டி, 1997, ப.14
5. இராசநாயகம், செ., கைலாயமாலை ஆராய்ச்சி முன்னுரை, கைலாயமாலை, சாந்தி அச்சுக்கூடம், சென்னை, 1939, பக். ஐ-ஏ
6. கைலாயமாலை, (பதிப்பு) ஐம்புலிங்கம்பிள்ளை, சே.வே, சாந்தி அச்சுக்கூடம், சென்னை, 1939, கண்ணிகள் 1 - 43
7. கைலாயமாலை கண்ணிகள்: 79 - 88
8. கைலாயமாலை கண்ணிகள்: 44-46
9. கைலாயமாலை கண்ணிகள்: 149-212
10. வையாபாடல், (பதிப்பு) நடராசா. க.செ., தமிழ்ச் சங்கம், கொழும்பு, 2001, செய்யுள். 7
11. பத்மநாதன் சி. ஈழத்து இலக்கியமும் வரலாறும், குமரன் புத்தக நிலையம், கொழும்பு, 2004, ப. 43
12. வையாபாடல், செய்யுள். 3
13. யாழ்ப்பாண வைபவமாலை, (பதிப்பு) குணராசா.க, கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம், 2001, ப.10
14. வையாபாடல், செய்யுள்கள்: 21-28
15. வையாபாடல், செய்யுள்கள்: 86-88,96
16. வையாபாடல், செய்யுள்கள்: 96,99
17. வையாபாடல், செய்யுள்கள்: 89-97
18. வையாபாடல், செய்யுள்: 33
19. கோணேசர் கல்வெட்டு (பதிப்பு) வடிவேல்.இ, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1993, முன்னுரை, ப.39
20. கோணேசர் கல்வெட்டு சிறப்புப்பாயிரம்
21. சிவலிங்கராஜா, எஸ்., மு.கு.நூ, 2001, ப.27









பாடசாலை நிகழ்வுகள்











பாடசாலை நிகழ்வுகள்



# சிற்பக்கலைப் படைப்பின் ஒரு கண்ணோட்டம்

நவாலியூர் தி. சந்திரன்
"அருட்கலைச் சக்கரவர்த்தி"
பழைய மாணவன்,
யா/ நவாலி ம.வி.

கட்டடக்கலைக்கு அடுத்தபடியாக உள்ளது சிற்பக்கலை. கட்டடக்கலையை விட சிற்பக்கலை நுட்பமானது. மனிதன், விலங்கு, பறவை, மரம், செடி, மலை, கடல் முதலிய இயற்கை உருவங்களையும், கடவுள் தெய்வம், அரக்கர் முதலிய கற்பனை உருவங்களையும் அழகுபட அமைப்பதே சிற்பக்கலையாகும். சிற்பக்கலைஞனும் தனது கற்பனைகளினாலே பலவகையான சிற்பங்களைக் கண்டு, அவற்றைச் சிற்பங்களாக வடிவமைக்கிறான். சிற்பக்கலைகள் கண்ணையும், கருத்தையும் கவர்ந்து மனத்திற்கு இன்பங்கொடுக்கின்றன. அவற்றின் அழகும் அமைப்பும் எல்லோருக்கும் உணர்ச்சி கொடுத்து மகிழ்வூட்டுகின்றன.

"சில்ப" என்ற சமஸ்கிருதச் சொல், "ஆழ்ந்த தொழில்நுட்பம்" எனப் பொருள்படும். சிற்ப சாஸ்திர நூல்கள் பெரும்பாலும் கோயில் கட்டுவது, படிமங்கள் இயற்றுவது தொடர்பான விதிமுறைகளைத் தமது காலநடைமுறைகள், அனுபவங்கள் சார்ந்தே விளக்குகின்றன. ஒருங்கிணைப்புத்தத்துவம் பற்றி மௌனமாக இருப்பதுடன் விபரங்களை மட்டுமே தருகின்றன. ஒரு மூடிய சமூகத்தினுள்ளேயே கலைஞனும், கைவினைஞனும் வாழ்ந்தனர். அவர்களது அறிவு மிகவும் இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டதுடன், குரு – சிஷ்யன், தகப்பன் - மகன் என்ற வழிமுறையிலேயே பரிமாற்றப்பட்டு வந்துள்ளது. சிற்ப நூலறிவு தந்தை – தனயன் என்ற வழிமுறையிலேயே பரிமாற்றப்பட்டு வந்துள்ளது.

சிற்பமொன்றை உருவமைக்க விரும்பும் கலைஞனானவன் அதன் அடிப்படைகள் பற்றிய அறிவுடையவனாக இருத்தல் வேண்டும். அவ்வடிப்படைகள் ஆவன,

1. சிற்பத்திற்குரிய கற்கள் பற்றிய அறிவு
2. சிற்பச் செதுக்கலுக்கான ஆரம்ப உருவரைகள்
3. செதுக்குதல்
4. அங்கங்களின் உருவமைப்பு
5. பாவ நிர்ணயம்
6. ஒருங்கிணைத்தல்

என்பனவாகும்.

மனிதனின் நல்வாழ்விற்கு உதவுகின்ற எல்லாத் தொழில்களையும் கலைகள் என்றே கூறலாம்.

1. வாழ்வியல் கட்டிடக்கலைகள் - குடிசைகள், கூரைவீடுகள், பெரிய வீடுகள், மாடி வீடுகள்
2. கோயில் கட்டிடக்கலைகள் - சைவம், வைஸ்ணவம், சமணம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம்
3. நினைவுச் சின்னங்கள் - கல்லறைகள், அரண்மனைகள், கோட்டைகள், பாலங்கள், சத்திரங்கள், சாவடிகள், சுரங்கங்கள்.
4. கட்டிட ஒப்பனையில் - சுவரோவியம், விதான ஓவியம், சிற்ப ஓவியம், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் போன்ற நிலைப்பாட்டு ஓவியங்கள், கற்பனைகளாக மெருகூட்டப்படுகின்றன.

கட்டிடக்கலையின் அடிப்படையாகவுள்ளமை. உணரத்தக்கது, இடவரையறை, விடுபறித்தல், அடிப்படை அமைத்தல், கட்டிடம் எழுப்புதல் என அமையும் முறைமை,

“கல்லடித்து அடுக்கிவாய் பளிங்கரிந்து கட்டிமீது
எல்லுடைப் பசும்பொன் வைத்து இலங்கு பல்மணிக்குலம்
வில்லிடக்குயின்றி வாள்விருக்கும் வெளினி மாமரம்
புல்லிடக் கிடத்தி வச்சிரத்தகால் பொருந்தியே”

போன்ற இலக்கியப்பாடல்கள் இனங்காட்டுகின்றன.

சிற்பக்கலையுலகில் பரிணாம வளர்ச்சியென்பதும் தவிர்க்க இயலாதவொன்றாகும். நாட்டுக்கு நாடு கலைமரபுகள் மாறுபடுதலும் உண்டு. சிற்பியர் தேர்ந்தெடுக்கும் சிற்பத்திற்கேற்ற மூலப்பொருட்களின் காரணமாகத்தான் சிற்பத்தின் அமைப்புகளில் வேறுபாடுகள் ஏற்படுகின்றன. இத்தகைய காரணங்களால்தான் சிற்பக்கலை மரபுகளில் பல்லவர்கால சிற்பமுறை, சோழர்கால சிற்பமுறை, பாண்டியர் காலச்சிற்ப முறை, விஜயநகர நாயக்க மன்னர் சிற்பமுறை, மராட்டிய மன்னர் சிற்பமுறை, வடநாட்டு (அதியமான்) சிற்பமுறை ஆகியன வேறுபடுத்திப் பார்க்கக்கூடியதாக உள்ளன. இவற்றிடையே ஹோய்சலர் சிற்பமுறை உலகப்புகழ் பெற்றதற்குக் காரணம் கலை மரபுகள் கற்பனைகளின் திறமையாகும். உலகிலே பொதுவாகச் சிற்பக்கலையைப் பற்றிப்பல செய்திகள் உள்ளன. இடத்திற்கேற்பவும், காலத்திற்கேற்பவும், இனங்களுக்கேற்பவும், பிற பண்பாடுகள், நாகரீகங்களுக்கேற்பவும் சிற்பக்கலைப் படைப்பிற்குச் சில அடிப்படைகள் மாறலாம். இயற்கை வடிவங்களையும், பிற தோற்றங்களையும் உள்ளவாறு வடிப்பதே சிற்பக்கலைக்கு ஒருவகை இலக்கணமாகும். ஓர் உருவைப் பிரதி செய்வது போன்றும், அதற்கு மாறுபாடாகவும் செய்வதும் ஓவியக்கலைக்கு ஓர் இலக்கணமாகும்.

மேலை நாட்டினர் சிற்பங்களை வடிக்கும் போது உள்ளதை உள்ளவாறு அமைத்துக் கொள்வார்கள். ஆனால் தென் இந்தியர்கள் உள்ளதைத் தம் கற்பனைக்கு ஏற்ற வகையில் உணர்த்தவே சிற்பங்கள் அமைக்கின்றனர். சிற்பி தன் மனத்திரையில் காணவரும் காட்சியை பிற பொருட்களின் கற்பனையை கலைப்படைப்பாகப் படைக்கின்றான். சிற்பியர் தம் கற்பனைத் திறத்தையும் மிகச் சிறப்புடன் சிற்பப்படைப்புக்களாக உருவாக்கியுள்ளதை நின்று நிதானித்துக் கண்டாலொழிய சிற்ப அழகை, அனுபவத்தை உணர்ந்து கொள்ளவே முடியாது.

“கல்லும், உலோகமும், செங்கல்லும், மரமும், மண்ணும்
சுதையும், தந்தமும், வண்ணமும்,
சிற்பத் தொழிலுக்கு உறுப்பாவன”

அறிவியல் உலகத்தில் சிற்பத் தொழிலுக்குரிய பொருட்களாக அரக்கு, கண்ணாடி, பீங்கான், பிளாஸ்ரிக், பிளாஸ்ரர்பரிஸ், தக்கை, தானியங்கள் போன்றவற்றில் சிற்பத்திறமைகளைக் காட்டி வருகின்றனர். சிற்பநூல் மரபுகளும் தியான சுலோகங்களும், பிற அருளாளர்களின் பாடல்களும் சிற்பங்களை நேர்த்தியாகப்படைத்திடத் துணை நிற்பது உண்மையே. எனினும் இவற்றிற்கும் மேலாகச் சிற்பியர்க்கு ஒருமுகப்பட்ட கலையீடுபாடும் கலைக் கற்பனையும் கை கொடுத்து உதவவேண்டும். அந்த நிலையில் சிற்பியர்கள் உருவாக்கிடும் சிற்பப் படைப்புக்கள் சிறந்த கலைவடிவம் மூலம் காலத்தால் அழியாத சித்தாந்தங்களையும் மக்களிடையே பரப்பிவிடலாம். சிற்ப, ஓவியக் கலை வடிவம் ஆதிமனிதனோடு வளர்ந்து வந்த கலைவடிவமாகும். விஞ்ஞானிகளின் இயந்திர உற்பத்தி வளர்ச்சியோடு இன்று மிகவும் ஆதிக்கம் பெற்று நிற்பது சிற்பக்கலை வடிவமாக வளர்ந்துள்ளது என்பது மிகையாகாது.

மேலும் எமது பாடசாலை இன்று நூறாவது ஆண்டைக் கொண்டாடும் வேளையில் அதனை மெருகூட்டுவதற்காக ஆக்கப்பட்டுள்ள இந்நூற்றாண்டு விழா மலரில் எனது கருத்துக்களையும் வடிக்கக் கிடைத்ததையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நன்றி.

தோல்வி என்பது தேய்பிறை
வெற்றி என்பது வளர்பிறை
இரண்டையும் ஏற்றுக்கொண்டு
சந்தோஷமாய் வாழத் தெரிந்தவன்
எதற்கும் துணிந்த மனிதன்!

# நன்றிக்குரிய தேவசுலோசனா புலமைப்பரிசில் நிதியத்தினர்

எமது பாடசாலையைப் பொறுத்தவரையில் வெளியாரின் உதவிகள் எதுவும் கிடைக்கப்பெறாது இயங்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில், எமது கிராமத்தைச் சேர்ந்த திரு. தேவா சுரேஷ்குமார் அவர்கள் தமது தாயார் தேவா சுலோஜனா என்பவரின் ஞாபகார்த்தமாக எமது மாணவருக்கு கல்விச் செயற்பாட்டில் ஊக்கத்தை ஏற்படுத்தி அவர்களின் நிலையை உயர்த்த வேண்டும் என்ற பெருநோக்கில் 2002ஆம் ஆண்டு திரு. அ. அலெக்சாண்டர் அவர்கள் அதிபராக பணியாற்றிய போது "தேவ சுலோசனா ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியம்" என்பதனை ஆரம்பித்து வங்கியில் ரூபா இரண்டு இலட்சத்தை நிரந்தர வைப்பிலிட்டு அதனால் வருடாந்தம் கிடைக்கும் வட்டி வருமானத்தில் மாணவருக்கு பரிசு வழங்கும் ஒரு திட்டத்தை ஆரம்பித்து எமது பாடசாலைக்கு நிலையான பலமொன்றினை ஏற்படுத்தித் தந்தார்.



அதன்படி க.பொ.த (சா/த)ல் முதன்மை மாணவருக்கு வருடாந்தம் துவிச்சக்கரவண்டியும் அடுத்த இரு மாணவருக்கும் தரம் - 5 புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவருக்கும் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டு வருகிறது. பாடசாலை முகப்பில் புலவர் சிலை அமைக்கப்பட்டபோது உடனடியாக பீடம் அமைப்பதற்கான ரூ 10,000/- நிதியை அன்பளிப்பும் செய்தார். சுரேஷ்குமார் அவர்கள் 2007ஆம் ஆண்டு அமரத்துவம் அடைந்ததையிட்டு இவரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம். அவரது சகோதரி திருமதி. சுரேசினி சந்திரசேகரம் (கணக்காளர், பிரதேச செயலகம், மருதங்கேணி) அவர்களும், அவரது கணவர் கலாநிதி. செ. சந்திரசேகரம் (முதுநிலை விரிவுரையாளர், பொருளியல்துறை யாழ் பல்கலைக்கழகம்) அவர்களும் தொடர்ந்து அப்பணியைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர். பாடசாலைக்கான போட்டோ பிரதி இயந்திரக் கொள்வனவுக்கும் அவர்கள் ரூ 45,000/-யினை அன்பளிப்புச் செய்தனர். அத்துடன் 150,000 நூல்களை நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்ததுடன் நீரை இறைப்பு மோட்டர் ஒன்றையும் பாடசாலைக்காக வழங்கி உதவிபுரிந்துள்ளனர்.

இவர்களின் இந்நிதியமானது நிரந்தரமாக எமது பாடசாலைக்குப் பல வழிகளிலும் ஒத்தாசை புரிந்து வருகிறது. எனவே இந்நிதியத்துடன் தொடர்பான தேவசுலோசனா குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் எமது உணர்வுபூர்வமான நன்றிகளையும் பாராட்டுக்களையும் எமது பாடசாலைச்சமூகத்தினர் தெரிவித்து மனம் மகிழ்வடைகின்றனர்.

# ஆரம்பக்கல்வியில் அழகியல்கல்வி

திருமதி. கௌ. திருவரங்கன்,
ஆசிரியர் (ஆரம்பக்கல்வி),
யா/ நவாலி ம.வி.

மாணவர்களின் முறைசார்ந்த கல்வியின் அத்திவாரம் எனப்படுவது ஆரம்பக்கல்வியே ஆகும். ஆரம்பக்கல்வி மாணவர்களுக்குரிய கற்பித்தல் தொடர்பாகப் பல விமர்சனங்கள் எமது நாட்டில் உள்ளன. இருப்பினும் எமது நாட்டுக்குப் பொதுவான கலைத்திட்டம் திட்டமிட்டு அமுல்படுத்தப்படுகிறது.

எமது கல்விக் கொள்கையின்படி ஆரம்பக்கல்வி என்பது தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையுள்ள காலத்தையே குறிக்கிறது. இது முதன்மை நிலை 1, முதன்மை நிலை 2, முதன்மை நிலை 3 என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன்படி முதன்மை நிலை ஒன்றில் அழகியல் கல்வியின் பங்கு அதிகமாகவும் முதன்மை நிலை மூன்றில் அழகியல் கல்வியின் பங்கு குறைவாகவும் காணப்படுகிறது.

தரம் ஒன்றில் பிரவேசிக்கும் பிள்ளை அன்னையின் அரவணைப்பில் இருந்து விடுபட்டு ஆசிரியரின் அரவணைப்புக்கு மாறுகிறது. இது பிள்ளைக்கு சிறு மாறுதலை ஏற்படுத்தும். இதனை அடிப்படையாக வைத்தே எமது கல்விக் கொள்கையில் இப் பிள்ளைகளுக்குரிய பாடவிதானத்தில் ஆக்க செயற்பாடுகளுக்கு பிரதான இடம் வழங்கப்பட்டுள்ளது. இதில் இவர்களை அழகியலினூடாக கற்றலுக்குத் தயார்ப்படுத்துகின்ற நிலை காணப்படுகின்றது.

அழகியல் என்று கூறும்போது அபிநயம், ஆக்கம், இசை, விளையாட்டும், உடற்பயிற்சியும் என பலவற்றையும் உள்ளடக்குகின்றது. அழகியற் கலையை வழங்கும் களங்களாக ஆரம்பப் பாடசாலைகளே விளங்குகின்றன. அழிவுக்கு வழி திறக்கும் புலமைகளுக்கும் தசைகளுக்கும் நன்கு பயிற்சி அளிக்க உதவும் கலை அழகியற் கலைகளே ஆகும். மாணவர்கள் பூரண ஆளுமை உடையவர்களாகவும் சமூகத்தில் நற்பண்புள்ளவராகவும் உருவாக்குவதற்கு அழகியற் கல்வியே அடித்தளமாக அமைகின்றது என்று கூறுவது மிகவும் பொருத்தமானது.

இந்த அழகியற் கலையானது எவ்வாறு எமது பாடவிடயங்களுடன் தொடர்புபடுகின்றது என்பதை உதாரணங்களுடன் நோக்குவோமாயின், அபிநயம் எனக் குறிப்பிடும் போது அங்க அசைவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அத்தோடு இசையும் முக்கியம் பெறுகின்றது. இந்த அபிநயத்தினூடாக மாணவர்களுக்கு பாடவிடயத்தை உணர்த்தலாம், அன்பை உணர்த்தலாம், பக்தியை விதைக்கலாம், பண்பை உணர்த்தலாம், கடமைகளை உணர்த்தலாம், களிப்போடு முன்னேற வைக்கலாம், சமூக சவால்களுக்கு முகம் கொடுக்க வல்ல முழு மனிதனை உருவாக்க அபிநயப்பாடல் பெரும் அத்திவாரமாக அமைகிறது. உதாரணத்துக்கு பின்வரும் பாடல் மூலம் வீதி ஒழுங்கு விதி மாணவர்களுக்கு எடுத்துக் காட்டப்படுவதை நோக்குவோம்.

"பார்த்துப்போ தம்பி நன்றாய்ப் பார்த்துப் போ தம்பி
பாடசாலை விட்ட நேரம் பார்த்துப் போ தம்பி
வீதியால் நீ செல்லும் போது வலது பக்கம் போக வேண்டும்
வீதி கடக்க வேண்டும் எனில் அக்கம் பக்கம் பார்க்க வேண்டும்"

(பார்த்துப் போ தம்பி)

ஆக்கத்திறன் விருத்தி என்பது புதியனவற்றை ஆக்கலும் கண்டுபிடித்தலும் என பொருள்படுகிறது. பிள்ளையின் முழுமையான ஆளுமை விருத்திக்கு தேவையான சிந்தனா சக்தியும் கையாள்கை திறனும் ஒன்று சேர்த்து சிறந்த ஆக்கமொன்றை உருவாக்குவது ஆக்கத்திறனின் ஊடாகவே ஆகும். கழிவுப் பொருட்களை பயன்படுத்தி கொலாஜ் சித்திரம் அமைத்தல். கருத்து வெளிப்பாட்டு சித்திரங்களை வரைந்து சூழலிலிருந்து கிடைக்கும் நிறச்சாயங்களைப் பயன்படுத்தி நிறம் தீட்டுதல் என்பவற்றை குறிப்பிடலாம். சூழலில் இருந்து நிறச்சாயங்களை பெறச் செய்ய வேண்டியது மருதாணி இலையை அரைத்து சிவப்பு நிறச் சாயத்தையும், முருங்கை இலை, கொவ்வை இலை அரைத்து பச்சை நிறச் சாயத்தையும், மாமரப் பட்டையை நசுக்கி தண்ணீரை சேர்த்து வரும் சாற்றில் சிறிது தேசிக்காய் சாற்றைச் சேர்த்து மஞ்சள் நிறத்தையும், கரியை பொடியாக்கி நீரில் சேர்த்து கறுப்பு நிறத்தையும், சிப்பியை சுட்டு பொடியாக்கி நீர் சேர்த்து வெள்ளை நிறத்தையும் பெறலாம்.

விளையாட்டும் உடற்பயிற்சியும் மாணவருக்கு மிகவும் விருப்பத்துக்குரிய செயற்பாடுகளாகும். தினமும் உடற்பயிற்சி செய்வது உடல் ஆரோக்கியத்தைத் தரும் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இந்த வகையில் பாடசாலைகளில் கலைத்திட்டத்தில் ஆரம்பக்கல்விப் பருவ மாணவர்களுக்கு அதிக நேரம் உடற்பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதைவிட விளையாட்டுக்களின் ஊடாக பல விடயங்கள் மாணவருக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. அறிவு சார்ந்த விளையாட்டுக்களும், உதாரணம் பிராணிகளின் ஒலி, இலகுவான கட்டளை செய்திகள், அறிவுரைகளை செவிமடுத்து துலங்கல் மனவெழுச்சி வளர்ச்சிக்கான விளையாட்டுக்களும், உதாரணம் கைதட்டுதல், மணல் விளையாட்டு என்பன மாணவர்களுக்கு முன்வைக்கப்படுகின்றன.

மொத்தத்தில் கற்கிறோம் என்ற உணர்வின்றி கற்றலை மேற்கொள்ள அழகியல் துணை புரிகிறது. சாதாரண மனிதன் அழகிய பொருட்களை விரும்புகிறான், ஆளுமையுடைய மனிதன் அழகை விரும்புகிறான் என கிரேக்க தத்துவ ஞானியான பிளேட்டோ அழகியல் பற்றி எடுத்துரைத்துள்ளார்.

எதிர்கால வாரிசுகளான பாடசாலை மாணவர்கள் நல்ல மனிதத்துவமுள்ளவர்களாக மிளிர அழகியலுணர்வு உதவுகிறது. இன்றைய இயந்திரமயமான உலகில் மன ஆறுதலையும் உள விருத்தியையும் ஏற்படுத்தும் ஒரே ஊடகம் அழகியல் கலையே ஆகும்.









பிரியாவிடை நிகழ்வுகள்

# சின்னஞ்சிறிய பிஞ்சு உள்ளங்களிலிருந்து வழிந்தோடிய கனதியான துளிகள்

திருமதி. ஸ்ரீ. ஆனந்தகுமார்,
ஆசிரியர்,
உளவளத்துணையாளர்,
யா/ நவாலி ம.வி.

அன்றும் வழமை போல எனக்காக என்னுடன்
ஒத்துழைக்கும் துவிச்சக்கர வண்டியில் என் கால்கள்
மிதிக்க என்மனம் அவர்களின் மனநிலைகளைப் பற்றிய
சிந்தனையில் அலை மோத என் பயணத்தை ஆரம்பித்தேன்.
பயணத்தில் பற்பல சிந்தனைகள். சிந்தனைச் சுமைகளினால்
என் இதயம் வலிக்க தளர்வுப் பயிற்சியாக சுவாசப் பயிற்சியை
மேற்கொள்ள என் மனம் இலேசாகிச், செல்ல வேண்டிய
இடம் வந்தடைய அலுவலகத்துள் நுழைந்து அனுமதியைப்
பெற்றவுடன் என் கடமை அழைக்க அங்கு சென்றேன்.
அங்கே.......
எனக்காக ஒரு கூட்டம் தயார்நிலையில் நின்றது.
சொந்த இடங்களை விட்டு ஆறுதலுக்காக எம்முடன் இணைந்து
கொண்ட அந்தக் கூட்டத்தின் மத்தியில் நான் செல்கிறேன்.
வாடிய வதனங்களில் ஓரளவு மகிழ்ச்சி தெரிகிறது. எனினும்
வெறிச்சோடிய முகங்கள், ஏக்கம் நிறைந்த பார்வைகள் -
பலவயதுப் பிரிவுடைய மாணவர்கள் இவர்களின்
உள்ளம் நசுங்கிய கவலைகள்..... அவர்கள் கூறிய அந்த
நினைவுச் சுவடுகள்.......
நாங்கள் உயிருள்ள சிலைகள் - எங்கள் உணர்வுகள்
வரண்டுவிட்டன – நடைப்பிணமாக வருகிறோம் -
போகிறோம் - படிக்கிறோம். ஆனால் என்ன படித்தோம்......
பூச்சியம் என்பதைத் தவிர ஒன்றும் சொல்ல வசனம் இல்லை.
எங்கள் இதயம் வலிக்க அந்த வேதனையில் கண்கள்
கண்ணீரைச் சொரிகின்றன.....
நாங்கள் முன்பு இருந்த நாங்களாக மாறவே முடியாதா?
எவ்வளவு கற்பனையில் வாழ்ந்தோம்.
அழகிய வீடு –
ஆசையாக வளர்த்த பூந்தோட்டம் -
அன்புடன் வளர்ந்த செல்லப்பிராணிகள் -
அன்புப் பிணைப்புடன் வாழ்ந்த குடும்ப உறுப்பினர்கள் -

இன்று எல்லாம், எல்லாமே சிதறிச் சின்னா பின்னமாகி
கதறிக்கதறி இனிக் கதறவே இடமில்லை.
ஆனால் - நாங்கள் இன்று நடைப்பிணம் தான்.
மற்றவர்களின் கண்களில் நாங்கள் மனிதர்கள்
ஆனால் எங்கள் உள்ளங்கள் நொருங்கிய துகள்களே
இறைவன் எம் முன்னே வந்தாலும் கூட அந்த அன்புள்ளம்
கொண்டவர்களாக மாற்றமுடியாது? ஏன்? ஏன்?
இவ்வளவு கொடுமை. எங்களால் விடை காண முடியாது.
ஆம். விடை காணமுடியாத வினாக்களும் உள்ளன என்பது
எமக்குத் தெளிவாக விளங்குகிறது.
எத்தனை ஆசைகள், எத்தனை மனக்கோட்டைகள்
அன்று விளையாட்டில் பெற்ற பரிசுகள் எங்கே?
இன்று விளையாடவே விருப்பமில்லாத மனமும் உடலும்
அன்று பேச்சுப் போட்டியில் முதலாமிடம்
இன்று பேசவே முடியாத வாய் -
அன்றைய நிலை வந்து சேருமா? வரவே வராது.
இங்கு - சில உள்ளங்கள் எங்களுக்காக இரங்குகின்றன
சில உள்ளங்கள் எங்களை விளங்கிக்கொள்ள முடியாமல் உள்ளன.
சில உள்ளங்கள் எங்களை ஏளனம் செய்கின்றன.
ஏன் இந்த வேறுபாடு — எங்கள் குமுறல்களைச் சிறிது நேரமாவது கேட்க மாட்டீர்களா?

## துளி 1

அன்று நான் எங்கள் குடும்பத்தவருடன் பாதுகாப்புக்காக பங்கரில் இருந்த வேளை, பங்கர் பற்றாக்குறை காரணமாக எங்கள் குடும்ப உறுப்பினர்கள் பகிரப்பட்டு அருகே இருந்த பங்கரினுள் விடப்பட்டனர். நான், அம்மா, தங்கை ஒரு பங்கரில் இருந்தோம். அப்பா, அண்ணா, தம்பி மற்றைய பங்கரில் இருந்தனர். அனைவரும் பாதுகாப்பாக உள்ளோம் என்ற நம்பிக்கையில் இருந்த வேளை எங்கோ இருந்து வந்த ஷெல் அப்பா, அண்ணா, தம்பி இருந்த பங்கரின் மேல் விழுந்தது. எல்லோரும் சிதறிய நிலையில் இருந்தனர். எங்கள் இதயம் வலித்தது. அதிர்ச்சி நிலையில் வாய் பேசமுடியாத அம்மா, அப்பாவில் கால் துண்டாக என் அருகே, அன்புத் தம்பியின் சிதறிய முகம் என் அருகே, எங்களால் தாங்க முடியாமல் கதறினோம். எங்கள் பங்கரிலும் ஷெல் விழுந்திருக்கலாமே என்று கதறினோம். வெந்து நொந்தோம். அவர்களை அப்படியே விட்டுவிட்டுச் செல்ல வேண்டிய கட்டாய சூழலினால் நகர்ந்து வந்தோம்.

ஆசையாக அன்புடன் அரவணைத்த அப்பா —
அன்புடன் எம் மடிமீது தவளும் தம்பி —
அன்புடன் எங்கள் மேல் பாசம் வைத்த அண்ணா —

எங்கே இவர்களைக் காண்போம்? ஏன் நாம் மட்டும்
இப்படி? ஏன் எமக்கு இந்தக் கதி –
உள்ளம் கசங்குகிறது – நொருங்குகிறது.

## துளி – 2

அன்பாகக் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தோம். எங்கோ இருந்து வந்தவர்களால் பிரிக்கப்பட்டோம். குழந்தையாக, முதியவர்களாக இருந்தால் ஒரு கஸ்டமும் வந்திருக்காது. அண்ணா, அக்கா, சித்தப்பா, சின்னண்ணா, பெரியண்ணா – ஆ – எல்லோரும் எம்மைவிட்டுப் பிரிக்கப்பட்டனர். ஏன் இந்த அவலம்? எங்கிருந்தாலும் அவர்கள் உயிருடன் இருப்பார்கள். நாம் எப்போதாவது சந்திக்கலாம் என்று நினைத்திருந்தோமே. ஆனால் ஒரு பொழுதினுள்ளே யே அவர்கள் இறந்து விட்டார்கள் என்ற செய்தி எங்கள் இதயத்துள் விழுந்தது.

அன்றிலிருந்து இன்றுவரை – நான் நானாக இல்லை
நடமாடும் நடைப்பிணமாக
எல்லோர் பார்வையிலும் நான் அழகான மாணவனாக உள்ளே
எனக்குள்ளே நான் இறந்து கொண்டிருக்கிறேனே.......

## துளி – 3

நாங்கள் 5 பேர் அம்மா அப்பாவுடன் ஏழு பேராக எவ்வளவு சந்தோஷமாக வாழ்ந்தோம். எல்லோரும் எங்கள் ஒற்றுமையைக் கண்டு பூரிப்படைந்தார்கள். எங்கள் ஐந்துபேரையும் அம்மாவும் அப்பாவும் தமது அரிய செல்வங்கள் என்று கூறுவர். நாங்களும் படிப்பில் மட்டுமல்ல பலதுறைகளிலும் மேலோங்கியிருந்தோம். எல்லோராலும் அழகானவர்கள் என வர்ணிக்கப்பட்ட நாங்கள் இன்று அங்கவீனர் வரிசையில் ஒதுக்கப்பட்டுள்ளோம். கால் இல்லாத நிலை, கை இல்லாத நிலை என அவதி நிலையில் உள்ளோம். ஏன் இந்த நிலை?

இந்தச் சின்னஞ்சிறிய நொந்த உள்ளங்கள் போல் எம் மத்தியில் எத்தனையோ நொந்த உள்ளங்கள் உள்ளனரே! அவர்களுக்கு எப்படி ஆறுதல் சொல்வது?
துன்பத்தில் துடிப்பவரை எப்படிக் கைதூக்கிவிடப் போகிறோம்?
எனினும்!
ஆறுதல் சொல்வோம்!
ஆற்றுப் படுத்துவோம்!
தேறுதல் செய்வோம்!
தேற்றி அணைப்போம்!
நிலையில் உயர்ந்துவர – உங்கள்
நினைவை எமதாக்குவோம்!

# Conscience

*Mr. S. Jeyananthan,*
*Teacher,*
*J/ Navaly M. V.*

*Conscience is an innate faculty, a moral sense different from man's other powers, but supreme authority over them. It is the voice of God in controlling man's moral ideas. Therefore he is unable to do anything better than obeying his conscience. His conscience is the absolute judge of right and wrong good and evil. A little reflection shows the change in this view. To the conscience of the civilized man the "sense" is revolting and repulsive. We should have within our mind a firm rule of conduct. The sad fact is that we are not thus gifted. Even in questions of minor importance the variations of the moral dictates are dismally placed. Conscience is a social and racial product of human nature. Conscience does not merit blind obedience but demands assiduous cultivation and judicious training. Inspire of the current tendency to depreciate knowledge. It must be admitted that it is an essential factor in true morality. The man who does a good action without knowing what he does, can not be said to be acting morally. Moral action implies choice of responsibility otherwise it is simply meaningless. Intellect is an essential part of the morality of the whole self, not a part of it.*

*Our conscience helps us to adjust ourselves to the situation. We learn to help others and forget the bad memories. If we act according to our conscience we can be the good citizens in the country. Our behavior should be always acceptable. We should not hurt the feelings of others. Every one in this world likes to lead a happy life. Happiness is related to the concept of our mind. It is associated with our walk talk and act. Truly a man's first duty then is not to obey his conscience but to educate it to lead a happy and contented life.*

# நூலகத்தின் வகிபங்கு

திருமதி. லோ. பார்த்தீபன்,
ஆசிரிய நூலகர்,
யா/ நவாலி ம.வி.

ஒவ்வொரு மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் உறுதுணையாக அமைவது அறிவும் ஆராய்ச்சியுமே ஆகும். இவற்றுக்குச் சிறந்த கருவூலமாகத் திகழ்வது நூலகமாகும். படித்தோர் முதல் பாமரர் வரை தமது பண்பாட்டையும், நாகரீக மேம்பாட்டையும், அறிவு வளர்ச்சியையும் ஒருமுகப்படுத்தி சமுதாயத்திலே சிறந்தோராகவும், உயர்ந்தோராகவும், பகுத்தறிவுடன் வாழ வழிகோலுவது நூலகமாகும்.

மனித இனம் தோன்றிய காலம் முதல் தன்னைச் சுற்றியுள்ளவற்றின் மீதான அவதானிப்புக்களும், அவற்றின் மீதான பரிசோதனைகளும் மேற்கொண்டதன் விளைவாக அவனது மூளையினது ஆற்றலும் தான் பெற்ற அறிவினை ஏனையவரும் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தான் வாழ்ந்த காலப்பகுதியில் கிடைத்த எழுதுபொருட்களில் பதிந்து வைக்கின்ற பழக்கங்களினால் ஏற்பட்ட பலவகையான சிந்தனை பதிவேடுகளை அனைவரும் பயன்படுத்துகின்ற வகையில் சேகரித்து ஒழுங்குபடுத்தி பாதுகாத்து பயன்படுத்தும் பணியில் காலத்துக்குக் காலம் பல தகவல் நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. இவ்வாறு வளர்ச்சியடைந்து கொண்டுவந்த மனித சமுதாயமும், புதிய கண்டுபிடிப்புக்களும் தொடர்ந்தமையால் இன்று தகவலானது பல்கிப் பெருகியதுடன் தகவலைத் தேடும் வாசகர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

இன்றைய வளர்ச்சியடைந்து வருகின்ற தகவல் யுகத்தில் தகவல் தேவை என்பது இன்றியமையாத ஒன்றாக காணப்படுவதுடன் தகவல் சேவையினை வழங்கும் நிறுவனங்களாக நூலகங்கள் காணப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் நூல் நிலையங்கள் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை விட இன்று பன்மடங்கு முக்கியத்துவமுடையனவாகக் காணப்படுகின்றன. ஏனெனில் பல நூற்றுக்கணக்கான துறைகளில் ஆயிரம், ஆயிரம் நூல்களும், சஞ்சிகைகளும் ஆய்வு நிறுவனங்களாலும் பிரசுர நிலையங்களினாலும் வெளியிடப்படுகின்றன. அதாவது அச்சுக்கலையின் அறிமுகத்தினைத் தொடர்ந்து இன்று உலகளாவிய ரீதியில் ஒரு நிமிடத்திற்கு 3000 பக்கங்கள் அச்சிடப்படுகின்றன. உலக மக்கள் தொகைப்பெருக்கத்தை விட நூல் வெளியீடு மும்மடங்காக உள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் நூலகமானது முக்கியமானதொன்றாகும்.

நூலகம் என்பது "நூல்களைச் சேகரித்து வைக்கும் இடம் என்பதுடன் வாசிப்பதற்கும் உசாத்துணைக் கருத்துக்களைப் படிப்பதற்கும், அண்மைக்காலத் தகவல்களை உடனே பெறுவதற்குமான அறிவு சாதனங்களை ஒழுங்குபடுத்தியதுடன் தேவைக்கேற்ப ஏனையவர்களுக்கும் வழங்கி உதவினர்.

நவீன ரீதியாக சேகரிக்கப்பட்டவற்றை ஒழுங்குபடுத்திப் பயன்படுத்த "நூலகர்" அவசியமானார். நூலகர் பதவியை முதன்முதலில் வகித்தவர் "அனிஸ்" (அனு) எனும் பபிலோனியர் ஆவார். இவ்வாறு ஆரம்பத்திலிருந்து பல்வேறுபட்ட சாதனங்களில் வெளிவந்தவற்றைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் நூலகம் உதயமாயிற்று.

பண்டுதொட்டு மனிதன் அறிவினைத் தேடும் செயற்பாடானது நூலகப் பயன்பாட்டிற்கு வழியமைத்ததுடன் நவீன காலத்தில் நூல்நிலைய நிர்வாகம், நூல் சேகரிப்பு தொடர்பான கொள்கைள் அறிவு என்பன அவசியமான ஒன்றாக மாறிவிட்டது. தகவல் சேகரிப்பு அவற்றை ஒழுங்கமைத்தல் பேணிப் பாதுகாத்தல், தகவலைத் தேடும் சமுகத்தினரிடையே வழங்குதல் எனும் நூலகப் பணிகள் நூற்பெருக்கம் காரணமாக ஏராளமான நூலகவியல் தகுதியுடையோரின் தேவைகளை அதிகரித்துள்ளதுடன் பெரிய நூலகங்களில் போதியளவு இடம், நிதி, பயிற்சி பெற்ற மனிதவளம் என்பன முக்கிய பிரச்சினையாக மாறிவருவதுடன் தகவல் தொகுதியை முகாமை செய்ய மரபுரீதியான முறைகள் அதிகம் பயன் தராது போவதுடன் நவீன சமுகத்தின் அறிவு மற்றும் தகவல் தேவையை நிறைவு செய்ய தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய தகவல் அறிவியலின் துணையினை நூலகங்கள் வேண்டி நிற்கின்றன. இன்று நூலகங்கள் தமது சேவையை இலகுவாகவும், விரைவாகவும் மேற்கொள்வதற்காக கணனி மயப்படுத்தப்பட்ட சேவையினை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன.

உலக மின்னூலகம் என்பது யுனெஸ்கோ மற்றும் அமெரிக்க காங்கிரசு நூலகம் ஆகியவற்றால் நடத்தப்படும் ஒரு பன்னாட்டு மின்னூலகம் ஆகும். அனைத்துலக மற்றும் பல்வேறு கலாசாரப் புரிதல்களை ஊக்குவித்தல் இணையதத்தில் கிடைக்கும். கலாசார உள்ளடக்கங்களை அளவிலும் வகையிலும் அதிகமாக்குதல். கல்வியாளர்கள், ஆய்வாளர்கள்,பொதுமக்கள் ஆகியோருக்கு அறிவு சார் வளங்களை அளித்தல், பங்குதாரராக உள்ள நிறுவனங்களில் அறிவு சார் வளங்களை அதிகரித்தல். அதன் மூலம் ஒரு நாட்டிற்குள்ளும், நாடுகளுக்கு இடையேயும் உள்ள எண்ம இடைவெளியைக் *(Digital divide)* குறைத்தல் ஆகியவற்றை தனது நோக்கமாகக் கொண்டு மின்னூலகம் காணப்படுகின்றது.

இணையத்தில் உள்ள ஆங்கிலம் அல்லாத மேற்குலகைச் சாராத உள்ளடக்கங்களை வளப்படுத்தி அதை அறிஞர்களின் ஆய்வுக்கு அளிப்பதைக்

குறிக்கோளாகக் கொண்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள கலாசாரங்களின் முதன்மை தகவல் ஆதாரங்களான வரைபடங்கள், அரிய நூல்கள் இசைக் கோர்வைகள், திரைப்படங்கள், அச்சு வடிவங்கள், ஒளிப்படங்கள், கட்டட வடிவியல் வரைபடங்கள், ஆவணங்கள் உள்ளிட்டவற்றை இலவசமாக இணையத்தில் கிடைக்கச் செய்வதில் முனைப்புடன் செயல்படுகிறது. உலக மின்னூலகம் தொடங்கப்பட்ட போது அரபி, சீனம், ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன், ஸ்பானியம் ஆகிய மொழிகளில் கிடைத்த 1170 உருப்படிகளைக் கொண்டிருந்தது. உலக மின்னூலகமானது நிறுவனங்கள், நூலகங்கள், அருங்காட்சியகங்கள் போன்றவற்றில் சேகரித்து வைத்துள்ள அரிய உள்ளடக்கங்களை எளிதில் அணுகி இலவசமாகப் பெறக்கூடிய வகையில் புதிய வடிவில் திரும்ப இந்த உலகிற்கு அளிக்கத் தகுந்த அமைப்பாகச் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உலக மின்னூலகமானது ஏப்ரல் மாதம் 21ம் திகதி 2009ம் ஆண்டு பிரான்சு நாட்டுத் தலைநகரான பாரிசில் உள்ள யுனெஸ்கோ தலைமையகத்தில் தொடங்கப்பட்டது.

இவ் அமைப்பானது தொடங்கப்பட்டபோது பல்வேறு காட்சிப்படுத்தல்கள் சேர்க்கப்பட்டன. அவற்றுள் சில செஞ்சியின் கதை, 11ம் நூற்றாண்டு சப்பானிய கதை குழந்தை யேசுவின் முதல் அசுடெக் (Aztec) குறிப்புக்கள் எனப்பலவாகும். இன்று இந்தியாவிலுள்ள சென்னை நூலகமும் தன்னிடமுள்ள நூல்களினை வாசகர் பெற்றுப் பயன்பெறும் வகையில் இணைய இணைப்பில் வழங்கியுள்ளது.

கலாசார, பண்பாட்டு படிவங்களைக் காப்பதற்கு உலகில் பெரும்பாலான சமூகங்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றன. அந்த படிவங்கள் நினைவில் இல்லாவிட்டால் எந்தவொரு நாகரிகமும் தனது வெற்றி தோல்விகளில் இருந்து கற்றுக்கொள்ள முடியாது என்பது பொதுவான கருத்தாகும்.

இன்று உலகமானது மிகவும் சுருங்கி விட்ட நிலையில் இணைய இணைப்பினைப் பயன்படுத்தி தேவையான நேரத்தில் உடனே தனக்குத் தேவையான தகவல்களைப் பெற்று பயன்பெறக்கூடிய வகையில் தொழினுட்ப மாற்றமானது பெரிதும் பங்காற்றுகின்றது என்றால் மிகையாகாது.

எத்தனை நாள் வாழ்ந்தாலும் நீங்கள் அத்தனை நாளும் ஏதாவது கற்றுக் கொண்டிருங்கள்

– இராமகிருஷ்ணர் –

காலமென்னும் ஆழ்கடலில் பயணம் செய்யும் நமக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்பவை நல்ல நூல்களே.

– வீப்பல் –

# Candle Light

**Mrs. N. Thanaranjan,**
Teacher,
J/ Navaly M. V

*Teacher is a creation of God*
*To lead nation in a better path*
*She wipes out the tears of students*
*And guides to increase knowledge and attitude*
*She identifies the talents of students*
*And moulds their character excellent*
*She treats all her students equal*
*And plays a role of a mother too!*

*Teacher, not only teaches lessons*
*but also uplifts the society*
*She cares more for students*
*than her personal wishes*
*She endure, sorrows and pains*
*to show a better way to students*
*Therefore, she is a candle light*
*of our great nation!*

*Touch the Earth, Love the earth, Honour the earth, her plains, her vallyes, her hills and her seas, rest your spirit in her solifary places.*

*- Henry Beston -*

*It is sufficient just to give love. All you need to do is continue giving love earnestly, seeking nothing and expecting nothing. You never have the right to force another to accept your love.*

*- Masami Saionji -*



2002 உடற்பயிற்சிப் போட்டி கோட்டமட்டம் 1ம் இடம்




2011 ஆங்கில தினப்போட்டி நாடகம் – வலயம் 2ம் இடம்



2001 தமிழ்த்தின நாடகப்போட்டி – வலயம் 2ம் இடம்



2008 உடற்பயிற்சிப் போட்டி – மாவட்டம் 5ம் இடம்

# விசேட தேவையுடையோரும் சமுதாயத்தின் அங்கத்தினரே

திருமதி.வி.கோகுலானந்தன்,
ஆசிரியை (ஆரம்பப்பிரிவு),
யா/ நவாலி ம.வி.

"அரிது அரிது மானிடராதல் அரிது
அதனிலும் அரிது கூன்குருடு செவிடு
நீங்கிப் பிறத்த லரிது"

ஔவையாரின் இக்கூற்று, மானிடத்தின் அருமையை, ஊனமற்ற பிறப்பின் சிறப்பை எடுத்தியம்பும் பகுதி. எனினும் கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறவாதோரும் உள்ளனர். சில இயற்கைக் காரணிகளாலும், சிலவகை நோய்களாலும், பலவகை விபத்துக்களாலும் கூனராய், குருடராய், செவிடராய், ஊமையராய், முடவராய், அங்கவீனராய், மன நோயாளராய் மக்கள் பல்லாயிரவர் உலகெங்கும் அல்லலுற்று வாழ்கின்றனர். அவர்கள் சாதாரண மனிதர்களிலும் பார்க்க ஏதோ ஒருவகையில் விசேட தேவையுடையோராவார். ஆனால் மற்றைய மனிதர்களைப் போலவே பசியும் தாகமும் உடையவர்கள். மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டும் என்னும் வேட்கை உடையவர்கள். எல்லாவற்றிலும் மேலாக மனமும் மனத்தின் கண்ணே தோன்றும் ஆயிரம் ஆயிரம் உணர்வுகளும் உடையவர்கள். அவர்கள் சமுதாயத்தின் அங்கமாகப் பலவகை இன்னல்களுக்கு உட்பட்டு வாழ்கின்றார்கள்.

எமது நாட்டிலும் இத்தகைய விசேட தேவை உடைய மக்கள் பலர் கூடும் பொது இடங்களில் பிச்சையேற்று வாழ்கின்றனர். அவர்களைக் காணும் போது சீச்சீ! என்று அருவருக்கின்றனர் சிலர். போ போ! என விரட்டி அடிக்கின்றனர் சிலர். இழிந்த பொருளாக ஒதுக்குகின்றனர் சிலர். பொதுவாக நோக்கும் போது சமுதாயம் விசேட தேவையுடையோரை மனிதர்களாகவே மதிப்பதில்லை. இவ்வாறு அவமதிக்கப்படும் போது அவர்கள் மனம் எவ்வாறு பாதிப்புறும் என்பதை எண்ணுவதில்லை. மனிதாபிமானம் மடிந்துவிட்ட இந்நிலை நம் நாட்டில் மாத்திரமன்றி இப்பண்பு ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்றது.

இறைவன் படைப்பு விசித்திரமானது. வலுவிழந்தோருக்கு இறைவன் வேறு சில ஆற்றல்களை கூர்மையாக்கியுள்ளான். குருடர்களுக்குக் கேள்விப்புலனும் ஞாபகசக்தியும் கூர்மை பெற்று விளங்குவது கண்கூடு. இவர்களுக்கு விசேடமான கல்வி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. "பிறைற்" புள்ளியிட்ட தொடுகை ஊடாக எழுத்துக்களை கற்கின்றனர். இவர்களின் கைகளிலே வெள்ளைப் பிரப்பு ஒன்று இருக்கும். அதனூடாக அவர்களை நாம் இனங்கண்டு பாதையைக் கடக்கவோ, வாகனத்தில் ஏறவோ உதவி செய்ய வேண்டும். மருத்துவத்துறையின் வளர்ச்சியினால் குருடர்கள் விழிபெற்றுப் பார்க்கும் சக்தியைப் பெறும் நிலை உருவாகியுள்ளது.

இறந்தவர்களின் கண்களைப் பெயர்த்துப் பாதுகாத்துக் குருடர்களுக்குப் பொருத்திப் பார்வையளிக்க முடியும். நெருப்பில் எரிந்தும் மண்ணில் உக்கியும், அழியும் கண்களை விழியற்றோர் பார்வை பெறும்படியாக அளித்தலும் ஒருவகைத் தானமே. இன்றுள்ள நிலையிலே தானங்களுட் சிறந்தது கண்தானம். இதனூடாக எத்தனையோ குருடர்களுக்கு வாழ்வளிக்கலாமல்லவா?

காது கேளாதவர் செவிடர். இவர்கள் பேச்சும் குறைவாகவே பேசுவர். இவர்களுக்கு காதிலே மாட்டக்கூடிய இயந்திரத்தினூடாக கேட்டற் குறைபாட்டை நிவர்த்தி செய்யக்கூடியதாக உள்ளனர். வாய்பேச முடியாத ஊமையர். இவர்கள் சைகை மொழியின் ஊடாக தமது எண்ணக் கருத்துக்களை வெளியிடுகின்றனர். மூளைக் குறைபாடுடையோர் மெல்லக் கற்போர் போன்றோரும் உள்ளனர். விசேட கல்வி அலகின் ஊடாக இவர்களுக்கு பாடசாலைகளிலும் அவர்களுக்குரிய கற்பித்தல் அலகு திட்டமிடப்பட்டு ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது. அதற்கு கல்வி வலயத்திலும் பொறுப்பான அதிகாரிகளை வைத்து அவர்களூடாக பாடசாலைகள் மேற்பார்வை செய்யப்படுகின்றது.

அடுத்து அங்கவீனர்கள். இவர்கள் தமது உடல் உறுப்புக்களில் ஒன்றை இழந்தோ அல்லது இயக்க முடியாமலோ உள்ளனர். இதற்கு கை காலை இழந்தவருக்கு அவ்வுறுப்பை "ஜெய்ப்பூர்" என்னும் நிறுவனம் செய்து கொடுத்து இயங்க பயிற்சியும் வழங்குகின்றது. இதற்கு அவர்களிடம் இருந்து பணமும் பெற்றுக் கொள்கின்றது. பணம் செலுத்த முடியாதவர்களுக்கு தொண்டு நிறுவனங்கள் ஊடாக உதவியும் கிடைக்கும். இவ்வகையிலே விசேட தேவை உடையவர்கள் அடங்குகின்றனர்.

தமிழகத்திலே குருடரும் முடவரும் என்ற இரட்டைப் புலவர்கள் தமிழகத்திலே கவிமழை பொழிந்த கதை வெகு பிரசித்தமாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். வலுவிழந்தோரில் சிலர் சட்டத்தரணிகளாய் விளங்குகின்றனர். சிலர் பட்டதாரிகளாய் இருக்கின்றனர், சிலர் இசை மேதைகளாய், கவிஞர்களாய் மிளிர்கின்றனர். ஆக அவர்கள் எல்லோரும் ஆற்றல் அற்றவர்கள் எனக்கூறுவது பொருத்தமானதல்லவே. அவர்கள் ஒவ்வொருவரிடமும் கூர்மை பெற்ற ஒவ்வொரு ஆற்றல் மண்ணுள் மறைந்துள்ள மணிபோல அழிந்திருக்கின்றது. அந்த ஆற்றல் என்னும் மணியை வெளிக்கொணர்ந்து பட்டை தீட்டிவிட்டால் அது பிரகாசிக்கும். அவ்வாறு செய்வதே எமது சமுதாயத்தின் தலையாய கடமையும் பணியுமாகும்.

இப்பணியிற் பொதுமக்களும், தொண்டர் ஸ்தாபனங்களும், அரசும் ஆர்வம் காட்டுதல் அவசியமாகும். அந்த ஆர்வமும் அதன் வழியான செயற்பாடுமே வலுவிழந்தோருக்கு ஒளிமயமான எதிர்காலத்தை காட்டவல்லன. இவ்வாறே ஆடம்பரமாக வாரி இறைக்கும் பணத்தின் ஒரு பகுதியையேனும் வலுவிழந்தோருக்கும் புனர்வாழ்வு நிலையங்களுக்கும் வழங்கி உதவலாமல்லவா? அவர்கள் செய்து விற்பனை

செய்யும் பொருட்களை வாங்கி அவர்கள் வாழ்வு வளம்பெற யாவரும் முன்வரவேண்டும்.

இன்று சில தொண்டர் ஸ்தாபனங்களாலும் பொது ஸ்தாபனங்களாலும் நடத்தப்படும் அறநிலையங்கள் விசேட தேவையுடையோரைப் பேணிக்காத்து அவரவர் இயல்புக்கேற்றபடி பயிற்சியளித்து வருகின்றன. இன்றைய போர்ச்சூழல் காரணமாக அங்கவீனம் ஆக்கப்பட்டோர் எத்தனைபேர்? மனநோயாளியாக ஊசலாடிக் கொண்டிருப்போர் எத்தனை ஆயிரம் பேர்கள்? அவர்களுக்கு ஆறுதல் அளித்து வாழ்வளிக்க யார் உள்ளனர்?

யாழ் மண்ணில் கைதடியில் இயங்கும் "நவீல்ட்", மருதனார்மடத்தில் இயங்கும் "வாழ்வகம்" அமரர் துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இன்று செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகனால் நடாத்தப்பட்டு வரும் வலுவிழந்தோருக்கான கோண்டாவிலில் அமைந்திருக்கும் "சிவபூமி", உடுவில் அருட்சகோதரிகளால் பராமரிக்கப்படும் "ஆக்", மற்றும் புத்தூர் நவக்கிரியில் இயங்கும் வலுவிழந்தோர் காப்பகம் என்பன இவற்றுள் சிலவாகும்.

இவ் வாழ்வளிக்கும் நிலையங்கள் செவ்வனே இயங்குவதற்கு நிதிமிகுந்தவர் பொற்குவியல்களையளித்தல் வேண்டும். அரசு அவரவர் ஆற்றல்களுக்கு ஏற்ப வேலை வாய்ப்பை வழங்க வேண்டும். இவ்வாறு துர்ப்பாக்கியசாலிகள் எனக் கருதப்படும் வலுவிழந்தோருக்குப் பொதுமக்களும் அறநிலையங்களும் அரசும் ஆதரவு காட்டுமானால் அவர்கள் சாதாரண மக்களைப் போன்று தன்மானத்தோடு தலைநிமிர்ந்து நிற்பர் என்பதில் ஐயமில்லை.

## குழந்தைகள் வாழ்க்கையில் நம்பிக்கை கொள்வதற்கான வழிகள்

1. குழந்தைகள் எப்படிச் செயல்பட வேண்டும் என பெற்றோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அவ்வாறு நீங்கள் நடந்து கொள்ளுங்கள்.
2. குழந்தைகளின் நிறைகளைப் பாராட்டுங்கள்.
3. குழந்தைகளுடன் வன்முறைகளைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
4. அன்பை வெளிக்காட்டுங்கள்.
5. குழந்தைகளுடன் விளையாடுங்கள்.
6. குழந்தைகளை மன்னியுங்கள்.
7. குழந்தைகளின் துணிச்சலைப் பாராட்டுங்கள்.
8. குழந்தைகளைப் பண்பாளராக விளங்கச் செய்யுங்கள்.

# தேடல்

திருமதி. அ.ஆ.பிலிப் லியோனாட்,
ஆசிரியை,
யா/ நவாலி ம.வி.

இதயமதில் என்றும் இன்பத்திற்காய் ஒரு தேடல்
கண்களதில் என்றும் கண்ணியத்திற்காய் ஒரு தேடல்
கைகளதில் என்றும் ஒற்றுமைக்காய் ஒரு தேடல்
கால்களதில் என்றும் தடங்களிற்காய் ஒரு தேடல்

நாவு அதில் என்றும் சுவைக்காய் ஒரு தேடல்
உதடுகளில் என்றும் உண்மைக்காய் ஒரு தேடல்
இமைகளதில் என்றும் உணர்வுக்காய் ஒரு தேடல்
செவிகளதில் என்றும் செந்தமிழிற்காய் ஒரு தேடல்

குருதியெங்கும் என்றும் உயிர்மூச்சிற்காய் ஒரு தேடல்
சுவாசமெங்கும் என்றும் தூய்மைக்காய் ஒரு தேடல்
நாடியெங்கும் என்றும் துடிப்பிற்காய் ஒரு தேடல்
முகத்திலெங்கும் என்றும் மலர்ச்சிக்காய் ஒரு தேடல்

குழந்தையதன் நெஞ்சத்தில் பாசத்திற்காய் ஒரு தேடல்
சிறியவரின் நெஞ்சத்தில் அரவணைப்பிற்காய் ஒரு தேடல்
இளையவரின் நெஞ்சத்தில் சுதந்திரத்திற்காய் ஒரு தேடல்
பெரியவரின் நெஞ்சத்தில் வாழ்விற்காய் ஒரு தேடல்

முதியவரின் நெஞ்சத்தில் அன்பிற்காய் ஒரு தேடல்
வறியவரின் நெஞ்சத்தில் உதவிக்காய் ஒரு தேடல்
பணமுள்ளோரின் நெஞ்சத்தில் பணத்துக்காய் ஒரு தேடல்
குணமுள்ளோரின் நெஞ்சத்தில் நற்குணத்துக்காய் ஒரு தேடல்

வீரனவன் உள்ளத்தில் வெற்றிக்காய் ஒரு தேடல்
சிற்பியவன் உள்ளத்தில் கைவண்ணத்திற்காய் ஒரு தேடல்
கவிஞனவன் உள்ளத்தில் கவிதைக்காய் ஒரு தேடல்
ஓவியனின் உள்ளத்தில் அழகிற்காய் ஒரு தேடல்

சோதனைகள் வருகையிலே சாதனைக்காய் ஒரு தேடல்
போதனைகள் கேட்கையிலே செய்கைக்காய் ஒரு தேடல்
பேதங்கள் வருகையிலே ஐக்கியத்திற்காய் ஒரு தேடல்
பாவங்கள் சூழ்கையிலே கழுவாய்க்காய் ஒரு தேடல்

உடைந்த உள்ளத்தில் உறுதிக்காய் ஒரு தேடல்
சிதைந்த சிந்தனையில் புத்துயிர்க்காய் ஒரு தேடல்
வாழ்க்கை என்னும் ஓடத்தில் கரைசேர்வதற்காய் ஒரு தேடல்
வாழ்க்கையதை அர்த்தமாக்கி உயர்த்தவேண்டும் உன் தேடல்.

# இடைநிலைக்கல்வியில் கேத்திர கணிதம்

திரு. ச. சதானந்தன்,
பழைய மாணவன்.
(ஆசிரியர்,
யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்.)

ஒரு நாட்டின் கல்வி முறையானது சமூக, பொருளாதார, அரசியல் மாற்றல்களுக்கு ஏற்ப காலத்திற்கு காலம் மாற்றங்களைக் கண்டு வருகிறது. அந்த வகையில் எமது நாட்டின் கல்வி முறையும் விதி விலக்கானது அல்ல. எமது நாட்டின் கல்வி முறையில் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டாலும் கலைத்திட்ட உள்ளடக்கத்தில் கணித பாடத்திற்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் நிலைபேறாக உயர்நிலையிலேயே உள்ளது. அந்த வகையில் இடைநிலைக்கலைத்திட்டத்தில் மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் வலுவான துறையாக கணிதபாடம் உள்ளமை கண்கூடு.

இன்றைய இடைநிலை கலைத்திட்ட ஒழுங்கமைப்பில் கணித பாடப்பரப்பு எண்கணிதம், அட்சர கணிதம், கேத்திர கணிதம், அளவீடு, தொடையும் நிகழ்தகவும், புள்ளிவிபரவியல் எனும் ஆறு தொனிப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு தரம் 6 முதல் தரம் 11 வரை விரிவடைந்து செல்கின்றது. இவற்றில் கேத்திரகணிதப் பகுதிகள் மாணவர்கள் மத்தியில் பெரும்பாலும் விருப்பமற்ற தெரிவுக்குரிய விடயமாகி வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. இது மாணவர்களின் கணிதபாட சித்தி வீதம் குறைவதற்கு ஒரு காரணமாக உள்ளதுடன் உயர்தர கல்வியை பெறும். மாணவர் தொகையிலும், கணித – விஞ்ஞான துறைகளை உயர்தரத்தில் தெரிவு செய்யும் மாணவர் தொகையிலும் பெரும் வீழ்ச்சி நிலையை ஏற்படுத்தி உள்ளது.

புதிய கல்வி மறுசீரமைப்பிற்கு ஏற்ப நடைபெற்ற இரு க.பொ.த (சா/த) தேசிய பரீட்சை கணிதபாட வினாத்தாள்களை நோக்குகையில் கேத்திரகணித பகுதிகளுக்காக வழங்கப்பட்ட புள்ளிகள் பின்வருமாறு

| | பகுதி I A | பகுதி II B |
|---|---|---|
| 2008 | 14 புள்ளி | 30 புள்ளி (3 வினாக்கள்) |
| 2009 | 13 புள்ளி | 30 புள்ளி (3 வினாக்கள்) |

மேற்படி புள்ளிகள் தொடர்பாக நோக்குகையில் பகுதி I A மாணவர்களினால் முழுமையாக விடையளிக்கப்பட வேண்டியதாகும். பகுதி II B இல் உள் ளஆறுவினாக்களில் ஐந்தை தெரிவு செய்து விடையளிக்க வேண்டும். எனவே கட்டாயம் இரு கேத்திரகணித பகுதி வினாக்களை மாணவர்கள் தெரிவு செய்ய வேண்டும் என்பது மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

இடைநிலைக் கலைத்திட்டத்தில் கேத்திரகணித விடயங்களை இரு கட்டங்களாக நோக்கலாம்.

1. தரம் 6 தொடக்கம் தரம் 8 வரையான வகுப்புகளில் கேத்திரகணித பகுதிகள்

| தரம் - 6 | தரம் - 7 | தரம் - 8 |
|---|---|---|
| 1. வட்டம் (வட்டமான பொருட்கள் வட்டமான பொருட்கள் மூலம் கோலம் அமைத்தல்<br>2. கோண வகைகள்<br>3. நேர்கோட்டு தள உருக்கள் (சதுரம், செவ்வகம், இணைகரம், சரிவகம்)<br>4. திண்மங்கள் (சதுரமுகி, கனவுரு, ஒழுங்கான நான்முகி) | 1. கோண அறிமுகம் (அமைத்தல், பெயரிடல், அளத்தல்)<br>2. சமாந்தரக் கோடுகள் (வரைதல், வாய்ப்பு பார்த்தல்)<br>3. திண்மங்கள் (சதுரஅடி கூம்பகம், முக்கோண அரியம், ஒயிலர் விதி)<br>4. நேர்கோட்டு தள உரு (முக்கோணி வகை, பல்கோணி வகை)<br>5. சமச்சீர் (சமச்சீர் அச்சுகள்)<br>6. தெசலாக்கம் (தூய தெசலாக்கம்)<br>7. வட்டம் (வட்டத்தின் பகுதிகள் கவராயம் மூலம் கோலம்)<br>8. அமைப்பு (நேர்கோட்டுத்துண்டு, சமபக்க முக்கோணி, ஒழுங்கான அறுகோணி) | 1. கோணங்கள் (ஒத்தகோணம், ஒன்று விட்ட கோணம், நேயக் கோணம்)<br>2. கோணம் தொடர்பான கணிப்புகள் (அடுத்துள்ள கோணம், நிரப்பு கோணம், மிகை நிரப்பு கோணம், குத்தெதிர்க்கோணம்)<br>3. திண்மங்கள் (எண்முகி, பன்னிருமுகி, ஒயிலர் தொடர்பு)<br>4. நேர்கோட்டு தளஉரு (முக்கோணி, நாற்பக்கலின் அகக்கோண, புறக் கோண கூட்டுத்தொகை)<br>5. வட்டம் (நாண், ஆரைச் சிறை, வட்டத்துண்டம்)<br>6. சுழல் சமச்சீர் (சமச்சீர் வரிசைகள்)<br>7. தெசலாக்கம் (அரைத் தூய தெசலாக்கம்)<br>8. ஒழுக்குகள் (ஒழுக்கு விதிகள், முக்கோணி அமைத்தல்) |

மேற்படி அட்டவணையூடாக நோக்குகையில் தரம் 6 முதல் தரம் 8 வரையான வகுப்புகளில் கேத்திரகணித விடயம் சார்பான அடிப்படை எண்ணக்கருக்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். மேலும் ஒவ்வோர் தரங்களிலும் அவை தொடர்புபட்டு விரிவடைந்து செல்வதாகவும் உள்ளது. எனவே இத்தொடர்புகளை அறிந்து அடிப்படை எண்ணக்கருக்களில் மாணவர்கள் தெளிவு பெறும்போது அடுத்துவரும் வகுப்புகளில் உள்ள கேத்திரகணித பகுதிகளை கற்பதில் சிரமங்கள் இருக்காது.

தரம் - 9 தொடக்கம் தரம் - 11 வரையிலான விடயங்கள்

| தரம் - 9 | தரம் - 10 | தரம் - 11 |
|---|---|---|
| 1. இரு நேர் கோடுகள் இடைவெட்டும் போது உருவாகும் கோணம் பற்றிய முடிவுகள் | 1. ஒருங்கிசைவு விதிகளும் இருசமபக்க முக்கோணி தொடர்பான முடிவுகள் | 1. சமாந்தரக் கோடுகளுக் கிடையிலான முக்கோண இணைகர பரப்புகள் |
| 2. சமாந்தர நேர்கோடுகளுடன் தொடர்புடைய கோணங்கள் | 2. இணைகரத்தின் பண்புகள், நிபந்தனைகள் | 2. இயல்பொத்த முக்கோணிகள் |
| 3. முக்கோணியின் புறக் கோண அகக்கோணங்கள் பற்றிய முடிவுகள் | 3. வட்டத்தின் நாண் பற்றிய முடிவுகள் | 3. பைதகரஸ் தொடர்பு |
| 4. பல்கோணியின் அகக் கோண புறக்கோண கூட்டுத்தொகை | 4. வட்டத்தின் கோணங்கள் பற்றிய முடிவுகள் | 4. நடுப்புள்ளித் தோற்றம் |
| 5. பைதகரஸ் தொடர்பு | 5. அமைப்புக்கள், சமாந்தரக் கோடுகள், முக்கோணி தொடர்பான வட்டங்கள் | 5. வட்ட நாற்கப்பல்கள் |
| 6. அமைப்புகள் ஒழுக்கு விதிகள், கோணங்கள், செங்குத்துகள், கோணம் பிரதி செய்தல் | | 6. தொடலிகள் பற்றிய முடிவு |
| | | 7. தொடலிகள் தொடர்பான கோணங்கள் |
| | | 8. அமைப்புகள், தொடலிகள் நேர்கோட்டைப் பிரித்தல் |

தரம் 9 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் கேத்திரகணிதம் முடிவுகள் (தேற்றங்கள்), அவற்றின் மறுதலைகள், முடிவுகளை பிரயோகித்தல் என்பவற்றை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. மேலும் இவ்விடயப்பரப்பில் ஒன்பது தேற்றங்களை முறையாக நிறுவுவதற்கு மாணவர்கள் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியமாகும்.

மேலே கூறப்பட்ட இரு கட்டங்களையும் கருத்திற் கொண்டு மாணவர்கள் ஆரம்ப நிலையில் இருந்து கேத்திரகணிதம் சார்விடயங்களை தெளிவுபெறும் வகையில் கற்பதன் மூலம் பாடரீதியான தேர்ச்சி மட்டத்தை உயர்த்த முடிவதுடன் மனவிருப்புடன் தொடர்கற்றலுக்கான மனப்பாங்கு மாற்றத்தையும் ஏற்படுத்தலாம். இச்சந்தர்ப்பத்தில் ஆசிரியர்களின் பங்கும் மிக முக்கியமானதாகும். ஆரம்ப முதலே மாணவர்கள் எண்ணக்கருக்களை இலகுவில் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையான, நவீனமான கற்பித்தல் துணைகளைப் பயன்படுத்துவதுடன், நீண்டு நிலைத்திருக்கக்கூடிய வகையிலான கற்பித்தல் உத்திகளையும் பயன்படுத்தல் மிக முக்கியமானதாகும்.

கேத்திரகணித விடயங்கள் கற்பது பரீட்சை நோக்கில் மட்டுமன்றி மாணவர்களிடம் ஆக்கத்திறன், பிரச்சினைகளை விடுவிக்கும் திறன், பகுத்தறி தொகுத்தறி சிந்தனைகள், தர்க்கித்தல், நியாயித்தல், பகுப்பாய்வுச் சிந்தனைகள் போன்ற உயர்உள ஆற்றல்களை விருத்தியாக்குவதற்கு அவசியமானது ஆகும். இத்தகைய உயர்சிந்தனை திறன்களின் விருத்தியானது மாணவர்கள் எதிர்கால வாழ்வில் முகம்கொடுக்கும் சவால்களை வெற்றி கொள்வதற்கு தேவையான ஒன்றிணைந்த ஆளுமைத் திறன்களைப் பெற்றுக்கொடுப்பதாக அமையும்.

முறையான நிறுவுதலுக்குரிய தேற்றங்கள்

1. இரு நேர்கோடுகள் ஒன்றை ஒன்று இடை வெட்டுவதால் உண்டாகும் குத்தெதிர்க் கோணங்கள் சமனாகும் (தரம் - 9)
2. முக்கோணியின் ஒரு பக்கத்தை நீட்ட வரும் புறக்கோணமானது அதன் அகத்தெதிர்க் கோணங்களின் கூட்டுத்தொகைக்கு சமனாகும். (தரம் - 9)
3. முக்கோணியின் மூன்று கோணங்களினதும் கூட்டுத்தொகை $180^0$. (தரம் - 9)
4. இருசமபக்க முக்கோணி ஒன்றின் சமனான பக்கங்களுக்கு எதிராக கோணங்கள் ஒன்றுக்கொன்று சமன். (தரம் - 10)
5. இணைகரம் ஒன்றில் எதிர்ப்பக்கங்கள் சமன், எதிர்க்கோணங்கள் சமன், ஒவ்வொரு மூலைவிட்டமும் அதன் பரப்பை இருசமகூறிடும். (தரம் - 10)
6. வட்டமொன்றின் மையத்தையும் அவ்வட்டத்தின் நாண் ஒன்றின் மையத்தையும் இணைக்கும் கோடு அந்நாணிற்கு செங்குத்தாகும். (தரம் - 10)
7. வட்டம் ஒன்றின் வில் மையத்தில் எதிரமைக்கும் கோணம் அவ்வில் பரிதியின் எஞ்சியபகுதியில் அமைக்கும் கோணத்தின் இருமடங்காகும். (தரம் - 10)
8. வட்ட நாற்பக்கவொன்றின் எதிர்க்கோணங்கள் மிகை நிரப்பிகளாகும். (தரம் - 11)
9. வட்டத்திற்கு வெளியே உள்ள புள்ளி ஒன்றிலிருந்து வட்டத்திற்கு வரையப்படும் இரு தொடலிகளும் சமனானவை, தொடலிகள் மையத்தில் எதிரமைக்கும் கோணங்கள் சமன், தொடலிகளுக்கு இடைப்பட்ட கோணத்தை வெளிப் புள்ளியையும் மையத்தையும் இணைக்கும் கோடு இருகூறாக்கும். (தரம் 11)

ஏனவே மேற்கூறப்பட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டு கணிதபாட அடைவ மட்டத்தை உயர்த்துவீர்.

தன்மானம், தன்னிறைவு, தன்னடக்கம் இம்மூன்றுமே வாழ்க்கையில் தலைசிறந்த ஆற்றலை அளிக்கக் கூடியவை.

– டென்னிசன் –




நிற்பவர்கள் : (இடமிருந்துவலம்) திரு. க. கணேசமூர்த்தி, திருமதி. கு. வனிதா, திருமதி. ற. துஷ்யந்தி, திருமதி. ப. ஸ்ரீப்பிறேமினி, திருமதி. அ. அருளம்மா, திரு. சோ. கிருபானந்தன், திரு. ஆ. யோகானந்தன், திரு. க. சுதனன், திரு. சி. அனுறாஜ், திரு. மா. பரமேஸ்வரன்.
இருப்பவர்கள் : (இடமிருந்துவலம்) திரு. செ. சுஜிதரன் (பொருளாளர்), திருமதி. கு. ஜெயகௌரி (உபதலைவர்), திரு. கு. திருஞானசம்பந்தர் (உபதலைவர்), திரு. சு. மோகனமுரளி (தலைவர்), திரு. இரா. வசந்தகுமார் (அதிபர்), திரு. ச. இரவீந்திரா (போசகர்), செல்வி. ப. கஜேந்தினி (செயலாளர்), திரு. க. கௌரிகாந்தன், திருமதி. கி. இராசம்மா (உபசெயலாளர்)

## அபிவிருத்திச் சங்கம் - 2010



இருப்பவர்கள் : திருமதி. மா. வர்ணன், திருமதி. கி. செல்வராசா, திருமதி. க. ஜெயகோபி, திருமதி. அ. ஆ. பிலிப் லியோனாட் (ஆசிரியர்) திருமதி. ஜெ. குமரேசமூர்த்தி (உபஅதிபர்), திரு. ச. ஜெயானந்தன் (ஆசிரியர்), திரு. இரா. வசந்தகுமார் (தலைவர்), திரு. இ. வாசுதேவன் (ஆசிரியர்), திரு. இ. பகீரதன் (செயலாளர்), திருமதி. வி. கோகுலானந்தன் (ஆசிரியர்), திரு. ஜெ. சிவபாலதேவன் (ஆசிரியர்)

நிற்பவர்கள் : திருமதி. வ. குகேந்திரன் (ஆசிரியர்), திருமதி. வா. சிவநேஸ்வரன், திருமதி. வ. புஸ்பராசா, திருமதி. பி. நகுலேஸ்வரன், திருமதி. க. சிறீதரன், திருமதி. க. கேதீஸ்வரன், திருமதி. ம. தயாபரன், திருமதி. ம. கேசவராசா, திருமதி. தே. தர்மராசா, திருமதி. ச. இராசரட்ணம், திருமதி. மே. பாஸ்கரன், திருமதி. க. ஞானசேகரம், திருமதி. ச. ராதா, திருமதி. நே. இரத்தினராசா, திரு. சி. பரமேஸ்வரன்

# கோளவெப்ப அதிகரிப்பு (Global Warming)

ப. கஜேந்தினி,
செயலாளர்,
ப.மா.ச.

மனிதச் செயற்பாடுகளாலும் இயற்கை மாற்றங்களாலும் பூமியின் மேற்பரப்பிலுள்ள பசுமைத்தன்மை மாறி வெப்பம் அதிகரிக்கும் தன்மை "கோளவெப்ப அதிகரிப்பு" (*Global warming*) எனப்படுகின்றது. பூமி ஏன் இப்படி திடீரென்று ஒரு கொதிக்கும் கோளமாக மாறிவருகின்றது. இயற்கையிலேயே அப்படியா? இல்லை. தொலைநோக்கு இன்றித் தனது தற்போதைய அவசியத்தை அவசரமாகப் பூர்த்தி செய்யும் மனித நடவடிக்கைகளே பூமியை இப்படிச் சூடாக்கிக் கொண்டிருக்கின்றனவா என்பது அறியப்பட வேண்டிய ஒரு விடயமாகும். உலகமெங்கும் உள்ள பெருவாரியான தொழிற்சாலைகளும் மோட்டார் வாகனங்களும் வளிமண்டலத்துள் இடைவிடாது கக்கிக் கொண்டிருக்கும் காபனீரொட்சைட், மெதேன், நைதரசன் ஒக்சைட், கந்தவீரொட்சைட் போன்ற வாயுக்களினால்தான் பூமி பெருமளவில் தகிக்கத் தொடங்கியுள்ளது. இவற்றின் பிரதான வில்லன் காபனீரொட்சைட் வாயுவாகும். இந்த வாயுக்களை பச்சைவீட்டு வாயுக்கள் என்றும் இவற்றின் விளைவாக பூமி சூடாவதை பச்சைவீட்டு விளைவு எனவும் அழைப்பர்.

பச்சைவீட்டு விளைவு (*Green house effect*) என்பது அவ்வளவு பாரதூரமான ஒன்றா என சற்று சிந்தித்துப் பார்த்தால் ஒரு எல்லை வரை இது அவசியமான ஒன்றுதான். சூரியக்குளியல் செய்து கொண்டிருக்கும் பூமி தான் பெற்ற வெப்பத்தின் ஒரு பகுதியை மீண்டும் விண்ணைநோக்கி செலுத்துகின்றது. இப்படிச் செல்லும் வெப்பத்தில் கணிசமான பகுதியை பூமியின் வளிமண்டலப் போர்வையிலுள்ள காபனீரொட்சைட் போன்ற வாயுக்கள் அப்படியே உறிஞ்சிக் கொள்கின்றன. வளிமண்டலம் ஒரு கம்பளிப் போர்வையைப் போல உஷ்ணத்தைத் தக்க வைத்துக் கொண்டிருப்பதால்தான் பூமி கதகதப்பாக உள்ளது. தண்ணீர் திரவநிலையில் பாய்கிறது. பூமியில் உயிரினங்கள் வாழவும் முடிகின்றது. இந்த பச்சைவீட்டு விளைவு மட்டும் இல்லாது போயிருந்தால் பூமி அதன் தற்போதைய வெப்பநிலையை விட வெகுவாகக் குறைந்து குளிரில் நடுங்கும் ஒரு கிரகமாகவே உறைந்திருக்கும். எனினும் இன்று பூமியில் வளிமண்டலம் சுமக்கும் காபனின் அளவு ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகி வருவதுடன் பூமியின் வெப்பநிலையும் அளவு தாண்டி அதிகரித்து வருகின்றது. வாயுக்களின் செறிவு அதிகரிக்கும் போது பச்சைவீட்டு விளைவில் பாரிய பாதிப்பை உருவாக்குகின்றன. இவ்வாறான பச்சைவீட்டு வாயுக்களின் அதிகரிப்பு வீதத்தையும், அதன் துறைசார் ரீதியான வெளியேற்றத்தையும் பின்வரும் அட்டவணைகளினூடாக அவதானிக்கலாம்.

கைத்தொழில் நடவடிக்கைக்கு பின்னரான பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றம்

| வாயுக்கள் | கைத்தொழில் புரட்சிக்கு முன் | கைத்தொழில் புரட்சிக்குப் பின் | அதிகரிப்பு 1750 – இன்றுவரை |
|---|---|---|---|
| காபனீரொட்சைட் | 280PPm | 387 PPm | 104 PPm |
| மெதேன் | 700PPb | 1745 PPb | 1045 PPb |
| கந்தகவீரொட்சைட் | 270PPb | 314 PPb | 44 PPb |
| குளோரோ புளோரோ - காபன் | 0 | 333PPt | 533PPt |

PPm - Parts per million
PPb - Parts per billion
PPt - Parts per trillion

## துறைசார் ரீதியான பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றம்

| துறைகள் Sectors | வீதம் % |
|---|---|
| கைத்தொழில் நடவடிக்கைகள் (Industrial Process) | 16.8 |
| வலு நிலையங்கள் (Power stations) | 21.3 |
| போக்குவரத்து எரிபொருள் (Transport fuel) | 14.0 |
| விவசாய உற்பத்தி (Agriculture products) | 12.5 |
| உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் தரப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் (fossile fuel retrivel processing and distribution) | 11.3 |
| நிலப்பயன்பாடு மற்றும் உயிர்த்திணிவு எரிவு (Land use and biomass burning) | 10.0 |
| கழிவகற்றல் நடவடிக்கை (Waste disposal treatment) | 3.4 |
| வதிவிட வர்த்தக மற்றும் ஏனைய மூலகங்கள் (Residential commercial and other sources) | 10.3 |

பச்சைவீட்டு வாயுக்களின் அளவு அதிகரிக்க அதிகரிக்க பூமியை விட்டு வெளியேற விடாது அவை தடுத்து வைக்கும் வெப்பத்தின் அளவும் கூடி வருவதனாலேயே பூமி இப்படித் தகிக்க ஆரம்பித்துள்ளது. கடந்த நூற்றாண்டில் பூமியின் வெப்பநிலை சராசரியாக $0.6^0C$ அளவால் உயர்ந்திருக்கின்றது. இவ்வளவுதானா என்று நினைக்கத் தோன்றும். ஆனால் இந்த அதிகரிப்பு சாதாரணமான

ஒன்றல்ல. கடந்த 600 ஆண்டுகால புவி வரலாற்றில் இந்த அளவு மிக வெப்பமான ஒன்றாகும். 2100ஆம் ஆண்டில் பூமியின் சராசரி வெப்பநிலை $1.4^0C - 5.8^0C$ வரை உயரக்கூடும் என்ற அறிவிப்பை ஐ.நாவின் சூழல் விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர்.

பூமியின் வெப்ப உயர்வால் நீர்ப்பரப்புகளில் இருந்து வளியில் சேரும் நீராவியின் அளவு அதிகரித்து வருகின்றது. இந்த மேலதிக ஈரப்பற்று, தட்ப வெப்பநிலையில் மாற்றங்களை உண்டு பண்ணும். காற்று, மழை ஆகியவற்றின் பாங்கில் திசை திருப்பத்தை ஏற்படுத்தும். இதனால் பாலைவனப்பகுதியில் அடைமழை பொழிய, வளமான நிலங்கள் வரண்டு போகலாம். சூறாவளிகள் வேகங்கொண்டு அடிக்கடி மிரட்டலாம். இந்த அகோரங்களில் ஒன்றாகவே 1998இல் கடும் வரட்சி மூட்டிய காட்டுத்தீ இந்தோனேசியாவில் 20 இலட்சம் ஏக்கர் காடுகளை பொசுக்கி எரித்தது. 1998இல் திபெத் லாசா வரலாறுகாணாத வெப்பத்தைக் கண்டது. 1999ல் நியூயோர்க் மிகவும் உக்கிரமான கோடையை அனுபவித்தது. 2005இல் கத்ரீனா, ரீட்டா, வில்மா என்று சீறிய சூறாவளிகள் அமெரிக்காவை வெள்ளத்தால் புரட்டியெடுத்தன. அதே ஆண்டில் அல்ஜீரியா $50^0C$ அளவு சூட்டில் தகிக்க அதற்கு நேர்மாறாகப் பால்கன் பகுதியில் கடும்குளிர் நிலவியது.

புவி வெப்ப அதிகரிப்பு காரணமாக உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு வருகின்றது. அதிலும் ஆபிரிக்க நாட்டினர் மோசமான உணவுப்பற்றாக்குறையை அனுபவித்து வருகின்றனர். இதைவிட நோய்த்தாக்கத்திற்கும் உட்படுகின்றனர். இதில் பரிதாபம் என்னவெனில் வெப்ப உயர்வால் அதிகம் தண்டிக்கப்படும் இவர்கள் பூமியை வெப்பப்படுத்தும் செயல்கள் எதிலும் சம்பந்தப்படாத அப்பாவி ஏழைகள் என்பதுதான். தட்பவெப்ப மாறுதல்களினால் "கடலின் மழைக்காடுகள்" என வர்ணிக்கப்படும் பவளப்பாறைகளிலும் (*Corals*) பாரதூரமான பாதிப்பு ஏற்பட ஆரம்பித்துள்ளது. இவற்றுக்கெல்லாம் மேலாக அதிகரிக்கும் உஷ்ணம் துருவப்பகுதிகளின் பனிக்கவிப்புக்களையும் கரைக்கத் தொடங்கியுள்ளது. உருகி வழியும் பனிநீர் நீருடன் சேர்ந்துகொள்ள கடல்மட்டம் மெல்ல மெல்ல உயர்கின்றது. கடந்த நூற்றாண்டில் மட்டும் இப்படி *25cm* உயர்ந்துள்ளது. 2100ஆம் ஆண்டளவில் கடல்மட்டம் அரை அடி முதல் மூன்று அடிகள் வரை உயரக்கூடும் என்று அனைத்து அரசாங்கங்களின் வெப்பநிலை மாறுபாட்டு ஆய்வுக்குழு (*Inter Governmental Panel on Climatic Changes – IPCC*) எச்சரித்துள்ளது. இது நிகழின் கரையோர நகரங்கள் கடலினுள் மூழ்கும். மாலைதீவு போன்ற தீவுக் கூட்டங்கள் முற்று முழுதாக கடலினுள் மூழ்கும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தட்பவெப்ப நிலை மாற்றத்தையும் சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுக்கவும் அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தருணம் இது. பூமி உஷ்ணம் அடைவதால் பல்வேறு பிரச்சினைகள் தொடர்நிகழ்வாக நடைபெற்று வருகின்றமை

அனைவரும் அறிந்த ஒரு விடயமாகும். 1992இல் றியொடி ஜெனிரோவில் நடந்த புவி உச்சி மாநாட்டின் போது ஐக்கிய நாடுகள் சபை இந்தச் சவாலைச் சமாளிக்க சகல நாடுகளுக்கும் அறைகூவல் விடுத்தது. 2000ஆம் ஆண்டளவில் வளிமண்டலத்தில் பச்சைவீட்டு வாயுக்களின் அளவை 1990ம் ஆண்டில் இருந்த அளவுக்குக் கொண்டுவரவேண்டும் எனத் தீர்மானம் முன்மொழியப்பட்டது. இரண்டாயிரம் ஆண்டையும் தாண்டிவிட்ட நிலையில் இலக்கு எட்டப்பட்டுவிட்டதா என்றால் இந்தக் கேள்விக்குப் பதில் மாறாக இன்னும் அதிகரித்திருக்கின்றது என்பது தான் உண்மை.

மேலும் புதிய ஒரு முயற்சியாக பருவநிலை மாற்றம் ஐ.நா சபை தீர்மானத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் கியோட்டோ உடன்படிக்கை எனப்படுகின்றது. பூமியின் மேல் படரும் நச்சு வாயுக்களை குறைப்பது *(Green House Gases)* இதன் நோக்கமாகும். கியோட்டோ உடன்படிக்கைச் செயல்திட்டத்தின்படி இந்த வெப்பநிலை $0.02^0C$ முதல் $0.28^0C$ வரை குறைக்கலாம். (2050 ஆம் ஆண்டிற்குள்) என நம்புகின்றனர். கியோட்டோ உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நாடுகள் காற்றில் கலக்கும் நச்சுப்புகையின் அளவை திட்டமிட்டு குறைக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றது. காற்றில் குறிப்பிட்ட அளவு அதனை அபாயகரமான அளவு போகாமல் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

தொகுத்து நோக்குமிடத்து ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, வட அமெரிக்க நாடுகளில் தற்போது காணப்படும் கொடூர கோடை, கடுங்குளிர் காலம், புயல் சீற்றம் ஆகியன புவிவெப்பமாதல் அல்லது தட்ப வெப்பநிலை மாற்றத்தால் ஏற்படுகின்றது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். மனிதகுல நாசத்திற்கு இது ஒன்றே போதுமானது என அவர்கள் எச்சரிக்கின்றனர். உரிய நடவடிக்கைகளை இப்போதே செய்யாவிடில் புவி வெப்பமாதல் உலகை அழித்துவிடும் அனைத்து உலகமும் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க முயற்சிகளை மேற்கொண்டு வருமாயின் இதன் தாக்கத்தை ஓரளவிற்கு குறைத்துக் கொள்ள முடியும்.

> "மட்டுமீறிய நுகர்வுப் போக்கு வாழ்க்கை முறையாக பரிணமித்து விட்டதும், வளங்களை வரம்பின்றிச் சூறையாடும் அபத்தமும் தான் சுற்றுச்சூழலின் முக்கிய எதிரிகளாக விளங்குகின்றன."
>
> – பிடல் காஸ்ட்ரோ –

# திரவ படிக திரை LCD (Liquid Crystal Display)

கு. மோகனகிருஷ்ணா,
பழைய மாணவன்.

இன்றைய தொழிநுட்ப உலகினை கணனி யுகம் எனலாம். கணனி இல்லாவிடின் கல்வி உலகம் இல்லை. அறிவியல் விரிவாக்கமும் இல்லை. நவீன உலகில் பிரவேசித்திருக்கும் நாம் மனித வளத்தினை உபயோகித்து வேலைப் பளுவினைக் குறைத்து வேலைகளை இலகுவாகவும், விரைவாகவும் அழகாகவும் நிறைவேற்றும் நோக்கில் மனித தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கண்டுபிடித்த எத்தனையோ கண்டுபிடிப்புக்களில் முக்கியமானது கணனி ஆகும்.

இக் கணனி மூலம் தகவல்கள், படங்கள், அசையும் படங்கள் என்பவற்றைக் காட்சிப்படுத்த திரை பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக CRT (Cathode Ray Tube), LCD (Liquid Crystal Display) போன்ற திரைகள் பயன்படுத்தப்படுகின்றன. தகவல்கள், படங்கள், அசையும் படங்கள் என்பவற்றைக் காட்சிப்படுத்த பயன்படும் இலத்திரனியல் திரைகளிலே இன்றுவரை கண்டறியப்பட்ட மிக உச்ச தொழினுட்பத்தைக் கொண்டமைந்ததே இத் திரவ படிக திரை ஆகும். இவை கணிப்பொறிகளின் கணனித்திரைகள், தொலைக்காட்சிகள், வானூர்தி கருவிகளின் திரைகள், மற்றும் பல இலத்திரனியல் திரைகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. திரவ படிகங்களால் நிரப்பப்பட்டு விம்பங்கள் உருவாக்குவதற்காக ஓர் ஒளி மூலம் அல்லது எதிரொளிப்பியின் முன் வரிசையமைப்பில் வைக்கப்படும் பல பிக்சல்களாலான மின்னணு முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட ஓர் ஒளியியல் சாதனம் ஆகும். LCD தொழினுட்பம் உருவாவதற்கு வழிவகுத்த முன்னைய கண்டுபிடிப்பான திரவ படிகங்களின் கண்டுபிடிப்பு சுமார் 1888ஆம் ஆண்டு காலத்தில் நிகழ்ந்ததாக தெரிய வருகிறது. 2008ஆம் ஆண்டு உலகளாவிய LCD திரைகளுடன் கூடிய தொலைக்காட்சிகளின் விற்பனை CRTயின் விற்பனை எண்ணிக்கையை விடமிஞ்சியிருந்தது.

திரவ படிக திரையின் தொழினுட்பம் தொடர்பாக நோக்கும் போது ஒரு LCD இன் ஒவ்வொரு பிக்சலும் இரு ஒளி ஊடுருவக்கூடிய மின்முனைகள் மற்றும் ஒரு தளவிளைவுண்டாக்கும் வடிப்பான்கள் ஆகியவற்றுக்கிடையே அமைக்கப்பட்ட மூலக்கூறுகளின் அடுக்கைக் கொண்டிருக்கும் இந்த வடிப்பான்களின் பரப்பு அச்சானது ஒன்றுக்கொன்று செங்குத்தாக இருக்கும். தளவிளைவு உண்டாக்கும் வடிப்பான்களிடையே திரவ படிகம் இல்லையென்றால் ஒளிமுதல் வடிகட்டி மூலம் செலுத்தப்பட்டு இரண்டாவது தளவிளைவுண்டாக்கியால் தடுக்கப்படுகிறது.

திரவ படிகப் பொருளுடன் தொடர்பு கொண்டுள்ள மின்முனையின் பரப்பு, திரவ படிக மூலக்கூறுகள் ஒரு குறிப்பிட்ட திசையில் வரிசைப்படுத்தப்படும் விதத்தில் செயலாக்கத்திற்கு உட்படுத்தப்படுகிறது. இந்த செயல்முறை வழக்கமாக ஒரே திசையில் தேய்க்கப்பட்ட எடுத்துக்காட்டுக்கு துணி போன்ற மெல்லிய பலபடி சேர்ம அடுக்கு அடங்கியது. இந்த திரவ படிகத்தின் திசை அமைப்பு, தேய்க்கும் திசையால் தீர்மானிக்கப்படுகின்றது. மின்முனைகள் இண்டியம் டின் ஆக்சைடு (ITO) என்றழைக்கப்படும் ஒளி ஊடுருவக்கூடிய கடத்தியால் ஆனது.

ஒரு மின்புலத்தை செலுத்தும் முன்பாக, திரவ படிக மூலக்கூறுகளின் நிலை அமைப்பு மின்முனைகளின் பரப்பில் உள்ள அமைப்பினால் தீர்மானிக்கப்படுகிறது. ஒரு முறுக்கப்பட்ட தளர்வுத் தன்மை கொண்ட சாதனத்தில் (பெரும்பாலான பொதுவான திரவ படிக சாதனத்திலும்) இரு மின்முனைகளிலும் பரப்பு அமைப்பானது ஒன்றுடன் ஒன்று செங்குத்தாக உள்ளது. மேலும் இதனால் அந்த மூலக்கூறுகள் சுருள் வடிவிலான அல்லது திருகப்பட்ட கட்டமைப்பை அடைகின்றன. இந்த ஒளி பின்னர் பிரதானமாக இரண்டாவது வடிப்பானுக்கு செங்குத்தாக ஒருவிளைவுக்கு உட்படுத்தப்படும். இவ்விதமான இதன் செயற்பாடு நிகழும்.

திரவ படிக திரையின் சிறப்புகூறுகள் தொடர்பாக நோக்கினால்

1) திரவ படிக திரை தொழினுட்பம் காரணமாக மிகப் பெரிய திரைகளிலும் காட்சிகளை உருவாக்கும் கட்டமைப்பு கொண்டது.
2) இதில் புள்ளியிடைத்தூரம் மிகக் குறைவாக காணப்படுவதால் படங்கள் மிக துல்லியமாகக் காணப்படும்.
3) இவை மிகக் குறைந்த மின்சாரத்தை நுகர்ந்து செயற்படக் கூடியது.
4) CRI திரையுடன் ஒப்பிடுகையில் இதன் திரையில் கதோட் கதிர்களின் தொடர் தாக்கம் காரணமாக மங்கல்நிலை ஏற்படலாம். ஆனால் LCD திரையில் அவ்வாறான தாக்கல் இல்லை.
5) CRI திரையின் நீண்ட பாவனையின் போது கண்ணோவு உணரப்படும். இதற்காக வடிகட்டும் கண்ணாடி பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் LCD தொழினுட்பம் அவ்வாறான தாக்கங்கள் அற்றது.

நாகரிக வளர்ச்சிக்கேற்பவும் விஞ்ஞான தொழினுட்ப அபிவிருத்திக்கு இணங்கவும் வாழ்க்கை வேகத்திற்கும் மக்களால் LCD தொழினுட்பமே அதிகம் விரும்பப்படுகிறது எனலாம்.

மனதில் உறுதி வேண்டும்.
வாக்கினில் இனிமை வேண்டும்.
நினைவில் நல்லது வேண்டும்.
– பாரதிதாசன் –

# என் நினைவில் நிலைத்தவர்கள்

சு. மோகனமுரளி,
பழைய மாணவன்.

நான் இப்பாடசாலையில் கல்விகற்ற காலம் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதுகளில் ஆகும். அக்காலத்தில் பாலர் பாடசாலைகள் ஒன்றும் உருவாகவில்லை. அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளிலேயே அரிவரி வகுப்பில் நாம் சேர்த்துக் கொள்ளப்படுவோம். அடுத்த வருடம் சித்தி பெற்று முதலாம் வகுப்பிற்குச் செல்லவேண்டும். அதேவேளை ஒவ்வொரு வகுப்பிலும் திறமையாகக்கற்று வந்தாலே சித்தி பெற்று அடுத்த வகுப்பிற்குச் செல்லமுடியும். அல்லாவிடில் சித்தியின்மையென மீண்டும் அதே வகுப்பில் கண்டிப்பாகக் கல்வி கற்க வேண்டிய நிலை இருந்தது. அப்பொழுது இருந்த அதிபர் திரு. க. நவரத்தினராஜா ஆவார். அவரும் மற்றும் ஆசிரியர்களும் எம்மைத்தாய்போல அரவணைத்து அன்புகாட்டிக் கல்வி புகட்டினார்கள். ஆரம்ப காலத்தில் எமக்கு ஆசிரியர்களின் பெயர்கள் தெரியாது. ஆகையினால் நாம் அவர்களைப் பாடங்களின் பெயர்களுடன் சேர்த்தே குறிப்பிடுவது வழக்கம். எனக்கு அரிவரி வகுப்பில் கல்வி புகட்டிய ஆசிரியையின் பெயர் இன்றும் கூடத் தெரியாது. நாம் அன்னையின் அரவணைப்பில் இருந்து சிலமணி நேரங்கள் விலகி இருக்கப் பழகிக்கொள்ளும் நேரம் அதுவாகும். ஆகையினால் எமது தாய்க்கு அடுத்தபடியாக நாம் கூடுதலான நேரம் சேர்ந்திருக்கும் ஆசிரியையை நாம் எல்லோரும் அழைக்கும் பெயர் "வாத்தியம்மா" என்றுதான். அதே போல் அடுத்த வகுப்புக்களிலும் கல்விகற்பித்த ஆசிரியர்கள் எல்லோரும் எம்மீது மிகவும் அன்புகாட்டி அரவணைத்துக் கல்வி புகட்டினார்கள். இதன் காரணமாக நாங்கள் பாடசாலைக்கு மிகவும் ஆர்வமாகச் சென்று கல்வி கற்றோம். இப்படியான அன்புள்ளங்களை இன்றும் கூட எம்மால் மறக்கமுடியாது. எமது மனக்கண்ணில் அவர்களது அறிவுரைகளும், தோற்றங்களும் இன்றும் காட்சி தருகின்றன.

இவர்களுடன் சேர்த்து எமது நவாலிக்கிராமத்தில் தோன்றி வாழ்ந்த, வாழ்ந்து கொண்டு இருக்கின்ற பெரியோர்களையும், இவ்வேளையில் நினைவு கூர்வது மிகவும் பொருத்தமாக அமையும் என்றவகையில் சில பெரியோர்கள் ஆற்றிய சேவைகளை இங்கு கூறவிழைகின்றேன்.

## சோமசுந்தரப்புலவர்

இவர் பல்லாயிரக்கணக்கான பாடல்களைப்பாடி, எல்லா வயதினரும், எல்லாத் தரத்தில் உள்ளவர்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையிலும் தனது புலமை மூலம் மக்களுக்குப்பல கருத்துக்களைக் கூறி அவர்களை நெறிமுறையில் வாழ வழி சமைத்துள்ளார். இவரது பாடல்களில் ஆழ்ந்த மனிதநேயம் மேலோங்கி நிற்கும். உயிர்ப்பலி நீக்கம் போன்ற நெறிகளை எடுத்துக்கூறும் வகையில் வைத்திலிங்கம் என்பவருடன் இணைந்து "சைவபாலிய சம்போதினி" என்ற பத்திரிகையையும் நடாத்தி வந்துள்ளார். இவரால் பாடப்பட்ட பாடல்களில் ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை...., கத்தரித் தோட்டத்து வெருளி போன்ற பாடல்கள் சிறுவர் மனங்களில் நீங்கா இடம்

பிடித்துள்ளன. மேலும் இவரது தோற்றத்தை எமது மனத்திரையில் கொண்டுவரக்கூடியதாக இவரைத் "தங்கத்தாத்தா" என்னும் பட்டப்பெயர் கொண்டும் அழைக்கப்பட்டார்.

## தம்பையாப் பண்டிதர்

இவரும் புலவர் அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே வாழ்ந்தார். இவர் கல்வியின் பயனை அனைத்து எதிர்கால சந்ததியினரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கில் எமது பாடசாலையை (நவாலி மகா வித்தியாலயம்) ஸ்தாபித்து அதனூடாக, தான் பெற்ற கல்வியை அனைத்து மாணவர்களுக்கும் கற்பித்து வந்தார். மேலும் பல கடினமான புராண, இதிகாசப் பாடல்களைக் கல்வியறிவு குறை மக்களும் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் இலகு தமிழில் உரைநடை கூறி அங்கு கூறப்படும் கருத்துக்களை மக்கள் மனதில் பதியவைத்து, அவர்களது வாழ்க்கையை நெறிப்படுத்தியுள்ளார். இக்கருத்துக்களை இவர் எழுத்து வடிவிலும் வாய்மொழி மூலமும் கூறியுள்ளார். மேலும் பல தோத்திரப்பாடல்களையும் இயற்றிப் பாடியுள்ளார்.

## கலையரசு சொர்ணலிங்கம்

இவர் தனது இளவயது முதல் நாடகத்துறையில் மிகவும் ஆர்வம் கொண்டவராகக் காணப்பட்டார். பல ஆயிரக்கணக்கான நாடகங்களில் நடித்துள்ளார். அத்துடன் பல மாணவர்களுக்கும் பெரியவர்களுக்கும் நடிப்புக் கலையைக் கற்பித்து வந்துள்ளார். இவருக்கு கலை சார்ந்த பல பட்டங்கள் சூட்டப்பட்டுள்ளன. இவரது கலைச்சேவையைப் பாராட்டுமுகமாகப் பல தங்கப் பதக்கங்களையும் பெற்றுள்ளார். 1960ம் ஆண்டு தினகரன் பத்திரிகையினர் நடாத்திய கலை விழாவில் வைத்து தென்னிந்திய திரைப்பட நடிகர் சிவாஜிகணேசன் அவர்களுக்கு "கலைக்குரிசில்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். தனது தள்ளாத வயதிலும் மாணவர்களுக்கு நாடகங்களைப் பயிற்றுவித்துக் கலைக்காகவே தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

## நவாலியூர் வை. நல்லையா

இவர் கூட்டுறவுப் பரிசோதகராகக் கடமையாற்றி வந்தவர். சிறுவயது முதற்கொண்டே தம்பையாப் பண்டிதர் அவர்களிடம் கல்வி பயின்று அவரது வழியைப் பின்பற்றி புராண, இதிகாசப் பாடல்களின் கருத்துக்களை இலகு தமிழில் மக்களுக்குக் கூறி விளங்கவைத்து வந்தார். கந்தபுராணம் போன்ற புராண நூல்களுக்குத் தனது சொந்த உரையில் உரைநடை எழுதி அனைத்து மக்களும் தாமாகவே படிக்கக்கூடிய வகையில் நூலாக வெளியிட்டுள்ளார். இவர் சைவசமயத்தின் மீதும், தமிழர் கலாசாரத்தின் மீதும் கொண்ட ஆர்வத்தினால் உரிய வயதை அடையுமுன்னரே தனது கூட்டுறவுத்துறை பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். அதன்பின் அவர் தனது சுயமுயற்சியின் மூலம் ஒரு அச்சகத்தை உருவாக்கி, அதனூடாக "சந்திர தீபம்" எனும் பத்திரிகையை வெளியிட்டார். அப்பத்திரிகையின் வாயிலாக இந்துமத கலாசாரத்தை மக்களுக்கு எடுத்துரைத்ததுடன், மக்கள் மத்தியில் ஏற்படும் பண்பாட்டு, கலாசார சீரழிவுகளையும் சுட்டிக்காட்டி மக்கள் ஒழுக்கநெறியுடன் வாழத் தன்னாலான சேவைகளைப் புரிந்து வந்துள்ளார்.

## அப்பச்சி மகாலிங்கம்

இவர் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டவர். அத்துடன் சிறுகதை, நாவல்கள், சமூக நாடகங்கள் எனப் பல நூற்றுக்கணக்கான ஆக்கங்களை எழுதிப் பத்திரிகைகள் வாயிலாகவும், சிறுநூல் தொகுப்புக்களாகவும் வெளியிட்டுள்ளார். இவற்றின் ஊடாக எமது மக்கள் மத்தியில் காணப்படும் குறைபாடுகள், அவற்றை நிவர்த்தி செய்யும் வழிகள் போன்றவற்றைத் தனது கற்பனையில் கலந்து படைத்து வந்துள்ளார். இவர் எழுதிய "வேலி" என்னும் சமூகநாடகம் 1994ம் ஆண்டு எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவின் போது, அவரின் முன்னிலையிலேயே பழைய மாணவர்களால் மேடையேற்றப்பட்டு மக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றது.

## நவாலியூர் நா. செல்லத்துரை

இவர் "நவாலியூரான்" என்ற புனைபெயரில் கலைத்துறையில் பிரவேசித்தவர். இவர் கலை இலக்கியத்துறைகளில் மிகுந்த பற்றும் அவற்றை வளர்ப்பதில் ஆர்வமும் கொண்டவர். இவர் சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் எனப்பல நூற்றுக்கணக்கான ஆக்கங்களை எழுதி உள்ளதுடன், அவற்றை பல தமிழ்ப்பத்திரிகைகள் ஊடாக வெளியிட்டு வருகிறார். அத்துடன் இவர் நடிப்புத் துறையிலும் தமக்கென ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டவர். இவர் பல நாடக மன்றங்களையும் உருவாக்கி அதனூடாக நாடகக் கலையை வளர்ப்பதில் பெரும் பங்காற்றிவருகிறார். இவர் எழுதிய "முளை வெடித்த மொட்டு" எனும் நாவல் 1968ம் ஆண்டில் இலங்கையின் சாகித்திய மண்டலப் பரிசை வென்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலியார் வை. மகேசன்

இவர் தமது அறிவுத்திறமையினால் பல நிறுவனங்களை நடாத்தி வந்துள்ளார். அத்துடன் மேலும் பல தொண்டு நிறுவனங்களையும் நிறுவி அவற்றின் மூலம் பல சேவைகளைச் செய்து வந்துள்ளார். இவற்றில் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக வறிய சிறுவர்களை பராமரிக்கும் இடமாக "மகேஸ்வர இல்லம்" இயங்கி வந்தது. மேலும் பல சமயத் தொண்டுகளிலும் ஈடுபாடு கொண்டு இந்துசமயத்தை வளர்ப்பதிலும் பெரும் பங்காற்றி வந்துள்ளார். அந்த வகையில் இவரால் உருவாக்கப்பட்ட "நவாலி இந்துசமய விருத்திச்சங்கம்", அதன் கீழ் இயங்கும் முன்பள்ளி போன்றவை இன்றும் அவரது வீட்டில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மேலும் பல கோவில்களின் திருப்பணி களுக்கும், பாடசாலைகள் போன்ற நிறுவனங்களுக்கும் பல மண்டபங்கள், கட்டிடங்கள் போன்றவற்றைத் தனது சொந்தச் செலவிலேயே அமைத்துக் கொடுத்துள்ளார்.

## பாவலர் பா. சத்தியசீலன்

இவர் ஆசிரியத் தொழிலைச் செய்து வந்தார். இவருக்கும் கலை, இலக்கியங்கள் போன்றவற்றில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக தனது ஓய்வு நேரங்களில் குழந்தைகளுக்கான பல பாடல்களைப்பாடி அவற்றைத் தொகுத்து வெளியிட்டு வந்துள்ளார். இதன் காரணமாக இவருக்குக் "குழந்தைக் கவிஞர்" என்ற பட்டமும் வழங்கப்பட்டது. இவர் எமது பாடசாலையிலும் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இயக்குனர் அருமைநாயகம்

இவர் சிறுவயது முதற்கொண்டு நடிப்புத்துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவராகக் காணப்பட்டார். இவ் ஆர்வத்தின் வெளிப்பாடாக இவர் தென்னிந்தியா சென்று அங்கு பல திரைப்படத்துறையினருடன் சேர்ந்து அனுபவரீதியாக திரைப்பட நுணுக்கங்களை அறிந்து கொண்டார். பின்னர் இலங்கைக்கு வந்து "நிர்மலா" என்னும் பெயரில் ஈழத்துத் தமிழ்த் திரைப்படம் ஒன்றை இயக்கி வெளியிட்டார். இப்படம் அக்காலத்தில் பல திரையரங்குகளில் திரையிடப்பட்டது. அதன்பின் அவர் இலங்கை திரைப்படத்துறையின் தணிக்கைக்குழுவில் கடமையாற்றினார். அதன் பின்னரும் இவர் நடிப்புத்துறையில் கொண்ட ஆர்வத்தின் வெளிப்பாடாகப் பல மேடைநாடகங்களில் நடித்தும் அவற்றை இயக்கியும் வந்துள்ளார்.

## இரா. இராஜயோகன்

இவர் கிராம சேவையாளராகக் கடமையாற்றினார். இவருடன் நெருக்கமாகப் பழகுபவர்கள் இவரை நவாலித்தம்பி என அழைப்பார்கள். இவர் தனது சிறுவயது முதற்கொண்டே கலைத்துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவராகக் காணப்பட்டார். பள்ளிப்பருவத்தில் பல மேடை நாடகங்களில் ஆண்வேடம், பெண்வேடம் போன்ற பல வேடங்களையும் ஏற்று நடித்து வந்துள்ளார். பின்னரும் இவர் பல ஒளிநாடா நாடகங்களில் நடித்து வந்துள்ளார். அத்துடன் இவர் எழுத்தாக்கத்துறையிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவராகக் காணப்படுகிறார். இதன் பயனாக பல கவிதைகளை எழுதி பரிசில்கள் பலவற்றை வென்றுள்ளார். மேலும் குழந்தைகளுக்கு ஏற்றவகையில் பல அறிவுரைகளை வெளிக்காட்டும் விதமாக உருவகக்கதைத் தொகுப்புக்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றில் "சிந்தனை செய் மனமே", "ஆசையினாலே மனம்" போன்ற தொகுப்புக்கள் மிகுந்த வரவேற்பைப் பெற்றவையாகும். இவர் "இசை ஞாயிறு" என்னும் பட்டமும் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப் பட்டுள்ளார். தற்போது இவரது வேறு பல ஆக்கங்கள் தொகுப்புக்களாக தொகுக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன.

இவர்கள் தவிர மேலும் பல நூற்றுக்கணக்கான கல்விமான்கள் சமூகத்தொண்டர்கள், கலையார்வங்கொண்டவர்கள் போன்றோர் எம்மண்ணில் உதித்து இலைமறை காயாக இருந்து தொண்டுகள் பல புரிந்து வந்துள்ளார்கள், தொண்டுகள் புரிந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை எவராலும் மறுக்கமுடியாது. இப்படியாக பல பெரியோர்கள் தோன்றி உள்ள எமது கிராமத்தில் மேலும் பல புத்திஜீவிகளையும், பெரியோர்களையும் உருவாக்கக்கூடிய வகையில் தனது அளப்பரிய சேவையை ஆற்றிக் கொண்டிருக்கும் எமது உயிரினும் மேலாக அனைவராலும் மதிக்கப்படவும், துதிக்கப்படவும் வேண்டிய எமது "நவாலி மகா வித்தியாலயம்" இன்று தனது நூறாவது ஆண்டு சேவை நிறைவைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் அதன் சிறப்பினை வெளிக்கொணரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்நூற்றாண்டு விழா மலரில் எனது உள்ளக்கிடக்கையையும் கூறுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

# நவரஸங்கள்

திருமதி. ற. துஸ்யந்தி,
பழைய மாணவி.

அழகியல் உணர்வும் தெய்வீக உணர்வும் வேறுபிரிக்க முடியாதவை. இதனை மீளவலியுறுத்த ரஸம், ரசனை, ரஸாஸ்வாத முதலான எண்ணக்கருக்கள் இந்திய அழகியலில் பயன்படுத்தப்பட்ட அழகு, உணர்வுகளிலிருந்து கட்டியெழுப்பப்பட்டது. இந்த அழகியல் உணர்வே ரஸம். ரஸம் என்பது மனவெழுச்சிகளையும் தூண்டுதல்களினாலும் கிடைக்கப்பெறும் உடல், உள்ளம் சார்ந்த கிளர்ச்சிகளையும் குறிப்பாக உணர்த்துகின்றது.

ரஸம் பற்றி அறிய எமக்கு மூலமந்திரமாக கிடைப்பது "நாட்டிய ரஸம்" என்ற பரதரின் சொல்லை விளக்க வந்த அபிநவகுப்தர் நாட்டியமே ரஸங்கள். ரஸங்களின் தொகுதியே நாட்டியம் என விளக்கம் தருகின்றார். எனவே நவரஸங்கள் பற்றிய கருத்தை நோக்குவோம்.

## 1. ஷ்ருங்கார ரஸம்

ரஸங்களில் முதலாவதாக விளங்குவது ஷ்ருங்காரம். காதல், அன்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட இந்த ரஸத்தின் ஸ்தாயிபாவம் ரதியாகும். பீபத்ஸ ரஸத்தை எதிர் ரஸமாகவும், கருநீலத்தை இதன் நிறமாகவும் மகா விஷ்ணுவை தேவதையாகவும் கொண்ட ஷ்ருங்கார ரஸத்திற்குரிய ஸ்வரங்கள் சுத்தமத்தியமும் பஞ்சமமும். இவ் ரஸமானது காமத்தையும் புருஷாத்தமாகக் கொண்டது. இதன் இலட்சணம் என்னவெனில் தாம் விரும்பிய ஒன்றை அனுபவித்து மகிழ்தல் ஆகும்.

ஷ்ருங்கார ரஸமானது மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையானவ

1. அயோக ஷ்ருங்காரம்
2. விப்ரயோக ஷ்ருங்காரம் அல்லது விப்ரலம்ப ஷ்ருங்காரம்
3. சம்போக ஷ்ருங்காரம்

## 2. ஹாஸ்ய ரஸம்

இரண்டாவது ஹாஸ்ய ரஸம் ஆகும். இது ஸ்ருங்கார ரஸத்தில் இருந்து உற்பத்தியாகிறது. கருணா ரஸத்தை எதிர் ரஸமாகக் கொண்டது. ஹாஸ்ய ரஸத்தின் நிறம் வெள்ளை. ஹாஸ்யம் இரு வகைப்படும். ஒன்று ஆத்மாஸ்த் *(Self – Based)* பராஸ்த *(Based on others)* நடிகன் ஒருவன் தனக்குத்தானே சிரிப்பது ஆத்மாஸ்த என்றும், பிறரை சிரிக்கச் செய்வது பராஸ்தம் என்றும் நாட்டிய சாஸ்திரம் கூறுகின்றது. அவ்வப்

பாத்திரங்களில் குணஇயல்புகளுக்கு ஏற்றவாறு ஹாஸ்யரசம் வெளிக்காட்டப்பட வேண்டும் என நாட்டிய சாஸ்திரம் கூறுகின்றது.

### 3. கருணா ரஸம்

இது ஹாஸ்ய ரஸத்தின் எதிர் ரஸமாகத் திகழ்கிறது. இதன் நிறம் சாம்பல் ஆகும். இவ் ரஸம் சோக ரஸத்தின் உற்பத்திக்கு காரணமாக அமைகின்றது. அரங்கில் இந்த ரஸம் பின்வருமாறு வெளிக்காட்டப்படல் வேண்டும். அவை கண்ணீர்விடல், அழுகை, வறண்ட தொண்டையும் வாயும், கைகால்களின் சோர்வு, மூச்சுவாங்கல் (*Gasping for breath*) ஞாபகமறதி போன்றவை.

இந்த ரஸத்தின் இலட்சணம் என்னவென்றால் ஒருவருக்கு பிரியமானவரின் மரணத்தினாலோ அல்லது கொடூரமான வார்த்தைகளைக் கேட்பதனாலோ தான் சோகரஸம் உற்பத்தியாகிறது என்பதால் இந்த ரஸத்தை அழுகை, கண்ணீர், சுயநினைவை இழத்தல், பெருமூச்சு போன்ற செய்கைகளால் மேடையில் வெளிப்படுத்தலாம். கருணா ரஸமானது உத்தம, மத்யம, அதம என மூவகைப்படும்.

### 4. ரௌத்த ரஸம்

அடுத்ததாக வருவது ரௌத்ர ரஸம். அற்புத ரஸம் எதிர் ரஸமாகவும் ருத்திரனை தேவதையாகவும் கொண்ட இந்த ரஸத்தின் நிறம் சிவப்பு. இலட்சணம் என்னவெனில் எதிரி இழைத்த தீங்கினால் (*Oyyence*) உண்டாக்கப்பட்ட கோபம் ஆகும்.

ரௌத்த ரஸத்தினை மேடையில் நடித்துக் காட்டும் பொழுது கண்களை சிவக்கச் செய்தல், கடுமையாக வியர்வை சிந்துதல், புருவத்தைச் சுருக்குதல், கைகளைக் கொட்டுதல், பற்களை நறுக்குதல் (கடித்தல்), அடித்தல், புழுகுதல், கைகளை அடித்தல், தோள்களைத் தூக்குதல், நிலத்தில் அடித்தல், சப்தமிடல், கோபத்துடன் பிடித்தல் முதலிய செயல்கள் மூலம் காண்பிக்க வேண்டும்.

### 5. வீர ரஸம்

சத்வகுணப் பிரதானமாக இந்த ரஸம், பயாகை ரஸத்தின் எதிர் ரஸமாகும். இதன் நிறம் மஞ்சள் அல்லது வெண்மை கலந்த சிவப்பு வீர ரஸத்தின் இலட்சணம் சிறப்பானவற்றை அடைய முயற்சி செய்தலாகும். வீரத்திற்கும் சக்தி தான் முக்கியம் என கருதப்படுகின்றது.

இவ் ரஸமானது பின்வருவனவற்றினால் மேடையில் நடித்துக் காட்டப்படல், வேண்டும். அவை ஸ்திரத்தன்மை (*Steadiness*) மனோதைரியம், பலம், தியாகம், மேதாவிலாஸம் (*Expertness*) வீரம், தைரியம், திறமை, உதவியை நாடல் முதலியனவாகும்.

வீர ரஸமானது ஆர்வம், விடாமுயற்சி, கவலையின்மை, ஆச்சரியமின்மை ஆகியவற்றில் இருந்து பிறக்கிறது. அரங்கத்தின் இந்த ரஸத்தினை வெளிக்காட்டும் போது பிறரின் தவறான செயல்களை கடிந்துரைத்தல், வீரத்தின் வெளிப்பாடு, தைரியம், நயனத்தன்மை *(Heroism)*, ஈடுபாடு ஆகியவற்றால் வெளிப்படுத்த வேண்டும்.

வீர ரஸத்தின் சகஜம் ஆஹார்யம் என இரு வகைகள் உள. சகஜம் என்றால் இயற்கையில் ஒருவனிடத்தில் காணப்படும் வீர உணர்ச்சி ஆஹார்யம் என்பது பெற்றுக்கொண்ட *(Acquired)* வீரம் ஆகும்.

## 6. பயாகை ரஸம்

பயாகை ரஸமானது அஹங்காரத்தைக் கணமாகவும் வீரரஸத்தை எதிர் ரஸமாகவும் கொண்டது. பயத்தை ஸ்தாயிபாவமாகக் கொண்ட பயனாக ரஸத்தின் இலட்சணம் என்னவென்றால் ஒருவருக்கு விருப்பமில்லாதவற்றின் நிகழ்வுகளினால் ஏற்படும். வெறுப்பினால் ஒருவரது உள்ளத்திலேயே உண்டாகும் மன வேதனைகளினால் ஏற்படும் வெளிப்பாடு ஆகும்.

பயாகை ரஸத்தில் மூன்று பிரிவுகள் உள்ளன. அவற்றில் முதலாவது பயங்கரமானது இரண்டாவது பிறருக்கு தான் செய்த தீங்கினால் உண்டாவது. மூன்றாவதாக பிறரினால் அவரவர் சுயதேவைகளுக்காகச் செய்த காரியங்களால் உண்டாக்கப்பட்டது. இந்த ரஸம் பொய்யால் ஏற்படுவது, தவறுகளால் ஏற்படுவது, அபாயம் வருவதை உணர்வதாலே ஏற்படுவதென மூவகைப்படும் என நாட்டிய சாஸ்திரம் கூறுகிறது.

## 7. பீபத்ஸ ரஸம்

ஏழாவது ரஸமாக அமைவது பீபத்ஸம். அஹம்கார, தாமஸ குணங்களைக் கொண்டதாய் விளங்கும் இந்த ரஸத்தின் ஸ்தாயி பாவம் வெறுப்பு ஆகும். ஸ்ருங்கார ரஸம் இதன் எதிர் ரஸமாகும். இதன் நிறம் நீலம். இந்த ரஸமானது அரங்கில் பாவனை செய்யப்படும் பொழுது சர்வ அங்கங்களையும் ஒடுக்குதல், முகத்தை முன்னும் பின்னுமாக அசைத்தல், கண்களை சுழற்றல், நெஞ்சுவலி, மனவருத்தம், கவலை, உமிழ்தல், துப்புதல், வெறுப்பை வெளிப்படுத்தல் போன்ற இன்னோரன்ன செயல்களால் பிரதிபலிக்கப்படல் வேண்டும். பீபத்ஸ ரஸமும் தத்த, அசுத்த, அதியத்த சுத்த என மூவகைப்படும் சுத்த என்பது பரிசுத்தமானது.

அதாவது சுத்தமானது இரத்தம், அசுத்தம் என்பது பரிசுத்தமற்றது. அதாவது புழுக்கள் முதலியன அதியத்தசுத்த என்பது மிகமிகப் பரிசுத்தமானது. மூன்றாவது வகைக்கு உதாரணமாக தன்னையே அறிந்து கொண்ட ஞானத்தால் உலக வாழ்க்கையை வெறுத்து அதனை நீத்த துறவிகளைக் கூறலாம்.

## 8. அற்புத ரஸம்

ரௌத்ர ரஸத்தின் எதிர் ரஸமாகவும் சத்துவ குணப்பிரதானமானதாகவும் அமைந்துள்ள இந்த ரஸம் மஞ்சளை தனது ரஸமாகவும், பிரம்மாவை தேவதையாகவும் கொண்டுள்ளது. ஆச்சரியத்தை ஸ்தாயி பாவமாகக் கொண்டது இவ் ரஸமாகும்.

ஆச்சரியத்தை ஸ்தாயி பாவமாகக் கொண்ட அற்புர ரஸத்தின் இலட்சணம் என்னவென்றால் சாதாரணமானவற்றிலிருந்தும் வேறுபட்ட மேற்பட்டவற்றைக் காண்பதால் மனத்தில் உண்டாகும் விரிவு என்பனவாகும். கிடைக்க முடியாதது மனிதரால் செய்ய முடியாததைச் செய்தலாகும்.

## 9. சாந்த ரஸம்

கடைசியாக வருவது சாந்த ரஸம். தனது நாட்டிய சாஸ்திரத்திலே எண்வகை ரஸங்களையே விதந்துரைத்துள்ளனர். சத்வகுணத்தை பிரதானமாகவும் மோட்சத்தை புருஷார்த்தமாகவும் கொண்டதே சாந்த ரஸம்.

கவலை, சந்தோஷம், குரோதம், பொறாமை போன்ற குணங்கள் இல்லாதவிடத்து எல்லா ஜீவராசிகளும் சமம் என நினைத்து செயலாற்றும் போது உண்டாகின்றது. மனதிலே எந்தவித உணர்ச்சிகளும் ஏற்படாத நிலைதான் சாந்தம். ஆகையால் கண்ணீர், வியர்வை, மயக்கம், குரல் மாற்றம், நடுக்கம் ஆகிய சாத்வீக பாவங்கள், சாந்தவீக பாவங்கள், சாந்தரஸத்தில் காணப்படமாட்டா.

சாந்த ரஸம் இரண்டு வகைப்படும் ஒன்று தான் விரும்பிய பொருளை அடைந்ததால் ஏற்பட்ட பூரண சந்தோசத்தால் ஏற்பட்டதாகவோ அல்லது கடவுளைக் கண்டதால் ஏற்பட்ட பரமானந்தத்தால் உண்டானதாகவோ இருக்கும். மற்றையது முன் ஜென்மத்தில் ஒருவர் செய்த நற்குண நற்செய்கைகளை அடிப்படையாகக் கொண்டதாகவோ அன்றி ஒருவரின் நிகரற்ற ஒப்புயர்வற்ற செய்கையால் உண்டானதாகவோ இருக்கும்.

### கடமையைச் செய்யவே கடவுளும் விரும்புகின்றார்

இந்த உலகினில் பிறந்த ஒவ்வொருவருக்கும் கடமைகளை ஆண்டவன் தந்திருக்கின்றார். அவை உனது ஆற்றலுக்கும் பெறுமதிக்கும் ஏற்றவாறு தரப்படுகின்றது. அவற்றை சந்தோஷமாக ஏற்றுக்கொள்வாயாக. அந்தக் கடமைகள் பூரணமாகும் வரை அவற்றுடன் சம்மந்தமாகி இசைந்து இரு. பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியனாக இருந்தால் ஒவ்வொரு 40 நிமிட வேளையிலும் மாணவர் கல்விக்காகவே உன்னை அர்ப்பணித்து விடு. அந்த 40 நிமிட வேளையில் உன்னுடைய கடமையைச் சரிவர ஆற்ற முடியாவிட்டால் உன்னை இயற்கையே தூக்கி எறிந்துவிடும். இதுவே உலக நியதி.

# முன்னேற்றப்பாதையில் முயற்சியாண்மை

திரு. செ. சுஜிதரன்,
பழைய மாணவன்.

வேகமாக வளர்ச்சியடைந்து வரும் இன்றைய உலகில் மாற்றம் ஒன்று மட்டுமே மாற்றமுடியாததாகும். மக்கள் அனைவரும் மாற்றத்தை உள்வாங்குபவர்களாகவே காணப்படுகின்றனர். உயர்ந்துவரும் பணவீக்கத் தாக்கத்தினால், வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதற்காகப் போராடுகின்றனர். எனவே, அரசாங்கத் துறையில் இருந்து தனியார் துறைக்கு மாறிவருவோரின் தொகை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இக்காலகட்டத்தில் முயற்சியாண்மை என்ற எண்ணக்கரு தோற்றம் பெறுகின்றது. மனிதர்களின் தேவைகளும், விருப்பங்களும் மிக சடுதியாக உயர்வடைகின்றன. ஒரு தேவையை நிறைவேற்றுவதற்கு சந்தையில் பல்வேறு பொருட்கள் காணப்படுகின்றன.

முயற்சியாண்மை என்ற எண்ணக்கருவை விளங்கிக்கொள்வதற்கு முன் முயற்சியாளர் என்பவர் யார் என்பதை இனம்காண வேண்டும். வியாபார சந்தர்ப்பங்களை இனம் கண்டு வியாபார ரீதியான முடிவுகளை மேற்கொண்டு அதில் வெற்றி தோல்விகள் ஏற்படக்கூடிய நிச்சயமின்மையின் மத்தியில் நட்ட அச்சமுடன் தமது வியாபார நோக்கங்களையும் இலக்குகளையும் அடைவதற்கு வளங்களை ஒன்றிணைத்து புதிய முயற்சியொன்றை ஏற்படுத்துபவர் முயற்சியாளர் ஆவார்.

முயற்சியாளரின் பணிகளாவன,

- புதுமைகளை படைத்தல்
- புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பித்தல்
- நட்ட அச்சங்களைப் பொறுப்பேற்றல்
- நிச்சயமற்ற தன்மைகளுக்கு முகம் கொடுத்தல்
- தொழில்சார் முடிவெடுத்தல்
- தொடர்புபடுத்தல்

இச்சேவைகளினூடாக ஒரு நாட்டிற்கு தேசிய, பிரதேச, தனியாள் ரீதியான பிரதிபலன்கள் பல கிடைக்கப்பெறுகின்றன.

முயற்சியாளர் ஒருவர் சிறப்பான இடத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பல வகையான தடைகளை வெற்றிகொள்ள வேண்டும். அத்தடைகளாக,

1. அரசியல் தடைகள்
2. சட்டரீதியான தடைகள்
3. பொருளாதார தடைகள்

போன்றன காணப்படுகின்றன. இத் தடைகளை வெற்றிகொள்வதற்காக சில உபாயங்களைக் கடைப்பிடித்தல் அவசியமானதாகும். அவையாவன

- **திட நம்பிக்கை :**

  திட்டத்தின் நோக்கத்தை அடைவதற்குச் செல்லும்போது ஏற்படும் தடைகளையும் எதிர்கொள்ளும் ஆற்றல் வேண்டும்.

- **அர்ப்பணிப்பு**

  நோக்கத்தை அடைந்து கொள்வதற்காகச் செல்லும் போது சில அர்ப்பணிப்புக்களைச் செய்வதன் மூலம் வெற்றியடையக்கூடிய வாய்ப்புள்ளது.

- **நெகிழும் தன்மை**

  சூழல் மாற்றங்களுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்கின்ற ஆற்றல் வேண்டும்.

- **ஊக்கம்**

  நோக்கத்தை அடைந்து கொள்வதற்கான உற்சாகம் இருத்தல் வேண்டும்.

- **உபாயத் தன்மை**

  சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் தனது வளங்களைப் பயன்படுத்தல்.

முயற்சியாளரொருவரின் பிரதான இலக்காக விற்பனையை அதிகரித்தல் காணப்படுகின்றது. இப்பிரதான இலக்கை அடைவதற்கு சில நிர்ணயித்த உப இலக்குகளை அடைய வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

- நுகர்வோரைக் கண்டறிதல்
- தேவைகளை இனம்காணல்
- நுகர்வோருக்கு மதிப்பளித்தல்
- பொருட்களை கவர்ச்சிகரமாகக் காட்சிப்படுத்தல்
- சலுகை, போட்டி வசதிகளை ஏற்படுத்தல்
- பொருட்களின் இருப்பைத் தேவையான மட்டத்தில் பேணல்
- நியாயமான விலைக்கு விற்றல்
- போட்டியாளர் பற்றி அவதானமாக இருத்தல்
- சுயசக்தி மதிப்பீடு

முயற்சியாண்மையில் ஏற்படும் முன்னேற்றம் காரணமாக அரச நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் பல வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. ஏனெனில் ஒரு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் முயற்சியாண்மையின் பங்களிப்பு உயர்ந்த இடத்தை வகிக்கின்றது. நிதி வசதி மட்டுமின்றி நிதியல்லா வசதிகளும் வழங்கப்படுகின்றன. உ-ம் : தொழில்நுட்ப வசதி, ஆலோசனை வசதி, விநியோக வசதி என்பனவாகும். இவையெல்லாம் எதற்காக? முயற்சியாண்மைத்துறையின் முன்னேற்றத்திற்கென்றால் அது மிகையாகாது.

முயற்சியாண்மையொன்றில் ஈடுபடும் முயற்சியாளர் ஒருவர் சவால்களை எதிர்கொண்டு அவற்றைத் தனக்குச் சாதகமாக்கி சோதனைகளைக் கண்டு துவண்டுவிடாது எதிர்நீச்சல் போட்டு திட நம்பிக்கையுடன் செயற்பட ஆரம்பிப்பாரானால், அம் முயற்சியாளரை வெற்றிகொள்ள எவராலுமே முடியாது. உலகில் பெயர் சொல்லக்கூடிய அளவிற்கு சிறப்பான இடத்தைப் பெற்றுக்கொள்வார் என்பதில் ஐயமில்லை.

# நனோ தொழினுட்பம்
# Nano Technology

ப. பிரிந்தினி,
பழைய மாணவி.

விஞ்ஞானம் வேகமாக வளர்ந்துவரும் இந்த நூற்றாண்டிலே இன்று பலராலும் பேசப்பட்டுவரும் நனோ தொழினுட்பமானது விஞ்ஞானம் கண்ட பரிணாம வளர்ச்சியின் புதிய திருப்பு முனையாகும்.

நனோ தொழினுட்பம் எனப்படுவது 100 நனோ மீற்றருக்கும் குறைவான அளவுகளால் அமைந்த உருவ அமைப்புக்களைக் கொண்டு அச்சிறு அளவாக அமையும் பொழுது சிறப்பாக வெளிப்படும் பண்புகளைக் கொண்டு ஆக்கப்படும் கருவிகளும் அப் பொருட் பண்புகளைப் பயன்படுத்தும் நுட்பவியலும் நனோ தொழினுட்பம் என அழைக்கப்படுகிறது.

சடப்பொருட்களின் நுண்ணிய துணிக்கைகள் காட்டும் வியத்தகு இயல்புகளே நனோ தொழினுட்பம் பற்றிய கொள்கை உருவாக வழிவகுத்தன. 1959ம் ஆண்டில் நோபல் பரிசைப் பெற்ற பௌதீகவியலாளரான றிச்சாட் ஃபென் *(Richard Feynman)* என்பவரே நனோ தொழினுட்பத்திற்கான எண்ணக்கூற்றை விஞ்ஞான ரீதியாக முன்வைத்தராவார். எனினும் புராதனகால உரோமர்களையே நனோ தொழினுட்பத்தின் முன்னோடிகளாகக் கருதலாம்.

ஒரு நனோ மீட்டர் என்பது ஒரு மீட்டரின் 1000 000 000ல் (ஒரு பில்லியனின் $10^9$) ஒரு பங்கு. அதாவது $10^{-9}$. ஒரு நனோ மீட்டர் நீளத்தில் 8 – 10 வரையான அணுக்களே அமர முடியும். சாதாரணமாக மனிதர்களின் தலைமுடியானது 70000 – 80000 நனோ மீட்டர் தடிப்புடையது.

நனோ தொழினுட்பம் என்பது உண்மையிலேயே பல துறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய, ஏற்படுத்தி வரும் ஒரு நுட்பமாகக் காணப்படுகிறது. நனோ தொழினுட்பம் ஒரு தனிப்பட்ட துறையில் மட்டும் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கவில்லை. மாறாக உயிரியல், வேதியியல், இயற்பியல், மின்னியல், மருத்துவம், பொறியியல் என்று பல் துறைகளில் தாக்கம் செலுத்தி வருகின்றது.

நனோ தொழினுட்பம் மூலம் 1 - 100 நனோ மீற்றர் அளவிலான பொருட்களின் இயல்புகளை அறிந்து கட்டுப்படுத்தி அதன் தனிச்சிறப்பால் நிகழும் புது விளைவுகளின் அடிப்படையில் புதுப் பயன்பாடுகளுக்கு வழிவகுக்க முடியும். கருவிகளைச் சிறிதாக்கிக் கொண்டே போவதன் விளைவாக *Force Microscope* மற்றும் *Funneling Microscope* போன்ற மிகுந்த துல்லிய நுண் கருவிகள் கிடைத்துள்ளன. இந்த தொழினுட்பம் மூலம் வெவ்வேறு பண்புகளையுடைய துணிக்கைளை ஒன்றுசேர்க்க முடிகிறது.

உதாரணமாக காந்தவியல், மின்னியல் அல்லது ஒளியியல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நனோ துணிக்கைகள் தொகையாகக் கொண்டுவரும் போது அவை தமது பொறியியல் தன்மையைக் காட்டுகின்றன. உதாரணமாக பாரம்பரிய பொலிமரை நனோ தொழினுட்பத்தால் உறுதியூட்டலாம். இவற்றை நாம் உலோகங்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம். இதனால் பாரமற்ற உறுதியான அமைப்புகள் கிடைக்கின்றன. நனோ தொழினுட்பத்தால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் பல ஏற்கெனவே சந்தைக்கு வந்துவிட்ட நிலையிலும் மக்கள் மத்தியில் அவை தொடர்பான விழிப்புணர்வு குறைவாகவே காணப்படுகிறது.

நனோ எனும் பெயரைத் தமது வர்த்தகப் பெயராகக் கொண்டிருக்கும் பெரும்பாலான பொருட்களின் உற்பத்தியின் பின்னணியிலிருப்பது நனோ தொழினுட்பமே ஆகும். இன்று விளம்பரப்படுத்தப்படும் "சில்வர் நனோ" சலவை இயந்திரங்கள் நனோ தொழினுட்பத்தாலானவையே. காபன் அணுவைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் காபன் நனோ குழாய்கள் டெனிஸ் மட்டைகள் போன்ற பல பொருட்கள் உற்பத்தி செய்யப்பட வழிவகுக்கின்றன. இத்தகைய டெனிஸ் மட்டைகள் குறைந்த பாரமுடையனவாகவும், உறுதிமிக்கனவாகவும் உள்ளதால் வர்த்தக ரீதியாகப் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

முன்னைய காலங்களில் சூரிய வெப்பத்தில் இருந்து சருமத்தைப் பாதுகாப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட கிறீம் வகைகள் பூசிய பின்னர் வெள்ளை நிறமாக சருமத்தின் மேல் தோற்றமளிப்பன. ஆனால் தற்போது நனோ தொழினுட்பத்தால் உற்பத்தி செய்யப்படும் அத்தகைய கிறீம் வகைகள் மிகச்சிறிய துணிக்கைகளைக் கொண்டிருப்பதால் பூசிய பின்னரும் பூசியது போல் தோற்றமளிக்காத தன்மையுடையன.

நனோ தொழினுட்பத்தால் உற்பத்தி செய்யப்படும் துணிவகைகளின் நுண்ணிய இழைகள் காரணமாக அவற்றில் அழுக்குகள் தங்குவதில்லை. அதே சமயம் அவை கசங்கும் தன்மையற்றன. இதனால் அத்துணிக்கைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் ஆடைகளை சலவை செய்யவோ அழுத்தவோ வேண்டியதில்லை.

நனோ தொழினுட்பத்தாலான குளிர்சாதனப் பெட்டிகளின் அறிமுகம் எந்த ஒரு உணவையும் மிக நீண்ட நாட்களுக்குப் பழுதடையாமல் பேண வழிவகுத்து உள்ளது. இவை தவிர உறுதிமிக்க கட்டடப் பொருட்கள் மற்றும் டயர்களை உருவாக்கவும் நனோ தொழினுட்பம் பயன்படுகிறது. நனோ மூவாயிகளின் அறிமுகமானது மேசையில் வைத்து உபயோகிக்கப்படும் கணனிகளை சாதாரண மக்களும் உள்ளங்கையில் வைத்து உபயோகிக்கும் காலத்தை வெகுவிரைவில் உருவாக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இம் மூவாயிகள் சிலிக்கன் குறைகடத்திக்கான உலக சந்தையை எதிர்காலத்தில் முற்றாக இல்லாதொழிக்கும் சாத்தியக்கூறுகளைக் கொண்டிருப்பதுடன் சகல தகவல்

தொழினுட்ப சாதனங்களும் வினைத்திறன் மிக்க வகையில் உற்பத்தி செய்யப்படவும் வழிவகுக்கின்றன.

மருத்துவ ரீதியாக நனோ தொழினுட்பத்தின் பிரயோகமானது மாபெரும் புரட்சியொன்றை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இந்நுட்பத்தால் உற்பத்தி செய்யப்படும் மருந்துகள் உட்கொண்ட மறுகணமே சம்பந்தப்பட்ட பகுதியில் தொழிற்படும் ஆற்றல் மிக்கன. இதனால் சாதாரண நோயாளியொருவர் தனது நோய் குணமாக நீண்ட நேரமோ அல்லது நீண்ட நாட்களோ காத்திருக்க வேண்டிய அவசியமற்றுப் போகிறது.

நனோ தொழினுட்பத்தால் உருவான நுண்ரோபோக்களை உடலினுள்ளே செலுத்தி தொற்றுநோய்க்கிருமிகளையும், நோய்க் கலங்களையும் கண்டறிய வைக்கும் முயற்சிகள் ஆராய்ச்சி மட்டத்திலுள்ளன. மருத்துவத்துறைக்கே மாபெரும் சவாலாக அமைந்துள்ள நோய்களில் ஒன்று புற்றுநோயாகும். புற்றுநோய்க்கலங்களை வேறுபடுத்தி அறிவது கடினம். அத்துடன் அவை வேகமாகப் பரவும் ஆற்றல் மிக்கன. புற்றுநோய்க்கான இன்றைய மருத்துவ தீர்வுகள் யாவுமே விரைவாக வளர்ச்சியடையும். அல்லது பரவும் கலங்களை அழிக்கும் செயற்பாட்டையே மேற்கொள்கின்றன. இதன் காரணமாகப் புற்றுநோய்க் கலங்களுடன் சேர்ந்து அதே இயல்புடைய ஏனைய சில கலங்களும் அழிக்கப்படுகின்றன. இதுவே புற்றுநோய்க்கான மருத்துவப் பரிகாரத்தை மேற்கொள்பவர்களின் தலைமயிர்கள் வேகமாக உதிர்வதற்குக் காரணமாகின்றது. ஆனால் இன்னும் ஆய்வு மட்டத்திலேயே உள்ள நனோ தொழினுட்பத்தால் உருவாக்கப்படும் நனோ கோளங்கள் புற்று நோய்க்கலங்களை மட்டும் தேடி அழிக்கக் கூடிய வல்லமை படைத்தவை. இவற்றின் அறிமுகம் புற்றுநோயைப் பரிகரிப்பதுடன் மட்டுமன்றி பரிகரிப்பால் ஏற்படும் பக்க விளைவுகளையும் கட்டுப்படுத்துவதிலும் பெரும் பங்குவகிக்கும்.

இன்று முழு உலகுமே எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை பூகோளம் வெப்பமடைதலாகும். மனித செயற்பாடுகளால் அதிகளவில் வெளிவிடப்படும் காபனீரொட்சைட் மற்றும் பச்சைவீட்டு வாயுக்கள் பூகோளம் வெப்பமடைதலில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இன்னும் பரிசோதனை மட்டத்திலேயே உள்ள விசேட நனோ துணிக்கைகள் மேலதிகமாகவுள்ள மேற்படி வாயு மூலக்கூறுகளை அழிக்கவல்லன. இதனால் எதிர்காலத்தில் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரலாம் என விஞ்ஞானிகள் எதிர்வுகூறுகின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் நனோ தொழினுட்ப ஆய்வுகளுக்கென விஞ்ஞான பேராசிரியர்களின் வழிகாட்டலுடன் இலங்கை நனோ தொழினுட்ப நிறுவகம் நிறுவப்பட்டுள்ளது. ஆக்கபூர்வமான நனோ தொழினுட்ப ஆய்வுகளுக்கும் கண்டுபிடிப்புக்கும் களமமைத்துக் கொடுப்பதுடன் மட்டுமன்றி மற்றைய நாடுகளுடன் பொருளாதார ரீதியாக இலங்கையையும் போட்டியிடச் செய்வதற்கான ஒரு ஆரம்பகட்ட முயற்சியே இந்நிறுவனத்தின் தோற்றமாகும்.

இன்று உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் சூழல் மாசடைதலும் பூகோளம் வெப்பமடைதலும் 19ம் நூற்றாண்டின் கைத்தொழில் புரட்சி தந்த பக்கவிளைவுகள் என்பது தெளிவு. மனிதன் இப்பக்கவிளைவுகளைக் கட்டுப்படுத்துவதில் இன்னும் முழுமையான வெற்றியீட்டவில்லை. இந் நிலையில் நனோ தொழினுட்பத்தால் உருவாகவிருக்கும் புது யுகம் தரப்போகும் சகல பக்கவிளைவுகள் பற்றியும் எதிர்வு கூறல் சற்றுக் கடினமானதே.

நனோத் துணிக்கைகள் நச்சுத் தன்மையானவை. இவற்றை மருத்துவ ரீதியாக உள்ளெடுக்கையில் அவை மூளை தொண்டைக்குழி, நுரையீரல் போன்ற பாகங்களில் ஒன்றுதிரட்டப்பட்டு வேறு நோய்களோ அல்லது உயிராபத்தோ ஏற்படக் காரணமாகலாம். இந் நச்சுத்தன்மை நனோ தொழினுட்பவியல் பிரயோகத்திலுள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் ஆபத்தாக அமையலாம்.

வெயிலிலிருந்து சருமத்தைப் பாதுகாக்கும் கிறீம்கள் மேற்றோலிலுள்ள இறந்த கலங்களின் மீதே பூசப்படுவதால், அக் கிறீம்களில் நனோ தொழினுட்பவியலின் பிரயோகம் மனிதனுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதில்லை எனவும் நம்பப்படுகிறது.

இயற்கையில் உருவாகும் மூலகங்களிலிருந்து பெறப்படும் நனோ துணிக்கைகளின் பிரயோகத்தால் இத்தகைய பாதகமான விளைவுகள் தவிர்க்கப்படலாமெனவும் நம்பப்படுகிறது. நனோ தொழினுட்பத்தால் திறன்மிக்க சக்தி வாய்ந்த ஆயுதங்களைப் பருமனில் சிறிதாக மிகவும் குறைந்த செலவில் வடிவமைக்கலாம். இது ஆயுதக் கலாசாரம் மலிந்துள்ள இன்றைய உலகில் தனிநபர் மற்றும் நாடுகளின் பாதுகாப்பை அச்சுறுத்துதலுக்குள்ளாக்கும்.

நனோ தொழினுட்பம் மரபணுக்களை மாற்றியமைக்கப் பயன்படலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதனால் உயிரினங்களின் இயற்கையான வாழ்வியல் மீறப்படலாம். இதன் காரணமாக ஏற்படப்போகும் விளைவுகள் எதிர்வு கூறப்பட முடியாதவை.

நனோ தொழினுட்பத்தின் அறிமுகம் பொருளாதார ரீதியாகப் பெருமளவில் முக்கியத்துவம் பெறுவதால் அதன் எதிர்காலத்தை உணர்ந்து பல முன்னணி நிறுவனங்கள் நனோ ஆய்வுகளில் பாரிய பண முதலீடுகளை மேற்கொள்கின்றன. இதனால் இவ் வாய்ப்புக்கள் துரித கதியில் முன்னேற்றம் காணும் வாய்ப்புக்கள் உள்ளன.

உயர் தொழினுட்பத்தால் இயற்கையை மீறத் தெரிந்த மனிதனுக்கு இயற்கையின் சீற்றத்தை துல்லியமாக எதிர்வு கூறுவதோ அல்லது பூரணமாக எதிர்கொள்வதோ இன்னும் கடினமாகவே இருக்கிறது. இயற்கை மீறப்படாத வகையில் நனோ தொழினுட்பத்தால் ஏற்படும் எந்தவொரு முன்னேற்றமும் வரவேற்கத்தக்கதே.

# நெற்பயிர்ச் செய்கையின் உற்பத்தி அதிகரிக்க.....

மு. திருஞானசம்பந்தர்,
பழைய மாணவன்.

இலங்கையின் பயிர்ச்செய்கையில் நெல் பிரதான இடத்தை வகிக்கின்றது. எமது நாட்டில் பயிர் செய்யப்பட்ட நெல்வர்க்கங்களில் இருந்து குறைந்தளவு விளைச்சலையே பெறக்கூடியதாக இருந்தது. அக்காலத்தில் விவசாயிகளுக்கு நன்மை தரக்கூடிய பல இயல்புகளைக் கொண்ட தாவரங்களில் இருந்து பெறப்பட்ட விதைகளை செய்கை பண்ணுவதன் மூலமே சிறிதளவேனும் அதிக விளைச்சல் கிடைத்தது.

பின்னர் தேசிய நெல் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்கு 1950களின் முற்பகுதியில் வெளிநாட்டு நெல்வர்க்கங்களை அறிமுகப் படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் மூலம் தேசிய நெல் உற்பத்தியைச் சிறிதளவே அதிகரிக்கக் கூடியதாக இருந்தது.

இக்கால கட்டத்தில் இனக்கலப்பின் மூலம் புதிய நெல்வர்க்கங்களை இனவிருத்தி செய்வது ஆரம்பமாகியது. முதன் முறையாகப் பயிர்ச் செய்கைக்குச் சிபார்சு செய்யப்பட்ட கலப்பின நெல் வர்க்கம் $H-4$ ஆகும். இது 1958ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வகையான வர்க்கங்களின் மூலம் நெல் விளைச்சலைக் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கக் கூடியதாக இருந்தது.

ஆனால் ஆரம்பத்தில் இனவிருத்தி செய்யப்பட்ட இதுபோன்ற வர்க்கங்களில் பழைய நெல் வர்க்கங்களில் காணப்பட்ட சில பின்னடைவான இயல்புகளும் மீதமாக இருந்தன. இந் நெற்பயிர்கள் அதிக உயரமாக வளர்வது, அதிகஅளவில் இலைகளை உற்பத்தி செய்வது, இலகுவாகச் சாய்வது, உரப்பசளைகளுக்குக் குறைவான தூண்டற் பேற்றைக் கொண்டுள்ளமை போன்ற பின்னடைவான இயல்புகளே இங்கு விஷேடமாகக் குறிப்பிடத்தக்கவை ஆகும். இவை பழைய திருத்திய நெல்வர்க்கங்கள் என அழைக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், பின்னர் புதிய தாவர வடிவங்களுடன் நெல்வர்க்கங்கள் இனவிருத்தி செய்தவுடன் நெல்வர்க்கமொன்றில் அதி உச்ச அளவான அறுவடையைப் பெறக்கூடியதாக இருந்தது. 1970இல் சிபார்சு செய்யப்பட்ட $B.g-11$ என்ற வர்க்கம், இவ்வகுப்பைச் சேர்ந்த ஆரம்ப நெல் வர்க்கமாகும். இவ் வர்க்கங்களில் கூடிய விளைச்சலைப் பெறக்கூடியதாய் இருப்பதற்கான காரணங்களாவன, மத்திய அளவான உயரமுடையவையாக இருப்பது. நேரான, கட்டையான இலைகள் காணப்படுவது, சாய்தலுக்கு எதிர்ப்புத்தன்மையுடையது, முக்கியமாக நோய்ப்பீடைகளைத் தாங்கி வளரும் தன்மை, பசளைகளுக்கு அதிக தூண்டற்பேறுடைய தன்மை ஆகிய பயனுள்ள அம்சங்களாகும்.

இவற்றைத் தவிரப் பழைய நெல்வர்க்கங்களின் விஷேட இயல்பாகக் காணப்பட்ட, கூடிய வைக்கோலும் குறைந்த தானிய விளைச்சலுக்குப் பதிலாகப் புதிய விருத்தி செய்யப்பட்ட வர்க்கங்களின் மூலம் குறைந்த வைக்கோலையும் கூடிய தானிய விளைச்சலையும் பெறக்கூடியதாக இருந்தது. இதற்கு விஷேடமாகக் கவனம் செலுத்த வேண்டியது களைகளைக் கட்டுப்படுத்துவதில் ஆகும்.

தற்போது பயிர் செய்யப்படும் நெல்வர்க்கங்களைப் பிரதானமாக 3, 3½, 4, 4½, 5 மாத வயதுப்பிரிவுகளாகப் பிரிக்க முடியும். நெல் வர்க்கங்களுக்குப் பெயரிடும்போது பயன்படுத்தப்படும் முதல் இரு எழுத்துக்களின் மூலம் இனவிருத்தி செய்யப்பட்ட நிலையத்தை அடையாளம் காணமுடியும். அவையாவன Bg – பந்தலகொடை, Bw- போம்புவளை, Ld – லபுதுவ, Ac – அம்பலாந்தோட்டை ஆகியனவாகும். அதன் பின் வரும் இலக்கங்கள் நெல் வர்க்கத்தின் வயதைக் குறிப்பிடும்.

| இலக்கம் | வயதுப்பிரிவு |
|---|---|
| 300 – 349 | 3 மாதங்கள் |
| 350 – 399 | 3 ½ மாதங்கள் |
| 400 – 449 | 4 மாதங்கள் |
| 450 இல் இருந்து | 4 ½ மாதங்கள் |

விஷேடமாக அண்மைக்காலத்தில் சிபார்சு செய்யப்படும் நெல் வர்க்கங்களுக்கு இப் பெயரிடலே பயன்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக : Bg – 450 என்னும் இனம் பந்தலகொடை மத்திய நெல் இனவிருத்தி நிலையத்தால் விருத்தி செய்யப்பட்ட 4½ மாத வயதுப் பிரிவைச் சேர்ந்தநெல்வர்க்கமாகும். Bw – 351 என்னும் இனமானது, போம்புவளை பிரதேச விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் இனக்கலப்பு செய்யப்பட்ட 3½ மாத வயதுப்பிரிவைச் சேர்ந்த நெல் வர்க்கமாகும்.

இதன் அடிப்படையில் சிபார்சு செய்யப்பட்ட சிவப்பு இன நெல் வர்க்கங்களாவன,

3 மாத இனங்கள் : Bg 301, At 303, Bw 272 – 6 – B
3 ½ மாத இனங்கள் : Bg 350, Bg 34 – 6, Bw 351, At 353, At 354
4, 4 ½ மாத இனங்கள் : H. 4, Bw 400, At 401, At 402, Bw 452
உள்நாட்டு இனங்கள் : பெரியவெள்ளை, மொட்டைக்கறுப்பன், உலர்க்கறுப்பன், பொக்களி, பச்சைப் பெருமாள் போன்றவை ஆகும்.

அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகளின் வகுப்பை இலகுவாக அறிந்து கொள்வதற்காக வித்தியாசமான நிறங்களைக் கொண்ட பெயர்ச்சுட்டிகள் (லேபல்கள்) பயன்படுத்தப்படுகின்றன.

| விதை வகுப்பு | லேபலின் நிறம் |
|---|---|
| இனவிருத்தியாளர் விதை | வெள்ளை (இரு இளஞ்சிவப்பு நிறமான கோடுகளுடன்) |
| அடிப்படை விதை | வெள்ளை |
| பதிவு செய்யப்பட்ட விதை | இளம் பச்சை |
| அத்தாட்சிப்படுத்திய விதை | இளம் நீலம் |

நெற்செய்கையில் உயர் விளைவினைப் பெறுவதற்கு ,

1. மண் வளத்தைக் கூட்டுங்கள்
2. சிறந்த முறையில் நிலத்தைப் பண்படுத்துங்கள்
3. நல்லின விதையைப் பாவியுங்கள்
4. உரிய காலத்தில் விதையுங்கள்
5. உகந்த பசளை இடுங்கள்
6. களையைக் கட்டுப்படுத்துங்கள்
7. நீர் முகாமைத்துவம் செய்யுங்கள்
8. ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தைக் கடைப்பிடியுங்கள்
9. உரிய நேரத்தில் அறுவடை செய்யுங்கள்

**உகந்த பசளைப் பிரயோக முறைகளாவன,**

முதல் உழவுடன் ஏக்கருக்கு 5 தொன் கூட்டெரு அல்லது நன்கு உக்கிய மாட்டெரு இடல் வேண்டும்.

இத்துடன் கடைசி உழவின்போது சிபார்சு செய்யப்பட்ட அடிக்கட்டு உரப்பசைளையை உரிய நேரத்தில் இடுதல் சிறந்த பயனைத்தரும். இதன் அடிப்படையில் 01 ஏக்கருக்கான பசளை இடுதலாக,

அடியுரம் - 75 கிலோகிராம் கலவை

1ம் மேற்கட்டு - 2ம் கிழமை 25 கிலோகிராம் யூரியா அல்லது 50 கிலோகிறாம் அமோனியம் சல்பேற்று

2ம் மேற்கட்டு - 3½ மாத இனத்திற்கு 5ஆம் அல்லது 6ஆம் கிழகைளிற்கு இடையிலும், 4 – 4 ½ மாத இனங்களுக்கு 8ஆம் அல்லது 10ஆம் கிழமைகளுக்கு இடையிலும் இட வேண்டும்.

3ம் மேற்கட்டு - 4 – 4 ½ மாத இனங்களுக்கு 9ஆம் அல்லது 10ஆம் கிழமைகளுக்கு இடையிலும் பசளை இட வேண்டும்.

குறிப்பு – மேலதிக உரப்பாவனையால் மண் உவராதல், பண விரயம், பூச்சி நோய்த்தாக்கம், பயிர் பாட்டத்தில் விழல் போன்ற தீய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். அறுவடைக்குப் பொருத்தமான நேரத்தை இலைகளின் முதிர்ச்சியைக் கொண்டு தீர்மானிக்காது நெல்மணிகளின் முதிர்ச்சியைக் கொண்டு தீர்மானிக்க வேண்டும். 85% நெல்மணிகள் பொன்நிறமானதும் அறுவடை செய்யலாம்.

மேலும் உங்கள் நெல்வயல்களின், மேடு, இடைமேடு, பள்ளம் போன்ற விடயங்களைக் கருத்தில் கொண்டு அவற்றின் நீர் தேங்கிநிற்கக் கூடிய காலத்தின் அடிப்படையில் அதற்கேற்ற வயதுடைய நெல் வர்க்கங்களை தெரிவு செய்து விதைப்பதன் மூலம் தரமான நெல்மணிகளைப் பெறமுடியும். அத்துடன் பூச்சிகளின் தாக்கங்களில் இருந்து பெரும் அளவில் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமாயின் ஒரு குறித்த பகுதியில் உள்ள எல்லா வயல்களிலும் (எல்லா விவசாயிகளும்) ஒரே காலத்தில் விதைக்கவேண்டும். மேற்குறிப்பிட்டவற்றைக் கவனத்தில் கொண்டு செயற்படுவீராயின் அதிகவிளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

"வரப்புயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடியுயரும் குடி உயரக் கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயர்வான்." - ஔவையார் -

# Our School

**J. Thuvarahan,**
Grade - 07.

*I am a student of Navaly Maha Vidyalayam. My school is located in Navaly. It is founded by Pandithar Thambaiah, in a small single building. Vast developments took place year by year and it has become as a leading school. We have a science laboratory and a library in our school. But we don't have a Home science laboratory. Our Principal is Mr. R. Vasanthakumar. Our Vice Principal is Mrs. J. Kumaresamoorthy. There are twenty seven teachers and three hundred and forty students in our school. For the first time, our A/L students have sat for the exam this year. Therefore, we all fell very happy and hope for the future developments of our school.*

# My pet

**S. Damiya,**
Grade - 4.

*My pet is a Puppy. It's name is Tomy. It is brown in colour. It likes meat mostly. It shacks its tail. When I give food. I bath Tomy every week. But it does not like bathing. It jumps over my shoulder. When I come home from school. It barks at stranger and make us aware of others. I love my Pet very much.*

# My Class Teacher

**K. Lanujan,**
Grade - 5.

*My class teacher is Mrs. Jenothini Sivabalathevan. She is a beautiful lady. She helped us for the scholarship exam. She is a devotee of Lord Siva. She comes to school in time. She teaches us in the evenings too. She is very kind and patient toward us. She wears nice sarees. We love our teacher very much. I wish her a happy life.*











பரிசளிப்பு நிகழ்வுகள்

# வருட நிறைவில் கொண்டாடப்படும் விழாக்கள்

ப. லவனிதா,
தரம் - 06.

- முதல் வருடம் நிறைவடையும் போது - காகிதவிழா
- இரண்டு வருடம் நிறைவடையும் போது - பருத்தி விழா
- மூன்று வருடம் நிறைவடையும் போது - தோல்விழா
- நான்கு வருடம் நிறைவடையும் போது - மலர் மற்றும் பழவிழா
- ஐந்து வருடம் நிறைவடையும் போது - மரவிழா
- ஆறு வருடம் நிறைவடையும் போது - சர்க்கரை / கற்கண்டு/ இரும்புவிழா
- ஏழு வருடம் நிறைவடையும் போது - கம்பளி/ செம்பு விழா
- எட்டு வருடம் நிறைவடையும் போது - வெண்கல விழா
- ஒன்பது வருடம் நிறைவடையும் போது - மண்கலச விழா
- பத்து வருடம் நிறைவடையும் போது - தகரம் / அலுமினிய விழா
- பதினொரு வருடம் நிறைவடையும் போது - எஃகு விழா
- பன்னிரெண்டு வருடம் நிறைவடையும் போது - லினன் விழா
- பதின்மூன்று வருடம் நிறைவடையும் போது - பின்னல் பிழா
- பதின்நான்கு வருடம் நிறைவடையும் போது - தந்த விழா
- பதினைந்து வருடம் நிறைவடையும் போது - படிக விழா
- இருபது வருடம் நிறைவடையும் போது - பீங்கான் விழா
- இருபத்தைந்து வருடம் நிறைவடையும் போது - வெள்ளி விழா
- முப்பது வருடம் நிறைவடையும் போது - முத்து விழா
- நாற்பது வருடம் நிறைவடையும் போது - மாணிக்க விழா
- ஐம்பது வருடம் நிறைவடையும் போது - பொன்விழா
- அறுபது வருடம் நிறைவடையும் போது - வைரவிழா / மணிவிழா
- எழுபத்தைந்து வருடம் நிறைவடையும் போது - பவளவிழா
- எண்பது வருடம் நிறைவடையும் போது - அமுதவிழா
- நூறு வருடம் நிறைவடையும் போது - நூற்றாண்டு விழா

# மூன்று எழுத்து

ற. தனுசன்,
தரம் - 03.

அன்னை என்னும் மூன்றெழுத்தில் பிறந்தோம்
அன்பு என்னும் மூன்றெழுத்தில் வளர்ந்தோம்
பள்ளி என்னும் மூன்றெழுத்தில் சேர்ந்தோம்
கல்வி என்னும் மூன்றெழுத்தைக் கற்றோம்
போட்டி என்னும் மூன்றெழுத்தை எதிர்கொண்டோம்
வெற்றி என்னும் மூன்றெழுத்தை அடைந்தோம்.

# காலைக்காட்சி

சு. சுபாஸ்கரன்,
தரம் - 7.

இயற்கை எமக்குத் தந்த இன்பக்காட்சிகள் பல. இவை எம்மிதயத்திற்கு இனிமை பயப்பன. ஒளியூட்டுவன, வளமூட்டுவன. இக்கண்கவர் காட்சிளுள் ஒன்றான காலைக்காட்சி பற்றி நோக்குவோம்.

வானகத்தை வளைத்து மூடிக்கொண்டிருந்த இருள் மெல்லமெல்ல நீங்கத் தொடங்கியது. வானில் முத்துப்பந்தல் போன்று விளங்கிய தாரகைகள் ஒளிகுன்றின. இரவிடை திங்களும் மெதுவாக மறையலானான். கீழ்த்திசை எங்கும் செந்நிறம் பரவத்தொடங்கியது. ஆதவனை வருக வருக என்று வரவேற்பது போல சேவல்கள் கூவின. புள்ளினங்கள் இன்னிசையால் கீதம் பாடின. ஆலயங்களில் இருந்து வந்த நாதவெள்ளம் காற்றுடன் கலந்து சென்றது.

கதிரவனும் தனது பொற்கரங்களை நீட்டி வானில் ஒளி பரப்பினான். புல் நுனியில் இருந்த பனித்துளிகள் பட்டென்று மறைந்தன. இரவு முற்றும் ஒளிமுகம் காட்டின ஒளி விளக்குகள் மங்கலாய்த் தோன்றின. இயற்கை அன்னை கதிரவனின் வருகையை எண்ணிக் களிகூர்ந்தாள். மரங்ளெல்லாம் புத்துணர்வு பெற்று அசைந்தன. புதுமலர்கள் பூத்துக் குலுங்கி மணம் பரப்பின. வண்டுகள் மணமலர்களைத் தேடி ரீங்காரம் செய்து தேனுண்டு களிப்படைந்தன. தாமரைகள் நாயகன் வரவு கண்டு நகைமுகம் காட்டி மலர்ந்தன. விலங்கினங்கள் கண்விழித்து இரைதேடின. ஆவும் கன்றும் மேய்ச்சல் நிலங்களை நாடின. ஆட்டுமந்தைகள் அணியணியாகச் சென்றன.

பெண்டிர் காலைக்கடன்களை முடித்து கோலமிட்டு அலுவல்களில் ஈடுபட்டனர். அலுவலர்கள் காலைக்கடமைகள் முடித்து அலுவலகங்களுக்கு விரைந்தனர். உழவர்கள் காளைகள் முன் கலப்பையுடன் களிப்புடன் வயல்களை நாடிச் சென்றனர். ஆகா! காலைக்காட்சியின் அழகுதான் என்னே! எத்தனை மகிழ்ச்சிகரமானது! உறங்கிக் கிடந்த உள்ளங்களெல்லாம் உயிர் பெற்றன. கண்ணிற்கும் கருத்திற்கும் களி பெருவிருந்தாய் அமைந்த இந்தக் காலைக்காட்சிக்கு இணையாக வேறேதும் உண்டோ?










பாடசாலை நிகழ்வுகள்

# இசையும் வாழ்வும்

இ. இலங்கேஸ்வரி,
தரம் - 11.

தமிழ் மக்கள் வாழ்வில் கூத்தும் பாட்டும் சேர்ந்து நின்று அவர்களின் வாழ்வை நிறைவுபடுத்தியது. இறைவனை ஏழிசையாய் இசைப்பயனாகக் கண்டு இன்புற்ற சிறப்பு எமது முன்னவர்க்கு உண்டு. ஓசை ஒலியெல்லாம் ஆன இயற்கையில் எழுந்த நாத இன்பத்தைக் கண்டு உணர்ந்ததால் வந்த பயனே இசை. எனவே வாழ்வும் இசையும் ஒன்றிற்கொன்று தொடர்புடையவை எனக் கூறப்படுகின்றது. இதற்கு மேலாக இந்த அண்டத்தின் விரிவு அனைத்துமே ஓசையின் அடிப்படையில் அமைந்திருப்பதை நம்முன்னோர் உணர்ந்துள்ளனர்.

இசை இன்றி உலகில் எதுவுமே நடைபெற முடியாது. இதனை அறிவியல் நெறி நின்று உணர்ந்த எம் முன்னவர்கள் இசையின் இசைவை உயிர்களோடு கொண்டுள்ள தொடர்பை இனிமை பயக்கும் நெறியில் அமைத்தனர். எனவே இசை என்பது வாழ்வுமுறை என பொருள்பயப்பதைக் காணலாம். மனித இனத்தின் இன்பதுன்ப உணர்ச்சிகளை அழகுபட எடுத்துக்காட்டும் இயல்பு கலைகளுக்கு உண்டு. இதனை நன்கு ஆராயும் பொழுது உலகில் அமைந்த உயிரினங்களின் வாழ்வியலை நயம்பட எடுத்து விளக்குகின்றது எனலாம்.

"நாத விந்து கலாதித நமோ நமோ" என்ற பாடலில் "ஓம்" என்பது பிரம்மம். அதுவே அனைத்தும் சாமகானமாக விரிந்து நிற்கின்றது. இந்த நாத பிரம்மத்தில் இருந்து பஞ்ச பூதங்களும் தத்துவங்களும் பிரபஞ்சமும் விரிவடைந்துள்ளன. இறைவன் அதாவது நாத பிரம்மம் உயிருடன் ஓங்கார வடிவில் உட்கலந்து ஆத்ம இன்பத்தினைக் கொடுக்கின்றது எனலாம். அதனால் தான் ஓரறிவு உயிர்களிலிருந்து ஆறறிவு மனிதர் வரை இசையானது அனுபூதி இன்பத்தினைக் கொடுக்கின்றது.

கல்லையும் கனிய வைக்கும் இயல்பு இசைக்கு உண்டு என்பதனை தமிழர் சிற்பக்கலை மூலம் தமிழ் நாட்டு ஆலயங்களை நிறுவியுள்ளனர். ஏழிசையின் நாத அமைப்பினை கல்லில் வடித்த திறன் கைவண்ணத்தால் அல்ல உயிர் வண்ணத்தால் ஆனது என்பதே சரியானது. இசையின் நுணுக்கங்களை குருகுல முறையிலோ அன்றி வேறெந்த வகையிலே கற்காத, மரஞ்செடி கொடிகளும், மிருகங்களும் இசையால் ஈர்க்கப்பட்டு இன்பநிலை அடைகின்றன.

தமிழ் மக்கள் வாழ்வினை அறம், புறம் என வகுத்து அதற்கு இலக்கணமாக தம்வாழ்வையே இலக்கியமாக்கி உள்ளனர். அவர்கள் தமது வாழ்வுக்குரிய நிலத்தினை ஐந்து வகையாக பிரித்து குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை ஆகிய அவ்வவ் நிலத்துக்கு உரிய பண் அமைதியும் இசைக்கருவி அமைப்பும் வகுத்து தமது வாழ்வுக்கு பெருந்துணையாகக் கொண்டனர்.

புறவாழ்வாக அமைந்த போர் வணிகம் அரசியல் போன்ற செயற்பாடுகளுக்கு இசையை பயன்படுத்திக் கொண்டனர். இத்தகைய பயன்பாட்டினைக் கொண்டு அதன் உண்மை இயல்பினை நன்கு உணர்ந்து வாழ்ந்த பெருமை எம்முன்னவருக்கே உரித்தாகும். எனவே உயர்குடிமக்களான தமிழர்களே இசைப்பயனை முழுமையாக உணர்ந்து உலகுக்கு உணர்த்தியவர்கள் ஆவர். ஆகவே நயத்தக்க நாகரிகத்தின் பாலமாக அமைந்திருந்த குமரிக்கண்டமே இசையின் இயல்பினை உலகிற்கு எடுத்துக்காட்டியது எனலாம்.

எனவே இவற்றைத் தொகுத்து நோக்கும்போது இசையும் வாழ்வும் ஒன்றையொன்று பிரிக்க இயலாது பின்னிப்பிணைந்தே காணப்படுகின்றன. எனவே நாம் இசையுடன் கலந்து இனிய உயரிய நிலையினை அடைவோமாக.

# நல்லதோர் குடும்பம்

ப. பவித்திரா,
தரம் - 10.

நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம் - என
நல்மொழி சொன்னார் அன்றொரு கவிஞர்
நல்ல குடும்பமெனில் நாள்தோறும் சந்தோசமே!

குடும்பங்கள் தனிலே பல வகைகள் உள்ளதம்மா!
கருக்குடும்பம், கூட்டுக்குடும்பமென இருவேறு பிரிவுகளில்
குடும்பத்துடன் கூடிவாழ்ந்தால் நாள்தோறும் சந்தோசமே!

இனிய மொழிகள் பேசியே – என்றும்
இன்புற்று வாழ்ந்திடவே அன்பான அப்பா அம்மா - இந்த
இனியதோர் குடும்பத்திலே நாள்தோறும் சந்தோசமே!

அன்னை பிதாவைப் போற்றி – நாளும்
அன்பான சகோதரருடன் வாழ்ந்திட்டால் - எம்
அழகான குடும்பச் சூழலிலே நாள்தோறும் சந்தோசமே!

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
கூட்டுக்குடும்பம் தோப்பாகும் - என
கூடியே வாழ்ந்திட்டால் நாள்தோறும் சந்தோசமே!

அகிலத்திலே நாமே அழகான பூக்கள்
அன்பாகவே எம் குடும்பத்துடன் வாழ்ந்திட்டால் - எம்
நல்லதோர் குடும்பத்திலே நாள்தோறும் சந்தோசமே!



க.பொ.த. உயர்தரம் ஆரம்ப நிகழ்வு – 2008




க.பொ.த. உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல்



விஞ்ஞான ஆய்வு கூடத்தில் செயற்பாடு



உளவியல் வழிகாட்டற் செயற்பாடு

# Positive Thinking – 10 C's to Success

**K. Banusha,**
Grade - 11.

*Construction* - *A plan always work according to a plan. It may be an exam, personal achievement or a sport. Only planned implementation will give you success. You need to have a clear vision, personal as well as well as team goals and an attitude focused on winning.*

*Competence* - *Have a good look at yourself and what you are capable of. Search for your talents and count on your capabilities to build on your talents, with plenty of training.*

*Courage* - *The positive mind does not hesitate to take risks, change direction if necessary and think out of the box. Buildup yourself esteem, be honest and be courageous enough to admit when you are wrong.*

*Communication* - *Communication is a key to success in any field. Create awareness among your team members and other people whom you come into contact with. Lack of communication will result in misunderstanding and a poor support system.*

*Charm* - *A smile, a genuine interest in winning, a sense of humour, honesty and a pleasant personality are vital to stay ahead in competitive world and earn a good name.*

*Compassion* - *Learn to forgive and forget and avoid trying to put the blame on others. After all we are all human and making mistakes in ordinary. Forgiving is extra – ordinary.*

*Confidence* - *Understand your tasks and duties properly. Learn about your team mates in order to build up their confidence levels, because knowledge and confidence complement each other.*

*Control* - *Healthy thinking is controlled thinking. Emotions sprout from thoughts. Recognize to emotions and learn to control the thoughts. Change the thought to change to emotion.*

*Commitment* - *When things get thought it is easy to give up. Don't allow your mind to falter. Change behaviours patterns, thinking patterns and attitudes, but do not change your level of commitment.*

*Contentment* - *Enjoy the game, enjoy the 'moment' appreciate what you have and don't think about what you don't have. Nothing else exists. That is the secret to WINNING.*

# இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்

டாமினி டலஸ்,
2010 கலைப்பிரிவு.

"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி" என்றும் "சின்னஞ்சிறு கைகளை நம்பி சரித்திரம் இருக்குது தம்பி" என்றும் பாடிவைத்தார் ஒரு பைந்தமிழ்ப் பாவலன். ஏடு தூக்கிப்பள்ளி செல்லும் சிறார்களே நாளை இந்த நாட்டை ஆளும் தலைவர்கள். எனவே இவ்வறிஞர் கூறும் கூற்றிற்கிணங்க இன்றைய சிறுவர்களே நாட்டின் நாளைய தலைவர்கள் என்பதும் சிறுவர்களே எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகள் என்பது எமக்குத் தெள்ளத்தெளிவாக விளங்குகின்றது என்பதை எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

எனவே இவற்றையுணர்ந்து நாம் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். சிறுவர்களிற்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். தமது கருத்துக்களை தெரிவிக்க சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். சமுதாயம் சிறுவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கடமைப்பாடு உடையது மட்டுமல்லாமல், சிறுவர்களின் ஆளுமை, ஆற்றல், திறமைகளை மேம்படுத்த உதவ முன்வரவேண்டும். இதுவே சிறுவர் உரிமைகள் சமவாயம் குறிப்பிடுகின்ற சிறுவர் உரிமைகள் பற்றிய எண்ணக்கரு ஆகும். "எக்லான்ரின் ஜெப்" என்பவர் சிறுவர் உரிமைப் பிரகடனத்தினை 1923ஆம் ஆண்டு வரைந்தார். சிறுவர் உரிமையின் நான்கு முக்கிய பகுதிகளாக உயிர்வாழ்தல், மேம்பாடு, பாதுகாப்பு, பங்களிப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம். சிறுவர் தம்மைப் பாதிக்கும் எந்தவொரு விடயத்திலும் தமது கருத்தை வெளியிடுவதற்கான உரிமையுடையவர்கள்.

இன்றைய காலத்தில் சிறுவர்கள் பல்வேறு பாதிப்புக்குள்ளாகின்றார்கள். சுரண்டப்படுகின்றார்கள். வறுமையின் காரணமாகத் தாங்கொணாத் துன்ப துயரங்களை அனுபவிக்கின்றார்கள். வீங்கிய விரல்களும் வலிக்கும் நுரையீரல்களும் கூனிய முதுகுகளும் உடைய சிறுபிள்ளைகளே உலகின் எழில்மிகு கம்பளங்கள் சிலவற்றை உருவாக்குகின்றார்கள். பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் விளையாடவோ, பாடசாலை செல்லவோ நேரமின்றி வேலை செய்கின்றார்கள். ஏன்? எமது நாட்டை எடுத்துநோக்குவோமானால் இங்கு சிறுவர்கள் பல்வேறு வழிகளிலும் அதாவது கொலை, மிரட்டல், பாலியல் துஷ்பிரயோகம் என்பவற்றை அனுபவித்த வண்ணமே உள்ளார்கள் என்பது அனைவரும் கண்கூடாக அறிந்த ஒருவிடயமாகும். எனவே சிறுவர்கள் வாழ்வதற்கு சிறந்ததொரு குடும்பச்சூழல் இன்மையும் வறுமையுமே அடிப்படைக் காரணமாகும்.

எனவே இந்நிலைமை மாற்றமடைய வேண்டும். சிறுவர்களின் எதிர்காலம் ஒளிமயமாக அமைய வேண்டும்.

தொழிலுக்குச் செல்லும் பெற்றோர்கள் பிள்ளைகளையும் கொண்டு செல்வதனால் சிறுவர்கள் நோய்க்குள்ளாகிறார்கள் இறக்கவும் நேரிடுகின்றது. போசாக்கின்மை காணப்படுகின்றது. ஊனமுற்றவர்களாக்கப்படுகின்றார்கள். அடிமையாக இருந்து சிறுவர்கள் வேலை செய்கின்றார்கள். எழுத்தறிவின்மை ஏற்படுகின்றது. சட்டவரம்புகளை மீறுவதால் பெரும் பாதிக்குப்புக்குள்ளாகின்றார்கள். பெற்றோரைப் பிரிந்து சிறுவர்கள் மனவிரக்தி அடைந்து தீய செயல்களில் ஈடுபடுகின்றார்கள். போதிய வசிப்பிடம் இன்றித் தவிக்கின்றார்கள். பாலியல் வன்முறைகளாலும் மது அருந்துவதாலும் பாதிக்கப்படுகின்றார்கள். இவ்வாறான நிலைமை மாற்றமடைய வேண்டும். சிறுவர்களிற்கான சிறந்த குடும்பச்சூழல் கட்டியெழுப்பப் படவேண்டும். சிறுவர்களை துயரங்களிலிருந்து விடுவிக்க யாவரும் ஒத்தாசைகள் வழங்கவேண்டும். இந்த வகையிலே யுனிசெவ் நிறுவனம் ஆற்றும் பங்கு குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனம் சிறுவர் உரிமைகள் சமவாயத்தினூடாக பல நல்ல செயற்றிட்டங்களையும் வழிமுறைகளையும் அமுல்படுத்தி வருகின்றமை மிகவும் வரவேற்கத்தக்கதாகும். அத்துடன் கல்வி தொடர்பான அடிப்படை உரிமை பற்றியும் அதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகின்றது.

எனவே பிள்ளைகள் நல்லதொரு சூழ்நிலையில் நல்ல பிள்ளைகளாக வளர ஒவ்வொரு குடும்பத்தினரும் உதவவேண்டும். பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு பெற்றோர்களே பொறுப்பு. இதனாலே தான், “எந்தப் பிள்ளையும் நல்ல பிள்ளைதான் மண்ணிற் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே” எனக் கூறப்படுகின்றது. ஒரு பிள்ளை தீயவனாக உருவாகின்றான் எனின் அங்கு கூறப்படுவது அவனது வளர்ப்பு சரியில்லை என்பதாகும். எனவே இவ்வாறான நிலையை எந்தவொரு பெற்றோரும் விரும்பமாட்டார்கள். இந்த வளர்ப்பு சரியில்லை என்கின்ற போது அப்பிள்ளை வாழ்கின்ற சூழ்நிலைகளையே குறிக்கின்றது. தம் பிள்ளை வாழத்தகுந்த இன்பகரமான சூழ்நிலைகளை அமைத்துக் கொடுக்க பெற்றோர் முன்வருதல் வேண்டும்.

எனவே நாம் சிறுவர்கள் துன்ப துயரங்களை கண்டும் காணாதது போன்று நமக்கேன் வீண் வம்பு?, என்று விட்டுவிடாது இவர்களிற்கு யாவரும் அன்புக்கரம் நீட்டவேண்டும். ஆசை வார்த்தை கூறவேண்டும். அரவணைக்க வேண்டும். நல்வழி காட்டவேண்டும் ஏன்? இவர்களல்லவா நாட்டின் நாளைய தலைவர்கள் எதிர்காலத்தின் வழிகாட்டிகள் நற்பிரஜைகள், தொழிலாளிகள், முதலாளிகள், கல்விமான்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பிரதமர், ஜனாதிபதி இவ்வாறு அடுக்கிக்கொண்டே போகலாம். இவை எமக்கு உணர்த்துவது யாதெனில் இச்

சிறார்களின் ஒருங்கிணைந்த பிணைப்பில் எமது எதிர்கால வாழ்வின் வளம் தங்கியுள்ளது என்பதேயாகும்.

ஒரு சிறிய ஆலம்வித்து முளைத்து செடியாகி பின் அது மரமாகிப் பூத்துக் காய்த்துக்கனிந்து மீண்டும் வித்தினைத்தந்து அதன் பரம்பரையின் பரிமாணச்சங்கிலியின் தொடர்பினைத் தந்து மறைந்து விடுவது போல இம்மூத்தோர் விட்டுச்சென்ற பணிகளை தம் தோள்களில் சுமந்து சமூகத்தையும் முன்னெடுத்துச் செல்லும் உத்தம தலைவர்கள் நம் சின்னஞ்சிறார்களே. எனவே சிறுவர்கள் சிறப்பாக பொன்னைப் போன்று இவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். காக்கப்படவேண்டியவர்கள். எனவே இவர்களது ஒவ்வொரு செயற்பாட்டையும் அறிந்து வெளிக்கொணர்ந்து அவ்வச்சந்தர்ப்பங்களில் அவர்களிற்கு ஒளியூட்டி வைக்கவேண்டிய பொறுப்பு இன்றைய சமூகத்தவர்கள் ஒவ்வொருவரதும் கடமையும் பொறுப்புமாகும்.

எனவே நாம் முழுமையாகத் தொகுத்து நோக்கும்போது "குடும்பம் ஒருகோயில். அதில் அன்பே ஒளிதீபம்." எனவே குடும்பத்தினரே சிறுவர்களை வாழ நல்லதொரு சூழலை அமைத்துக் கொடுத்து வழிகாட்டவேண்டும். அப்போதுதான் அவர்கள் உங்களை மகிழ்வுடன் வாழ்த்துவார்கள், வாழவைப்பார்கள்.

எனவே இவர்களை மனிதப்பண்பு, அறம், நீதி, ஒழுக்கம், பண்பாடு, கலை, கலாசாரம், பகுத்தறிவு என்பனவற்றைக் கடைப்பிடிப்பவர்களாக்க வேண்டியது நம் பாடசாலையும் சமுதாயமுமே. நம் சமுதாயம் இன, மத, மொழி, ஜாதி, பேதமின்றி சாந்தி, சமாதானம், சகோதரத்துவம் உடைய மானிடச் செல்வமாக இணைந்து வாழ வழிகாட்டும் தன்மையுள்ள உன்னத தலைவர்கள் இன்றைய இளம்தலைமுறையில் இருந்துதான் தோன்ற வேண்டும். இவர்களே எதிர்கால நாட்டின் செல்வர்கள். எதிர்காலத்தின் முத்துக்கள், எதிர்காலச் சிற்பிகள் என்று கூறுவது மிகவும் பெருமைப்படக்கூடிய விடயமாகும். எனவே சிறுவர்கள் எதிர்காலத்தில் நல்லதொரு பிரஜையாக வாழ்வதற்கு ஏணிப்படியாக இருந்து உதவ வேண்டியது ஒவ்வொரு குடிமக்களதும் கடமையும், பொறுப்புமாகும்.

"வாழ்க நம் சின்னஞ்சிறார்கள்
வளர்க நம் சிறுவர் எதிர்காலம்"

**சமுதாய மேம்பாடு என்பது மனிதனது உயர்வு பூர்வமான பங்குபற்றுதலின்றி முற்றிலும் தானாக நிகழும் ஒன்றல்ல. அதே சமயம் மனித சமூகச் சூழலின் இயல்பை மீறி யாராலும் வலிந்து ஏற்படுத்தப்படுவதுமல்ல. மனிதனது தேவைகளும், சமுதாய உறவுகளும் இணையும் போது மட்டுமே மேம்பாடு கருக்கொள்கிறது.**



முகாமைத்துவக்குழு



ஆசிரியர் நல்லுறவு மன்றம்



மாணவ மன்றம் (ஆரம்பப்பிரிவு)



மாணவர் மன்றம்

# Value of Discipline

**S. Evon Saraniya,**
A/L 2012.

*Discipline is absolutely necessary in a civilized society. It is essential because if there is no discipline there will be complete confusion. It is the breath and spirit of civilized life. Discipline is necessary for people in all walks of life. Students studying in Educational institutions, defense personal working in the armed forces, workers employed in factories must hare discipline. It is discipline which enables a nation to march on the road of progress and prosperity.*

*Discipline is of almost importance in schools and colleges. It is regrettable that our educational institutions have become hot beds of student unrest. Decline of discipline in educational institutions has led to a fall in educational standards. It is not possible to impart education effectively if there is no discipline. We must have discipline even at home. Children must be disciplined when they are under guardianship of their parents. There is a need of discipline in social and political life of the country. It is important to maintain law and order in the society. Thus, without discipline nothing is possible anywhere on the earth.*

# Our Principal

**S. Tharsika,**
Grade - 10.

*Our Principal is Mr. R. Vasanthakumar. He is very active and hardworking. He comes devotee of Sathya Sai Baba. He comes to school early and goes home late. He always wears white shirt, black pair of trousers. He is a very smart person. He comes to school by car. He is very helpful to everybody. He is very kind and patient.*

*When we are naughty, he talks to us gently. He always says our discipline is very important as our studies. He visits our class suddenly and goes round all the classes to see the activities in the classrooms. He loves us a lot and we are proud to have him as our Principal. May God Bless him.*

# தமிழ்மொழியின் சிறப்பு

ம. விசாயினி,
க.பொ.த உயர்தரம்,
2012.

மனிதனானவன் முதன் முதலில் பேசிய பழம்பெரும் மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்றாகும். நம் அமிழ்தினும் இனிய செந்தமிழானது முதிர்ந்த இலக்கியச் செல்வத்தை உடையது. கலைவாணர்கள் கூடப் பிறந்தவள் என்று உறுதியாகக் கூறமுடியாத தொன்மை வாய்ந்தவளே நம் தமிழன்னை. இவ்வாறாக உலகின் மூத்தமொழியாக விளங்குகின்ற தமிழின் பழமையைக் "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே, வாளொடு முன்தோன்றி மூத்தகுடி" என்றும், குமரி முதல் இமயம் வரை முடிகொண்டு வாழ்ந்த முத்தமிழ்! தன்னிகரற்ற காவியங்கள் பலவற்றை ஆபரணமாகப் பூண்ட தமிழ்! ஆம்! செந்தமிழின் பெருமை சொற்களுள் அடங்காது.

தாய்மொழியான தமிழ்மொழி இந்திய துணைக் கண்டத்தின் தென்பகுதியில் வாழ்ந்த மக்களிடையே வழங்கி வந்தது. தமிழ்மொழியைப் பேசிய இனத்தோர் தமிழர் என அழைக்கப்பட்டனர். தமிழ்மொழி வழங்கிய தேசம் தமிழகம். தமிழ் நாட்டில் அன்று பிறந்து வளர்ந்து வாழ்வு பெற்ற தமிழ் இன்று உலகளாவிய ரீதியில் பரந்துபட்டு விட்டது. தமிழானது வடவேங்கடம் முதல் தென்குமரிவரை ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் எனக்கூறி, வடக்கே திருவேங்கடத்தினையும், தெற்கே குமரிமுனையையும் எல்லையாக வகுத்துத் தமிழ்நாடு தோன்றியது. இதனையே தமிழ் இலக்கிய வரலாற்றில் லெமூரியாக் கண்டம் எனக்கூறுவர்.

தமிழ்மொழி 247 தனி எழுத்துக்களைத் தன்னகத்தே கொண்டது. இவற்றில் தமிழுக்கு சூட்டிய அழகுக் கிரீடமாக "ழ"கரம் விளங்குகின்றது. மலையாளம் தவிர்ந்த வேறெந்த மொழியிலும் இது காணப்படவில்லை. தமிழ்மொழியானது இனிமையான ஒன்றாகும். அதனால் தான் பாவேந்தன் பாரதிதாசன் தமிழின் சுவையினை பின்வருமாறு பாடியுள்ளார்.

"கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கியும் குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்"

அழகுக்கு அழகு சேர்ப்பது போல மேலைத்தேய இசைகளில் இல்லாத ஓர் அமைதியான, அற்புதமான தமிழ்மொழி இசைகளில் காணப்படுகின்றது. இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. இயற்றமிழ் இலக்கணத்துடன் கூடியது. இசைத்தமிழ் இசையுடன் இயைந்தது. நாடகத் தமிழ் கதையும், இசையும், கூத்தும் கலந்து வருவது. பலவாகிய இசைத்தமிழ் நூல்களும், நாடகத்தமிழ் நூல்களும் தமிழ் மொழியை அழகு செய்தன.

இது மட்டுமன்றி எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களும் தோன்றித் தமிழை வளர்த்தன. காதல், வீரம் பேசப்பட்டன. ஐவகை நிலங்கள் பிரிக்கப்பட்டு அவற்றிற்கான ஒழுக்கங்களும் பேசப்பட்டன. சங்கமருவிய காலத்து நூல்களாகக் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றி அறத்தைப் போதித்துத் தமிழை வளர்த்தன. வள்ளுவர், காரைக்கால் அம்மையார் போன்ற மேலும் பல புலவர்கள் தமிழை வளர்த்தனர். தமிழில் முதன்முதல் தோன்றிய காப்பியம் எதுவென்றால் சிலப்பதிகாரம் என்கின்ற காப்பிய இலக்கியமே ஆகும். மணிமேகலையும் இக்காலத்தில் எழுந்தமையால் இவை இரட்டை காப்பியங்கள் எனப்பட்டன. இதன் தொடர்ச்சியாகப் பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியம் வளர்ப்பதற்கு நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றினர். பக்தி இலக்கியத்தை வளர்ப்பதற்காக பக்திப் பாடல்களை நனிசொட்டச்சொட்டத் தந்ததுடன் பல அற்புதங்களையும் செய்து தமிழை வளர்த்தனர்.

திருவாசகச் சிறப்பை இராமலிங்க அடிகளார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்,

"வான்கலந்த மணிவாகச நின்வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

சோழர் காலத்திலே அறுபத்து மூன்று நாயன்மார்களினதும் பாடல்கள் தொகுக்கப்பட்டுச் சேக்கிழாரால் "பெரியபுராணமும்" ஆழ்வார்களின் பாடல்கள் திரட்டப்பட்டு நாதமுனிகளால் "நாலாயிர திவ்விய பிரபந்தமும்" தொகுக்கப்பட்டன. ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள், கம்பராமாயணம், நளவெண்பா போன்ற புராணங்களும், மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் தக்கயாகப்பரணி போன்ற சிற்றிலக்கியங்களும், நம்பியகப் பொருள், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், நன்னூல், வீரசோழியம், வச்சணந்திமாலை போன்ற இலக்கண நூல்களும் தோன்றித் தமிழை வளர்த்தன. சோழர் காலத்தில் தமிழ் வளர்ச்சி உச்சக்கட்டத்தை அடைந்ததனால் சோழர்காலம் தமிழிலக்கிய வரலாற்றின் பொற்காலம் எனப்பட்டது.

பாரதியார் கூறுகின்றார் "யாமறிந்த புலவரிலே வள்ளுவனைப் போல், கம்பனைப் போல், இளங்கோவைப் போல் எங்காயினும் கண்டதில்லை" என்று அறுதியிட்டு உரைத்துள்ளார். எனவே எமக்கு தமிழ் உயிராகும்.

"என்றந்தப் பேதை உரைத்தான்
இந்த வசை எனக் கெய்திடலாமோ
சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்று பாரதியார் பாடியிருக்கின்றார். இவ்வாறாக பாரதியாரின் வாக்கிற்கிணங்க தமிழ் மொழியானது சிறப்புற்று வளர்ந்தது. எட்டுத்திக்கும் பரவியது மட்டுமன்றி கலைச் செல்வங்களும் வந்து சேர்ந்துள்ளமை தெரிகிறது. இருபதாம் நூற்றாண்டில் பாரதியாரின் வருகையினையொட்டி ஆங்கிலக்கல்வி மோகம், மதமாற்றம் போன்றவை சாடப்பட்டு தமிழ்மொழியானது மீண்டும் தலையெடுத்து வளர வழிசமைக்கப்பட்டது. பாரதியாரின் புலமையைக் கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை பின்வருமாறு கூறுகின்றார்.

"பாட்டுக்கொரு புலவர் பாரதியடா – அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனனேயடா – அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா."

பாரதி, பாரதிதாசன், நாவலர், சோமசுந்தரப்புலவர் போன்றோரால் சங்கத் தமிழின் கடின பதங்களாக இருந்த தமிழ்மொழியானது இலகுபடுத்தப்பட்டுத் தெளிவான உரைநடையினூடாக இனிய சொல்நயம் மிக்கதாக வளர்ச்சியடைந்து வருகின்றது. ஆகவே எளிமை, இனிமை, தொன்மையடைந்த தமிழ்மொழியை சான்றோர் தமிழ்த்தாய் என்றும் தமிழ் தெய்வம் என்றும் போற்றுவர் எனவே தமிழானது,

"நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறை நுதலும் தரித்தநறுந் திலகமும்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந்தமிழணங்கே!

எனச் சிறப்பிக்கப்படும் தாய்மொழியாம் தமிழ்மொழியை

"தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத்தமிழ்
எங்கள் உயிருக்கு நேர்"

என்று சிறப்பிக்கப்படும் எம் உயிரினும் மேலாகிய நம் தமிழ்மொழியைக் கற்று அதன் சுவையை உணர்ந்து அனுபவித்து வாழ்வில் உயர்வடைவோம்.

"வாழ்க தமிழ்மொழி
வளர்க அதன் புகழ்"

# வாழ்வில் சைவம்

க. ருஷாந்தி,
க.பொ.த உயர்தரம்,
2011.

சமயம் என்பது ஒரு வாழ்க்கை நெறியாகும். மனிதனை நேரான பாதையில் வாழ வழி காட்டுவது ஆகும். சமயம் என்பதற்கு பாதை, நெறி, மார்க்கம், வழி என்றெல்லாம் பல பெயர்கள் சூட்டப்படுகின்றன.

மக்கள் வாழ்க்கை வளர்ச்சியடைந்து மிக உயர்ந்த நிலை அடைந்த போது அவர்களுக்கு இறை உணர்வு தோன்றியது. மக்கள் தமக்கு மேலாக ஒரு சக்தி உள்ளது என்றும், இப்பிரபஞ்சத்தில் நடைபெறுகின்ற அனைத்தையும் அச்சக்தியே இயக்குகின்றது என்றும் உணர்ந்தார்கள். தம் அறிவு, ஆற்றல், அனுபவம் என்பவற்றுக்கு ஏற்ப அவனைக் கடவுள், இறைவன், பரம்பொருள் என்றெல்லாம் அழைத்தார்கள்.

வாழ்வில் சைவம் என்னும் போது சிவத்தைச் சார்ந்து நின்று தெய்வீகப் பண்புகளை வாழ்க்கையோடு இணைத்து வாழ்தலாகும். சமயம் சார்ந்த பண்புகள் எனும் போது உண்மை, அன்பு, நீதி, தர்மம், சாந்தம், அழகு, நன்மை, இன்னா செய்யாமை முதலியவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம். மனிதன் மனிதப் பிறவியை எடுத்ததன் மூலம் மனிதனாகி விட முடியாது. சிவம் சார்ந்த பண்புகளைக் கடைப்பிடிப்பதனால் மனிதன் ஆகின்றான்.

கல்வி கற்பதன் நோக்கம் கற்றபடி ஒழுகுதலாகும். ஒவ்வொருவரும் அறநெறியில் நின்று தத்தமது கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் ஆன்ம விடுதலை பெறமுடியும் என சைவத்திருநூல்கள் எமக்கு எடுத்தியம்புகின்றன. ஒருவனுடைய உள்ளம் தூய்மை அடையும் போதுதான் வாழ்வு சிறப்படைய முடியும். நாம் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்பதற்கிணங்க வாழ்ந்து காட்ட வேண்டும். அப்போதுதான் நாம் இறைவனின் பாதாரவிந்தங்களை அடையமுடியும். எமக்கு நூலறிவு இருந்தால் மட்டும் போதாது. சமயங்கள் காட்டும் நெறியில் நின்று வாழப்பழக வேண்டும்.

ஒரு மனிதன் பொறாமை, ஆசை, கோபம், செருக்கு, பகைமையுணர்வு என்பவற்றை மனத்தில் இருந்து அகற்றிவிடுவதன் மூலம் மனத் தூய்மை பெறுகின்றான். தூய்மையான மனத்தில் தோன்றும் எண்ணங்கள், சிந்தனைகள் எல்லோரையும் வாழ்விக்கும் தன்மை கொண்டவை. பண்பாகவும், பணிவாகவும், இனிய சொற்களைப் பேசுவதன் மூலம் கேட்போர் மனமகிழ்ச்சி அடைவர். இவற்றின் மூலம் ஒருவன் தானும் தூய்மையாகி மற்றையவர்களையும் தூய்மையடைய வழிகாட்டுகின்றான். எந்தவொரு நிலையிலும் தீய எண்ணங்கள் புகுந்து கொள்ளாமல் நல்லதையே நினைத்து நன்றே புரிய வேண்டும்.

மனிதன் மனிதனாக வாழ சமயம் சார்ந்த பண்புகள் அவனை நெறிப்படுத்துகின்றன. சடங்குகள், கிரியைகள், வேள்விகள், விழாக்கள், பண்டிகைகள், சம்பிரதாய பழக்க வழக்கங்கள், பூசை வழிபாடுகள் போன்ற சாதனங்கள் உதவுகின்றன. சைவம் வகுத்த நெறியில் ஒருவன் செல்வதன் மூலம் நல்லொழுக்கம், பண்பாடு உடையவனாகத் திகழ்கின்றான்.

சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல. சமயமே வாழ்க்கை - வாழ்க்கையே சமயம் என்பது சைவத்தின் நிலைப்பாடு. மனிதன் சமூகமாக வாழ வேண்டியவன். பிறரில் தங்கியும் பிறரைத் தாங்கியும் வாழ்பவர்களாக மனிதர்கள் உள்ளார்கள். சமூகத்தவருடன் இசைந்தும், இணங்கியும், முரண்டபாமலும், நல்லறிவு பேணியும் வாழ்தல் அவசியமாகின்றது. பண்பாடு உருவாவதற்கு முக்கிய காரணியாக அமைவது மனம் ஆகும். அந்த மனத்தைப் பண்படுத்துவதற்கும், பக்குவப்படுத்துவதற்கும் உறுதுணையாக இருப்பது சமயம் ஒன்றேயாகும்.

சைவசமயத்தின் கண்ணாகப் போற்றப்படும் பெரியபுராணமானது சைவ சமயத்தைப் பேணி வளர்த்த அருட்கொடையாளர்களின் வரலாற்றைக் கூறும் ஓர் ஒப்பற்ற நூலாகும். இந்நூலிலே பல்வேறு நற்பண்புகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. தொண்டுள்ளம் கொண்டு தொண்டு செய்த அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய வரலாற்றை மிகவும் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றார் சேக்கிழார்சுவாமிகள். சைவ திருநூல்களைக் கற்பதன் மூலம் எமது சமய வரலாறு மேம்படுத்தப்படுகின்றது.

பரம்பொருளாகிய இறைவனின் நினைப்பு எம்மிடம் நீங்காது எந்நேரமும் அவனுடைய திருத்தாள்களை எண்ணி செய்வதை திருந்தச் செய்து நல்லொழுக்கமுள்ள, பண்பாடுகள் உள்ள, நல்லறிவுள்ளவர்களாக வாழ்ந்து எமது சமயப் பாரம்பரியம் என்றும் நிலைக்க வழிகோலுவோமாக.

நன்றி – நல்லெண்ணம் – நல்வாழ்த்து
இவை மகிழ்ச்சியுடன் இன்பமான வாழ்வுக்கு வழியமைக்கும்.

வணக்கம், வழிபாடுகள் மட்டுமன்றி
ஏழைகளுக்கு உதவுவதிலும் இறையருள் பெறலாம்.

அன்புதான் இன்பஊற்று
அன்புதான் இன்பஜோதி
அன்புதான் உலகமகாசக்தி

– புத்தர்

# உலகத் திருச்சபையின் கட்டமைப்பு

த. ஸலூஜா,
க.பொ.த உயர்தரம்,
2011.

## திருச்சபை ஆரம்பம் :

பரிசுத்த ஆவியின் வருகையுடன் முதல் திருச்சபையின் தந்தை பேதுருவும், ஏனைய அப்போஸ்தலர்களும்,

- பெந்தக்கோஸ்தே தினத்தன்று பேதுருவின் அருளுரையும் 3000 யூதர்களின் மனமாற்றமும் இடம்பெற்றது. மத்தியாஸ் தெரிவும் ஆயர்களுக்கான இடங்கள் பகிரப்பட்டதும்.

  உ-ம் : சின்னயாக்கோபு எருசலேமின் ஆயராக்கப்பட்டது.
- திருத்தொண்டர்கள் 7 பேரின் நியமனம், யூத கலாபனை இடம்பெற்றது.

  உ-ம் : ஸ்தேவான் மறைசாட்சியாய் மரணம்.

  திருச்சபை வெளி இடங்களில் பரவுதல்.

  உ-ம் : பிலிப்பு சமாரியாவில் நற்செய்தி அறிவிப்பு.
- பவுலின் மனமாற்றமும், தூதுரைப்பயணங்களும் விருத்தசேதனத்தைப் பற்றிய திருச்சபையின் முதற்சங்க (ஜெருசலேம் பொதுச் சங்கம்) தீர்மானமும்.
- திருச்சபை யூதமதத்தின் கிளை என்பது மாற்றமுற்று தனிமதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டமை.
- பவுல் தன் பயணங்களின் போது நிறுவிய திருச்சபைகளிற்கு மூப்பர்களை ஏற்படுத்தினார். இவர்களே 3ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் குருக்கள் எனப்பட்டனர்.
- நீரோ மன்னனால் ஆரம்பமான வேதகலாபனையைத் தொடர்ந்து நான்கு நூற்றாண்டுகளாக பத்து கலாபனையாகத் தொடர்ந்தது. பத்தாவது கலாபனை மறைசாட்சிகள் யுகமாக்கப்பட்டது. பத்து கலாபனைகளின் முடிவில் 50 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் இறந்திருக்கலாம் எனக் கணிக்கப்பட்டது. குறிப்பாக திருச்சபையின் தலைவர் (பேதுரு) தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப்பட்டார்.
- பின்னர் திருச்சபையின் தலைவராக சுதந்திரயுகம் திருச்சபைக்கு வெளியே இருந்து தாக்க கலாபனைகளையடுத்து திருச்சபையின் உள்ளிருந்து பேதகங்கள் தோன்றின. ஆனால் திருச்சபையின் தந்தையர்களினால் சங்கங்கள் கூட்டப்பட்டு பேதகங்களும், பேதக்காரர்களும் விலக்கப்பட்டு தீர்வுகாணப்பட்டது.

- இதுவரையில் 21 பொதுச்சங்கங்கள் கூட்டப்பட்டன. 1962 – 1965 காலப்பகுதியில் கூட்டப்பட்ட 2ஆம் வத்திக்கான் சங்கமே இறுதிச்சங்கமாகும். கலாபனைகள் மூலம் திருச்சபைக்கு எதிரான முரண்பாடுகள் 4ஆம் நூற்றாண்டில் (10ஆம் கலாபனையின் தொடர்ச்சி) திருச்சபைக்கு சுதந்திரமும் சலுகைகளும் வந்தன. கிறிஸ்தவம் பேரரசின் அரசமதமானது.
- 2ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மூப்பர்கள் ஒன்றுகூடி தமக்கு ஆயர்களை தெரியும் வழக்கம் ஏற்பட்டது. திருப்பலி, திருமணம் நிறைவேற்றல் என்பன ஆயர்களால் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. 3ஆம் நூற்றாண்டில் உரோமைய ஆயரே தலைமை ஆயராகக் கருதப்பட்டார்.
- கி.பி 330இல் கொன்ஸ்தாந்தினால் தன்னுடைய புதிய இராச்சியத்திற்கு அப்பால் அமைக்கப்பட்ட அடிக்கல்லே மேலைத்தேய, கீழைத்தேய திருச்சபையாக பிளவுபடக் காரணமானது.
- கி.பி 1950ஆம் ஆண்டளவில் தென்னரசு வீழ்ச்சியுற்றதும் திருச்சபை நாகரிகமற்ற போராளிகளை திருச்சபையில் சேர்த்து நாகரிகமுள்ளவராக்கியது.
- 5ஆம் நூற்றாண்டு – 11ம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் திருச்சபை ஐரோப்பாவில் பாரிய அளவில் பரவத் தொடங்கியது.
- கி.பி 16ஆம் நூற்றாண்டில் மார்ட்டீன் லூதரின் மறுமலர்ச்சியும் கல்வின் மதம் பரப்பப்பட்டமையும் (கி.பி 1517 – 1555)
- கி.பி 1789 – 1815 பிரான்சிய புரட்சியும் றெப்போல்பிளின் வீழ்ச்சியும் இவ்வாறாக வளர்த்து வந்த திருச்சபை இன்று வரையும் நிலைத்து நிற்கிறது.
- தற்போதைய திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் தலைமையின் கீழ் இனிதாக இயங்குகிறது.

## உலகப்பெரும் தவறுகள்

உழைக்காமல் ஈட்டிய செல்வம்
மனச்சாட்சி இல்லாத இன்பம்
பண்பு இல்லாத அறிவு
நல்லொழுக்கமில்லாத வணிகம்
மனிதாபிமானம் இல்லாத விஞ்ஞானம்
தியாகமில்லாத வணக்கம்
அடிப்படைக் கொள்கையில்லாத அரசியல்

– மகாத்மா காந்தி –



உதைபந்தாட்ட அணியினர்



கிறிக்கெற் அணியினர்



இல்ல மெய்வல்லுனர் போட்டியின் போது விருந்தினர்கள்



உடற்பயிற்சி அணியினர்

# நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

## (1880 - 1953)

த. தமிழினி
க.பொ.த உயர்தரம்
2012

இலங்கையின் சென்னியாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள வலிகாமம் பகுதியிலுள்ள சிறந்த ஊர்தான் நவாலி என்னும் நற்பதி. பண்டைக்காலம் தொட்டுக் கல்வியில் வல்ல அறிஞர்கள் சைவம், தமிழ் வளர்த்த பெரியார்கள் வாழ்ந்த பண்பாடுடைய ஊர். பல கோயில்களாலும் நிறைந்த ஊர். இவ்வாறான சிறப்பம்சங்களைக் கொண்ட அழகிய திருவூரிலே வாழ்ந்த கதிர்காமருக்கும், இலக்குமிப்பிள்ளைக்கும் அருமைப்புதல்வராக அவதரித்தவரே நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.

இவர் தங்கமயமான தோற்றம் உடையவர். அகன்ற நெற்றி அதிலே அறிவொளி மிளிரும் திருநீற்றுப் பூச்சு இதன் நடுவே அமைந்த சந்தனத்திலகமும், குங்குமத்திலகமும் இவரைச் சைவப்பழமாகக் காட்டி நிற்கும். இவரது வெண்ணிறமான நீண்ட தாடியோ காற்றில் அசைந்து சோபிக்கும். இவர் வெண்துகில் புனைந்து மிடுக்குடன் தோற்றமளிப்பதே ஒரு தனியழகு. இவ்வாறான தோற்றமுடையவர்தான் "தங்கத்தாத்தா" என எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.

புலவரின் பெற்றோர்களான கதிர்காமரும், இலக்குமிப்பிள்ளையும் இல்லறவாழ்க்கையை இனிதே நடாத்தி கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி யாவருக்கும் தானதருமங்கள் செய்து சிறப்புற்று வாழ்ந்தார்கள். எனினும் பிள்ளைப் பேறின்மை என்பது இவர்களைப் பெரிதும் வாட்டியமையினால் விரதங்கள் இருந்தும் நேர்த்திகள் வைத்தும் நவாலி அட்டகிரி முருகனை நாள்தோறும் வழிபட்டு வந்தனர். இவ்வாறிருக்கும் போது ஒரு நாள் புலவரின் தாயார் கனவொன்று கண்டார். ஓர் அழகிய ஆண்மயில் தோகை விரித்தாடிய படி தோன்றி "தாயே நான் உன்னிடம் வரப்போகின்றேன்" என்று கூறி மறைந்தது. தாயாரும் விழித்தெழுந்து தனது கனவை கணவருக்குக் கூறவே முருகப்பெருமானின் அருளால் எமக்கொரு புதல்வன் கிடைக்கப்போகின்றான் என கனவிற்கு விளக்கமளித்தார் கணவன். பின் அதிகாலை கணவனும் மனைவியுமாக நவாலி அட்டகிரி முருகன் கோயிலுக்குச் சென்று வழிபட்டு வந்தனர். இக்கனவின் படியே இவர்கள் சோமசுந்தரரை மகனாகப் பெற்றெடுத்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர். தொடர்ந்தும் அட்டகிரி முருகனுக்கு நேர்த்திகள் செய்தும் வழிபட்டும் வாழ்ந்தும் வந்தனர். புலவரின் தந்தையார் அக்காலத்தில் சோதிடத்தில் சிறந்து விளங்கிய பருத்தித்துறை ஆறுமுகப்பெரியவரிடம் சென்று சாதகம் கணித்து எழுதும் போது சோதிடர் "இப்பிள்ளை பெரிய கல்விமானாக விளங்கும்" என்று கூறியதற்கேற்ப புலவரும் சிறுவயதிலிருந்தே கல்விப்புலமை உடையவராகத் திகழ்ந்தார்.

ஆரம்பக்கல்வியை மானிப்பாய் அருணாசல உபாத்தியாயரிடமும் தொடர்ந்து பெரிய தந்தை முறையினரான நவாலியூர் இராமலிங்க உபாத்தியாயரிடம்

ஆங்கிலத்தையும் கற்று இருபாஷைகளிலும் சிறந்து விளங்கியதுடன் வடமொழியையும் கற்றுக் கொண்டார்.

புலவருக்குப் பதினைந்து வயதாக இருக்கும் போது வைத்திலிங்கம் என்ற நண்பரின் வேண்டுகோளுக்கிணங்க ஆறுமுகம் எனத் தொடங்கிக் கதி என முடியும் வெண்பாப் பாடலொன்றைப் பாடும்படி கேட்டதற்கிணங்க புலவர்,

"ஆறுமுகமுடையாய் ஆறிரண்டு தோளுடையாய்
ஏறு மயிலுடையாய் என்னுடையாய் - கூறுசெயும்
வேலுடையாய் என்றன் வினையுடைய வேமித்திருங்
காலுடையாய் நீயே கதி"

என்று பாடினார். மேலும் புலவர் சுவையுடைய விளாங்கனிகளை நண்பருக்கு அனுப்பிவைத்த போது அவற்றுடன் ஒரு வெண்பாப்பாடலையும் அனுப்பியிருந்தார் என்பதைப் பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

"ஒன்றாயினும் பழத்திலிச்சை வைத்துத் தின்னவென்று
தின்றால் விளாம்பழத்தைத் தின்னென்றார் - இன்றுனக்கு
நல்ல விளாம்பழங்கள் நாலைந்து தனுப்புகின்றேன்
வெல்லத்துடன் உண்கவே"

இவ்வாறு புலவர் சிறுவயதிலிருந்தே பாடலியங்கும் திறனை வளர்த்துக் கொண்டார். புலவருக்குப் 17 வயதாக இருக்கும் போது நவாலி, மானிப்பாய், ஆனைக்கோட்டை போன்ற கிராமங்களிலுள்ள வாலிபர்களைச் சேர்த்து சைவ வாலிபர் சங்கத்தை நிறுவி புராண படிப்பு, சமயபாட வகுப்பு, சமய விவாதம் என்பவற்றை நடாத்தி வந்தார். இதனூடாக புலவரின் பேச்சுத்திறன் வெளிக் கொணரப்பட்டது.

தொடர்ந்து வட்டுக்கோட்டையில் சின்னத்துரை ஆசிரியரும், புலவரும் சேர்ந்து ஒரு சைவ ஆங்கிலப்பாடசாலையை ஸ்தாபித்தனர். அதுவே இன்றைய வட்டு இந்துக்கல்லூரியாக விளங்குகின்றது. தன் வாழ்நாளில் 40 வருடங்கள் இங்கே கல்விப்பணி புரிந்து மாணவர் மனங்களில் அழியாத இடம்பிடித்தார். தேவாரம் இசைத்தல், புராணம் படித்தல், பயன்சொல்லல், சமய தீட்சைகள் வைத்தல் ஆகிய பணிகளைச் செய்தார்.

புலவருக்கு இருபத்தொரு வயதாக இருக்கும் போது தென்னிந்தியாவிலுள்ள பெங்களூரிலிருந்து நவாலிக்கு வருகை தந்த சுப்பிரமணிய சுவாமிகளின் அருட்கடாட்சம் கிடைக்கப்பெற்றதும் கல்வியிலும், சைவ சித்தாந்தத்திலும் நூல் விளக்கங்களிலும் தாமே பல நுண்பொருள்களையும் எளிதாக விளங்கிக் கொள்ளும் ஆற்றலையும் பெற்றார்.

புலவருக்கு இருபத்தெட்டாவது வயதில் பெற்றோரின் விருப்பப்படி தாய்மாமனாரான வேலுப்பிள்ளை என்பவரின் மகள் சின்னம்மையைத் திருமணம் செய்து மூன்று புதல்வர்களையும், இரண்டு புதல்விகளையும் பெற்றெடுத்து வாழ்வாங்கு வாழ்ந்தனர்.

புலவரின் குலதெய்வமான நவாலி அட்டகிரி முருகன் மீது பதிகம், அட்டகிரி முருகன் கலம்பகம், அட்டகிரி முருகன் வெண்பா, ஊஞ்சற்பாட்டு என்பனவற்றையும் பாடியுள்ளார். இவர் வட்டுக்கோட்டை சைவ ஆங்கில வித்தியாசாலையில் 40 ஆண்டுகள் கல்விகற்பித்த போது உயிரிளங்குமரன் எனும் நாடகத்தை எழுதி நடிப்பித்து

பெரும் புகழையும் புலமைப்பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். இச்சிறப்பை அறிந்த பெரியோர் புலவரைக் கௌரவிக்க விரும்பி நவாலி அட்டகிரி முருகன் கோயிலுக்கு வடக்கில் இருந்த பெரிய வெளியில் மேடையேற்றி இறுதியில் புலவரின் கவித்தொண்டு, சமயத் தொண்டு, கலைத்தொண்டு என்பவற்றையும் பாராட்டி இவருக்கு புலவர் பட்டமும், தங்கப்பதக்கமும் வழங்கிக் கௌரவித்தார்கள். இதிகாசம், இலக்கியம் என்பவற்றை சுவைபடக்கற்பிப்பவராகவும், திருக்குறள், கந்தபுராணம், திருமுருகாற்றுப்படை என்பவற்றுக்கு சிறப்பாக நயமுரைப்பதும் யாவரது கவனத்தையும் ஈர்த்தது. புலவர் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கிணங்க தாம் கற்றறிந்தவற்றை தமது மாணவருக்கு தெட்டத்தெளிவாகக் கற்பித்திருந்தார்.

இவர் சின்னஞ்சிறார்களுக்காக "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை, கத்தரித்தோட்டத்து மத்தியிலே, வீமா வீமா ஓடி வா, பருத்தித்துறையூராம் பவளக்கொடி பேராம் - போன்ற சிறுவர் பாடல்களைப் பாடி சிறுவர் உள்ளங்களைக் கவர்ந்துள்ளார்.

இவர் பாடிய பாடல்கள் பதினையாயிரம் எனக்குறிப்பிடினும் இவற்றுள் தாலவிலாசம், கதிரைச்சிலேடை, வெண்பா, இலங்கை வளம் என்பன குறிப்பிடத்தக்க சிறப்புவாய்ந்தன. இவ்வாறு பழமைக்கும், புதுமைக்கும் பாலமாகத் திகழ்ந்து பாடல்கள் பாடிய இப்பெரியார் **1953**ம் ஆண்டு இறைபதமெய்தினார் எனினும் புலவரது புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.

புலவர், யா/ நவாலி மகா வித்தியாலய தோற்றுவாய்க்கும், வளர்ச்சிக்கும் இனிமையாகப் பாடல் பாடும் திறன் பெற்ற எமது வித்தியாலயத்தின் ஸ்தாபகரான உயர்திரு. பண்டிதர் தம்பையா அவர்களுடன் சேர்ந்து அரும்பாடுபட்டார். வகுப்புக்களையும் நடாத்தினார். இவ்விரு பெரியாரும் எமது பாடசாலைக்குச் செய்த செயற்க்ரிய செயல்களை நன்றியுணர்வுடன் போற்றும் முகமாகவே இவ் வித்தியாலயத்தின் எமது மதிப்புக்குரிய முன்னாள் அதிபர் திரு. புண்ணியமூர்த்தி ஸ்ரீவிக்னேஸ்வரன் அவர்கள் இவ்விருவருக்கும் சிலைகள் அமைத்து இவர் வழிகளில் நாமும் செல்ல விரும்பி இவ்வித்தியாலய பழையமாணவனான சிற்பக்கலாமணி நவாலியூர்ச் சந்திரன் (தில்லைநாதன் சந்திரகுமார்) அவர்களால் சிலைகள் வடிவமைக்கப்பட்டு சோமசுந்தரப்புலவரின் சிலை **11.08.2004** அன்றும், ஸ்தாபகரான பண்டிதர் சி. தம்பையா அவர்களினது சிலை **05.02.2007** அன்றும் செஞ்சொற்செல்வர் திரு. ஆறு. திருமுருகன் அவர்களால் பாடசாலை முன்றலில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இவ்விரு பெரியார்களின் நல்லாசிகளுடனும் எமது பாடசாலை நூற்றாண்டில் காலபதித்து வளர்ச்சிப்பாதையில் சென்று கொண்டிருக்கின்றது மிகவும் மகிழ்ச்சிக்குரியதேயாகும்.

எனவே நாம் இப்பெரியாரின் வழிநின்று இவர்களின் நல்லாசிகளைப் பெற்று எமது வித்தியாலயத்தை மேன்மையுறச் செய்வோம்.

வாழ்க புலவர் புகழ்!

வளர்க நம் வித்தியாலயம்!

## புலவரின் ஆடிப்பிறப்புப் பாடல்

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே

பாசிப்பயறு வறுத்துக் குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி
வாசப்பருப்பை அவித்துக் கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரில் சர்க்கரையும் கலந்து
தோண்டியில் நீர் விட்டு மாவை அதிற் கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித் தட்டி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே

பூவைத்துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துலாவுவாள்
மணக்க மணக்க வாய் ஊறிடுமே

குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொழுத்தி வைத்து
அங்கிள நீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப்படைப்பும் படைப்போமே

வண்ணப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக் கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப்புதுக்கூழ் குடிப்போமே

வாழைப்பழத்தை உரித்துத் தின்போம் - நல்ல
மாவின் பழத்தை அரித்துத் தின்போம்
கூழைச் சுடச்சுட ஊதிக் குடித்து



க.பொ.த. உயர்தரம் - 2010



க.பொ.த. உயர்தரம் - 2011



க.பொ.த. உயர்தரம் - 2012



உயர்தர மாணவர் மன்றம்



இந்துமாமன்றம்



கிறிஸ்தவ மன்றம்



தமிழ் மன்றம்



ஆங்கில மன்றம்



குருளைச் சாரணர்



கணித விஞ்ஞான மன்றம்



புவியியல் கழகம்



நூலகமன்றம்

# பள்ளிப்பருவத்து நட்பு

யேசுகி அமலசிங்கம்,
க.பொ.த உயர்தரம்,
2012.

சிட்டுக் குருவிகளாய்த் திரிந்தோமே
இன்ப துன்பத்தைப் பகிர்ந்தோமே
கல்வி எனும் அறிவினைக் கற்று
சாதனைகள் பல புரிந்திட்டோமே

பிறருக்கு கல்வி அறிவினை புகட்டினோம்
பல நண்பர்களுடன் கை கோர்த்தோமே
நல்லவற்றைத் தேர்ந்து கொண்டோமே
தீயவற்றை எதிர்த்து நின்றோமே.

பகிர்ந்துண்ணப் பழகினோம்
பறவை இனம் போலவே
பலமாய் ஒன்றித்து வாழ்ந்தோமே
பலர் மனதிலும் இடம்பிடித்தோமே

பற்பல பதவி ஏற்றம் - எம்
வாழ்வில் மாற்றம் ஏதோ தெரிகிறதே
மனம் சோரவில்லையே ஒரு நாளுமே
குதூகலத்துடன் பள்ளியில் திரிந்தோம் எந்நாளுமே

ஆசானுக்கு அன்பு காட்டினோம்
அன்பினாலே அடிமையானோம்
இது போன்ற ஒரு இனிமையான பள்ளிப் பருவத்து நட்பு
எமக்காக மீண்டும் வந்திடாதோ?

நட்பு புனிதமானது, இனிமையானது, நிலையானது
- மார்க்ட்வைன் -

# புதிய உலகில் இறை அரசைத் தேடி

வி. டொறின்லக்சிகா,
க.பொ.த உயர்தரம்,
2012.

வானத்திலிருந்து பூமியை நோக்கி விழும் துளிநீர் பூமியைக் குளிர்ச்சியாக்கி, ஆறுதற்படுத்தி செழிப்படையச் செய்து, பயனள்ளதும் ஆக்கி சுத்தப்படுத்த வேண்டியவற்றைச் சுத்தப்படுத்தி, முடிவில் நீராவியாகி வானத்தை நோக்கித் திரும்புகிறது. அதே போல விவிலியத்தின்படி மனிதன் இறைவனிடமிருந்து வருபவன். இவ்வுலகில் அவனுக்கு ஏதாவதொரு பணி கொடுக்கப்பட்டுள்ளது. அதை நிறைவு செய்யும் பொருட்டு அவனுக்குத் திறமைகளும் ஆற்றல்களும் கிடைத்துள்ளன. இவற்றைப் பயன்படுத்தி தனக்குக் கொடுக்கப்பட்ட காலத்தில் தனக்குரிய பணிகளை நிறைவு செய்து மரணத்தினூடாக உருமாறி மறுபடியும் இறைவனை, இறை அரசை அடைய வேண்டும். இதுவே இறை சித்தம்.

புதிய உலகில் இவ் இறை அரசைக் கண்டடைய எமது வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். நாம் ஒவ்வொருவரும் நாளைய தினம் மிகவும் நல்லதாகவும், அதிஷ்டத்தைப் பெற்றுத் தருவதாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். ஆனால் இவ்வுலகில் மனித வாழ்வு குறுகிய காலமாகும். மரணம் மனிதனை இவ்வுலகிலிருந்து பிரிக்கிறது. பௌதீக காரணங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி மரணத்தின் மூலம் மனித உடலிலிருந்து பிரிக்கப்படுகிறது. அப்பொழுது மனிதன் செயலற்றவன் ஆகின்றான். மரணத்தைத் தழுபுவவர் அவருடைய அன்பையும் நம்பிக்கையையும் மட்டும் இவ்வுலகில் விட்டுச் செல்கின்றார். கிறிஸ்தவ சிந்தனையின்படி மரணம் மனிதனை புதிய வாழ்வுக்கு இட்டுச்செல்லும் வாசலாகும். வயோதிபப்பருவம் மரணத்தின் வெளி அடையாளம் ஆகும். அவ்வாறே நோய்களும் மனித வாழ்வை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான துன்பமயமான காரணிகளாகும். இவை போன்ற காரணங்களால் அல்லது திடீர் ஆபத்தினால் மரண ஆபத்தை அணுகியிருக்கும் கிறிஸ்தவனுக்கு அச்சந்தர்ப்பத்தை எதிர்நோக்குவதற்கு நோயில்பூசுதல் மூலம் தேவையான சக்தியினைப் பெற்றுக்கொடுப்பது கிறிஸ்தவர்களின் கடமையாகும்.

பலர் மரணத்தைத் தழுவப்பயப்படுகின்றனர். கிறிஸ்தவனின் மரணம் பௌதீகப்பிரிவான போதிலும் ஆன்மீகமுறையிலும் எல்லா உறவுகளும் முடிவடையமாட்டா. ஒரு வகையில் மரணம் என்பது ஒருவன் தனது வாழ்வின் முழுமையை அடைவதற்கான வாசலாகும்.

இன்று எமது கண்ணுக்கு மறைந்திருக்கும் யேசு, காலத்தின் இறுதியில் மாட்சிமையுடன் மீண்டும் வருவார். அப்பொழுது ஒவ்வொருவரும் தமது செயல்களுக்கேற்ப பலன் அடைவார்கள். எனவே கிறிஸ்துவின் ஆசியைப்பெற்று நித்திய வாழ்வை அடைவதற்கு, எமக்கு இவ்வுலகில் கிடைத்திருக்கும் காலத்திற்குள் நாம் இறையரசை நாடவேண்டும். சுயநலத்தை வெறுத்துப் பொதுநலனுக்காக வாழ வேண்டும்.

இறைவன் அழிவை ஒருபோதும் விரும்புவதில்லை. அதி உன்னத அன்பின் நிமித்தம் பாவி மனந்திரும்பி தம்மிடம் வருவதையே அவர் விரும்புகிறார். மனிதன் இறைவனிடமிருந்து வந்தவன். மறுபடியும் அவன் அவரிடமே போய்ச்சேர வேண்டும் என்பது தான் அவனுடைய குறிக்கோளாக அமைய வேண்டும். ஆதலால் மனிதர்களாகிய நாம் இவ்வுலகில் செய்யும் ஒவ்வொரு செயலையும், சிந்தனைகளையும் இவ் உயர்வான நோக்கத்தை அடைய உறுதி செய்ய வேண்டும்.

# என் தமிழே!

சி. கஜனா,
க.பொ.த உயர்தரம்,
2011.

ஐம்பெருங் காப்பியமும் ஈரடி திருக்குறளும்
நாலடியார் பாடல்களும் நல்ல நல்வழியும்
ஆத்திசூடி கொன்றைவேந்தன் தேவாரம் திருப்புகழென
தித்திக்கும் தீந்தமிழே அதிசயமாம் என் தமிழே!

புலவர் போற்றும்படி புகழாரம் சூட்டும்படி
இயலாய் இசையாய் நாடகமாய் உதித்தவளே
கவிதை நாவல் சிறுகதையாய் நிற்பவளே
உருப்பதித்த இடமெங்கும் நிறைந்திட்டாய் என் தமிழே!

நினைவாய் சொல்லாய் செயலாய் உருவெடுத்து
கம்பனும் இளங்கோவும் வள்ளுவரோடு உனைவளர்க்க
பாரதியின் தாலாட்டில் ஔவைமடியில் துயின்று
பாரினில் யாவரிலும் பதிந்திட்டாய் என் தமிழே!

அக்காலம் ஆன்றோரின் நாட்டார் இலக்கியமும்
இக்காலம் நம்மிடையே உலவும் புதுக்கவியும்
பாரதியார் உணர்ச்சியுடன் பொறித்த வீரகவியும்
எக்காலம் கடப்பினும் உனையுணர்த்தும் என் தமிழே!

கற்பதற்கு கலைமகளே கேட்பதற்கு இனியவளே
சிந்தைக்கு விருந்தவளே விந்தைக்கு புதியவளே
இந்து முஸ்லிம் கிறிஸ்தவரோடு பௌத்தரும்
உனைத் துதிக்க வழுத்துகின்றேன் என் தமிழே!

# சர்வதேச நிதி நெருக்கடி

சுந்தரமூர்த்தி சுபாகரன்,
க.பொ.த. உயர்தரம்,
2011.

2009ம் ஆண்டில் உலகிலுள்ள அனேக பொருளாதாரங்கள் உலகளாவிய நிதியியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் தொடர்ந்து பாதிப்படைந்திருந்தன. இவ்வாண்டில் மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கு பதிலிறுத்தும் வகையிலும் கேள்வியை அதிகரித்து நிதியியல் அழுத்தங்களை எதிர்கொள்ளுவதற்கும் அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பல பொருளாதாரங்கள் தளர்ந்த நாணயக் கொள்கை, வரலாற்று ரீதியிலான குறைந்த வட்டி வீதங்கள், மத்திய வங்கியின் சனத்தொகைகளின் முன் எப்போதும் இல்லாத விரிவாக்கம் மற்றும் விரிவடைந்த இறைக் கொள்கை போன்ற பரவலாக்கப்பட்டதற்கு மத்தியிலும் 2009இன் பெரும்பகுதியில் நிதியியல் அழுத்தங்கள் தொடர்ந்தும் மோசமாகி உண்மைப் பொருளாதாரத்தைப் பாதித்தது.

பன்னாட்டு நாணய நிதியத்தின் எறிவுகளின்படி உலகப் பொருளாதாரம் 2008இன் 3% வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2009இல் 8% ஆக சுருக்கமடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மிகப்பெரிய பொருளாதாரச் சுருக்கங்கள் ஜப்பான், ஐக்கிய இராச்சியம் மற்றும் யூரோ பிரதேசங்களில் அவதானிக்கப்பட்டன. இதனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டன.

குறைந்த கேள்வி, மோசமான கம்பனி அரசிறைகள், பாரிய அளவிற்கு அதிகமான இயலளவு மற்றும் இறுக்கமான கொடுகடன் நிபந்தனைகளுடன் 2009ம் ஆண்டில் தொழிலின்மை வீதங்கள் உலகம் முழுவதும் எச்சரிக்கையான மட்டங்களுக்கு அதிகரித்திருப்பதனை காணக்கூடியதாக இருந்தது. 2009ல் பொருட்களின் விலைகளிலான வீழ்ச்சி மற்றும் உலகக் கேள்வியில் முன் எப்போதும் இல்லாத பின்னடைவு அபிவிருத்தி அடைந்த மற்றும் அடைந்து வரும் பொருளாதாரங்கள் இரண்டிலுமான முதன்மைப் பணவீக்கத்தின் வீழ்ச்சிக்கு வழிசமைத்தது. முதன்மைப் பண வீக்கத்திலான வீழ்ச்சிகளிற்கு எதிர்த்து நிற்காது முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலான மையப்பண வீக்கமும் சார்பு ரீதியில் தொடர்ந்து உறுதியாக விளங்கியது. எனினும் யப்பான் மையப்பணவீக்கத்தில் பூச்சியத்திற்கு குறைவான வீழ்ச்சியை அனுபவித்தது.

நிதியியல் நிலமைகள் நெருக்கடிக்கு முன்பு இருந்ததை விட கூடியளவு இடர்பாடுள்ளதாகத் தொடர்ந்து விளங்கிய போதிலும் நிதியியல் நிறுவனங்கள் பலப்படுத்தப்பட்டதன் காரணமாக உலகநிதியியல் சந்தைகள் எதிர்பார்த்ததை விட விரைவாக வீழ்ச்சியடைந்தது. இலங்கையைப் பொறுத்தவரையில் இந்நிதியியல் நெருக்கடியை சமாளிப்பதற்காக இலங்கை மத்தியவங்கியானது பல்வேறு நடவடிக்கைகளை கட்டம் கட்டமாக மேற்கொள்ளத் தொடங்கியது. இதற்கமைய நெருக்கடியின் ஆரம்ப நிலையின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட திரவத்

தன்மையை வழங்குவதனூடாக குறுங்கால நாணயத் தன்மைகளில் காணப்பட்ட அழுத்தங்களிற்கு நிவாரணம் அளிப்பதனை இலக்காகக் கொண்டிருந்தது. இரண்டாவது கட்டத்தின் போது குறுங்காலச் சந்தையில் காணப்பட்ட அழுத்தங்கள் பரந்த நிதியியல் சந்தைகளிற்கு பரவும் போது மத்தியவங்கிகள், இணையங்கள் மற்றும் இணைத்தரப்புக்கள் இரண்டினையும் விரிவாக்குவதனூடாக பரந்த நிதியியல் சந்தைகளில் காணப்பட்ட நிதியியல் அழுத்தங்களை தளர்த்துவதன் மூலம் சந்தைப்பங்கேற்பாளர்களிற்கு விடுக்கப்பட்ட நிதியியல் தொடர்பான முதிர்ச்சிக் காலத்தினை அதிகரிக்கின்றது. முக்கியமாக மத்திய வங்கியின் இணைக்கப்பட்ட கொள்கை நடவடிக்கை நிதியியல் நெருக்கடிக்கான ஒரு தீர்வாக காணப்பட்டது.

**நிதி நெருக்கடியின் தன்மைகளாவன,**

- பங்குச்சந்தை வீழ்ச்சியடைந்தது.
- அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் நிதி நிறுவனங்கள் வீழ்ச்சி அடைந்தன.
- கடன் நெருக்கடி.
- திரவத்தன்மைப் பிரச்சினை
- பொருட்கள் சேவைகளின் விலைகள் வீழ்ச்சியடைந்தன.
- வேலையின்மை அதிகரித்தது.
- சென்மதி நிலுவைப் பிரச்சினை
- தாராளவாத பொருளாதார முறையின் பொருத்தப்பாடு கேள்விக்கு உட்படுத்தப்பட்டது.

**நிதி நெருக்கடியால் இலங்கையில் ஏற்படும் தாக்க விளைவுகளை நோக்குவோமாயின்,**

சர்வதேசரீதியில் இலங்கையின் நிதிச்சந்தை தனிமையிலுள்ளது. இலங்கையின் மூலதனக் கணக்கு பூரணமாக திறந்து விடப்படவில்லை. இதனால் இலங்கை நிதி நெருக்கடியினால் நேரடியாக பாதிக்கப்படவில்லை. ஆனால் ஏனைய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக இது பாதிப்புக்களை எதிர்நோக்குகிறது.

இவ்வகையில் பாதிக்கப்படக்கூடிய விடயங்களாக

1. பிரதான ஏற்றுமதிச் சந்தைகள் இழக்கப்படல்.
2. வெளிநாட்டு நேரடி முதலீடுகள் குறைவடைதல்.
3. வெளிநாட்டு மாற்றல் பெறுகைகள் வீழ்ச்சியடைதல்.
4. அபிவிருத்தி நிதியுதவிகள் குறைவடைதல்.
5. வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்கள் குறைவடைதல்.
6. சுற்றுலாக் கைத்தொழில் வீழ்ச்சியடைதல்
7. இறக்குமதி செய்யப்பட்ட பணவீக்கம் குறைவடைதல்

என்பனவாகும்.

மேற்கூறப்பட்டவாறு சர்வதேச நிதி நெருக்கடி பற்றியும் இதன் தன்மைகள் பற்றியும் நோக்கமுடிகின்றது.

# சைவத் தமிழ்க் காவலர்
# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான்

தர்சிகா தனராஜ்,
க.பொ.த உயர்தரம்,
2010.

நாவலர் சகாப்தம் யாழ்ப்பாணச் சைவத்தமிழர் வரலாற்றில் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டிய காலமாகும். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக விளங்கிய இப் பெருந்தகையைப் போற்றுவதற்குச் சொற்களும் போதாது. எழுத்தில் இவர் பணிகளை வடிப்பதற்கு ஆற்றலும் போதாது. எனினும் ஆசைபற்றி அறைகின்ற நிலை எம்போன்றோருக்கு உண்டு.

ஐம்பத்தேழு ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த நாவலர் அவர்கள் இருபத்துமூன்று ஆண்டுகளைத் துறைபோகக் கற்பதிலே செலவு செய்தார். அதன் பின்பே சொற்பொழிவு செய்யவும் நூல்களை எழுதவும் ஆரம்பித்தார். ஏட்டில் இருந்த நூல்கள் அச்சு வாகனமேற்றிய போது தமிழ்த்தாய் மனங்குளிர்ந்தாள். மேலும் இத்தாய்க்கு வசனநடைதான் வழக்குநடை, ஒழுங்குநடை, பயனுள்ள நடை என்ற ஒரு திருப்பத்தை ஏற்படுத்தி செய்யும் நூல்களையெல்லாம் வசனநடையில் மாற்றிய பெருமை இவருக்குண்டு. முப்பத்திரண்டு ஆண்டுகள் முழுமையானதும் பயனுள்ளதும் தமிழ் மக்களின் எழுச்சிக்கும், சைவ மறுமலர்ச்சிக்குமான பணிகளை மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது ஆற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

நாவலர் அவர்களை ஈன்ற பெருமை யாழ்ப்பாணத்து நல்லை நகருக்குண்டு. தந்தை கந்தப்பிள்ளை அவர்களுக்கும் தாயார் சிவகாமி அம்மை அவர்களுக்கும் ஆறாவது மகனாக இவர் அவதரித்தார். சைவத்துக்கும் தமிழுக்கும் கிடைத்த ஒருபேறு இவருடைய அவதாரமென்றால் அதில் மிகையொன்றும் இல்லை. கி.பி 1822ஆம் ஆண்டு மார்கழித் திங்களில் அவதரித்த இவருடைய பிறப்பு இவருடைய அவதாரம் தமிழ் மக்களுக்கு ஒரு விடிவெள்ளியாகக் காட்சி தந்தது. இவர் பிறந்த காலத்தில் இலங்கையில் நிலவிய அந்நியர் ஆட்சி காரணமாக நாட்டின் வடபகுதியில் மொழியும் சமயமும் அடக்கியொடுக்கப்பட்டிருந்தது. 1505இல் ஏற்பட்ட போர்த்துக்கேயர் படையெடுப்பு சுதேசிகளிடம் தம் மொழியையும், பண்பாட்டினையும், சமயத்தையும் திணித்தது. ஒல்லாந்தர் காலத்தில் மொழியும் சமயமும் சீர்குலைந்தது. பின் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே நாவலர் பிறந்தார்.

நாவலர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் எனும் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். இவர் நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், நல்லூர் வேலாயுதமுதலியார், இருபாலை சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்துப் புலவர் என்போரிடம்

தமிழ் இலக்கண இலக்கியங்களையெல்லாம் குருகுல கல்வி முறையில் கற்றார். இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் (யாழ் வெஸ்லியன் கல்லூரி) பயின்று சகல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர். அங்கு 07 ஆண்டுகள் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்து பின்பு சைவத்தையும், தமிழையும் வளர்க்க வேண்டும் என்ற பேராசையால் அப்பதவியை துறந்து நாட்டுப் பணிகளில் இறங்கினார். இவர் சைவம், தமிழ் என்பவற்றுக்கு ஆற்றிய பணிகள் சமூகத்தையும் கல்வியையும் வளப்படுத்தியது.

ஆறுமுக நாவலரின் சமயப்பணிகளின் காரணத்தினால் இலங்கையில் சைவசமயம் மறுமலர்ச்சி அடைந்தது. பலியிடல் போன்ற மூடக்கொள்கைகள் தடுக்கப்பட்டு சமயம் சீர்திருத்தம் பெற்றது. கிறிஸ்தவ பண்பாட்டு பரவல், ஆங்கில கல்வி வளர்ச்சி என்பவற்றின் தாக்கத்தினால் சைவசமயத்தைப் பின்பற்றிய சுதேசிகள் சிலர் தமிழையும் சைவத்தையும் புறக்கணித்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறிச் சென்றனர். சிலர் கிறிஸ்தவத்திற்கு மாற்றப்பட்டனர். இச்சூழ்நிலையில் இலங்கையில் சைவசமயம் பெருஞ்சவாலை எதிர்நோக்கி இருந்தது.

நாவலர் சமயப்பணிகளை மேற்கொள்ள இரண்டு முக்கிய பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. ஒன்று பிறசமயத்தவரின் கண்டனங்களிற்கு தக்க பதிலினை வழங்கி சைவத்தை மேன்மையடையச் செய்தல். மற்றையது சைவ சமயிகளை பிற சமயங்களின் ஆதிக்கத்திலிருந்து தடுத்து அவர்களை சைவசமயிகளாக வாழச் செய்தல். இவருடைய காலத்திலேயே பேச்சு ஒரு கலையாக மாறியது. பிரசங்கம் என்ற மழை சைவத் திருக்கோயில் எங்கும் பொழிந்தது. இவருடைய பிரசங்கங்களைக் கேட்டு பாலர் முதல் பண்டிதர் வரை பயனடைந்தனர். சைவம் என்னும் பயிரை வளர்க்க பிரசங்கம் என்னும் மழையை பெய்விக்க வேண்டும் என்பதுதான் இவர் கண்ட புதுவழி.

இவருடைய நாவன்மையைப் பாராட்டியே திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு "நாவலர்" என்னும் கௌரவப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. ஒருவர் பாட மற்றொருவர் பயன்சொல்லும் முறையாகிய புராண படன முறையூடாக முதியோர் கல்வியை வளர்ச்சியுறச் செய்தார். நாவலர் பிரமச்சரிய வாழ்வினைச் சீராக வாழ்ந்து காட்டி, சைவத்தை எழுச்சி பெறச் செய்தவர். நாவலர் சைவ வினாவிடை 1ம், 2ம் புத்தகங்கள், பெரிய புராண வசனம் போன்ற நூல்களை வெளியிட்டும், சைவதூஷண பரிசாரம், சுப்பிரபேதம், வச்சிரதண்டம் போன்ற கண்டன நூல்களை வெளியிட்டும் சைவ சமயத்தை வளர்ச்சியடையச் செய்தார்.

நாவலருடைய கல்விப்பணி சமயப்பணி, சமூகப்பணி சார்ந்ததாகவே காணப்பட்டது. கல்வி அபிவிருத்திக்காக நாவலர் பல சைவப்பிரகாச வித்தியாசாலைகளை நிறுவினார். இதற்குச் சான்றாக 1848ல் வண்ணார்பண்ணையிலும், 1864ல் சிதம்பரத்திலும், 1848ல் கோப்பாயிலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகளை நிறுவினார். மேலும் 1871ல் புலோலியில் சைவாங்கில பாடசாலையையும் நிறுவினார்.

நாவலர் வித்தியாசாலைகளுக்கு முகாமையாளராகப் பணிபுரிந்து கல்வியை அபிவிருத்தி பெறச் செய்தார். பெண்கல்வியின் அவசியத்தை மூன்றாம் பால பாடத்தில் விளக்கியிருந்தார்.

தமிழ் சைவம் என்பவற்றின் பெருமை மிக்க நூல்களையும் பெறுதற்கரிய நூல்களையும் பதிப்பித்தும் உரை செய்தும் வெளியிட 1849ல் யாழ் நகரிலே வித்தியானுபாலன அச்சியந்திரசாலையை நிறுவினார். இதில் திருமுறைப்பாடல்கள் அடக்கிய அருட்பாடல்கள் வெளியிடப்பட்டன. பால பாடங்கள், சைவவினாவிடை, பெரியபுராண வசனம், மகாபாரதம், இலக்கணச் சுருக்கம், இலங்கை பூமி சாஸ்திரம், சிவாலய தரிசன விதி, சிதம்பர மான்மியம் என்பவற்றை வெளியிட்டார். மேலும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற நூல்களிற்கு உரை செய்தும் வேறு பல நூல்களிற்குப் புத்துரை செய்தும் கல்வியை அபிவிருத்தி பெறச் செய்தார். சமயக் கல்விக்கு முழுமையான ஆதரவு வழங்கிய நாவலரால் அமைக்கப்பட்ட பாடசாலைகளில் நியாய தர்க்கம், வரலாறு, புவியியல் போன்ற பாடங்களும் போதிக்கப்பட்டன. நாவலர் கல்வியூடாக இம்மை, மறுமை பலன்களை எடுத்துக்காட்டி இருந்தார்.

நாவலருக்கு சைவமும் தமிழும் இரு கண்களாகத் திகழ்ந்தன. நாவலருக்கு சமயம் உயிராகவும் மொழி உடலாகவும் திகழ்ந்துள்ளது. நாவலர் உரைநடையின் தந்தை, வசனநடை கைவந்த வல்லாளர் என்றெல்லாம் போற்றப்படுகிறார். இவர் ஒரு தமிழ் இலக்கண, இலக்கிய உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், சமூக சேவையாளராகவும், நூல்கள் பலவற்றை ஆக்கித் தந்த ஆசானாகவும் காணப்பட்டார். இவர் வாழ்ந்த காலம் தமிழ் உரைநடை விருத்திக்குரிய காலமாகும். விவிலிய நூலை தமிழில் இவரே மொழி பெயர்த்தார்.

நாவலரது பணிகளில் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியும் குறிப்பிடத்தக்கதாக விளங்குகிறது. நாட்டின் பல பாகங்களிலும் சைவப் பாடசாலைகளை அமைத்து மாணவருக்கு தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை போதித்து மறுமலர்ச்சி அடையச் செய்திருந்தார். தமிழ் நூல்களைப் பதிப்பதற்கும், வெளியீடு செய்வதற்கும் யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்திலும் வித்தியானுபாலன அச்சியந்திரசாலைகளை நிறுவினார். பழந்தமிழ் பதிப்பாசிரியர் எனும் வகையில் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெருமை நாவலரையே சாரும். இவ்வகையில் இவரால் பதிப்பிக்கப்பட்ட வெளியீடு செய்யப்பட்ட நூல்களில் பின் வருபவை குறிப்பிடத்தக்கவை.

| | | |
|---|---|---|
| 1. | அகராதிகள் | : சூடாமணி, நிகண்டு |
| 2. | இலக்கண நூல்கள் | : இலக்கண விளக்கச் சூறாவளி |
| 3. | தர்க்க நூல்கள் | : தர்க்க சங்கிரகம் |
| 4. | இலக்கிய நூல்கள் | : மகாபாரதம் |

5. அறிவியல் சார்ந்த நூல்கள் : இலங்கை பூமி சாஸ்திரம்

6. முதல் முதல் ஏட்டுச் சுவடியில் இருந்த நூல்களை அச்சு வாகனம் ஏற்றினார் : தொல்காப்பிய சூத்திர விருத்தி

7. சில நூல்களுக்கு உரை எழுதி பதிப்பித்துள்ளார் : ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி

8. வசன நடைக்கு மாற்றியுள்ளார் : திருவிளையாடற் புராண வசனம், கந்தபுராண வசனம், பெரியபுராண வசனம்

9. அப்பியாசங்களுடன் கூடிய நூல் : இலக்கணச் சுருக்கம்

நாவலர் பதிப்பே நல்ல பதிப்பு என்று அன்றும் இன்றும் அறிஞர்களால் பாராட்டப் படுகிறது. இவர் இலங்கை நேசன், சைவ உதயபானு ஆகிய பத்திரிகைகளுக்கு உதவி புரிந்துள்ளார்.

நாவலருடைய சமூகப்பணியை நோக்கினால் 1876, 1877 ஆண்டுகளிலே கடும் வரட்சியால் ஏற்பட்ட பஞ்ச வேளையிலே கஞ்சித் தொட்டித்தருமம் செய்து பசிப்பிணி நீக்கினார். யாழ்ப்பாணக் காரையூர் உள்ளிட்ட இடங்களில் வாந்திபேதி நோயால் மக்கள் பாதிக்கப்பட்ட போது மக்களோடு மக்களாய் நின்று முதலுதவிகளையும், தக்க பரிகாரங்களையும் மேற்கொண்டார். சமூகத்தைப் பாதிக்கும் மதுபாவனை, சூதாடுதல் முதலியவற்றை ஒழிக்கப்பாடுபட்டமை, மற்றும் யாழ்ப்பாணம் கச்சேரி நிர்வாகத்தில் ஊழல் தொடர்பாக 1878இல் அங்கு வந்த தேசாதிபதிக்கு விண்ணப்பம் ஒன்றை வழங்கினார். பிறரை உரிய வேளையில் கௌரவித்த பெருமையும் நாவலரையே சாரும். சான்றாக நந்தனார் சரித்திர கீர்த்தனையை பக்திரசம் சொட்டப்பாடிய கோபாலகிருஸ்ண பாரதியாருக்கு சன்மானம் வழங்கிக் கௌரவித்ததைக் கூறலாம். சுதேசிய எழுச்சிக்காக பாடுபட்ட தேசிய வீரராக நாவலர் விளங்குகிறார். சைவத்தமிழ் மரபிலே புலமைமிக்க மாணவர் பரம்பரையை உருவாக்கி இலங்கையில் சைவசமயத்தையும் தமிழையும் மறுமலர்ச்சியடையச் செய்த பெருமை நாவலரையே சாரும்.

"நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே" என சி.வை. தாமோதரம்பிள்ளையால் வியந்து போற்றப்பட்ட நாவலர் 1879ம் ஆண்டு மார்கழி மாதம் 21ம் நாள் இறைபதம் அடைந்தார். இவரது பணிகளைத் தொடர்ந்து ஆற்றவே நாவலர் சபை உருவாக்கப்பட்டது. நாவலரை சுதேசியப் பெரியார்களில் ஒருவராக இலங்கை அரசு அங்கீகரித்ததோடு மட்டுமல்லாமல் அவரது பணிகளைக் கௌரவித்து முத்திரை ஒன்றையும் வெளியிட்டது. எனவே நாமும் நாவலர் பெருமானின் பெருமைகளை விளங்கி அவர்தம் வழிநின்று சைவத்தையும் தமிழையும் காப்போமாக.

"நாவலர் வழி நடப்போம்.
அவர் தம் பணியை மறவோம்"




செல்வி க. கதிரவேலு

*15 வருடங்கள் எமது பாடசாலையில் சேவையாற்றி அண்மையில் ஓய்வு பெற்றுள்ளார்.*



திருமதி.ப. தேவமனோகரன்

*20 வருடங்கள் எமது பாடசாலையில் அண்மையில் இடமாற்றலாகி வேறு பாடசாலைக்குச் சென்றுள்ளார்.*



திரு. ம. அ. யோகநாதன்

*13 வருடங்கள் எமது பாடசாலையில் அண்மையில் இடமாற்றலாகி வேறு பாடசாலைக்குச் சென்றுள்ளார்.*



செல்வி. த. தர்சிகா

*2009இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசைத்தினத்தை முன்னிட்டு நடாத்தப் பட்ட கட்டுரைப்போட்டியில் மாவட்ட மட்டம் - 2ம் இடத்தைப் பெற்றுள்ளார்.*




செல்வி. உ. பிரதுசா

*2010இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குரு பூசைத்தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் மாவட்டமட்டம் - 1ம் இடத்தைப் பெற்றுள்ளார்.*

# சாதனையாளர்கள்



செல்வன் மகேந்திரம் நிர்மலேஸ்வரன்
1988 - மாவட்ட மட்டம்
15 வயதுப் பிரிவு - உயரம் பாய்தல் முதலாம் இடம்
1990 - மாவட்ட மட்டம்
17 வயதுப் பிரிவு - 400 மீற்றர் - முதலாம் இடம்
உயரம் பாய்தல் - முதலாம் இடம்
முப்பாய்ச்சல் - முதலாம் இடம்



செல்வி கீர்த்திகா தருமராசா
மாவட்ட மட்டம்
2003 - 15 வயது - தட்டெறிதல் - முதலாம் இடம்
2004 - 17 வயது - தட்டெறிதல் - இரண்டாம் இடம்
2006 - 19 வயது - தட்டெறிதல் - முதலாம் இடம்
2007 - 19 வயது - குண்டுபோடுதல் - இரண்டாம் இடம்
2007 - 19 வயது - 100 மீற்றர் - மூன்றாம் இடம்
2007 - 19 வயது - தடைதாண்டல் - மூன்றாம் இடம்




செல்வன் ஜெயகோபி துவாரகன்
2008 - மாவட்ட மட்டம்
11 வயதுப் பிரிவு - நீளம் பாய்தல்
முதலாம் இடம்




செல்வி கௌசிகா ஜெயகோபி
மாவட்ட மட்டம்
2008 - 15 வயது - தட்டெறிதல் - முதலாம் இடம்
2008 - 15 வயது - குண்டுபோடுதல் - இரண்டாம் இடம்
2009 - 17 வயது - தட்டெறிதல் - முதலாம் இடம்



செல்வன் செல்வரத்தினம் விதுர்சன்
2009 - மாவட்ட மட்டம்
17 வயதுப் பிரிவு - முப்பாய்ச்சல்
முதலாம் இடம்



செல்வி தமிழினி தயாபரன்
2009 - மாவட்ட மட்டம்
17 வயதுப் பிரிவு - நீளம் பாய்தல்
மூன்றாம் இடம்



செல்வன் விஜயகுமார் வினுசன்
2010 - மாவட்ட மட்டம்
11 வயதுப்பிரிவு - உயரம் பாய்தல்
முதலாம் இடம்
2010 - மாகாண மட்டம்
11 வயதுப்பிரிவு - உயரம் பாய்தல்
இரண்டாம் இடம்



செல்வி டஜித்தா பரமநாதன்
2010 - சமுர்த்தி அனுசரணையுடன் நடைபெற்ற
ஓவியப் போட்டியில் மாகாணமட்டத்தில்
முதலாம் இடம் பெற்று தேசியப் போட்டியில்
பங்கு பற்றியுள்ளார்.

## Academic Staff

| | | | |
|---|---|---|---|
| 1. | Mr. R. Vasanthakumar | SLTS. I | B.Com (Spe.) Dip in. Edu |
| 2. | Mr. S. Jeyananthan | SLTS. I | SP. Trd (English) |
| 3. | Mrs. K. Raveendran | SLTS. I | Dip in Music |
| 4. | Mrs. J. Kumareshamoorthy | SLTS. I | SP. Trd (Science) |
| 5. | Miss. T. Arumugarajah | SLTS. I | SP. Trd (Ho. Science) |
| 6. | Mrs. A. A. Philipleonard | SLTS. 2.I | SP. Trd (R.C), B.A |
| 7. | Mrs. S. Ananthakumar | SLTS. 2.I | SP. Trd (Primary) |
| 8. | Mrs. A. Balakrishnarajah | SLTS. 2.II | B.A (Hons), Dip in Edu |
| 9. | Mrs. N. Pusparajah | SLTS. 2.II | SP. Trd (Saivam) |
| 10. | Mrs. V. Perinpam | SLTS. 2.II | SP. Trd (Physical Edu) |
| 11. | Mrs. V. Gokulananthan | SLTS. 2.II | SP. Trd (Primary) |
| 12. | Mrs. G. Thiruvarangan | SLTS. 2.II | SP. Trd (Primary) |
| 13. | Mrs. J. Sivapalathevan | SLTS. 2.II | SP. Trd (Primary) |
| 14. | Mr. Balakumar | SLTS. 2.II | SP. Trd (Agriculture) |
| 15. | Mr. I. Vasudevan | SLTS. 2.II | SP. Trd (Maths) |
| 16. | Mrs. M. Baskaran | SLTS. 2.II | SP. Trd (Science) B.A, Dip in Edu. |
| 17. | Mrs. L. Partheepan | SLTS. 3.I | B.B.A (Hons), Dip in Lib. Inf. Sci. |
| 18. | Mrs. S. Manisekaran | SLTS. 3.I | B.Com |
| 19. | Mrs. V. Kugenthiran | SLTS. 3.I | B.A |
| 20. | Mrs. A. Kalenthiran | SLTS. 3.I | B.F.A (Art & Design) |
| 21. | Mrs. J. Senthuran | SLTS. 3.I | B.A (Hons) |
| 22. | Mrs. K. Uthayakumar | SLTS. 3.I | B.F.A (Dance) |
| 23. | Miss. F. Juliet | SLTS. 3.I | SP. Trd (English) |
| 24. | Mrs. N. Thanaranjan | SLTS. 3.I | SP. Trd (Science) |
| 25. | Mrs. S. Altreen Croose | SLTS. 3.II | SP. Trd (English) |
| 26. | Miss. G. Nirmala | Asst. Teacher | |
| 27. | Miss. D. G. Jeyatheepa | Asst. Teacher | |

## Non Academic staff

1. Mr. S. Sivakumar

## Facilitators

1. Mrs. S. Kalaijenani
2. Miss. M. Kajaththiri
3. Mrs. A. Arulprashath

*With the best compliments from*

# GLOBAL VILLAGE
## COMPUTER EDUCATION CENTER

## குளோபல் விலேஜ் கணனி கல்வி நிலையம்

இக்கல்வி நிலையத்தில் அனைத்து வகையான கணனி கற்கை நெறிகளும் கற்பிக்கப்படும்.

**Computer Courses**

- Office Automation Course (OAC)
- Diploma In Computer Application (DCA)
- Diploma In Office Automation (DOA)
- Hardware Engineering (HWE)
- Desktop Publishing (DTP)
- Web Designing (WED)
- E - Commerce (E - COM)
- Accounting Packages(Tally,Quick Book)
- Global Kids ICT & GIT

இலவசமாக கற்கை நெறி புத்தகங்கள்

பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது

பிரத்தியோக வகுப்புக்கள்

நன்கு பயிற்றுவிக்கப்பட்ட விரிவுரையாளர்கள்

ஒவ்வொருவருக்கும் தனித்தனி கணனி

இலகு தவணை கொடுப்பனவு முறை

Manipay Road, Anaicoddai. T.P - 0777 631 256

# J. J. BOOK CENTER

- Stationery Items
- Computer
- Computer Accessories
- Fancy Items
- Gift Items
- Computer Repairing
- Software & Game CDs





Jaffna Road, Manipay, Anaicoddai. T.P - 0777 631 256




Hatton National Bank
A quoted public company incorporated in Sri Lanka in March 1970, with limited liability
HNBயின் சிறுவர்களிற்கான சிறப்பு
சேமிப்புத் திட்டம் "சிங்கிதி"
மேற்படி சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்
பதன் மூலம் உங்கள்
மழலைகளின் எதிர்காலத்தேவைகளிற்கு
அடித்தளமிடுவதுடன் கவர்ச்சியான
பரிசில்களையும் வெல்லுங்கள்
PATHUM VIMANA
அடகு சேவை
இப்போது சனிக்கிழமைகளிலும்
காலதாமதமற்ற துரித சேவை
HNB Personal LOANS
A loan as personal asyour needs
மாதாந்த சம்பளம் பெறும்
அரச/அரச சார்பற்ற / தனியார்
ஊழியர்களிற்கு அவர்களின்
தேவைகளிற்கு முற்றிலும்
கணணி மயப்படுத்தப்பட்ட
இலகு கடன் வசதி
HNB
HNB Your Partner in Progress

*With the best compliments from*




**யாழ் வீதி, மானிப்பாய்.**

*With the best compliments from*




## உங்கள் பிள்ளையின் உயர் கல்விக்காக இப்போதே சேமிக்கத் தொடங்குங்கள்

*With the best compliments from*

# IYNKARAN MOTORS

**MARKET VIEW, JAFFNA ROAD, MANIPAY.**



*Spare Parts for Motobikes,*
*Three Wheelars,*
*Waterpumbs & Bicycle*



Authrized Distributers of CEAT TIRES,
FEVICOL Items in Jaffna

**T.P : 0215100620, 0215671073,**
**0215671074**
**E-mail : iynkaranmotors@gmail.com**

*With the best compliments from*

# CITY MEDICALS



சகல மேல்நாட்டு மருந்து
வகைகளுக்கு
நாடவேண்டிய இடம்

487, Hospital Road,
Jaffna.

*With the best compliments from*

# ஆல்சிலோன்

## டிஸ்ரிபியூட்டர்ஸ்

இல : 212, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P : 021 222 5542

ஓவர்கெட்லல் கிறீன், லெமினேற்றிங் மெசின், பைண்டிங் மெசின்,
ஓவர் கெட் புறொஜெக்டர், ரோணியோ மெசின், தரஉள்ளீட்டுப் பொருட்கள்,
வைற்போட், மக்னெற் போட், பிளானல் போட், கிறீன் போட் வகைகள்,
ஆய்வுகூட உபகரணங்கள், தரம் 1 முதல் பல்கலைக்கழகக் கல்வி வரையான
பாடப்புத்தகங்கள், ஆங்கில, தமிழ் இலக்கண வழிகாட்டி நூல்கள், சிங்களம்,
பொது அறிவு, நுண்ணறிவு சார் வெளியீடுகள், சிறுவர்களுக்கான விளையாட்டு
உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், பேப்பர் வகைகள், எழுதுகருவிகள்
அனைத்தையும் ஒரே கூரையின் கீழ்ப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

*With the best compliments from*


# சுதாஸ் மல்ரி சென்ரர்

பாடசாலை உபகரணங்கள், Elephant house ஐஸ்கிறீம்,
அழகுசாதனப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள்,
மளிகைப் பொருட்கள் மற்றும் தொலைபேசி மீள்நிரப்பு
சேவைகள் அனைத்திற்கும் நீங்கள் நாட வேண்டிய
ஒரே இடம்

நவாலி மகா வித்தியாலயம் முன்பாக,
அரசடி, நவாலி

With the best compliments from

# MOORTHY LAZER DIGITAL Colour Lab



High Capacity
High Speed Scanning
High Specification PC

**DIGITAL**

*Photo Restoration, Photo Enlargements,*
*Video & Photo Editing,*
*Album Making.*

Jaffna R.D, Manipay,
Stanly R.D, jaffna.

*New Digital Print Services with Jumpo Panorama Prints (up to 12"x36")*

With the best compliments from

**NSB**

# தேசிய சேமிப்பு வங்கி

## மானிப்பாய் கிளை

- அதிகூடிய தொகை
- மீட்கும் வரை மாறாத ஆகக் குறைந்த வட்டி வீதம் (கூடிய தொகைகளுக்கும் வட்டிவீதத்தில் வேறுபாடு இல்லை)
- இரகசியம் பேணப்படும்
- 100% அரச உத்தரவாதம்
- முத்திரை வரி, மறைமுக கட்டணம் எதுவுமில்லை
- ஆபரணங்களிற்குப் பாதிப்பில்லாத பரிசோதனை
- துரித சேவை
- பகுதி பகுதியாக பணம் செலுத்தும் வசதி
- நகைகளை மீட்பதற்கு முன்னறிவித்தல் அவசியமில்லை
- ரூபா 100/-விற்கு மாத வட்டி ரூபா 1.1/-

*With the best compliments from*

## யேனு சுவிற் ஹவுஸ்

யாழ்ப்பாணம் வீதி,
மானிப்பாய்

அனைத்து வகையான
RELOAD, சகல விதமாக
காட் வகைகள், பிஸ்கட்
வகைகள், பால்மா வகைகள்,
கண்டோஸ் வகைகள்,
கேக் தயாரிக்கும் பொருட்கள்,
அப்பிள், ஒரேஞ், சுவீற்ஸ்
வகைகள் போன்றவற்றைப்
பெற்றுக் கொள்ளலாம்.

Kit Kit

*With the best compliments from*

## MANO AMBIS STORES

### Fancy Goods

பெண்களுக்கான அழகுசாதனப்
பொருட்கள்,
பிளாஸ்ரிக் பொருட்கள்,
*Arpico* மெத்தை வகைகள்,
பிளாஸ்ரிக் கதிரைகள்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்.

*Jaffna Road,*
*Alady Junction,*
*Manipay.*

*With the best compliments from*

New Cost Cutter

## New
## Cost Cutter

வருமானத்தில் அனைத்துத்
தரத்திலான வகுப்பினருக்கும்
அவரவர்களுக்குத் தேவையான
எல்லாவகைப் பொருட்களையும்
ஒரே இடத்தில் நியாய விலையில்
பெற்றுக் கொள்ளக்கூடிய
ஒரே நிறுவனம்

484, Hospital Road,
Jaffna
T.P : 021 567 0130

*With the best compliments from*

*Video Editing*
*Photo Editing*
*Audio Works*
*Video Conversion*
VIDEO GRAPH
PHOTO GRAPH
*Card's Designing*
*Album Making*
*Frame Work*
*DVD Sticker Printing*
*Label Designing*




**Creative Desk**
*Uduvil Road, Manipay*
*Contact: 077 777 8529*
*021 2255 073*

*With the best compliments from*

# தில்லையம்பலம்

## உழவு இயந்திர உதிரிப்பாக விற்பனை நிலையம்





உரிமையாளர் :
K. T. சிவகுமார்
அரசடி, நவாலி

*With the best compliments from*

# ஸ்ரீ தேவி கருமாரி நகை மாடம்

*தங்கப்பவுண் நகை வியாபாரம்*

## Sri Thevi Carumarie Nahai Madam



*Manufacturers of Gold Jewels*

அசல் 22 கரட் தங்க நகைகளை ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.



குறிப்பு : 22 கரட் நகைகளுக்கு கணனியால் கணிக்கப்பட்ட உத்தரவாதப் பிரதி வழங்கப்படும்.

83/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

*T. P: 021-5672567*
*0773604712*

*83/1 Kasthuriar Road,*
*Jaffna.*

*With the best compliments from*

எமது பாடசாலைத் தாயை வாழ்த்துகிறோம்

# வலம்புரி ரேட் சென்ரர்

சின்னப்பா வீதிச்சந்தி, நவாலி கிழக்கு.

அனைத்து வகையான RELOAD, சகல விதமாக
காட் வகைகள், பிஸ்கட் வகைகள், பால்மா வகைகள்,
கண்டோஸ் வகைகள், கேக் தயாரிக்கும் பொருட்கள்,
அப்பிள், ஒரேஞ், சுவீற்ஸ் வகைகள்
போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

*With the best compliments from*

# சிவசக்தி மல்ரி சென்ரர்
# Sivashakthee Multi Center

அனைத்து அழகுசாதனப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்,
சொக்லட், பிஸ்கட், பால்மா வகைகள், கேக் வகைகள்,
வீடியோ பிரதிகளையும், பாடல் பதிவுகளையும்
(கசற் CD) என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

வட்டுக்கோட்டை வீதி,
அரசடிச்சந்தி, நவாலி.

**T. P : 021 5122520**
**077 5291755**

*With the best compliments from*

## தயா அச்சகம்

கொம்பியூட்டர் ஓவ்(f)செற் பிறின்டேர்ஸ்

உங்கள் சகலவிதமான வேலைகள்,
எதுவானாலும் பாடசாலை, தனியார்
நிறுவனங்களுக்கு வேண்டிய சகல
அச்சுவேலைகளும் சகல விதமான
வைபவங்களுக்குரிய அழைப்பிதழ்களும்,
நினைவேடுகளும் நிறுவனங்களுக்குரிய
பில் புத்தகம், லேபில் வகைகள்,
மூவர்ண புத்தகங்கள், எதுவானாலும்
**சிறந்த முறையில் குறைந்த செலவில்**
**குறித்த தவணையில்**
செய்துகொள்ள எம்மை நாடுங்கள்

138, நாவலர் வீதி, (நாவலர் பாடசாலை முன்பாக)
யாழ்ப்பாணம். தொ.இல:-0213737850

*With the best compliments from*

## விநாயகர் பட்டுச்சோலை



ஆண், பெண்களுக்கான
ரெடிமெட் ஆடைகளை திருமணம்,
மற்றும் சகல நிகழ்வுகளிற்கும்
புதுவிதமான
வடிவங்களில் விலைக் கழிவுடன்
பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய
ஒரே இடம்

ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

*With the best compliments from*

நூற்றாண்டு விழாக்காணும்
வித்தியாலயத்தை வாழ்த்துகின்றோம்.

## வீ. எஸ். கே

## V.S.K

## மானிப்பாய்.

*With the best compliments from*

## ASEER VANIGA NILAIYAM

Parer, Stationary,
Exercise Books
and Wedding Cards.



*202, K.K.S. Road, Jaffna,*
*Sri Lanka.*
*T.P : 021 222 2842*
*Fax : 021 222 2842*
*Mobile : 0777 721740*

# ISURU
## Minor's Account

from


# COMMERCIAL BANK

**A Secure future for your child and Peace of mind for you ......**

COMMERCIAL BANK

*Our Interest Is In You*

*Studio*
**NITHYA CHITRA**



விளம்பரம் மூலம் ஆதரவு நல்கிய அனைவருக்கும் நன்றிகள்



நூற்றாண்டு விழா

நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா

நூற்றாண்டு விழா

நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா

நூற்றாண்டு விழா

நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழ
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழா
நூற்றாண்டு விழ



றூபன் பிறிண்டேர்ஸ் ஆனைக்கோட்டை. 0776624386